ARUNACALA AṢARA MANAMĀLAI

பகவான் ஸ்ரீரமண மஹர்ஷிகள்

by

திருவாய் மலர்ந்தருளிய

அருணாசல ஸ்துதி பஞ்சகத்தில் முதலாவதான

அருணாசல அக்ஷர மணமாலை

RAMANA MAHARSHI

பாரத்வாஜி—முகவைக் கண்ணமுருகனார்

இயற்றிய

Comm by

விருத்தியுரை

KANNA MURUKANAR (Mukavai)

CONNEMARA PUBLIC LIBRARY
13 FEB 1955
MADRAS

नमो भगवते श्रीरमणाय

இவை

கர வருஷம் மார்கழி மாதம் இருபத்தெட்டாம் தேதி
நடைபெற்ற

பகவான் மஹர்ஷிகள் 73-ஆம் ஜயந்தி மஹோத்ஸவத்தில்,

திருவண்ணாமலை ஸ்ரீரமணாச்ரமம்

அத்யக்ஷர்

நிரஞ்ஜனானந்த சுவாமிகளால்

பிரசுரிக்கப்பெற்றன.

பதிப்புரிமை] 1952 [விலை ரூ. 1-8

முதற் பதிப்பு: ஜனவரி 1952.

R. B. No 202
4-1952

50827
~~19324x~~
Q23:417x
3152

Printed at The Jupiter Press Ltd., Madras.

CONNEMARA PUBLIC LIBRARY
13 FEB 1955
MADRAS

உ

அருணாசல அக்ஷரமணமாலை

முகவுரை

"அரியாதியி தரசீவர தகவாரிச குகையில்
அறிவாய்ரமி பரமாத்தும னருணாசல ரமணன்"

ஸ்ரீரமண பகவானது வாக்காய் வெளிப்போந்துள்ள நூல்கள் யாவும் அன்பர்களின் வேண்டுதலென்னும் நிமித்தம் பற்றி எழுந்த அருண்மொழிகளே யென்னும் விஷயம் அடுத்துப் பழகிய அன்பர் பலரும் அறிந்ததேயாகும். ஸ்ரீபகவானது நூல் ஒவ்வொன்றும் உதித்ததற்கு வரலாறொன் றுளது. அன்னார் அருண்மொழிகளில் முதலாவதாகிய அருணாசல அக்ஷரமணமாலை உதித்த வரலாற்றை இங்கே காண்போம்.

அண்ணாமலை மீதுள்ள விரூபாக்ஷ குகையில் பகவான் வசித்திருந்தபோது உடனிருந்த அடியார் சிலர் தாங்கள் பிக்ஷை எடுக்குங்கால் பாடிச்செல்வதற்கு ஒரு துதி இயற்றியருளுமாறு பகவானை வேண்டிக்கொண்டனர். எதனிலும் யானென்னும் எழுச்சியேயின்றி அகண்ட பரமோனத்தே அடங்கிய விருத்தியினராம் பகவான் "தேவாரம் திருவாசகம் முதலாம் எத்தனையோ சிறந்த துதிக ளிருக்கப் புதிதாயொன் றெதற்கு?" என்று கூறிச் சும்மாவிருந்தனர். அன்பர்களோ, அத் துதிக ளிருப்பினும் பகவான் வாக்காம் துதி யொன்று தங்களுக்கு வேண்டு மென்று ஆர்வத்துடன் வேண்டியவா றிருந்தனர். ஆயினும் பகவானது திருவுளத்தே அதைப்பற்றி யாதோர் நினைப்பும் எழவில்லை.

இவ்வாறிருக்க, ஒருநாள் பகவான் அருணகிரிப் பிரதக்ஷிணத்திற்குப் புறப்பட்டபோது, அச்சமயம் அன்னார் தங்கள் வேண்டுதலுக்கு ஒருகால் இசையக்கூடுமோ என்னும் எண்ணத்துடன் காகிதம் எழுதுகோல் எடுத்துக்கொண்டு, அன்பரொருவர் பின்றொடர்ந்தார். அன்பர்களின் பிரார்த்தனை நிறைவேறுதற் குரிய சமயம் திருவருள்விலாசத்தால் அன்றே யுற்றது. அருணசலசிவ ஸ்துதியை எழுதத் தூண்டுதலுற்ருர் பகவான். "அறிவறு சிறுவய ததுமுதல்" தமதுள்ளத்தே சுடர்பூத்த அருணசல நாமத்துடனேயே துதி தொடங்கியது. உள்ளத்தினின்று பொங்கிப் பொங்கி யெழுந்த ஒளிமிகும் அருண்மொழிகளை அன்பர் கொணர்ந்த காகிதத்தில் வரைந்தார் பகவான். அருணசலச் சாரலிற் காட்டின் அமைதிமிக்க ஏகாந்தத்தில், உள்ளத் தனிமையில் அருணசலனுக்கும் தமக்குமிடையே நிகழ்ந்த பரப்பிரேமாதிசய லீலையை அலௌகிக சிருங்கார ரசச்செறிவுமிக பக்திபரவசத்துடன் முதன்முதலாக வெளியிட்டார் பகவான். அதுகாற் பொங்கியெழுந்த அடக்கொணு ஆனந்தபாஷ்பப் பெருக்கு எழுதும் கடிதத்தை நனைத்தது; நன்கு பார்த்தெழுத முடியாவண்ணம் கண்பார்வையை மறைத்தது. எங்கிருந்துதான் இங்ஙனம் இது பொங்குவதோ என வியந்தார் பகவான். கிரிவல வழியில் ஆங்காங்கமர்ந்து இதயத்தெழுந்த அருட்சுடர் மொழிகளைச் சிறுகச் சிறுக எழுதிப் பிரதக்ஷிணம் முடிவதற்குள் நூற்றெட்டு மந்திரங்கள் கொண்ட அருணசல அக்ஷர மணமாலை யென்னும் இச் சீரிய துதியை பகவான் பூர்த்திசெய்தருளினுர்.

உணர்ந்தோதற் கரிய பெருமையினவாம் இப் பாக்களிற் சிலவற்றின் பொருளை அன்பர்கள் பகவானிடம் கேட்டுணர விரும்பிய பலகால், அன்னுர், "நீர்தான் அவற்றின் பொருளைச் சொல்லுமே. உம்மைப்போல் நானும் அவற்றின் பொருளை ஆலோசித்துத்தான் சொல்லவேண்டும். ஏதாவது நினைத்து எழுதியிருந்தாற் பொருள் கூறலாம். எதிர்பாரா வண்ணம் எப்படியோ எழுந்தன அவை" என்று கூறிப்

புன்னகை பூத்திருக்கிறார். அருணாசல சிவமே தன்னைத்தானே பாடிக்கொண்டதெனத் தகும் அக்ஷரமணமாலையின் அருட் சிறப்பை இவ் வரலாற்றால் அன்பர் யாவரும் நன்குணரலாம்.

ஸ்ரீபகவானது திருவடிகட்கே மீளாவாளாகிப் பல்லாண்டுகள் அன்னாருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும், அன்னார் மலர்ப்பதத்தையே சுவைமிகு பாக்களால் துதிக்கும் பாக்கியமும், புதுநூல் வேண்டிப்பெற்ற சிறப்புமெய்திய அன்பர் முருகனார், அன்னாருளையே முற்கொண்டு, பலகால் பகவானிடமே நேரிற் கேட்டறிந்தவாறு, குறுகிய வடிவும் பெருகிய பொருளும் குணமும் மணமும் ஒருங்குற்ற அக்ஷரமணமாலைக்கு நயமிகும் இவ் விருத்தியுரையை யியற்றி பகவானது பேரருளுக்கும் அன்பர்தம் பாராட்டுதலுக்கும் பாத்திரரானார்.

ஸ்ரீபகவானிடமும் அன்பர் முருகனாரிடமும் பேரன்பு பூண்ட நல்லறிஞர் நடேசனந்தர் அண்ணல் ரமணர்தம் சீரிய நிலையையும் அருணாலாம் அக்ஷரமணமாலையையும் அதன் அரிய விருத்தியுரையையும் பற்றிய நுண்பொருள்களைத் தமது நூன் முகத்தில் நன்கு விளக்கியுள்ளார்.

முருகனடிமலர்க்கே வழிவழி யடிமையாகிய திருமிகு செங்கல்வராயப் பிள்ளையவர்கள் முதனூற் பெருமையையும் விரிவுரையின் நலன்களையும் பற்றி எழுதியுள்ள சுவைமிகும் ஓர் ஆராய்ச்சியால் இவைபற்றி எழுந்த தமதுள்ளக் கிளர்ச்சியை உவகையுடன் வெளியிட்டிருக்கிறார்.

அருணாசல ரமணனையே வரனாய்த் தேர்ந்து அவனருளணைப்பை நாடிய நல்லன்பர்கள் அருள்மணங் கமழும் இம் மணமாலை கொண்டு அவனை யணுகி அவனது பேரன்பிற்கோர் இலக்காகலாம்.

(ரா. வி.)

உ

அகம் ஸ்புரண

அருணகிரி சிவவிபு

தேகங் கடநிகர் சடமிதற்
　　ககமெனுந் திகழ்விலதால்
நாகஞ் சடலமி றுயிலினி
　　றினமுறு நமதியலால்
கோகங் கரனெவ னுளனுணர்ந்
　　துளருளக் குகையுள்ளே
சோகம் புரணவ ருணகிரி
　　சிவவிபு சுயமொளிர்வான்.

—ஸ்ரீபகவான்

பொருள்: உடல் மட்கலம்போன்றதோர் ஜடப்பொருளாய் 'நான்' என்னும் அறிவொளியற்றதாதலாலும், உடலற்ற தூக்கத்தில் தினமும் அனுபவமாகும் (உணர்வேயுருவாம்) நமது சுபாவத்தாலும் உடல் 'நா' னல்ல. நானென்றெழுவதெது, அதனியல் யாதென் றுணர்ந்து, உள்ளபொருளே தாமாயினோர்தம் உள்ளக்குகையுள்ளே 'நான்—நான்' என்னும் சுடர் வடிவனும் அருணசல சிவபரனே சுயம்பிரகாசனு யொளிர் வான்.

CONNEMARA PUBLIC LIBRARY
13 FEB 1955
MADRAS

உ

ஸ்ரீ ரமண சற்குரு பரமாத்மனே நம:

நான்முகம்

திருவம்பலத்தையே திருவாசகப் பொருளாகக் காட்டித் தாமும் அத்திருவம்பலமேயாய்க் கரந்தொளிர்ந்தனர் ஸ்ரீமணி வாசகப் பெருமா னென்பர். இதன் கருத்து ஆழ்ந்து சிந்திக் கற்பாலதாம். அருணாசல அக்ஷர மணமாலை யருளிய பகவான் ஸ்ரீ ரமணரையே அதற்குப் பொருள் கேட்டிருப்பின் அவரும், அருணாசலத்தையே மோனத்தாற் சுட்டிக் காட்டிவிட்டு, அவ் வருணாசலமாகவே காட்சியளித்திருப்பா ரென்பதில் ஐயமில்லை.

பகவான் ஸ்ரீ ரமணர் சரித்திரத்தை நோக்கின், "அருணா சல ஸ்புரணம்" அறிவறு சிறுவயதிலிருந்தே அவருள் ளியல்பா கத் தோன்றி, அவரது உடல் பொருள் ஆவிகளை அற விழுங்கி, அவரை முற்றும் தன்மயமாகவே உயிர்க்கச் செய்தது என்ற திருவருளநுக்ரக வரலாறு தெரியும்.

"என் தகப்பனாரைத் தேடிக்கொண்டு அவர் உத்தரவுப் படி நான் கிளம்பிவிட்டேன்" என்றதால் ஆரம்பத்தில் அவருக் குச் சிறிது துவிதவுணர் விருந்ததாகத் தோற்றினாலும், அவர் அருணாசலத்தைக் கண்டது முதலே, கண்டவ னெவனெனக் கருத்தினு ளுடக் கண்டவ னின்றிட நின்றது கண்டேன் என்ற, தானே தானான அதீதஸ்திதி யடைந்து, "தானான தன் மயமே யல்லா லொன்றைத் தலையெடுக்க வொட்டாத" அருணாசல சொரூப (இருப்பு மாத்திர) மாகவே, கேவல நிர் விகற்ப சமாதியாகிய ஸ்வபாவநிலையில் நெடுங்காலம் ஆழ்ந் திருந்து, பின்னர், அருளும் பொருளு மபேத மாயினும் இருதிற னென்னு மியலு முண்டு என்னு மநுபூதியால், பொருணிலையிற் றிரிபின்றியே, அருளா லெவையும் பார்க்கும் அகண்டாகார

வுணர்வநுபவ முடைய ஸஹஜ நிர்விகற்ப சமாதி கைவரப் பெற்ற அவசரத்தில், அவ் வநுபவ வடிவாகவே வெளிவந்த முதல் நூல் இதுவாகும்.

ஏற்கெனவே அவரது அறிவு, ஆற்றல், மனம், வாக்கு ஆதிய யாவும் "அல்லை யுண்ட பகல் போல" அருணாசலத்தா லடைய விழுங்கப்பெற்று, சின்மாத்திரமாக விளங்கும் அருணகிரியி னின்று ஸ்புரித்த "அருணாசலம்", "அருணாசலம்" என்ற ஸ்புரிப்புக்களின் பொருள், ஸத்தாஸ்பூர்த்தியான அவ் வருணா சலத்தையே யன்றி வேறு யாதாக விருக்கமுடியும்! மற்றும், ஸ்ரீ பகவானது தவத்திறன், கைவல்யசித்தி ஆகியவற்றின் பண்பு களை, இந்நூலில் வரும் அகம்புகுந் தீர்த்துன் னகருகை சிறையா யமர்வித்ததென், மைமய னீத்தருண் மையினு லுனதுண் மைவசமாக் கினை, பொடியான் மயக்கியென் போதத்தைப் பறித்துன் போதத்தைக் காட்டினை, பேய்த்தனம் விடவிடாப் பேயாப் பிடித்தெனைப் பேய னுக்கினை, ...குறியா வெனைக்கொளக் குறையென் செய்தேன் என்பன போன்ற, அன்னார்தம் வாய்மொழிகளைக் கொண்டே நுணுகி யாராயின், பெரியோர்களிற் பலரும் "பல்லூழி காலம் பயின்றரனை யர்ச்சிக்கின் னல்லறிவு சற்றே நகும்" என்றபடி பலகாலம் வருந்தி அரிதிற்பெற்ற வநுக்ரக ஸம்பத்தாற் பரிபாக முற்று, ஸ்வப்பிரயத்தனத்தால் சற்குரு கடாட்சத்துடன் அஹம் ப்ரஹ்மாஸ்மி, ஸோஹம், சிவோஹம் என்பனவாதிய வுபதேச மஹா வாக்கிய லக்ஷ்யார்த்தத்தைப் பற்றி, பிபீலிகம், விகங்கமாதிய மார்க்கங்களிலும், மர்க்கட நியாயத்திலும் அருந்தவமியற்றி, அசிபதப் பொருளான ஐக்கியப்பேறு பெற்றிருக்க, பகவானான ஸ்ரீ ரமணரோ, மெய்ஞ்ஞானத் தையோ, முக்திப் பேற்றையோ, உபதேசத்தையோ, குருவநுக் கிரகத்தையோ கனவிலும் கருதினாரில்லை, விழைந்தாரில்லை. முயன்றாரில்லை யென்பதும், அவர் அருணாசலமே 'ஆனார்' என் பதினும் 'ஆக்கப் பெற்றார்' எனலே பொருத்த மென்பதும் தேற்றமாவதோடு, இப்படி மார்ச்சால நியாயத்தால் திடீ ரென் றேற்பட்ட ப்ரக்ஞானமான ப்ரஹ்மாநுபவத்தையே,

அதைத் தமக் கநுக்ரகித்த ஸ்ரீ அருணசலேசனை முன்னிலைப் படுத்தி, தத்துவந் தெரியா தத்தனை யுற்ருய் தத்துவ மிதுவென் என்னும் அடிகளால் வியந்து போற்றினு ரென்பதும் தெளி வாகும். இவ்வாறு அருட்பெருஞ் சோதியால் விழுங்கப்பெற்று அதுவேயான எதிர்பாராத இப்புதிய வதிசய வநுபவத்தைக் கொண்டு, தமதியல்பையும் சொரூபத்தையும் தெளிந்து திடப்படுத்தவேண்டி, அன்று தம்மைத் தாமே விசாரித்துக் கொண்ட நானுர் என்ற விசாரணையையே, பிற்காலத்தில் தம்மை வழிபட்ட சீடர்களுக்கும் ஆன்மவிசாரமாக வுபதேசித்தா ரென்க.

ஆக, இந்நூலின் பொருள் அருணசலம். அது ஸச்சிதா நந்தமே யியல்பான அசலப்பொருள்; சிந்தையு மொழியுஞ் செல்லாச் சிதம்பரம். மெய்ஞ்ஞானமான அந்த மோனப் பண்புக்குப் பொருள் காண வல்லார் யார்! "அதுவானு லது வாவ ரதுவே சொல்லும்" என்பது ஆன்ருேர்தம் அநுபவத் துணிவாகலான் நிற்குநிலை நிற்குந் தகவுடையரே அதற்குத் தகுதியாளர் என்ப துறுதி.

குரு வநுக்ரக பலத்தாற் செயற்கரிய செய்து முடிக்கும் பேராற்றல் படைத்த பெரியாரான ஸ்ரீ முருகனுர், அவனரு ளாலே யவன்ருள் வணங்கி, அவ் வருள்வல்லபத்தாலேயே, ஸ்ரீ அருணசல அக்ஷர மணமாலை யென்னும் இவ்வருணூலுக்குப் பொருள் காணும் அரும்பெரு நன்முயற்சியிற் றலைப்பட்டு, வெகு அற்புதமான வெற்றி பெற்றிருக்கின்ருரென்ருல், அது அவர் போல்வார் வியக்கத்தக்கதொன் றன்று. ஸ்ரீ பகவானது திருவருளையே கண்ணுகக் கொண்டு காணப்பெற்ற விவ்வுரைக்கு, அதனினும் வேண்டத்தக்க சிறப்பு வேறில்லை யென்ருலும் குறிப்பிடத்தக்கது இஃதொன்றேயாம்.

மூலகர்த்தாவான பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் திரு மேனியுடன் விளங்கிய காலத்திலேயே, அன்னுர் திருமுக முன் பாகவே, மூலத்துக்கும் உரைக்கும் ஒரு சிறிதும் பொருண்மாற்

றம் ஏற்படாவாறு, மூலத்தின் ஒவ்வொரு பதத்துக்கும் மூல கர்த்தாவின் கருத்தைத் தெளிவாகத் தெரிந்து, இவ்வுரை எழுதப்பெற்ற காரணத்தால், பிரஸ்தானத்ரயம் போன்ற பிரபலமான பல வுருணூலுரைகளிற் போல, மூலத்துக்கும் உரைக்கும் உள்ள கருத்தொருமைபற்றிச் சிற்சில விடங்களிற் கற்போர் கருத்தை யலைக்கும் ஐயப்பாடுகள், இவ்வுரை சம்பந்தப்பட்ட மட்டில், என்றும் எவர்க்கும் தோன்றுவாறு முற்றும் தவிர்க்கப்பட்டிருத்தல் இதற்குரிய தனிச்சிறப்பாகும்.

மூர்த்திபரமான ஸ்ரீஅருணாசலேச்வரரை விசேட வகையாலர்ச்சிக்கும் சாதாரணமான தொரு துதிநூலாகவே இந்நாள் வரை யாவராலுங் கருதப்பெற்றும் பாராயணஞ்செய்யப்பெற்றும் வந்த ஸ்ரீ அருணாசல அக்ஷர மணமாலை யென்னும் இந்நூல், இன்று அறிஞரான ஸ்ரீ முருகனாரது உரை விளக்கத்தால் ஒரு சிறந்த லக்ஷணகிரந்தமாக விளங்கப்பெற்று, ஸ்ரீ முருகனாரையும் அடியவருள்ளந்தோறும் இடம்பெறச் செய்து, ஸ்ரீ குருதேவருட னுறையும் அருட்செல்வராக்கிய தென்பது வெற்றுரையன்று. இவ்வுரைநூல் ஆன்றோராற் பெரிதும் விருப்பத்துடன் வரவேற்கப்படு மென்பது திண்ணம்.

ஸ்ரீ அருணாசல ரமண சற்குரு பகவான் சேவடி வாழ்க

சுபம்

ஸ்ரீ ரமண நகர்,
20-2-'52.

இங்ஙனம்
நடனானந்தன்

CONNEMARA PUBLIC LIBRARY
13 FEB 1955
MADRAS

பாராட்டுரை

அருணாசல அக்ஷர மணமாலை என்னும் இந்நூல், உலகோர் அதனை யுருவேற்றி உய்யவேண்டி ஸ்ரீ ரமண பகவான் அருணாசலக் கடவுளுக்குச் சூட்டிய தமிழ்ப்பா மணமாலையாகும். அடிகள் (1) அருணாசல சிவனைப் பாடுவானேன்? (2) அக்ஷர முறையிற் பாடுவானேன்? (3) நூற்றெட்டு என்னும் எண்ணிற் பாடுவானேன்? (4) தமிழிற் பாடுவானேன்? (5) தமிழ் மாலையாகப் பாடுவானேன்? (6) மணமாலையாகப் பாடுவானேன்? (7) சின்னஞ்சிறிய பாவகையிற் பாடுவானேன்? இவ் வினாக்களுக்கு உரிய விடையை ஆராய்வோம்.

(1) அருணாசல சிவனைப் பாடுவானேன்?

'யானென தெனச்சருவும் ஈன சமயத்தெவரும்
யாரு முணர்தற்கரிய நேர்மைக்காரன்' இறைவன் என்றார் அருணகிரியார். அத்தகைய இறைவன், 'யான், யான்' என இருவர் கொண்ட செருக்கு அழியவும், அவர்கள் ஞானம் பெறவும் அருள் பாலித்த தலம் அருணாசலம். நினைத்த மாத்திரத்தில் முக்தியளிக்கும் தலம் அருணாசலம். இவ்வுண்மை—

"என்னிகர் எவரு மில்லென் றிருவரும் இகலு மெல்லை
அன்னவர் நடுவு தோன்றி அடிமுடி தெரியா தாகி
உன்னினர் தங்கட் கெல்லாம் ஒல்லையின் முத்தி நல்கி
தன்னிக ரின்றி நின்ற தழற்பெருஞ் சயிலம்"

என வரும் கந்த புராணச் செய்யுளால் அறியக் கிடக்கின்றது. ஆதலால், 'யானெனது' அற்று, இப் பெரிய தலத்தை நினைத்து முக்தி கைகூடும் பயனை உலகோர் பெறவேண்டி, இங்கு வீற்றிருக்கும் சிவனைப் பாடினர் அடிகள்.

(2) அக்ஷர முறையிற் பாடுவானேன்?

அடியார் அருணசலனைப் பலமுறையுங் கருதிப் பாடி வணங்கிப் பயனடைய வேண்டியதாதலின், அக்ஷர முறையே அன்னுர் மனப்பாடஞ் செய்து உருவேற்றுதற்கு எளிய முறையாம் ஆதலின், இந்நூலை அம்முறையிற் பாடினுர்.

(3) நூற்றெட்டு என்னும் எண்ணிற் பாடுவானேன்?

"மருந்து வேண்டில் இவை மந்திரங்கள் இவை"; "மருந்திவை மந்திரம்...மற்றுமெல்லாம் அருந்துயர் கெடும்; அவர் நாமமே சிந்தைசெய் நன்னெஞ்சமே"—என்று சம்பந்தப் பெருமான் கூறியவாறு, 'அருணசல' என்னும் ஐந்தெழுத்து மந்திரம் தன்னகத்திற் பன்முறையும் பயின்றுள்ள பாராயண நூல் இஃது ஆதலின், ஜபத்துக்கு உரிய எண்-நூற்றெட்டு மேற்கொள்ளப்பட்டதாம்.

(4) தமிழிற் பாடுவானேன்?

சிவனுக்கு உகந்தது தமிழே யாதலின்; "அர்ச்சனை பாட்டே யாகும்; சொற்றமிழ் பாடுகென்றுர் தூமறை பாடும் வாயார்" என்னும் பெரிய புராணத் திருவாக்கே இதற்குச் சான்றுகும்.

(5) தமிழ் மாலையாகப் பாடுவானேன்?

இறைவனுக்கு உகந்தது தமிழ்ப்பா மாலையே. அடியாரானுர் தத்தம் விருப்பின்படி, தமது அன்புக்கும் செல்வ நிலைக்கும் தக்கவண்ணம் (விலை குறைந்த) பூமாலையோ, (விலை நிறைந்த) பொன் மாலையோ இறைவனுக்குச் சாத்தி வணங்கலாம். ஆனுல், இறைவன் தாமே விரும்புவது எத்தகைய மாலை என வினவின் அது தமிழ் மாலையே யாம்; ஆதலால், நீ தமிழ் மாலையைக் கையுறையாக வைத்து அவரை வணங்கி உய்வாயாக நெஞ்சமே! எனப் பொருள் படும்படி—

*" பூம்படி மக்கலம் பொற்படி மக்கலம் என்றிவற்ருல்
ஆம்படி மக்கலம் ஆகிலும் ஆரூ ரினிதமர்ந்தார்
நாம்படி மக்கலம் வேண்டுவ ரேல்தமிழ் மாலைகளால்
† நாம்படி மக்கலம் செய்து தொழுதுய் மடநெஞ்சமே "

என அப்பர் சுவாமிகள் அருளியுள்ளார். இவ்வுண்மையை யறிந்த பகவான் தமிழ் மாலை ஒன்றைத்தான் இறைவன் விரும்புவன் எனத் தேர்ந்து இந்நூலைத் தமிழ்மாலையாகப் புனைந்தார் என்க.

(6) மணமாலையாகப் பாடுவானேன் ?

எனிற் கூறுதும். மணம்தானே இருவரை ஒன்றுபடுத்தும் மங்கலநிகழ்ச்சி. அதனல் பரமாத்மாவோடு ஒன்றுபட விரும்புகின்ற ஜீவாத்மா அந்தப் பரமாத்மாவோடு கலக்க மணமாலை சூட்டுதலே தக்க வழியாம் என்க. இவ்வுண்மையைக் கண்டே பெரியோரெல்லாம் இறைவன் சூடியுள்ள மணமாலையை விரும்பி வேண்டியுள்ளார்.

" மால்கொண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே "

என்றும்,

" பேதை கொண்ட கொடிதான துன்ப மயல்தீர
குளிர்மாலை யின்கண் அணிமாலை தந்து
குறைதீர வந்து குறுகாயோ "

என்றும் இம்முறையிலேயே அருணகிரியாரும் வேண்டியுள்ளார். நன்று, 'மண மாலை' என்ருல், 'மாலை மாற்று' வேண்டுமே. அஃது எங்ஙனம் கூடும்? " மாலை யளித்து...என் மாலை யணிந் தருள் அருணசலா " (108) எனப் பகவான் வேண்டுகின்றனரே ! இறைவனுக்கு அடிமை மாலை சூட்டுதல் எளிதாம். ஆனல், இறை

* படிமக்கலம் - பெரியோர்க்குச் சிறியோர் வைக்கும் கையுறை, காணிக்கை. † நாம் - நீ என்னும் பொருளில் வந்துள்ளது (திருக்கோவையார், 164).

வன் தான் அணிந்த மாலையை அடிமைக்குத் தருவனே? அஃது இயலுமோ? எளிதாமோ?—எனின்—'யானெனது' என்னும் செருக்கு அழிந்த நிலையில் இறைவன் எளியனுவான்; வேண்டுவார் வேண்டுவதே ஈவான் என்க. இவ் வுண்மையை யறிந்து வெற்றி கொண்டவள் வள்ளி; முருகனையே நாடி நின்று, 'தன்னை மறந்தாள், தன் நாமங் கெட்டாள், தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே' என்ற நிலையில் வள்ளியம்மை இருந்த படியால் இறைவனே தணிகையை விட்டு வள்ளிமலைக்கு ஓடிச் சென்று வள்ளியை மணந்தான். இதுவே 'வள்ளி சன்மார்க்கம்' என்பர். "குறமானை யண்மி விரும்பிய பெருமாளே" என்றும், "முன்னங் குறிச்சியிற் சென்று கல்யாணம் முயன்றவனே" என்றும், "குறமாதுடன் மால் கடனு மெனவே அணை மார்பா" என்றும் துதித்துள்ளார் அருணகிரியார். "தானென்றவர்முன் ஞெளித்தோடித் தன்னை யிழந்தவர்முன், யானென்று சென்றிடுங் காசிப்பிரான்"—என்றூர் குமரகுருபரர். "தேடிநீ யாண்டாய் சிவபுரத் தரசே" என்றூர் மணிவாசகர்.

இனி, வேடிக்கையாக—தன்னை யிழந்தவர்முன் தாமே சென்று மாலை சூட்டுவர் அண்ணல் எனில், அஃது எங்ஙனம் கூடும்? பக்கத்தில் ஒரு மணமகள் பார்ப்பதிதேவி இருக்கின்றூளே! தலையில் மற்றொரு மணமகள் கங்காதேவி இருக்கின்றூளே! தமது மார்பிலுள்ள மாலையை எடுத்துத் தருவாரானல் பக்கத்திலுள்ள தேவி பார்த்து விடுவாளே! தமது முடி மாலையை எடுத்துத் தருவாரானல் முடிமீதுள்ள கங்கைநங்கை கண்டுகொள்வாளே! இங்ஙனமிருக்க எங்கிருந்து எவ்வண்ணம் இந்நங்கைக்குத் தமது கொன்றைமாலையை அவர் கொடுத்தனர்—

"மங்கை காணக் கொடார் மணமாலையைக்
கங்கை காணக் கொடார் முடிக்கண்ணியை
நங்கை மீரிடை மருதரிந் நங்கைக்கே
எங்கு வாங்கிக் கொடுத்தார் இதழியே"—

என்று வியக்கின்றார் அப்பர். "யார்க்கும் முன்னவனே முன் னின்றால் முடியாத பொருளுளதோ"—இறைவனுக்கு எதுதான் முடியாது என்பதே அதற்கு விடையாம். மேலும் "மாசி லடியார்கள் வாழ்கின்ற வூர்சென்று தேடி விளையாடியே யங் ஙனே நின்று வாழும் மயில்வீரன்" அல்லவா இறைவன்.

(7) சின்னஞ்சிறிய பாவகையிற் பாடுவானேன்?

மனப்பாடஞ் செய்தற்கு எளிதாயிருக்க வேண்டி இச் சுருக்கவகையிற் பாடினார். மேலும், ஆசிரியரது அருண்ஞானப் புலமைத்திறத்தால், "தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட பனையளவு காட்டும் படித்தால்" எனத் திருக்குறளைக் குறித்துப் புலவர் - கபிலர் கூறியவாறு, இச் சின்னஞ்சிறிய பாடல்கள் பென்னம்பெரிய பொருள்களைத் தம்மி லடக்கியுள் ளன என்பதை இந் நூலுக்கு அமைந்த இவ் வரிய பெரிய வுரை யால் அறிகின்றோம். ஒவ்வொரு பாட்டுக்கும் எளிதிற் புலப்படாத நுண்ணிய பொருள்களை உரையாசிரியர் தமது கல்வியறிவா லும், அளவற்ற பக்திப்பெருக்காலும், நூலாசிரியரான தங் குருநாதருடைய திருவருட்பிரசாதத்தாலும் கண்டு விளக்கியுள் ளார். உதாரணமாக, 62-ஆம் பாடலை எடுத்துக்கொள்வோம். "எல்லாம் வல்லவன் நீ; எளிதாக எனக்குன்னைத் தந்து என்னை நீ யாட்கொண்டிருக்கலாம்; அங்ஙனம் என்னை நீ யாட் கொள்ளவில்லை; நானொருவன் உளனென்பதே உனது திருவுஷ் டியிற் படவில்லை; ஆதலால், நான் சம்பந்தப்பட்டவரையில் ஒரு குருடனே நீ"—என்று படித்தவுடனே இப்பாடலுக்குப் பொருள் தெரிகின்றது. இங்ஙனமிருக்க, இப்பாடலுக்கு என்ன என்ன அருமையான பொருள்களை உரையாசிரியர் கொண்டுள்ளார் என்பதை அவ்வுரையைப் படித்துப்படித்துக் கண்டு மகிழ்கின்றோம். "காகு" என வடநூலார் கூறும் ஒலி வேற்றுமை வகையில் இப்பாடலுக்கு உரைகண் டெழுதிய விரி வுரை விளக்கம் மிக அருமையாக இருக்கின்றது. இங்ஙனமே, ("நாண மகற்றிய கருணை புரிவாயே" என அருணகிரியார்

கூறிய வண்ணம்) அடியேன், 'யானெனது' என்னும் நாண வடிவான மானுபிமான நிலையை விட்டு உன்னை நாடிட, நீயும் இணங்கி என்னேடொன்றுபட்டு என்னிடம் ("மனத்துன்னை வைத்தாய்" என்று சுந்தரர் கூறியபடி) அசைவற்று நின்றுள்ளாய்—எனப் பொருள்படும் 54-ஆம் பாடலுக்கு உரையாசிரியர் கூறிய அருமைப்பொருள் அவரது ஆழ்ந்த நுண்ணறிவைப் புலப்படுத்துகின்றது. இங்ஙனம் பலவிடங்களிலும் அரும் பொருள் விளக்கங்கள் பல காண்கின்றோம். ஆணும் பெண்ணும் பாராயணநூலாகக் கொள்ளும் நூல் இது என்னும் பெற்றியையுணர்ந்து, "கூர்வாட் கண்ணியர்" (20) என்னும் சொற்றொடர்க்கு உரையாசிரியர் கண்டுள்ள பொருள் கண்டு களிக்கத் தக்கதாம். இங்ஙனம், நூலாசிரியரது நுண்ணிய கருத்துக்களை எடுத்து விளக்க வல்லவர்,

"உண்ணுமதுரக்கனியோ டுறுசுவைபோ லொன்றி
யெனைப்
பண்ணொடுபாட் டுப்போற் பரிந்தாண்ட வேங்கடன்பால்
உண்ணுணுகி யுசாவுயிரோ டுணர்வு மொடுங்கொடுங்கக்
கண்ணொடுகண் ணோக்கி"யே கண்ணோக்க மாடினவரும்

ஸ்ரீ ரமண சந்நிதி முறை ஆசிரியருமான திரு. கண்ணமுருகனரல்லாமல் வேறு யாருளர்!

மணமாலை பாடி மணமாலை நூலுக்குக்
குணமா யமைந்த குறிசே ருரைபாடிக்
கணமாம் வினைதீர் கதிகாட்டும் நாலிஃதே
திணமா மெனப்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ

எனக் குதூகலத்தோடு தட்டமிட்டுக் கூத்தாடிப் பாடி,—அக்ஷர (ர)மணமாலை வாழி! அதன் ஆசிரியர் பகவான் வாழி! அந்நூலின் இவ்விருத்தியுரை வாழி! அவ்வுரைகண்டார் வாழி! அவ்வுரை அச்சேற வுதவினோர் வாழி!—என வாழ்த்தி வாழ்த்தித் திருத்தணிகேசன் திருவருளைப் போற்றுவோமாக.

31-10-51.

வ. சு. செங்கல்வராய பிள்ளை

CONNEMARA PUBLIC LI
13 FEB 1955
MADRAS

உரைச்சிறப்புப் பாயிரம்

தணிகைமணி, ராவ்பகதூர்

வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள், எம். ஏ.

(Retired Personal Assistant to the Inspector General of Registration)

உதவியது

(கலிவிருத்தம்)

தவர்பலர் தொழுதேத்துந் தன்மைய ரமணேசர்
அவருல குய்யவரு ளக்ஷர மணமாலைக்
கிவரல துரைவல்லா ரெவருள ரெனுமாறு
விவரண மானவுரை விளக்க மளித்தனரே.

(வேறு சந்தம்)

பருகு வன்னெனும் பத்தியோ டண்ணலார்
அருகு ஞான வமுதுப தேசங்கள்
உருகி நின்றங் குளத்தினிற் பற்றிய
முருக னெனும் மூதறி வாளரே.

CONNEMARA PUBLIC LIBRARY
13 FEB 1955
MADRAS

முன்னுரை

ஆசிரியர் பகவான் அதிநுட்பமுந் திட்பமும் வாய்ந்த வகத்தால் ஆழப்படிந்த விதயத்தே பரமான்மசொரூபமான அருணாசலவரன்பால் அன்னார்க்கு அதிதீவிரமாகவும் தீக்ஷ்ண மாகவும் கிளர்ந்தெழுந்த பரமப்பிரேமானுபவ விளைவாதலின் இம்மாலையின் தமிழிசைப்பாசுரங்கள், ஆண்டா னருள்விளக்கத் தோடு பக்தித்துறைகளிற் பலபடியாகப் படிந்து திளைத்த பரம பாகவதராலன்றி மற்றெத்துணை யறிஞராலும் அவற்றி னுண் மையான முழு மெய்ப்பாட்டுப்பொருளும் எளிதிற் காண்டலரி தாக அத்துணை யாழமும் அகலமும், அருமையும் பெருமையும், பல்வேறு சாகைகளும் சாயைகளும் உடைய—அன்னா ரருளிச் செயல்களான அத்யாத்மநூல்வரிசையில் முதலாவதான—இவ் வக்ஷரமணமாலைக்கு உரைகண்டுதவும்படி அன்பரான அடியார் சிலர் என்பாற் பலகால் வற்புறுத்தியிட்ட ஆணையை மறுத்தற் கறவே யசக்தனாய்,—எடுத்ததொழிலை இனிதுமுடிக்கச் சற்றும் போதியதல்லாத என் அற்பவறிவாற்றலை மற்றெல்லாரினும்மிக நானே நன்கறிந்துவைத்தும் அறியாதேன்போன்று, திரு வருட்டுணையையே முற்றும் நம்பி,—முடிவில், இவ்வுரையை ஒரு வாற்றாலெழுத முற்பட்ட என்மூடத்துணிவை அடக்கமுள்ள அறிஞர் பொறுக்கக்கடவர்.

"குற்ற மகற்றிக் குணங்கொண்டு பாராட்டல்
கற்றறிந்த மாந்தர் கடன்."

CONNEMARA PUBLIC LIB
13 FEB 1955
MADRAS

உ

ஸமர்ப்பணம்

வெண்பா

அவனவ ளாகி யவனை யணைந்த
சிவமண மாலையைத் தேரும்—கவினுரைசற்
போத சொரூபப் புராண ரமணகுரு
பாத சமர்ப்பணம் பார்.

அருணசலேசுவரர்
அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக ஞாபகார்த்தம்
முகவைக்கண்ணமுருகன்
அருணசல குருபாத ஸமர்ப்பணம்

தாரணவாண்டு வைகாசித்திங்கள் 22-ஆம் நாள்
(4-6-1944)

CONNEMARA PUBLIC LIBRARY
13 FEB 1955
MADRAS

பாயிரம்

[உரையாசிரியர் கூறியது]

தருணா ருணமணி கிரணா வலிநிகர்
தருமக்ஷ ரமண மகிழ்மாலை
தெருணா டியதிரு வடியார் தெருமரல்
தெளியப் பரவுதல் பொருளாகக்
கருணா கரமுனி ரமணா ரியனுவ
கையினாற் சொலியது கதியாக
வருணா சலமென வகமே யறிவொடு
மாழ்வார் சிவனுல காள்வாரே.

பொழிப்புரை: மெய்யுணர்வை நாடி நின்ற மெய்யடியார் (அதற்குத் தடையான) தம் மனக்கலக்கந் தெளியும்படி அருணாசலனைத் துதித்து வழிபடற்பொருட்டாக ஆசாரிய ரமணன் (அவர்மாட்டுத் தனக்குண்டான) மகிழ்ச்சியாற் கூறியதான அக்ஷரமணமாலையே தமக்குற்ற கதியாக நம்பி அருணாசலமேன (மனத்தா லெண்ணி) அறிவோ டகத்தே யடங்குவோர் திருவருளாற் சிவனுல காளப்பெறுவர்.

விசேடவுரை: தருணாருணமணி.....மகிழ்மாலை - மணிமண்டலமான பால சூரியனது கிரணங்களின் வரிசைபோல் ஒளிவிடுகின்ற அக்ஷரங்களான மகிழமலர்களாற் புனைந்து நறுமணம்பொருந்திய மாலை. தருணருணன் - பாலசூரியன். மணி (மண்டலத்துக் காகுபெயர்) - தொளைக்கப்படாத முழுமணி

யான விண்மணி. கிரணாவலி - கதிர்களின் வரிசை. நிகர்தரும் - ஒளிவிடுகின்ற [நிகர் - ஒளி]; **நிகர்மலர் நீயே கொணர்வாயென்றலும்** - மணிமேகலை. நிகர் - ஒப்பென்று சாமானியமாகக் கொள்வதில் அத்துணை விசேடமின்றாம். அக்ஷரங்களை அருணகிரணங்களுக்கும் அவற்றின் மாலையை அவற்றின் ஆவலிக்கும் ஒப்பாகக் கொள்க. இனி, அக்ஷரமணமகிழ்மாலை - அக்ஷரங்களாகிய புஷ்பங்களாற் றொடுக்கப்பட்டதும், *மணவினைக் கறிகுறியாக வதூவரர் தம்முள்ளே மாற்றிக்கொள்வதும், மனமகிழ்ச்சி—உள்ளக்கிளர்ச்சி—அளிப்பதுமான மாலை எனவும் ஒருங்கே பொருள்பட இரட்டுறமொழிந்தவாறாம். ஈண்டு மகிழ்ச்சி - அருணாசலனோடைக்கியவடிவான கலவிப் பேரின்பம். தெருள் - மெய்யுணர்வு. தெருளை நாடுவோரே திருவுடையாரென்பார் தெருணாடிய திருவடியாரென்றார். பாக்கியசாலிகளான அடியாரென்றவாறு. நாடல் - தீவிரமாக வேண்டல். தெருமால் - இந்திரஜாலம்போல மாயமாகத் தோன்றி மறைகின்ற கற்பனாநாமரூப சமூகங்களான தேகலோகங்களில் யானெனதென் றுண்டாகும் அகப்புறப்பற்றுக்களால், அவற்றுக்கடிப்படையான பாரமார்த்திகவுண்மையை உள்ளபடி யுணரவொட்டாது மறைத்துநிற்கும் மனமயக்கம். பரவுதல் - துதித்தல், வழிபடல். பொருள் - பயன். கருணாகரன் - அருட்கடலாக, அருளுக் குறைவிடமாகவுள்ளவன். முனி-மனனசீலன். ஆரியன் - சாதுக்களாற் பூஜிக்கத்தக்கவன். உவகையினுற் சொலியது - அருணாசலனருளால் தன்னுள்ளத்தே யூறிப் பொங்கித் ததும்பும் ஆனந்தமேலீட்டாற் கூறியது என்றுமாம். ரமணாரியன் உவகையினாற் சொல்லியதாகிய அக்ஷரமணமகிழ் மாலை எனக் கூட்டுக. முமுக்ஷுக்கள் அருணாசலத்தியான வடிவான அறிவோடு அகத்தே யாழ்வதற்குக் கதி அம்மாலை

---

*மாலை யளித்தரு ணாசல ரமணவென், மாலை யணிந்தருளருணாசலா—என்னும் பாட்டால் ஆசிரியர் பகவானாலும் மணமாலை என்னுந் தொடருக்கு இப்பொருள் விசதமாக நன்கறிவிக்கப்பட்டவாறு காண்க.

எனப்பட்டதாம். ஈண்டுக் கதி - வழிகாட்டி, வழித்துணை. அகத்திற் கவிந்த அவிச்சையிருளைத் தன்னியல்பால் அறவே யகற்றும் அறிவொளிப் பிழம்பான அருணாசலனைத் தம்மகத்தால் வழிபட்டன்றி எவரும் மயக்கந் தெளிந்து மெய்யுணர்ச்சி யடைய லாகாமையின் அருணாசலத்தியானம் தெருள்நாடிய திருவடியார்களுக்கு இன்றியமையாதென்க. சகல ஜீவராசிகளையும் சமுசாரமயக்கத்திற் பிணித்தலுடைய ருணம் (அஞ்ஞானதிமிர கன்மபந்தம்) எதன்காட்சியா லிறந்துபடுமோ அது அருணாசலம் என அருணாசல புராணத்திற் கூறப்பட்டது.

எல்லா வுலகுந் தகையவ் வியலாற்
பொல்லா வினைகள் ருணமாம் புகலீ
தில்லா ததுவா மெதுகண் ணுறலா
லெல்லா ரருண சலமா மிதுவே.

—அருணாசல மாகாத்மியம்

இன்னும் சச்சிதானந்தகனமெனவும், ஈசஜீவைக்கியமெனவும், சுவர்ணதேஜோமயமெனவும் அருணாசல சப்தத்துக்குப் பொருள் கூறுவர் ஆசிரியர் பகவான்.

சத்திய சிற்சுக மன்றிப் பரவுயிர் சாரயிக்க
மர்த்தவத் தத்வ மசியரு ணப்பொரு ளாமசலத்
தார்த்தங் கனமது வாகுஞ்செவ் வாடக வாரொளியா
முத்தி நினைக்க வருளரு ணாசல முன்னிடவே.

—அருணாசல நவமணிமாலை

அகம் - உள்ளம், மனத்தின் பிறப்பிடமான இதயம். இனி, ஏகாரம் பிரித்துக் கூட்டி, அருணாசலமே அகமென வெண்ணி என்றுமாம்.

அனியபா வத்தி னவனக மாகு
மனனிய பாவமே யுந்தீபற
வனைத்தினு முத்தம முந்தீபற.

—உபதேச வுந்தியார்

அத்துவித சுத்தான்மசொரூபமான அருணுசலனுக் கயலான வற்றிலே தம் மறியாமையாலுண்டான அகந்தைமமதைகளின் தியாகவடிவான ஆன்ம சமர்ப்பணம் (தன்னிழப்பு)—பூரண சரணுகதி—அதனுற் குறிக்கப்பட்டதாம். இந்நிலைக்கண் இயல்பாக விதயத்திற் சுடர்விட் டொளிர்வதே சுத்தான்ம சொரூபானுபூதியான பிரம்மாநுபவம்.

யானே யென்னை யறிய கிலாதே
யானே யென்றன தேயென் றிருந்தேன்
யானே நீயென் னுடைமையு நீயே
வானே ரேத்துமெம் வானவ ரேறே

என்னும் நம்மாழ்வா ரனுபவத் திருவாய்மொழிப் பாசுரம் இப் பொருளுக் கிலக்கியமாக ஈண்டறியவேண்டுவதாம்.

இனி, அறிவோடு மாழ்தல் என்றதனல், *உறக்கவிழிப்புக் களினின்று—லயவிக்ஷேபங்களினின்று—நீங்கி, வாள்முனைபோ

---

*உறக்கம்—லயம்—வாலறிவுவடிவான சொரூபவுண்மை யைச் சுடராது மறைத்தலாலும், விழிப்பு—விக்ஷேபம்—ஸர்வாதிஷ்டானமாய் நிருவிகற்பமான அதன்கண்ணே (அஃ தறவே கரந்தொழிய) அசைபடக்காட்சியிற்போலத் திரிபுடி பேதக் கற்பனு விகற்பங்களை உண்மைபோலப் புலனுகச் சிதா பாசனெதிரிற் பரப்பலாலும், அவ் வுறக்கவிழிப்புக்கள்—லய விக்ஷேபங்கள்—நிரதிசயானந்த சொரூப நிருவிகற்ப ஞான நிஷ்டானுபூதிக்குத் தடையாம். உறக்கமும் லயமும், இரண் டிலுமொப்ப மனம் இதயத்தே யொடுங்கினும் முறையே ஒன் றில் இருளிலும் மற்றென்றில் ஒளியிலும் அஃதொடுங்கலை யன்றி, ஆன்மசொரூபக் கேவலஸச்சித்தான தன் பரமார்த் தத்தை அஃதறியா தயர்த்தொழிய மறைத்தற்கண் அவைதம் மில் யாதொரு பேதமு மின்றும். வியாவகாரிகத்திற் றேன் றும்பொழுதெல்லாம், ஆன்மசொரூபம், உள்ளபடி அகண்டாத் துவித கேவல ஸச்சித்தான சுத்தவகமாக ஒருகாலுந் தனித்

லத்துணைக் கூரியதாக அவற்றுக் கிடைப்பட்ட நிலையில், அவற்றுக்கெல்லா மடிப்படையான மூலாவரண தோஷத்தை முற்று மொழிப்பதான ஆன்ம விசாரம் ஆண்டா னருளாற் றனது பரிபாக சித்தத்தி லுண்டாகவே, ஜீவன், மயக்கவடிவான யானென்னு மகந்தைமுனைப் பழிதலாற் பிரதிபந்த ரகிதமாக, அறிவாகாரமாய்த் தனக்கேயன்றி யகிலத்துக்கு மிதயமான அருணுசலப் பிரம்மசொரூபத்தில், 'பிரம்மைவாஹம்'—'சுத்த சிற்பரமான அந்தத் தற்பரமே நான்'—என்னுந் தன்மயானுபவத்தால் ஆழப் படிந்து கிடக்கின்ற ஜாக்ரசுஷுப்தி யென்ற துரியநிலை கூறப்பட்டதாம். சிவனுலகாள்வர்—நிரதிசயானந்த சாசுவதபதமான கைவல்யமுக்தி அடையப்பெறுவர் என்றவாறு.

தொளிர்தலின்றி, மனுேமயக் கற்பனு விலாசத்தோடு மருவி அகமிதமென்ன ஒன்ருேடொன்று பிணைந்து துவிதமாகவே என்றுந் தோன்றலால் அங்குத் தோன்றுஞ் சைதன்யம் ஆபாச சைதன்யமும், விக்ஷேப ஞானம் ஆபாச ஞானமுமேயாம்—விழிப்புணர்வு மாயாகற்பிதமான மித்தையுணர்வாம். "உறக்கத்தி னின்று முணர்த்திடுக சித்த, முறிற்சலனம் பின்னரொடுக்காய்—உறக்க, மலைவென்னு மிவ்விரண்டு மற்றநிலை யுற்ரு, னிலையிதனி னிச்சலமா நில்" (தேவி—ஞானு—39) முதலான வுபதேசங்களால், அவற்றுக்கிடைப்பட்ட நிலையில் அப்யாச பலத்தான் மனத்தை யமர்த்தவேண்டுமெனச் சான்ருேர் சாதகர்க் கறிவுறுத்தலும் அதனுலென் றறிக.

CONNEMARA PUBLIC LIBRARY
13 FEB 1955
MADRAS

நூற்சிறப்பு

மணவன் காண்மண மங்கல மாலைசேர்
கணவன் காண்பதி னெண்கணங் கைதொழும்
வினவன் காண்விண் ணளவிட மண்மிசை
யணவன் காணரு ளண்ணு மலையனே.

ஜீவன் தலைவியும் சிவன் தலைவனுமாக முதிர்ந்த அனுராக பக்தி வழியில், காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதினர் தம்மை நன்னெறிக் குய்ப்பதாக, வெளிப்படையும் குறிப்பு மான சிங்காரத்வனிகளில் மஹர்ஷிகள் பாடிய மணமாலை, மணிவாசகர் பாடிய சிற்றம்பலக்கோவையாரினும் பொதுப் படையில் ஒருவாற்று லெளிதும் தெளிதுமாகப் படிப்பார்தம் பக்குவப்பான்மைக்கேற்ப இருவகையின்பமும் ஒருங்கு பயப்ப தாம்.

ஆனந்த வெள்ளத் தழுந்துமொ ராருயி ரீருருக்கொண்
டானந்த வெள்ளத் திடைத்திளைத் தாலொக்கு
மம்பலஞ்சே
ரானந்த வெள்ளத் தறைகழ லோனருள் பெற்றவரி
னானந்த வெள்ளம்வற் றுதுமுற் றுநிவ் வணிநலமே.

—சிற்றம்பலக் கோவையார்

CONNEMARA PUBLIC LIBRARY
13 FEB 1955
MADRAS

நூற்பயன்

மெய்ஞ்ஞானப்
பெருஞ்சோதிப் பிழம்பான
அருணாசல குருபாதம்,
வேற்றுருக்கொண்டு தன்னைத் தானே பாடின
இவ் வக்ஷரமணமாலையால்
அனவரதம் தன்னை
ஆதராதிசயத்தோ டகங்கசிந் தனுசந்தானஞ் செய்யும்
அடியரகத்தே
அவிச்சைவடிவான ஆரிருளையகற்றி
சுத்தஸச்சித்தான துரியவுண்மையைத் துலக்கி
நிரதிசயானந்த சொரூபானுபவம் பொங்க
ஆங்கே யருள்புரிவதாம்.

CONNEMARA PUBLIC LIBRARY
13 FEB 1955
MADRAS

உ

ஸ்ரீ அருணாசலரமண குருபாதம் துணை

அருணாசல அக்ஷர மணமாலை

நூற்பெயர்விளக்கம்

அருணாசல னணியத்தக்கதும், அக்ஷரங்களாகிய புஷ்பங் களால் தொடுக்கப்பட்டதுமான சுபவாசனை பொருந்திய மாலை —அருணாசல அக்ஷரமணமாலை; இன்னும், பாட்டின் பொருள் உணர்ந்து பாடும் அன்பரை அருணாசலமாகிய அக்ஷரப்பொரு ளோடு மணம் புரிவிக்கும் மாலை—அருணாசல அக்ஷரமணமாலை. [அக்ஷரப்பொருள் - அழியாப்பொருள், மெய்ப்பொருள்.] பூமண மாமனம் பூரண மணங்கொளப் பூரண மணமரு ளருணாசலா—என நூலிடையே வரும் பாட்டால், அக்ஷரமணமாலையென்னும் பெய ருக்கு இங்குக்கூறிய இரண்டாம்பொருள் ஆசிரியர்பகவானுக்கு உடன்பாடாதலறிக.

காப்பு

அருணாசல வரற்கேற்ற வக்ஷரமண மாலைசாற்றக்
கருணாகர கணபதியே கரமருளிக் காப்பாயே.

பொழிப்புரை: அருணாசல - ஸ்ரேஷ்டனுக்கு, நாயக னுக்கு ஏற்ற அக்ஷரமணமாலையை நான் சாத்த, கருணைக் கடலான கணபதியே! நீ எனக்குக் கைகொடுத்துக் காப் பாயே.

விசேடவுரை: இப்பொருளிற் சிலேடைபற்றிச் சாத்தல் சாற்றலெனத் திரிந்தது. வரன் - ஸ்ரேஷ்டன், நாயகன்.

இனி, அருணாசல அரன் எனப் பிரித்து அருணாசல சிவன் என்றும், மாலை சாற்ற - மாலைநூலைக் கூற என்றும், கருணாகரம் - கருணைக்கரம், அருட்கை என்றும், இன்னும் கரம் - கிரணம், அறிவு என்றுமாம். அரன்* - (அடியாரிடரைக் கெடுப்பவன்) என்று சிவனுக்குக் காரணப் பெயர். **தொடருந் தொண்டரைத் துக்கந் தொடர்ந்துவந் நடரும்போ தரனு யருள் செய்பவர்** (அப்பர்தேவாரம்). கந்தனோடு வள்ளியைக் கடிமணம் புரிவித்த கணபதி, அவர் தந்தையான அருணாசலசிவனோடு அன்பரைத் திருமணம் புரிவிக்கும் இந்நூலுக்குக் காப்பாகப் பொதுவகையானே யன்றிச் சிறப்புவகையானும் ஏற்புடையராதல் காண்க.

நூல்

அருணாசலசிவ, அருணாசலசிவ,
அருணாசலசிவ, அருணாசலா!
அருணாசலசிவ, அருணாசலசிவ,
அருணாசலசிவ, அருணாசலா!

—என்று ஏகாக்கிரமாக அகமுகப்பட்ட மனத்தால் இதயபூர்வமான ததாகாரத்யானாநுசந்தானத்தோடு நியமமாகத் தினந்தோறும் இம்மாலையைப் பாராயணஞ் செய்க.

1. அருணா சலமென வகமே நினைப்பவ
ரகத்தைவே ரறுப்பா யருணாசலா.

பொழிப்புரை: அருணாசலா! தம் மனத்தில், 'அருணாசலமே நான்' என்று தம்மைத் தன்னோ டபேதமாகக் கருதும் அன்பர்தம் அகங்காரத்தை வேரோடறுப்பாய்.

* பிடாரன், பிடாரி எனத் தமிழிற் றிரிந்து வழங்கும் பீடாஹரன், பீடாஹரி (पीडाहरः, पीडाहरी) என்னும் வடமொழித்தொடர்களை நோக்குக.

விசேடவுரை: அன்பரகத்தை அருணாசலன் வேரறுத்தல், அத்தகைய தியானத்தால் அவர்தாம் தன்பாற் கோரியதும், திருவுளம்பற்றி ஆங்கே அவர்க்குத் தான் கூட்டுவிக்கவேண்டியது மான முடிந்தநிலைக்கு—பாவபலத்திறைற் பாவனாதீத சற்பாவத் திருத்தலாகிய பரபக்திதத்துவமென்னும் ஆன்மசொரூப அருணாசலசிவாநுபூதிக்கு—அவ்வகங்காரந்தான் தடையாதலாலும், நானென்னு மோரகந்தை யெவர்க்கும் வந்து நலிந்தவுடன் ஜகமாயை நானா வாகித், தான்வந்து தொடருமித்தால் வளருந் துன்ப சாகரத்தின் பெருமையெவர் சாற்ற வல்லார் எனத் தாயுமானவர் கூறியபடி, ஆவரணத்தினின்று படர்ந்த விக்ஷேபவிளைவான பல்வகைப் பிறவித்துன்பங்கட்கும் அதுவே வித்தாதலாலும் என்க. முதல் அகம் - மனம் என்றும், நான் என்றும் இரட்டுற மொழிந்தவாறு. விகுதிபிரித்துக் கூட்டப்பட்ட ஏகாரம் பிரிநிலையோடு தேற்றம். அசஜ்ஜடங்களான பஞ்சகோசங்கள் நானல்லன் எனவும், சுத்த ஸச்சித்தான ஆன்ம சொரூப வருணாசலமே நான் எனவும் தாற்பரியம். அனியபா வத்தி னவனக மாரும், அனனிய பாவமே யுந்தீபற, அனைத்தினு முத்தம முந்தீபற—உபதேச வுந்தியார். அருணாசலம் என்றது பரமான ஆன்மசொரூபத்தையாம். அருணகிரி பரமான்மாவே — அருணாசல பஞ்சரத்நம். அகந்தை வேரறுப்பாய் - பாவத்தை வேரறுப்பாய் என்றுமாம்.

2. அழகுசுந் தரம்போ லகமும் நீயுமுற்
றபின்னமா யிருப்போ மருணாசலா.

பொ - ரை: அருணாசலா! அழகும் சுந்தரமும் சொல்லால் வேறாயினும் பொருளா லொன்றாயிருப்பது போலவே, நானும் நீயும் உபாதியுணர்வால் வேறாயினும் உண்மையியல்பால் ஒன்றாயிருப்போம்.

வி - ரை: இருக்கு மியற்கையா லீசசீ வர்கள், ஒருபொருளேயாவ ருந்தீபற, உபாதி யுணர்வேவே றுந்தீபற—உபதேசவுந்தி

யார். ஒருபொருள் குறித்த அழகு சுந்தரம் என்னுஞ் சொற்கள் தாம் ஒருசார் உதாரணங்களாகநின்று முறையே தென்மொழி வடமொழிகளை உணர்த்துவனவாகக் கொண்டு, அவ் விருமொழி களும் தம்மில் வேற்றுமையின்றி ஒற்றுமையாக நடத்தல்போல் எனினுமாம். தம்மில் எத்தகைய தொடர்புடையனவாயினும், பொதுவுஞ் சிறப்பும் ஆகிய இருவேறியல்புகளும் தனித்தனி படைத்த அவைதாம் தம்முள் எவ்வித விரோதப்பான்மையு மின்றித் தொன்றுதொட்டுப் பன்னெடுங்காலமாகத் தற்காலம் வரை ஒன்றுபட்டு வளர்ந்துவந் திருத்தல் வெள்ளிடைமலைபோற் கண்கூடன்றோ! உயிருக் கம்மையப்பரான அருணாசலனை முற் பாட்டாற் கூறிய ஆசிரியர் ஸ்ரீபகவான், இப்பாட்டால், அவரரு ளால் அவரோடு தமக்குண்டாகும் ஐக்கியத்துக்கு உவமைகூறு முகத்தால்,—அம்மையு மப்பனு மாயெனைப் பூமியி லாக்கியளித்து என நவமணிமாலையிற் கூறுமாறு போன்று—தம்முடலுக் கம்மையப்பரான *அழகுசுந்தரரையும் அவரிடைக் கண்ட தாம் பத்யவைக்யத்தையும் தாம் நினைவுகூர்ந்தமை குறிப்பாற் கூறினா ராம். அழகும் சுந்தரமும் ஜீவனுக்கும் சிவனுக்கும் முறையே உவமையாம்.

3. அகம்புகுந் தீர்த்துன் னககுகை சிறையா
யமர்வித்த தென்கொ லருணாசலா.

பொ - ரை: அருணாசலா! என்னை என்மனையாகிய மனத்திற் புகுந்து வலாற்காரமாயிழுத்து, உன்னிருப்பாகிய இதயத்திற் சிறிதுந் தப்பவோட்டாமல் நிலைபெறச் சிறைப் படுத்திக்கொண்ட நின்னருள்விசித்திரந்தா னென்னே!

வி - ரை: குகை - இதயம். மனம் ஜீவனுக்கும், இதயம் சிவனுக்கும் முறையே உறையுளாம். அத்யாத்மப்பொருள்

* 'அகர முதல' என்னும் முதற்குறளில், நாயனாரும் 'ஆதி பகவன் முதற்றே யுலகு' எனச் சூசிப்பித்தமை இங்கு நினைக்கற் பாலது.

கூறப்பட்டது. சாமானியப்பொருள் வெளிப்படை. தலைவி, தன்வீட்டிற் புகுந்து தன்னை வலிதிற் கைப்பற்றிச் சென்று, தன்வீட்டிற் சிறைப்படுத்திக்கொண்ட தலைவனை நேர்முக மாக்கிக் கூறியது இப்பாட்டு. தூலவாழ்விலும் பகவான் பூதலத்துக் கிதயமான அருணசலத்தினின்று, ஆங்குத் தாம் அடைந்ததுமுதற் புறம்போகாமை குறிக்கற்பாலது. ஏது வின்றி யாண்ட இறைவனருளை இதனால் வியந்தவாறு.

4. ஆருக் காவெனை யாண்டனை யகற்றிடி
லகிலம் பழித்திடு மருணசலா.

பொ - ரை: அருணசலா! எவர்பொருட்டால் என்னை நீ யாட்கொண்டாய்? முன்னர் உவப்பாக வாண்ட அந்த நீ தானே பின்னர் உவர்ப்பாகக் கைவிடின் உலகோர்யாவரும் உன்னைப் பழிதூற்றுவர்.

வி - ரை: உலகோர் தன்னடிபற்றி வழிபட்டுய்யும்படி அவர்களுக்குத் தன்னருளில் நம்பிக்கையுண்டாதற் கேதுவாக, ஒருதாரணமாக முன்னர்த் தம்மை யாண்டவனே பின்னர் உதா சீனமாக வொதுக்கின், அவ்வெண்ணத்துக்கு நேர்மாறாக, அவ் வருளில் அவர்களுக்கு முன்னிருந்த சிறுநம்பிக்கையுங் கெட்டு முற்றும் அவநம்பிக்கையுண்டாய், அதனால் உய்யும் வழியின்றி அவர்கள் தாங் கெட்டொழிவதுமன்றி அவனையும் இகழத்தலைப் படுவ ரென்பார், ஆருக்காவெனை யாண்டனையென்றும், அகற்றிடி லகிலம்பழித்திடுமென்றுங் கூறினார்.

5. இப்பழி தப்புனை யேனினைப் பித்தா
யினியார் விடுவா ரருணசலா.

பொ - ரை: இப்பழியினின்று உன்னை விடுவித்துக் கோள். என்னால் உன்னை ஏன் நினைக்கும்படி செய்தாய்? இனி யாரே உன்னைக் கைநழுவவிடுவார்?

வி - ரை: இப்பழியென்று ஈண்டுச் சுட்டியது, தம்மை யகற்றின் இறைவனுக் குண்டாவதாக முற்பாட்டிற் கூறப்பட்ட பழியை. அருள்வடிவனான ஆண்டவனுக்கு அப்பழி அறவே பொருந்தாமையாலும், தன்னருளுக்குப் பாத்திரமாக முன்பே அவனா லாட்கொள்ளப்பெற்ற தாமும் அதனைக்கண்டு மனம் பொறுமையாலும், எனவே, அவனோ தாமோ வாகிய யாதானு மொருவர்பொருட்டுமட்டுமன்றித் தம்மிருவர்பொருட்டுமே— ஏன்? முற்பாட்டிற்கூறப்பட்டபடி அவனா லாட்கொண்டருளப் பட வேண்டியவரான உலகோ ரனைவர்பொருட்டுமே—இப்பழி தப்பென்றும், தன்னினும் அகற்றுது தம்மை என்றுமே தன்னோ டுடன்கொண்டருள வேண்டிய நிர்ப்பந்தம் அவனுக் கேற்பட்டது அவனாலேயன்றித் தம்மா லன்றென்பார் உனை யேனினைப்பித்தாயென்றும், **பேராமே, சித்தமெனுந் திண் கயிற்றாற் றிருப்பாதங் கட்டுவித்த வித்தகனார் விளையாடல்** (திருவாசகம்-கண்ட-எ) என மணிவாசக ரியம்பியபடி, பலவீன மான தம் மதியாலேமட்டும் தாமாக நினைத்த நினைப்பன்றி முடிவிலாற்றலுடைய இறைவனால் நினைப்பிக்கப்பட்ட நினைப் பாதலின் அது மேன்மேலும் திடப்படுவதன்றி எந்நாளும் தளர்வதன் றென்பார், இனியார் விடுவாரென்றுங் கூறினார். இதனால் உருசிகண்ட பூனை உறியை உறியைத் தாவுவதுபோல், அருணாசலத்தியானானுபவம் பெற்ற தம்மனம் தம்முயற்சி யின்றித் தானாகவே, என்றும் மறவாமல் அவனை இடையீடின்றி இனிது நினைக்கும் என்றாராயிற்று. **பேய்த்தனம்விட விடாப் பேயாப்பிடித் தேனைப்பேயனாக்கினை**—எனப் பின்னர்க் கூறு மாறுபோல், அருணாசலத்தியானம், தாமே ஒருகால் அதனை விடினும் அது தம்மைவிடாது தமது சொரூபமேயாயிற்றென் பது இனியார் விடுவா ரென்றதன் கருத்தாம்.

6. ஈன்றிடு மன்னையிற் பெரிதருள் புரிவோ
யிதுவோ வுனதரு ளருணாசலா.

பொ - ரை: அடியர்க்கு, அவரைப் பெற்றுவளர்த்த நற்றுயினும்மிகப் பரிந்தருள்செய்வோய்! இது ஓ! நின்னருளுடைமையேயாம்.

வி - ரை: இறைவனருளோடு நோக்க அன்னையினருள் எவ்வளவோ தாழ்வதாயினும், உலகோ ரறிந்தவற்றுள் அவ் வன்னையினருளே தலைசிறந்து நிற்றலால், அவன் செய்யும் அளவிலாப் பேரருளுக் கெடுத்துக்காட்டும் உதாரணத்துக்கு அதனையே எல்லையாகக் கொண்டு, தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான் (திருவாசகம்) என்பதுமுதலாகப் பிற சான்றோர் கூறுமாறுபோன்றே தாமும் அன்னையிற் பெரிதருள் புரிவோய் என்றும், செவிலிமுதலிய பலவகைத்தாயருமுளராக லின் அவருட் பிறரை விலக்க ஈன்றிடுமன்னை என்றும், மற்ற மக்கள்போலத் தாமும் உலகியல்வாயுழலாமல் அறிவறுசிறுவயதான தம் பிள்ளைப்பருவத்திற்றுனே இறைவன் தன்னை நினைப்பித்துத் தன்னடிக்குத் தம்மைத் தடுத்தாட்கொண்ட அருட்செயல்நினைவு தம்முளத்தில் என்றும் மேலாடிநிற்றலால் அதனைச்சுட்டி இது என்றும், அதுதான் அன்னையிற் பெரிதருள் புரியும் ஆண்டவனுக் கேற்றதே யென்பார் ஓ உனதருள் என்றும் கூறினர். ஒருகால், ஏதேனுமொரு வியாஜத்தைக் கற்பனையாகத் தம்மேலேறிட்டு ஆண்டான் தம்மை யகற்றிவிடின் (4-ஆம் பாட்டு) மீண்டுத் தாமென்செய்வது என்றையுற்று அஞ்சியவர், அவன் அவ்வாறு தம்மை யகற்றுமைப்பொருட்டு முற்காப்பாக, அவ்வச்சத்தால் வாய்வெருவி இதுவோ வுனதருள் என்று, அவன் மாட்டு முன்பே தமக்குண்டான உரிமையால் அவனை ஏசினருமாம்.

7. உனையே மாற்றி யோடா துளத்தின்மே
லுறுதியா யிருப்பா யருணசலா.

பொ - ரை: என் ஆருயிர்க்குடையோனுன உன்னை ஏமாற்றிவிட்டு அற்பவுடலுக்குரிய ஐம்புலவிஷயங்களிற்

பட்டிமாடுபோ லோடி யுழலாதபடி என்னுளத்தின்மேல் உறுதியாக வீற்றிருந்தருள்.

வி - ரை : உள்ளம், வேரூன்றிய தன் விஷயவாசனையாலும் காற்றினுங்கடிய சலனசுபாவத்தாலும், பிரமாதத்தாற் சிறிது தளர்ச்சி யேற்படினும் அதுவே வாயிலாக எவரையும் எளிதில் ஏமாற்றி அனர்த்தம் பெரிதும் விளைவித்துவிடும் இயல்புடைமையால் அதற்குச் சிறிது மவகாசங்கொடாமல், இறைவனருளை முன்னிட்டுமுயன்று ஸாதுக்களான அடியார் என்றும் உள்ளத்தெளிவான உண்மையுணர்ச்சியோ டிருக்கவேண்டும் என்று தாற்பரியம். இனி, உனையே மாற்றி...—சுத்தசைதன்ய சொரூபனான உன்னையே (மாயாமயத் தோற்றமான பாஞ்சபௌதிகப் பிரபஞ்சமாகத் தன் மயக்கவறிவாலே)மாற்றி, (கற்பிதமான அதன்மேல் விஷயவாசனையாற்) பாய்ந்தோடாதபடி, (உனதுண்மையான சொரூபத்துலக்கத்தோடு) உள்ளத்தின்மேலுறுதியாக வீற்றிருந்தருள் என்பது முக்கியமான அத்யாத்ம தத்துவப்பொருள்.

8. ஊர்சுற் றுளம்விடா துனைக்கண் டடங்கிட
வுன்னழ கைக்காட் டருணாசலா.

பொ - ரை : வாசனைவசத்தால் ஊர்முழுதும் ஓயாது சுற்றும் உள்ளம் இடைவிடா துன்னைக்கண்டு உன்னிடமே மீளாதோடுங்குற, உன் பூரணசோரூபலாவண்யத்தை அதற்குக் காட்டியருள்.

வி - ரை : ஊர், முதலில் உலகுக்கும் அதன்பின் உலக விஷயங்களுக்கும் ஆகலான் இருமடியாகுபெயராம். உன்னழகு என்றது மாயாவிலாசமாகத்தோன்றி மனத்தைமயக்குகின்ற விஷயங்களுக்கெல்லாம் வியதிரேகமான நிருபாதிக சுயஞ்சோதியாய் நிருவிகற்பமா யிருந்தொளிர்கின்ற சுத்தசைதன்ய

மான அருணாசலன் சொரூபலாவண்யத்தை. மாறுமல் என்று மொருபடித்தான மாட்சிமிக்க உண்மையழகொன்றை அதுவரை தன்னகத்திற் காணாமையாலேயே அநாதிகாலவாசனையாற் றனக்கயலாகப் புறம்பான உலகவிஷயங்களில் உள்ளம் ஓடியலைவதென்று கண்டவர் அவ்வலைச்சல் நீங்க, அத்தகைய அவன் சொரூபத்தை அதற்குக் காட்டியருளும்படி அருணாசலனைப் பிரார்த்திப்பார் இவ்வாறு கூறினர். உன்னழகைக் காட்டென ஈண்டுக் கூறினாற்போலவே, உன்பவிசு கண்டுறவருளென்றும், உன்சோதியுருக் காட்டென்றும் பின்னுங் கூறுவர். புறத்தோற்றப்பொலிவு கண்டுமயங்கி உலகவிஷயங்களில் ஓயாதோடியுழலும் உள்ளம் அவ் வெல்லாவழகினும் மிக்கதான அருணாசலன் சொரூபவழகை நிரந்தரமாகத் தன்னகத்துக் காணப்பெறின் ஆங்கே அடியோ டவற்றை மறந்து, அதன் கண்ணே முடிவாக வடங்கிப் பூரணவமைதிபெறும் என்பது கருத்து.

9\. எனையழித் திப்போ தெனைக்கல வாவிடி
லிதுவோ வாண்மை யருணாசலா.

பொ - ரை: நான் பக்குவமடைந்த இப்பொழுதே என் அகங்காரக்கன்னிமையை அறவேயழித்து (உன்னோடிரண்டற)என்னைக்கலவாவிடில் இதுதானோபுருஷோத்தமனான உனக்குப் பௌருஷமாவது?

வி - ரை: தலைவி, தன்னாற் சற்றும் அடக்கலாகாதபடி தன் காமம் அவ்வளவு கைகடந்துபோன நிலையில், தன்போன்ற மகளிர்க்கு ஆருயிரினு மருமையான நாணத்தையுங் கைவிட்டு உலகியலுக் கொவ்வாமலும், தலைவனைநோக்கி வெளிப்படையாகவும் இவ்வாறு கூறினளென்க. அவர்க்கு அத்தகைய நாணினுஞ் சாலக் கற்புச் சிறந்ததாகலின், தலைவிதான் ஒரோவழி அவ்வாறு கூறலும் அமைவுடைத்தாமா றறிக. என்னை?

உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று என்றுன்றோர் கூறுவராகலின். இது நிற்க. இனி, தம்மழிவுக்குத் தாமே யுடன்படுவார் உலகில் அரியரினும் அரியர். அத்துணை யருமையான அழிவுக்கு—தன் னிழப்புக்கு—அதிதீவிரமாக முற்பட்டதுமட்டுமன்றி அதன் பொருட்டு, தம் ஆருயிர்வௌவக் காலங்கருதிக் காத்திருக்கும் கூற்றத்தைத் தாமேவலியக் கையால் விளிப்பாரினுங் கடிதாகக் காலகாலனுன அருணாசலனை அவனுக் காத்திரமுண்டாக அறை கூவியும் அழைக்கும் ஆசிரியர்பகவான் அதிதீரரினும் தீரராகல் வேண்டும். அதன் பயனாகவன்றோ அவர் இப்பொழுது, அருணா சலனோடு, அவனே தாமாகத் தாமே யவனாக உயர்வறவுயர் நலமுடைய பூரணாத்துவிதநிலையில் நிரதிசயானந்தசொரூப ராய், அத்துறையில் அருணாசலதீபம்போலத் தாமே உலகுக்கு வழிகாட்டியாகவும் விளங்குகின்றார்!

10. ஏனிந்த வுறக்க மெனைப்பிற ரிழுக்க
விதுவுனக் கழகோ வருணாசலா.

பொ - ரை: ஏனோ உனக்கிந்த மாயவுறக்கம்? உனக்கே யுரியவளான என்னை என்னோடு யாதோரியையு மில்லாதபரபுருஷரான தூர்த்தர் துன்மார்க்கத்துக்கிழுத்துச் செல்லவும் (அதனைக் கண்டுங் காணாதவன்போற் பராமுக மாகச் சும்மாவிருக்கும்) இச்செயல் (பசுபதியாய் என்னுன்ம நாதனான) உன்னருளுக் கழகாமோ?

வி - ரை: **காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால், ஆர்க்குப் பரமா மறுமுகவா**—நக்கீரர். இந்தவுறக்க மென்ற குறிப்பால் இயல்பானவுறக்கமன்றி அதுதான் மாயவுறக்க மெனக் கொள்ளப்பட்டது. உறக்கம்போல நடிப்பதையன்றி, உண்மையில், இமையாமுக்கண்ணுடைய இறைவனுக்கு—சுத்த ஸத்சித்தான ஆன்மசொரூப வருணாசல சிவனுக்கு—தன்னியல்

பால் என்றுமே யுறக்கமின்மையின் ஏனிந்த வுறக்கமென்றும், கன்னியான தன்னைக் காமவேட்கையாற் கற்பழிக்க வலாற்காரமா யிழுத்துச்செல்லும் ஆடவர் உண்மையில் தன்னோடு யாதொரு சம்பந்தமும் அற்றவரென்பாள் எனைப் பிறிழுக்க என்றும், துஷ்டதூர்த்தர்களின் ஆக்கிரமணத்துக்காளாய் அவமானப்பட்டுப் பதிதையாகாமல், தன்னைத்தவிர வேறுகதியற்ற அபலையான சதியின் மானத்தையுங் கற்பையும் ஒருங்கு பாதுகாக்கவேண்டியது பலிஷ்டனான பதியின் கடமையென்றும், அது செய்யாதொழிதல் அவனுக் கறமன்றென்றுங் கூறுவாள் இதுவுனக் கழகோ வென்றுங் கூறினாள். பக்திவழியான கற்புவழியிற் படர்வதான தன் சித்தத்தை, பதிவிரதையான பாஞ்சாலியைக் காமுகரான கௌரவர்போல விஷயங்களான தீநெறிக்கண் இழுத்துச்செல்லும் படுபாவப் பழித்தொழில் பற்றி அஃறிணையான காமக்குரோதாதிகளைப் பாவிகளென உயர்திணையாக வுருவகித்துப் பிறரென்றாள், இன்மையென வொருபாவியென வள்ளுவர் கூறினாற்போல.

11. ஐம்புலக் கள்வ ரகத்தினிற் புகும்போ
தகத்தினீ யிலையோ வருணசலா.

பொ-ரை: (என் பிறப்புரிமையாக இதயப்பேட்டகத்திலுள்ள விலையில்லா மாணிக்கமான இணையில்லா ஆத்மரத்நத்தை அநீதமாகக் கவர்ந்துகொள்ள) ஐம்புலங்களாகிய கள்வர் என்னகத்தினிற் புகும்பொழுது அவ் வகத்தில் நீதான் இல்லாது போயினையோ?

வி-ரை: அகத்துக்குடையோர் அகத்துள் இருக்கும் பொழுதே அகத்துட் புகுந்து களவாடக் கள்வர் துணியாராகலானும், அந்தரியாமியான அவனும் அகத்தைவிட்டுக் கணமும் அகலாகாமையானும் கள்வ ரகத்தினிற் புகும்போது அகத்தினீ யிலையோ என்றார். நீ இல்லாமற்போகவில்லை, நிச்சயமாக

விருந்தாய் என்று உடன்பாட்டைத் தேற்றம்படக் கூறுவார் இரண்டெதிர்மஷறயாற் கூறினர். [இலே என்னும் எதிர்மறை யோடு அதன் ஈற்றேகாரவினு மற்றோர் எதிர்மறையாம்.] அகத்திலமர்ந்தும் உண்மையில் நீ உறங்கியொழிந்தாயுமல்லே என, ஏனிந்தவுறக்க மென்பதனுல் முன்பே கூறினர்; அவர் தாம் அகத்தினிற் புக்கது நின் சம்மதம்பெற்றன்றி நிகழவில்லே என, உன் சூதே இது என்பதனுற் பின்னர்க் கூறுவதும் அதனுலென்க. அகத்தில் அருணசலன் அமர்ந்துறையப்பெற்ற அறிவு வந்த விடத்து ஐம்புலச்சேட்டை தனக்கவகாசமின்ருக அறவே கெட் டொழியும் என்று கருத்து.

> உரைமாண்ட வுள்ளொளி யுத்தமன்வந் துளம்புகலும்
> கரைமாண்ட காமப் பெருங்கடலேக் கடத்தலுமே
> இரைமாண்ட விந்திரியப் பறவை யிரிந்தோடத்
> துரைமாண்ட வாபாடித் தோணுேக்க மாடாமோ—

என்னும் திருவாசகப்பாசுரம் ஈண்டுத் தேறத்தக்கது.

12. ஒருவஞ முன்னே யொளித்தெவர் வருவா
ருன்சூ தேயிது வருணுசலா.

பொ-ரை: உதயாஸ்தமன மற்று ஸதோதய ஞான சூரியனுய் ஸர்வஸாக்ஷித்வத்தா லொருவஞன வுன்னே, தம்வரவு காணவொட்டாமற் கண்ணேக்கட்டி மறைத்து எவரே உட்புகுதவல்லார்? (அவ்வாறு புகுதவல்லார் எவரு மின்மையின்) அவர் அகம்புகல் உனது சூழ்ச்சியேயாகும்.

வி-ரை: ஒருவனுமுன்னே என்பதற்கேற்ற விசேஷணம் ஒளித்தென்பதன் ஆற்றலால் வருவிக்கப்பட்டது. 'யான் அகத்து ளிருப்பினும் அயர்ந்தொழிந்தேன்' எனப் போலிவியாஜமாக அருணசலன் கூறக்கூடிய மறுமொழியை முன்பாகத் தாமே யுட்கொண்டு, அதற்கிடமின்றி இவ்வாற்ரு லதனே மறுத்துக்

கூறினர். உன் னுடன்பாடுகொண் டன்றி அவர் உட்புகுத வில்லை என இதனுற் காரணங்காட்டி முடிவுகட்டினராம். ஸாக்ஷித்வம்மட்டில்—அதுவும் வியவகாரமனப்பான்மையுள்ள பரதிருஷ்டிபற்றி அவசியமாயின்—ஒருவாற்ரு லமைவதன்றி, சிதாபாசமனக் கற்பனைகளேயான நன்றுதீது முதலிய எவ்வித தொந்தபேதத் தோற்றவியவகாரமும், அதீத சுத்தஸச்சித் தான அருணசலன்பார்வையில் உண்மையில் அறவே இன் றென்று இதன் பரமார்த்ததாற்பரியம். ஓங்காரப்பொரு ளெனப் பின்வரும் பாட்டு உய்த்துணர்ந் துற்றுநோக்க வல்லார்க்கு இக் கருத்தே வலியுறத் தெளிவுறுத்துவதாம்.

13. ஓங்கா ரப்பொரு ளொப்புயர் வில்லோ
யுனையா ரறிவா ரருணசலா.

பொ - ரை: ஓங்காரப்பொருளாக ஒப்புயர்வற்று விளங்குவோய்! உன்னை யாரே உள்ளபடி யறியவல்லார்?

வி - ரை: அகடிதகடனவிசித்திரசாமர்த்தியமுள்ள மாயா சக்திக்கற்பனையால் எல்லாமாய், அக் கற்பனைகடந்த சுத்த சாந்தசிவமான தன்னியல்பாம் பாரமார்த்திகவுண்மையால் அல்லவுமாய்க் கேவலம் இருந்தொளிர்தல்மாத்திரமான போத சொரூபப் பூரணப்பொருள், ஓங்காரப்பொருள். அதன் பரந்த விவரம் கௌடபாதகாரிகை முதலிய நூல்களைக் கற்றும், கற்றுணர்ந்தார்வாய்க் கேட்டும் அறிக. சிந்தையுமொழியுஞ் செல்லாச் செம்பொருளான அது அத்துவிதமான ஆன்ம சொரூபம் [ஓங்காத் தொருவ னாகும்—அப்பர் தேவாரம்] ஆகலின் ஒப்புயர்வில்லோய் என்ருர். புத்திக் கொளிதந்து புத்திக்கு ளொளிரும் புத்திமூல சுத்தபோத சொரூபமான அவ் வருணசலனை, அவன் அத்துவிதனுகலின், ஆன்மவிசாரத் தாலோ அன்றி யான்மசமர்ப்பணத்தாலோ நானற்று முற்றத் தானுக வொழிந்த ததியரே, அகந்தைச்சுட் டழிந்து அமைதி பெற்ற அதிசாந்த மோனத்தால்—உள்ளத்துணர்வில் உண்டா

இன்ற தன்மயானுபவத்தால்—அபரோக்ஷமா யறியக்கூடுமல்லது, தம் பிரமாதத்தால் ஆன்மசொருபமான அவனைப் பிரிந்து உண்மையிலே தாமொரு தனிமுதல்போலப் பேதைமையாலே நானெனத் தனித்தியங்கும் பிறர்—கற்பனையான பிற விஷயங்களிற் கூரிதாய்த் தெளிந்த எவ்வளவு புத்திமான்களாயினும்—அத்தகைய தம் புத்திபலத்தான்மட்டும் உள்ளபடி யறியக் கூடாமையின் உனையா ரறிவார் என்றார்.

அப்படியு மந்நிறமு மவ்வண் ணமும்
அவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படிய னிந்நிறத்த னிவ்வண் ணத்தன்
இவனிறைவ னென்றெழுதிக் காட்டொ ணாதே.

—அப்பர் தேவாரம்

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே.

—திருவாசகம்

14. ஔவைபோ லெனக்குன் னருளைத் தந்தெனை
யாளுவ துன்கட னருணாசலா.

பொ - ரை: தாய் தன்னியல்பாகவே தன் பிள்ளைக்கருளுமாறுபோல, (தாயிற் பதின்மடங்கு தயாளுவான நீயும்) உன்னை நாடியடைந்த வெனக்குத் திருவருள் பாலித்து உனது திருவடிக்கு என்னை யுரிமையாக்கிக் கொள்ளுதல் உன் கடமையாம்.

வி - ரை: ஔவைப்பிராட்டிக்குக் கயிலைகாணக் கருணை செய்தாற்போல எனவும், என தருமைத்தாய்க்குத் தெய்வப் பதமளித் தருள்செய்தாற்போல எனவும், உலகமாதாவான உமாதேவிக்கு வாமபாகமளித் தருள்செய்தாற்போல எனவும், ஔவைபோல் என்பதனை நான்காம்வேற்றுமைத் தொகை யாகக்கொண்டு பொருளுரைப்பினும் பொருந்துவதாம். ஔவைப்பிராட்டிக் கருள்செய்தது மூத்தபிள்ளையாரன்றோ வெனின், ஆம்—பிள்ளையாய்ப் பிறப்பவன் பிதாவே என்பது கொண்டு, பிள்ளையார் காட்டிய கருணையை அவர் பிதா வான இறைவனே காட்டிய கருணையாக உபசாரத்தாற் கூறினாராம். படையும் படைத்தலைவனும் பகைவரைப் பொருது படைத்த வெற்றியை அரசன்மே லேற்றி அவனே படைத்த வெற்றியாகக் கூறும் உலகவழக்கும், இறைவனுக்கு வில்லாக வுதவிய மேருபருவதத் தன்மையை 'இமயவில் வாங்கிய வீர்ஞ் சடை யந்தணன்' எனப் பருவதராஜனை இமவான்மேலேற்றிக் கூறிய செய்யுள்வழக்கும் இதற்கு உதாரணங்களாகக் கொள்க. அடிகளின் திருத்தாய், அடிகள் பிரார்த்தனையால் அருணசலேசுவர னருளத் தெய்வப்பதம் பெற்றமைக்கு, அடிகளாசிரமத்தில் அன்னார் (திருத்தாய்) இப்பொழுது கோயில்கொண் டெழுந் தருளியுள்ள மாதுருபூதேசுவர ராலயமே போதிய சான்றாம். உமாதேவி இறைவனோ டைக்கியமாக அவன் வாமபாகம் பெற் றொடுங்கப்பெற்றது அருணசலசொரூபத்தில் என்பது புராணப் பிரசித்தம். அசலவுருவி லச்சத்தி யொருங்கிட வோங்கும், அருணசல மென்றறி—அருணசல நவமணிமாலை

15. கண்ணுக்குக் கண்ணாய்க் கண்ணின்றிக் காணுனைக்
காணுவ தெவர்பா ரருணசலா.

பொ - ரை: காண்பார்தங் கண்ணுக்குங் கண்ணாகி நின்று அந்தக் கண்ணின்றியே சகலமுங் காணுமற்காண் போனான உன்னை எவர் (எந்தக் கண்கொண்டு எப்படிக்)

காண்பது? (நின் னருட்கண்கோண்டு யானுன்னைக் காண) நீயே என்னை அருளிக்காண்.

வி - ரை: கண்முதலிய ஐம்பொறிகளும் கேவலம் கோளகங்களாக வொழிதலின் அவற்றுக் கொளிதந்து ஆறும் பொறியாகக் கூறப்படும் மனமே கண்ணென்றும், சிதாபாசமான அம்மனத்துக் கொளியுதவுகின்ற சுத்தசைதன்ய சொரூபமே கண்ணுக்குக் கண்ணென்றும் ஈண்டுக் கூறப்பட்டன. கண்ணுக்குங் கண்ணென உயர்வுசிறப்பும்மை செய்யுள்விகாரத்தாற் றொக்கது. விண்ணாதிய விளக்குங் கண்ணாதிய பொறிக்குங் கண்ணு மனக்கணுக்குங் கண்ணுய்—என ஆசிரியர்பகவானே ஆன்மவித்தைக்கீர்த்தனத்திற் கூறுவது காண்க. யாமறியாநின்ற உலகியற்காட்சியளவில் கண்ணின்றிக் காணுதல் முற்றும் அசங்கதமாமெனின், ஆம் - காண்பான், காட்சி, காணப்படுபொருள் என முத்திறப்பட நம்மனோர் காணும் அக்கற்பனாபேதக்காட்சி போல்வதொன்றன்றி இவ் வுண்மைக்காட்சி வேறொருவித விசித்திரக்காட்சியாம்; காணுமற்காணுதல் என்றுரைகூறப்பட்டதும் அதனால் என்றறிக. சுத்தசைதன்ய சொரூபனான அருணாசலன், தன்னையன்றிப் பரமார்த்தத்தில் வேறொன்றும் அறவே இல்லாதிருக்கையில், சிதாபாச ஜீவதிருஷ்டியான கேவலம் மனோமயக்கற்பனையால் உள்ளனபோலப் பிராதிபாசிகமாகத் தோன்றும் எல்லாமாகவும் விவர்த்தமாகத் தானே இருந் தொளிர்தலே, அவ் வெல்லாவற்றையும் அவன் கண்ணின்றிக் காணும் அவ் விசித்திரக்காட்சியாம். ஆசிரியர்பகவான் போன்ற தத்துவஞானிகளுக்கு ஸம்மதமான ஸர்வஜ்ஞத்வ பரமார்த்தம் இதுவேயாம். மற்று, கண்ணின்றிக் காட்சிப்புலன் இன்மையாலும், அக் காட்சிப்புலனுக்குக் காரணமாக, உபாதியோடு தாதாத்மியமான அகந்தாமோகப் பிரமாதம் சுத்தசைதன்ய அகண்டாத்துவித வுண்மைக்கண்ணான அருணாசலனுக்கு என்றும் அறவேயின்மையாலும், இங்குக்கூறியதற் கயலான திரிபுடிபேத சாமானியக்காட்சி அவனுக்குப் பொருந்துவதன்றாம்.

கண்ணலாற் காட்சியுண்டோ, கண்ணதுநா னந்தமிலாக் கண்—உள்ளதுநாற்பது. உயிருக்குயிராகவும் அறிவுக்கறிவாகவும் அந்தரியாமியாகக் கூறப்படும் ஜீவஸாக்ஷியே அருணசலன் என்றறியத்தக்கதாம். காட்சியைக் கண் ணறிவதல்லது கண்ணைக் காட்சி யறியமுடியாமைபோல ஜீவனே ஸாக்ஷி யறிவதல்லது ஸாக்ஷியை ஜீவ னறியமுடியாது என்பார் உனைக் காணுவதேவ ரென்றும், அத்தகைய அருணசலக் காட்சிக்குப் பிரதிபந்தகமான ஜீவத்வவகந்தையின் நாசம்—தன்னிழப்பு—அவனருளாலேயே அடையப்பட வேண்டுவதொன் ருகலின், அஃதறிய உன்னருட்கண்ணேக்கிக்காண் என்பார் பார் என்றுங் கூறினர்.

> தன்னிழப்பை யென்னகற்றுச் சாதிப்பான் சற்குருவா
> மன்னுபெருஞ் சிய மதயானை—தன்னடைமேற்
> சொப்பனத்தே தோன்றித் துடிப்பற்றுக் கேவலமா
> நிற்பதுபோற் பாரா னெனின்.
>
> —ஒழிவிலொடுக்கம்

குருவுருவா யொளி ரருணசலா—என ஆசிரியரே இம்மாலையிற் பின்னர்க் கூறலான், அருணசலனே சற்குருசொரூபமாம்.

16. காந்த மிரும்புபோற் கவர்ந்தெனை விடாமற்
  கலந்தெனே டிருப்பா யருணசலா.

பொ - ரை: காந்தம் இரும்பைத் தன்பாற் கவர்வது போல நின்னருளாற்றலால் என்னை நின்பாற்கவர்ந்து, பின்னெருகாலும் நானுன்னைப் பிரிந்தொழியவிடாமல் என்று மொருபடித்தாக என்னைக் கலந்து, என்னே டைக்கியமா யிருந்தருள்.

வி - ரை :

பார்த்தனன் புதுமை யுயிர்வலி காந்த
 பருவத மொருதர மிதனை
யோர்த்திடு முயிரின் சேட்டையை யொடுக்கி
 யொருதன தபிமுக மாக
வீர்த்ததைத் தன்போ லசலமாச் செய்தவ்
 வின்னுயிர் பலிகொளு மிஃதென்
னோர்த்துய்ம் மி னுயிர்கா ளுளமதி லொளிரிவ்
 வுயிர்க்கொலி யருணமா கிரியே—

என ஒருவாறு இதே கருத்துப்பட, ஆசிரியர்பகவான், அருணாசலத்தை உயிர்வலி காந்த பருவதமென அருணாசலபதிகத்திலுங் கூறல் காண்க. தம் மதிவலத்தான் மட்டும் அருணாசலனை எவராலும் அறிந்தடைய முடியாதென்று முற்பாட்டாற் கூறியவர், சர்வ சக்தி சுதந்தரனான அருணாசலனே, அறவே அசக்தராய் முற்றும் பாதந்திரரான் தம்மை நிர்ஹேதுகமான தன் கிருபாசக்தியாற் றன்பா லிழுத்துக் கலந்துகொள்ள வேண்டுமென்று, இப்பாட்டுத் தொடங்கித் தொடர்ச்சியாகப் பின்னுஞ் சில பாட்டுக்களால் அருணாசல னருளைப் பிரார்த்திக்கின்றார்.

17. கிரியுரு வாகிய கிருபைக் கடலே
 கிருபைகூர்ந் தருளுவா யருணாசலா.

பொ - ரை: ஊனக்கண்ணுக்குக் கடினமான கன்மலை வடிவினதாகக் காணப்படினும் ஞானக்கண்ணுக்கு மிக்க மிருதுசுபாவமுள்ள கருணைக்கடலே! கருணைகூர்ந்தருள்செய்.

வி - ரை : கிரியுருவாகிய...கடல் என்றது விரோதாலங்காரம். அருண மலையெனு மெலையறு மருளொளிக் கடலே யென

அருணுசல அஷ்டகத்தில் வருவதுங் காண்க. முற்பாட்டிற் பிரார்த்தனையையே இப்பாட்டிலுஞ் செய்கின்ருராகலின் இன்னதென் ருென்றும் விசேடித்துக் கூருமலே கிருபைகூர்ந் தருளுவாய் என்றுமட்டும் பொதுப்படக் கூறினர். அன்றியும், அன்பர்க்கு, அவர் வேண்டுவ யாவும் வேண்டியவாறு வரையாது பரிந்தளிக்கும் பேரருளுடைய அருணுசலனே தன் மயர்வறு மதிநலங்கொண்டு தமக்கு உண்மையான நலமாக அவரால் வேண்டத்தக்கதும் நன்ருக வறிவாளுகலானும், இன்னின்னது தமக்கு வேண்டுமெனக் குறிப்பிட்டுக் கேட்கும் மக்களின் புல்லறிவு நல்லறிவன்ருய் நன்மைதீமைகளுள் ஒன்றை மற்ருென் ருக மாறியறியும் மயக்கமுடையதாகலானும் அவ்வுண்மையை நன்கறிந்தவர் தவருன அம்முறையை யொழிந்து, கருணைக் கடலும் வாலறிவனுமான அவன் யாதே யருள்செய்யினும் அதுவே தமக்கிஷ்டமென்றும், தாமொன்று குறிப்பிட்டே அவன்பாற் கேட்டாகவேண்டு மென்னின் அதுவும் அவன்பாற் பக்தியைத் தவிர வேறில்லையென்றும் குறிப்புப்பட, கிருபை கூர்ந் தருளுவாய் என்ற அம்மட்டோ டமைந்தார் எனினு மமையும்.

வேண்டத் தக்க தறிவோய்நீ
 வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டு மயன்மாற் கரியோய்நீ
 வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
 யானு மதுவே வேண்டினல்லால்
வேண்டு மதுவொன் றுண்டென்னி
 னதுவு முன்றன் விருப்பன்றே.

—திருவாசகம்

18. கிழ்மே லெங்குங் கிளரொளி மணியென்
 கிழ்மையைப் பாழ்செய் யருணுசலா.

பொ-ரை: கீழோர் மேலோ ராகிய எல்லாரிதயங்களிலு மொப்ப (யாதொரு பேதமு மின்றி) அந்தரியாமியா யிருந் தோளிர்கின்ற சுயம்பிரகாச சுத்த ஸச்சித்தான அருணாசல சிவமணியே! இதயத்தில் விளங்கி என் னவிச்சையிருளை (நின் னருளொளியால்) அழிவுசெய்தருள்.

வி-ரை: கீழ் மேல் என்பன கீழோர் மேலோரைக் குறித் தலான் ஆகுபெயர். அவ்வாறே, ஜீவன் தான் உள்ளபடியே சுத்தஞான சொரூபமான ஆன்மாவாயிருக்கவும், பிரமாதத்தா லதனை மறந்து மலமாம்சபிண்டமான சரீரமே தானாகக் கருத லால் நீசமான பரிசினாகங்காரபாவத்தை இயல்பாகக் குறிக்கும் கீழ்மையென்னுஞ் சொல்லும், அதற்குக் காரணமான அவிச்சையிருட்பாழைக் குறித்தலான் ஆகுபெயர். எனவே பாழைப் பாழ்செய் யென்றார். [அவிச்சை, இருள், சூனியம், பாசம், பாழ், பிரகிருதி, மாயை முதலியன இங்குக் குறித்த கீழ்மையின் பரியாயங்களாம்.] *மூவகைப்பட்ட எல்லாப் பிறவித்துன்பங்கட்கும் ஒருங்கே ஏதுவாகநின்ற அகந்தைக்கு அடிப்படையான அவிச்சையின் அழிவு வேண்டவே, ஸர்வதுக்க நிவிருத்தியும் அதன்வாயிலாகக் குறிப்பாற் பிரார்த்தித்த வாறும்.

19. குற்றமுற் றறுத்தெனைக் குணமாய்ப் பணித்தாள்
குருவுரு வாயொளி ரருணாசலா.

பொ-ரை: என் குற்றமனைத்தும் அவற்றின் மூலா கங்காரத்தோடு முற்றக்கெடுத்து என்னைக் குணவானாக நின் திருவடிக் காட்கொண்டருள், குருமூர்த்தியாக விளங்கும் அருணாசலா!

---

*ஆத்யாத்மிகம் (தன்னால் வருவது), ஆதிதெய்விகம் (தெய்வத்தால் வருவது), ஆதிபௌதிகம் (பஞ்சபூதங்களால் வருவது, அன்றிப் பிறவுயிர்களால் வருவதுமாம்).

வி - ரை : நுட்பமான வித்துவடிவில் எல்லாக்குற்றங்களை யும் ஒருவாறு தன்னகத்திற்கொண்டு மனிதன்பா லுண்டான *முதற்குற்றமாகிய நானென்னும் அகந்தைமதி அறவே யழியு மளவும், தத்தமக்குரிய காலத்தில் அதனின்று தூலமாகப் பின்னர் வெளிப்பட விளைந்து தோன்றும் மற்றைக்குற்றங்கள் ஒருங்கழியாவாகலின், குற்றம் முற்றறுத்தென்பதற்கு அவற்றின் மூலாகங்காரத்தோ டென்பது வருவித்துரைக்கப்பட்டது. ஒருமையாகக் குற்றமென்றது ஜாதியொருமை. குற்றங்கள் மிகப் பலவாயினும் அவையாவும் காமவெகுளிமயக்கமென்னும் மூன்றனுள் முக்கியமாக வடங்கும். காம வெகுளி மயக்க மிவைமூன்றன், நாமங் கெடக்கெடு நோய் - என நாயனார் கூறுவது காண்க. குணம் குணவானுக் காதலாற் குணவாகு பெயர். அகந்தையே எல்லாக்குற்றங்களுக்கும் இருப்பிட மாவதுபோல நிரகங்காரநிலையே எல்லாக்குணங்களுக்கு மிருப் பிடமாதலால், நிரகங்காரியே உண்மையிற் குணவா னெனப் படுவோன். ஸர்வகுண ஸம்பன்னனான அத்தகைய குணவானே இறைவன் திருவுள்முவக்கும் பக்குவனான உண்மையடியானு மென்பதுபற்றி என்னைக் குணமாய்ப் பணித்தாள் என்றார். பரமார்த்தத்தாற் குருவைப் பரசிவசொரூபமாக ஆன்றோர் தொன்றுதொட்டு வழங்கும் மரபாலேமட்டுமன்றித் தூலவிவ காரத்தாலும், ஆசிரியர்பகவான் நேரே அருணசலனையன்றி மானிடவடிவங்கொண்ட மற்றொரு குருவை மற்றையோர் போலக் கனவிலும் என்று மடைந்திலராகலின் குருவுருவா யொளி ருணசலா என்று, உண்மையில் அத்தொடரின் முழுப் பொருளோடும் அருணசலனை மனமார வாயார வழைத்தார். இது நிற்க. தடையான பரிச்சின்னாகம்பாவமோகம் அடியோ டழிதலால் அகண்டமாகவும் அவிச்சின்னமாகவும், முழுமுதற் பொருளான சுத்தஜ்ஞான பரசிவசொரூபானுபவம் இயல்பாக

---

*விவிலிய (கிறிஸ்தவ) ஆகமத்தில் மூலதோஷம் (the original sin) என்று குறிப்பிடப்பட்டது இவ் வகந்தையறிவே யாக அறியக்கடவதாம்.

இதயத்தில் எய்தப்பெற்றோனே உள்ளபடி குருவாவோன். அஃதொழிந்த மற்ற மாண்புகளான் மற்றோர் எவ்வளவு மேம்பாடுடையோராயினும் ஒருவாறு உபசாரத்தாலேமட்டும் அன்னார் குருவாகக் கூறவுங்கொள்ளவும்படுதலன்றி உண்மையிற் குருவாகார், நசிக்கப்பெறாத தம் பரிச்சின்னாகம்பாவப்பண்பால் அவர் தாம் லகுவேயாகலின்.

20. கூர்வாட் கண்ணியர் கொடுமையிற் படாதருள்
கூர்ந்தெனைச் சேர்ந்தரு ளருணாசலா.

பொ - ரை: கூரிய வாளையும் நெருங்கிய கண்களை யுடைத்தாகிப் பரந்த வலையையும் கைக்கொண்ட கயவரது வஞ்சச்சூழ்ச்சியில் நானகப்படாது கருணைகூர்ந் தென்னைக் கலந்தருள்.

வி - ரை: கூர்வாள் என்றதனாற் குரூர சித்தமுஞ் செயலும், கண்ணி என்றதனாற் கவர்மொழியும் குறிக்கப்பட்டன. கண்களையுடைமையாற் கண்ணியென வலைக்குக் காரணவிடுகுறி. கூர்வாட்கண்ணியர் என்றது வலைவாணரான வேடர் கைக்கொண்ட கண்ணிபோலத் தப்பலரிதான பல்வேறுபாயங்களான் முதலில் தம்பாற் பிறரை வஞ்சித் தகப்படுத்தலும், அவ்வாறகப்பட்டபின்னர்க் கூர்வாள்போலப் பழிபாவத்துக் கஞ்சாது தந்நலமே கருதி அவரைக் கொல்லுமாறுபோ லிமிசித்தலு முடைமையால், அவர்போலுங் குரூரசுபாவமுள்ள கேவலம் உலகியன்மாக்களை. கண்டதேகாட்சி கொண்டதே கோலமென்னுங் கொள்கையுடையராய்க் கண்ணியர்போல்வா ரான உலகாயதமாக்களைக் கண்ணியரென்றே உவமவாகுபெய ராற் கூறினார். கண்ணிவாளினரென வரற்பாலதான தொடர் வாட்கண்ணியரெனச் செய்யுளாதலின் முறைபிறழ்ந்துவந்தது. சிசுபாலன் முதலிய தீயோர்பாலிருந்து விடுவித்துத் தன்னை யேற்றுக்கொள்ளும்படி கண்ணபிரானைநோக்கி ருக்மணிதேவி பிரார்த்தித்த மனப்பான்மையில் துஷ்டர் சகவாசத்திலிருந்து

விடுவித்துத் தன்னையாட்கொள்ளும்படி அருணாசலனைநோக்கிப் பகவான் இவ்வாறு கூறினார். இனிக் கூர்வாட் கண்ணியர் கொடுமையிற்படாதென்பதற்கு வாள்போலக் கூரிய நோக்கமுள்ள வநிதாரத்நங்களின் மோகக்கொடுமைக் குட்படாமல் எனக் கூறுவாருமுளர். ஆண்பெண் ணிருபாலார்க்கும் பொதுப்பட்ட கூற்றாக இடையிடையே சிறுபான்மை விரவிவருவதிற் குற்றமின்றாயினும் தேற்றமான ஆண்பாற்கூற்றுக்குச் சற்றுமவகாசமின்றி முற்றுந் தலைவிகூற்றாக நிகழும் இந்நூலினியற்கைக்கு நேர்மாறாக ஆடவனொருவன்கூற்றாக வுரைக்குமது இழுக்கின்றிப் பொருந்துமேற் கொள்க.

21. கெஞ்சியும் வஞ்சியாய்க் கொஞ்சமு மிரங்கிலை
யஞ்சலென் றேயரு ளருணாசலா.

பொ-ரை: கல்லுங் கசிந்துருக யானுன்னை எவ்வளவோ கெஞ்சியும் நீயோரு வஞ்சகன்போல் என்பாற் கொஞ்சமு மிரங்காதிருக்கின்றாய். (இனியாகிலுந் தாழ்க்காது நின் கல்நெஞ்சங் கனிந்திளகி) 'அஞ்சாதே' எனக் கூறி எனக்கபயமளித்தருள்.

வி-ரை: வஞ்சி - வஞ்சகன். வஞ்சிபோ லென்பதே பொருளாயினும் அவ்வாறு கூறாது, கொஞ்சமு மிரங்கிலை என்பதற்கேற்ப வஞ்சியா யென்றே திட்பம்படக் கூறினார். வெளிக்குத் தானொரு வஞ்சகன்போல், அருட்கடலான அருணாசலன் கொஞ்சமு மிரங்காமல், நினைந்துருகு மடியாரை நையவைத்தல், அன்னார்மனம் மேன்மேலும் நெக்குநெக் குருகியுருகி முடிவிற் பொன்றக்கெடலாற் சித்தமலங்கெட்டுச் சிவமாதற்பொருட் டென்க. மறக்கருணை யென்று ஆன்றோர் கூறுவதுமதுவாம்.

22. கேளா தளிக்குமுன் கேடில் புகழைக்
கேடுசெய் யாதரு ளருணாசலா.

பொ - ரை: அன்பர் கேளாமலே அவர்குறிப்பறிந்து கொடுத்தலால் இதுவரை உனக்குண்டான அழியாப் புகழை, என்மட்டிற் கேட்டுங்கொடாதொழிதலால் இப் பொழுது நீ வீணே யழித்துக்கொள்ளாமல் என்பா லிரங்கி யருள்.

வி - ரை: அன்பர் மனோமூலத்திற் சாக்ஷியாக வமர்ந்து, அவர் பின்னால் விரும்பப்போவது இன்னதென்று முன்பே யறிந்து ஈன்றிடு மன்னையிற் பெரிதருள் புரியும் இறைவன் புகழ் பொன்றாப்புகழாதலின் கேளாதளித்துமுன் கேடில்புகழை என்றும், அவ் வன்பருள்ளே தம்போன்றார் சிலர்க்குமட்டில் எக்காரணத்தாலோ அருளாதொழியின் அச்செயல் மதியின்கண் மறுப்போலப் பிரசித்தமாய் அவ னழியாப்புகழை அழித்துவிடு மென்பார் அவ்வாறு கேடுசெய்யாதருள் என்றுங் கூறினார். யாவர்க்குமொப்ப என்றும் இனிதளிக்கின்ற நின்னியல்பான வள்ளற்றன்மைக்கு மாறாக எம்மனோ ரெவர்க்கேனும் இப் பொழுது நீ அருளாதொழியின், இதுவரையிற் படைத்த நின் கேடில்புகழ் அதனை லிப்பொழுது கெடுதலேயன்றி, அகற்றிடு லகிலம் பழித்திடுமென முன்னர்க்கூறியபடி உலகோரா லிகழப் படும் பழியும் மேற்கொண்டு விளைதலின் அப்பழியினின்று தப்பித்துக்கொள்வதற்காகவேனும் இப்பொழுது எனக்கருள் செய் என்பது குறிப்பெச்சம். இப்பழி தப்பு என முன்னர்க் கூறியது ஈண்டுச் சற்று ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டிய தாம்.

23. கையினிற் கனியுன் மெய்ரசங் கொண்டுவ
கைவெறி கொளவரு ளருணாசலா.

பொ - ரை: என் கரதலத்திற் சேர்ந்த திராக்ஷாபல மான நின் சொரூபரச மதுவைப் பானம்பண்ணி அதனா லின்பவெறிகொண்டு கிடக்க எனக்கருள்செய்.

வி - ரை: அடையப்பட்டதாதல் தெளிவுடைத்தாதல் ஆகிய கரதலாமலகப்பண்புகளோடு, கரதலதிராக்ஷை அதனினும்மிக எளிதிலும் விரைவிலும், அதற்குள்ள சிறு துவர்ப்பின்றியே பெரிதும் இன்சுவைத்தாதலும், திராக்ஷாபலம் இங்கு வேண்டப்படும் இன்பவெறியை எளிதிற்பயக்கும் சீரிய மதுவாதலும் ஆகிய வேறுசில விசேடப்பண்புகளும் உடைமை நோக்கிப் பிரசித்தமான ஆமலகத்தினுஞ்சிறக்கத் திராக்ஷையே ஈண்டு முக்கியமாகக் கொள்ளப்பட்டது. ஆமலகக்கனி அரியதொரு கற்பமாதலும் அதியமான்பாற் பெற்று ஔவையுண்ட கருநெல்லிக்கனி அதற்கோ ருதாரணமாதலுங் குறித்து, அங்கையி ல்டைந்த ஆமலகக்கனி யென்று கொள்ளலும் அடுத்தபடியாகச் சாலப் பொருந்துவதேயாம். ஏற்கெனவே, அருணசல னருளா லாட்கொள்ளப்பெற்றுத் தமக்குண்டான அபரோக்ஷானுபவத்தாற் பகவான் அருணசலனைக் கையினிற்கனி யென்றாற் போலவே, தம்மை யாண்ட இறைவனைக்குறித்து மணிவாசகரும், தடக்கையி னெல்லிக் கனியெனக் காயினன் எனவும்,

மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலா
லரியை யென்றுனைக் கருது கின்றிலேன்

எனவும், முறையே கைக்கனியாகவும் கைக்கிண்ணமாகவும் அவனைக் கூறினர்.

மனிதர் காளிங்கே வம்மொன் று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழ லீச னெனுங்கனி
இனிது சாலவு மேசற் றவர்கட்கே

என நாவுக்கரசரும் ரசஸ்வரூபத்தால் இறைவனைக் கனியாகக் கூறுதல் காண்க. கோண்டு - உட்கொண்டு, பருகி.

அதுவென்று லெதுவெனவொன் றடுக்குஞ் சங்கை
யாதலினு லதுவெனலு மறவே விட்டு
மதுவுண்ட வண்டெனவுஞ் சனக னாதி
மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தார்

என மதுபானமயக்கத்துக் குவமித்துத் தாயுமானவரால் கூறப்பட்ட அப்பேரின்பவெறியையே, உன் மெய்ரசங்கொண் டுவகைவெறி கொளவருள் என நம்பகவானும் வேண்டினார்.

எனை நானென்ப தறியேன்பக லிரவாவது மறியேன்
மனவாசகங் கடந்தானெனை மத்தோன்மத்த னாக்கிச்
சினமால்விடை யுடையான்மன்னு திருப்பெருந்துறை
யுறையும்
பனவன்னெனைச் செய்தபடி றறியேன்பரஞ் சுடரே

என மணிவாசகரால் வியந்து பாராட்டப்படுவது அவ் வனுபவமேயாம். தமது கையிற் கிடைத்த கனியைத் தாம் உண்டு சுவைத்து உவகையுற அருணாசலன் அருள் செய்தலாவது, தம் மான்மசொரூபமாய் அவ் வறிவின்பக்கனியே தானான அவன், தம் பிரமாதத்தாலே தாமவனைச் சற்றும் பேதுற்றொழியாதபடி மனோமூலமான தம் இதயத்தில் ஒளிபெற விளங்குமுகத்தால் நினையாமறவாத் தன்மய நினைப்பாகத் தம் மதியாலே தன்னை என்றும் இடைவிடா தினிது நினைப்பித்துக்கொண்டிருத்தலாம்.

24. கொடியிட் டடியரைக் கொல்லுனைக் கட்டிக்
கொண்டெங்ஙன் வாழ்வே னருணாசலா.

பொ - ரை: அதற்கென்றே கொடிகட்டினாற் போல முனைந்துநின்று அடியரைக் கொல்லாதுகொல்கின்ற ஸத்ய ஸங்கல்பனான உன்னை ஸம்பந்தித்துக்கொண்டு (அதன் பின்னுஞ் சாவாது, மற்றோர்போல நானுமோ ராளாக, ஜீவனாக) எவ்வா றுயிர்த்திருப்பேன் ?

வி - ரை: அடியரைக் கொல்லுதல்—கற்பிதமான அவர் ஜீவத்வத்தை யழித்தல்; அதுவே ஆண்டவ னருட்செயலாம், ஜீவத்வமழியவே அவர் சிவத்வம்பெறுவ ராகலின். [உண்மையிற் கொல்லுதலில்லை, உயிர்களின் கேவலவுண்மை கொல்லவுங் கொல்லப்படவுங் கூடாத பரமான்மசொரூபமான அருணாசலனது அத்விதீயமான பாரமார்த்திகவுண்மையாகலின்.] கட்டிக் கொண்டு (உலகியல்வழக்கு)—தீவிரமாகத் தியானித்து, இடைவிடாது நினைத்தலே இறைவனைச் சேர்தலாகலின்; அதனோடு தழுவிக்கொண்டு, மணந்துகொண்டு எனவும் பொருள்பட்டுச் சிலேடையாம். அருணாசலனு லாட்கொள்ளப்பெற்ற வடியார், யானைவாய்ப்பட்ட கரும்புபோலவும் புலிவாய்ப்பட்ட மான் போலவும் அறவே தன்மயமாக அத்துவிதான்மசொரூபனை அவனால் உண்டறுக்கப்படுத லன்றி, அவனுக் கன்னியமாக நானென்னுந் தனித்தன்மை யுணர்வான ஜீவத்வத்தோடு முன் போலப் பின்னரொருகாலும் அவர் சற்றும் மிஞ்சார் என்பது கருத்து. [அறுத்தல் - ஜீரணித்தல்.] அருணா சலமென வகமே நினைப்பவ, ரகத்தைவே ரறுப்பா யருணாசலா; தெய்வமென் றுன்னைச் சாரவே யென்னைச், சேர வொழித்தா யருணாசலா—என்னும் பாட்டுக்களை இதனோ டொப்புநோக்குக. ஆக்கங்கருதி யடைந்த வடியாரை அன்னார் கருத்துக்கு நேர்மாறுகக் கொடிகட்டிக் கொண்டு கொல்லும் அவ்வளவு குரூரனை உன்னைக் கணவனுகத் தாலிகட்டிக்கொண்டு வாழ்க்கைப்பட்டு அடியாளான யான் மற்ற மாதர்போல் எவ்வா றுலகியலில் வாழ்வேன் என்று வினோதார்த்தமாகத் தலைவற்குத் தலைவி கூறினாற்போன்ற சிருங்காரத்தொனிப்பொருள் காண்க.

25. கோபமில் குணத்தோய் குறியா யெனைக்கொள்க் குறையென் செய்தே னருணாசலா.

பொ - ரை: கோபமற்ற சாந்தகுணத்தோய்! நின் னருளுக்கிலக்காக (அடியார் பலருள்ளும் விசேடமாக)

இவ் வடியேனைத் தேர்ந்துகொள்ள ஜன்மாந்தரங்களில் யானென்ன தவஞ்செய்தேன்!

வி - ரை: தவக்குறையின் பெயரான துறையென்பது ஆகுபெயரால் - விட்டலக்ஷணையால் - ஈண்டு அத் தவத்தையே குறித்து நின்றது. இனி, துறியா யெனைக்கோளக் துறையேன் செய்தேன் என்பதற்கு (அடியார் பலர்மாட்டும் நீ *அத்தன்மை யோனாகவும் என்னிடத்துமட்டும் அதற்கு நேர்மாறாய்) நின் கோபத்துக்கிலக்காக என்னைக்கொள்ள உனக்கு யானென்ன பிழைசெய்தேன் என்றுரைப்பினு மமையும். இப்பொருளில், †'பிழைப்ப னாகிலுந் திருவடி பிழையே' னென்பார் துறையேன் செய்தேன் என்றார். [பிழைத்தல் - தவறிழைத்தல்.]

இறையுனை நினையு மெண்ணமே நண்ணு
வெனையுன தருட்கயிற் றுலீர்த்
திறையுயி ரின்றிக் கொன்றிட நின்று
யென்குறை யியற்றின னேழை.

—அருணாசல பதிகம்-3

கோபத்துக்கிலக்காக 'எனைக்கொள' என்புழி எனை என்றது - உண்மையான தன்னை (ஆன்மாவை) யன்றி, அந்தப் பாரமார்த்திகமான தன் ஸச்சிதானந்தசொரூபத்தை மறைத்து அவிச்சையால் அதற்குப்பகையாக, அனர்த்தகரமாக 'நா' னெனத் தோன்றிநின்ற வஞ்சவகந்தை வடிவான கற்பனாவியா வகாரிக ஜீவத்வத்தையாகலின் இப்பொருளில் இப்பாட்டு இகழ்வதுபோலப் புகழ்ந்த வஞ்சப்புகழ்ச்சியணியாம். எனவே, துறையேன்செய்தேன் என்பதனால், ஆசிரியர்பகவான் அருணாசலன் திருவடித்திறத்து நன்றேயாற்றியதாகத் தேற்றம்படக் குறிப்பாற் கூறியவாறும். இருவகைப்பொருளிலும் முடிவாகப் போந்த கருத்திற் பேதமின்றும்.

* கோபமில் குணத்தோன் † சுந்தரர் தேவாரம்

26. கௌதமர் போற்றுங் கருணைமா மலையே
கடைக்கணித் தாள்வா யருணாசலா.

பொ - ரை: *கௌதமமுனியாற் போற்றப்பெற்ற கருணைமா மலையே! (அவர்போற்றியை யேற்று அவர்க்கு நல்லருள் செய்தாற்போல, என்போற்றியையும் இனிதேற்று, யான் உன்றிருவடிக் காளாக) என்பாலே நின் னருட்கண்ணோக்கஞ் சாத்தி என்னை யாண்டருள்.

வி - ரை: (தவத்தால் இறைவன்வாமபாகம் பெறுமுபாயம் உலகமாதாவான உமாதேவிக் குபதேசித்த மாதவப்பெரியரான) கௌதமர் போற்றும்...மலை என்றதனால் அருணாசலன் மகத்துவமும், கருணைமாமலை என்றதனால் அடைந்தார்க் கருளும் அவன் ஔதாரியமும் விளங்குவனவாம். இருள்கடிந் தருளிய, வின்ப வூர்தி, யருளிய பெருமை யருண்மலை யாகவும் என மாணிக்கவாசகரும் அண்ணாமலையை அருட்பெருமலை என்றார். ஆளுதல் - சிவபோதவடிவான திருவடியின்கீழே சிவபோதமறச் சேர்த்தல். அஃது ஆண்டானருட்பார்வையால் நிகழவேண்டுவதொன்றாகலின் கடைக்கணித் தாள்வாய் என்றார்.

27. சகலமும் விழுங்குங் கதிரொளி யினமன
சலச மலர்த்தியி டருணாசலா.

பொ - ரை: சிதாபாசனான ஜீவனுக்கு உண்மை போலத் தோன்றுகின்ற துவிதப்பிரபஞ்சமான நிழற்கூட்ட

---

* ஆசிரியர்பகவான் அவதாரஸ்தலமான திருச்சுழியலுக்கு இருடியான அக் கௌதமமுனியே அன்னார் நிரந்தரவாசஸ்தலமான அருணாசலத்துக்கும் இருடியாதலும் இன்னோரன்ன வேறுசில விசேடங்களும், அவ் விரண்டு தலங்களுக்கும் புராண காலந்தொட்டே விசித்திரமான தெய்வீகஸம்பந்த முண்மையைப் புலப்படுத்துவனவாம்.

மனைத்தும் (அறவே தன்மயமாகக் கரந்தொழியத்) தன்னருண் ஞானக் கதிரொளிக் கரங்களாற் கவர்ந்துவிழுங்கும் சிற்பரரவியான அருணாசலா! அகங்காராதி ஆசாபாச வாசனைகளோடு அஞ்ஞானந்தகாரங் குடிகொள்ள அரும்பாகக் குவிந்துகிடந்த மனத்தாமரையை (அதனுட் போதிந்து கிடந்த அவ் வந்தகாரத்துக்குச் சற்று மவகாச மின்றாக வழிந்து அதுதான் அகண்டப் பெருவெளியாக) நன்றாக மலர்த்தியருள்.

வி - ரை: அருணாசலன் இனன் என்றதற்கேற்ப, அவனால் விழுங்கப்படும் சகலமும் தோற்றமாத்திரமான நிழற்கூட்டமெனக் கூறுமையால் ஏகதேசவுருவகமாம். துவிதம் சகலமும் ஜீவனுக் குண்மைபோலத் தோன்றல், ஸர்வாதாரமான தன் பாரமார்த்திக ஸத்தையை ஒருவன் மறக்கும் மறப்பையே தமக்குக் காரணமாகக் கொண்டு, மாயாகாரியமாய் வியாவகாரிகமாகமட்டில் மெய்போல வழங்குமவற்றுள், உபாதி புத்தியால் உள்ளபடியே ஏகதேசாம்சமாகப் பிரமாதத்தாலே தன்னை யவன் பிரமித்தலா லென்க. தேகாத்மபுத்தி வடிவான தன் னகந்தைக்கருத்தால் அவற்றோ டவனுக்கு ஸமஸத்தை யின்றேல் அவை அவ்வாறு அவனுக்குத் தோன்றுவாம். சுத்தசைதன்ய சொரூபனான அருணாசலனெதிரில், மாயாகற்பிதமான சம்சாரப்பிரபஞ்சம் சர்வமும் அத்தன்மையிற் பரமார்த்தமாக என்றும் அறவே இன்மையை, அதனைப் பேதைமையா லுள்ளதாகக் கொள்ளும் உலகோர்மதியை யனுசரித்து, அஃது அவனா லெடுத்து விழுங்கப்படுவதாகக் கவிமரபுபற்றி அலங்காரமாகக் கூறினார் ஆசிரியர். அஞ்ஞானந்தகாரத்தையும், தன் பாரமார்த்திகவுண்மை விளங்காமற் கரந்தொழிந்த அவ் வஞ்ஞான நித்திரையூடு சொப்பனம்போல் அதன் காரியமாகக் காண்கின்ற சம்சாரப்பிரபஞ்சத்தையும் அறவே கெடுப்பதுபற்றி அருணாசலனைக் கதிரவனாகக் கூறியதற் கேற்பவே, இப்பாட்டால் அவனிடத்துத் தாம் பிரார்த்திக்கும் இதயக்

கிரந்திபேதத்தையும் அக் கதிரவனுற்றலால் அவன் சந்நிதியி லுண்டாவதான ஜலஜமுகுள மலர்ச்சியாக உருவகஞ் செய்தார். இதயக் கிரந்தி - தாமரைமொட்டுப்போலக் கட்டுண்ட மன மாகவும், கிரந்தி பேதம் - தாமரைமலர்போலக் கட்டவிழ்ந்த மனமாகவும் அறியத் தக்கனவாம். கிரந்திபேதமாகிய மனோ நாசமே - வாசனுக்ஷயமே - பந்தமோக்ஷமென்க.

அருணிறை வான வமுதக் கடலே
விரிகதிரால் யாவும் விழுங்கும்—அருண
கிரிபரமான் மாவே கிளருளப்பூ நன்ருய்
விரிபரிதி யாக விளங்கு.

—அருணசல பஞ்சரத்னம்

28. சாப்பா டுன்னைச் சார்ந்துண வாயான்
சாந்தமாய்ப் போவ னருணசலா.

பொ-ரை: எனக்குணவாக (உண்ணக் கருதி) யான் உன்னை யடைந்து, அதற்கீடாக யானே யுனக்குணவாய் (தன்மயமாக வுண்டறுக்கப்பட்டு) முடிவுற்ருேழிவேன்.

வி-ரை: சாப்பாடு - உணவு, அனுபவம். சாந்தம் - அந்தத் தோடு கூடியது. அகந்தை ஆன்மசொரூபமான அருணசலனுக் குணவாய்த் தன்மயமாகப் பொன்றக்கெடுதலான அவ்வழிவே முடிவான அமைதியாகலின், சாந்தமாய்ப் போவன் என்பதற்கு அத்யந்தம் அமைதியடைவேன் எனினுமாம். ஜீவத்வநாசமே சிவானுபவம் என்பது கருத்து. 'யான்' என்னு மெண்ணம் எள்ளளவாவது உள்ளவரை சிவானுபவம் ஸித்தியாது. ஊணுத லென்றும், தன்னிழப்பென்றும், சரணுகதியென்றும், பிரபத்தி யென்றும் அதையே முடிவான சாதனமாக நூல்கள் வற்புறுத் துவதும் அக்கருத்துப்பற்றி யென்க. எனவே, அருணசலமென வகமே நினைப்பவ, ரகந்தைவே ரறுப்பா யருணசலா—என ஆசிரியர் பகவான் ஆதியிற் கூறியாங்கு உண்மையான இறைவனருட் செயல் தன் னடியரகங்காரத்தை அழிப்பதன்கண்ணேயாம்.

வாரிக்கொண் டுன்னை விழுங்குவன் காணிலென்
றார்வுற்ற வென்னை யொழியவென் னின்முன்னம்
பாரித்துத் தானென்னை முற்றப் பருகினான்
காரொக்குங் காட்கரை யப்பன் கடியனே

என உணர்ந்தோ ருள்ளியுள்ளி யுவத்தற்குரியதாக நம்மாழ்வா ரருளிச்செயலான பாசுரம் பகவா னருட்பாட்டான இதனோடு படியெடுத்தாற்போலவே முற்றப்பொருந்துவதாம். அமிர்தத்வ மளிக்கும் அத்தகைய மரணம் அத்யந்தமானதொன் றாகலின்,

கயன்மாண்ட கண்ணிதன் பங்கனெனைக் கலந்தாண்
டலுமே
அயன்மாண் டருவினைச் சுற்றமுமாண் டவனியின்
மேல்
மயன்மாண்டு மற்றுள வாசகமாண் டென்னுடைய
செயன்மாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டா
மோ

எனத் திருவாசகங் கூறுகின்ற அந்நிலையில் ஒருவன் ஸர்வஸ்வ மும் – உபாதியான அவன் வியக்தித்வம் உட்பட – நிர்ப்பீஜ மாக ஒருங்கே யழியனவாம். [அகந்தை யழிதலாற் கேவலம் சிவானந்தலஹரி வடிவாகத் தெளிந்த சிற்பர சிவசொரூபமான அவன் சித்தத்தில் அவற்றின் வாசனாலேசமும் அறவே இன்று மென்று கருத்து.] இங்கு உதகரித்த திருவாய்மொழியில் முற்றப்பருகினா னென ஆழ்வார் அருளியதன் முக்கியத்துவம் ஊன்றியாராயத்தக்கதாம். ஆயின், ஜீவன்முக்தியில் வியக்தித்வ மின்றேவெனின், உருவெளித்தோற்றம் போலவே அதுவும் பார்ப்பார் பார்வைமாத்திரம் என்க. என்னை ?

திருவருள் செய்பவன் போலவென் னுட்புகுந்
துருவமு மாருயி ரும்முட னேயுண்டான்

என ஆழ்வாரும்,

வான்கெட்டு மாருத மாய்ந்தழனீர் மண்கெடினும்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்
கூன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டெ னுள்ளமும்
போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ

என மணிவாசகரும் அருளிச்செய்த இப்பாசுரங்கள் ஜீவன் முக்தியில் வியக்தித்வமுட்படச் சின்மாத்திரமாகக் கரைந்தழிவ தான உயரியவுண்மையை வெளிப்படையாகவே நன்கு விளக்கு வனவாம். பகவா னனுபவமும் அத்தகையதேயாதல் அவர்பா லடுத்துப்பயின்ற அணுக்கத்தொண்டரான வடியார் நன்கறிவர். சிந்தித் தருட்பட—என்னும் 103-ஆம் பாட்டும் இதுவும் தம்மி லுள்ள ஒருபுடை யொற்றுமையால் ஒருங்குகூட்டி ஆராயத் தக்கனவாம்.

29. சித்தங் குளிரக்கதி ரத்தம்வைத் தமுதவா
யைத்திற வருண்மதி யருணசலா.

பொ - ரை: அருண்மதியான அருணசலா! தாபத் திரயத்தா லடிபட்ட சித்தம் அத்தாபந்தணிந்து சீதளமாக, உன் னமிர்தகிரணங்களான கரங்கள்கொண்டு, அகத்தே அமுதம் பொதிந்து புறத்தே *ஆம்பலரும்பாகக் கூம்பிக் கிடந்த அதன்வாயைத் திறப்பித்தருள்.

வி - ரை: இதுவும், சகலமும் விழுங்கும் என்னும் 27-ஆம் பாட்டுப்போலக் கிரந்திபேதப் பிரார்த்தனை. இதயக்கிரந்தி யையும் அதனைப் பேதிக்கும் அருணசலனையும், ஒன்றில், தாமரைமொட்டாகவும் அதனை மலர்த்தும் சூரியனாகவும், மற்றொன்றில், ஆம்பலரும்பாகவும் அதனை யலர்த்தும் சந்திர னாகவும் உருவகஞ்செய்ததே இரண்டற்குமுள்ள பேதமாம். அரக்கிலச்சினையிட்டாற்போல் அழுத்தமாக மூடிய அமிர்தகல

* ஒருபொரு ளாம்ப லரும்பென வுள்ளே
யிருவிரல் வலத்தே யிருப்பது மிதயம்—உள். அனு. 18

சத்தின் முகத்தைத் திறந்து அமிர்தத்தை வெளிப்படுத்த அமுதவடிவனே தகுதியுடையோனுதலால் அமிர்தகிரணனை அருண்மதியாக அருணசலனை யழைத்தார். உள்ளபொருள் வடிவான உள்ளவுணர்வே—சுத்தசைதன்யமே—அவ்வருணசல சிவசொரூபமான அருள் என்பதன் பொருளாதலின் கதிரத்தம்—கருணகரம் (நூற்காப்பு), அருட்கை (அக்ஷர—51) எனலுமாம்.

30. சீரை யழித்துநிர் வாணமாச் செய்தருட்
சீரை யளித்தரு ளருணசலா.

பொ - ரை: என் மருளாடையைக் களைந்து என் சொரூபத்தை முற்ற வெளியாக்கித் தெருள்வடிவான நின்னருளாடையை எனக்களித்தருள்.

வி - ரை: சீரை - சரீரத்தை மறைக்கும் பஞ்சுப்புடைவைக்கும் சரீரியை மறைக்கும் பஞ்சகோசத்துக்கும் பொதுப்பட வின்றது. அருட்சீரை என்று பின்வருவதற்கேற்ப அதற்கு மாருன இச் சீரை மருட்சீரை என்று கொள்ளப்பட்டது. அழித்தல் - அவிழ்த்தல், நிருபாதிகமாக்கல். நிர்வாணம் - ஆன்ம சொரூபமான பரவெளி. அருட்சீரை - அருட்புளகாங்கிதப் போர்வை. சீரையழித்தல், அருட்சீரையளித்தல் என்னுந்தொடர்களிரண்டையும் இரண்டாம்வேற்றுமைத் தொகைகளாகவன்றி விரிகளாகவே கொண்டு, மருள்வடிவான என்னகந்தைச்சிறப்பை யழித்துச் சூனியமாக்கி, அதற்குப் பிரதியாக, நின்னருள் வடிவான என் சொரூபச்சிறப்பை எனக்களித்தருள் என்றுமாம். அத்யாத்மப்பொருளில், சீரையழித்தலே நிர்வாணமாச் செய்தலும், நிர்வாணமாச் செய்தலே அருட்சீரை யளித்தலுமாக அறியத்தக்கதாம். சீர் - சிறப்பு. என்னுடையைக் களைந்து என்னுருவை *அமணமாக்கி அவ்வமணம் நீங்க நின்னருளாடையை

*அமணவறவோர் (ஒருசாரார்) முன்னர் ஆடையின்றிச் சஞ்சரித்த வரலாற்றினின்றுண்டாயிற்று, அம்மணமெனப் பிற்காலத்தில் வழங்கலான இவ்வமணமென்னுஞ் சொல். [அமணவறவோர் - சமண சாதுக்கள்.]

எனக்களித்தருள் என்று வெளிப்படையான சிங்காரத் தொனிப் பொருளாம். அருள் - பிரசாதம்.

31. சுகக்கடல் பொங்கச் சொல்லுணர் வடங்கச்
சும்மா பொருந்திடங் கருணாசலா.

பொ - ரை: என்னிதயம் இன்பக்கடலாக இனிதிற் பொங்கவும், அதனால் வாக்கும் மனமும் ஒருங்கே யுள் ளொடுங்கவும் ஆங்கே அமைதியாகச் சும்மா வீற்றிருந்தருள்.

வி - ரை: அங்குப் பொருந்தென்றலால் இதயமென்று முன் வருவிக்கப்பட்டது. தம் மிதயத்திற் கோயில்கொள்ள அருணாசலன் ஸங்கோசப்படவோ அன்றித் தமக்குக் குடிக்கூலி யொன்றுங் கொடுக்கவோ அறவே வேண்டாமென்பார் சும்மா பொருந்திடு என்றும், சாந்தசொரூபனான அவன் பொருந்து மிடம் சுகக்கடலாகப் பொங்கலாலும் விருதா கண்டக்ஷேபமும் வீண் மனோவியாபாரமும் அங்கே மங்கலாலும் சும்மா தம்மிதயத்தில் அவன் பொருந்தியிருத்தலே தமக்கு அபரிமித நன்மை பயப்பதாமென்பார் சுகக்கடல் பொங்கச் சொல்லுணர் வடங்க என்றுங் கூறினார். இன்பநுகர்ச்சியிற் சொல்லுணர் வடங்க லியல்பு. இறைவனுறையுமிதயம் சாந்தசுகம் பெருகவும் வாங்மனோ வியாபார கஷ்டம் அருகவும் பெறுமென்பது கருத்து.

32. சூதுசெய் தென்னைச் சோதியா தினியுன்
சோதி யுருக்காட் டருணாசலா.

பொ - ரை: நீ (இதுவையுஞ் செய்தாற்போல்) இனி மேலும் என்னை வஞ்சித்துச் சோதியாமல், நின் யதார்த்த ஜோதிசொரூபங் காண எனக்கிப்பொழுதே துலக்கியருள்.

வி - ரை: மாயாசக்தியால் அளவிலாற்றலுடைய அருணாசலனே சோதிக்கப்புகின் அச்சோதனையி லகப்படாமற்றப்பல்

ஆற்றப் பெரியோரான அயனரிகளாலும் அறவே அரிதாகலின் அறிவாற்றலால் அதியற்பரான தம்மைச் சோதிக்கவேண்டா மென்பார் சூதுசெய் தென்னைச் சோதியாது என்றும், ஓதரிய துவிதமே யத்துவித ஞானத்தை யுண்டுபணு ஞான மாகும் எனத் தாயுமானவர் கூறியபடி உருவமான பாவனு துவிதமாயக் காட்சி அருவமான பாவனுதீத அத்துவித வுண்மைக்காட்சிக்கு ஒரு வழியாகுமேனும் அதுவே முடிவான உண்மைக்காட்சி யன்ருகலின் அவ்வுண்மையை நன்குணர்ந்தவர், அத்தகைய உருவக்காட்சியாற் றம்மை வஞ்சியாமல் திரிபுடிபேதமற்ற பரமார்த்த வுண்மைக்காட்சியான அவன் சுத்தசைதன்ய ஜோதி சொரூபத்தை ஆன்மசொரூபமான தன்மயமாகவே தமக்குக் காட்டக் கேட்பார் உன் ஜோதியுருக்காட்டு என்றும் கூறினர். உன்னழகைக் காட்டென முன்பு கூறியவர் 'உன்னழகிய வுருவைக் காட்'டென இங்குக் கூறுவார் உன் சோதியுருக்காட் டென்ருர். உன் சோதியுரு என்றது—உண்மையழகுப் புஞ்சமான சுயஞ் சோதியாகச் சுடர்வதாலே, தன்பாற்பட்ட வறிவைப் புற விஷயங்களிற் போகாது தன்பாலே யடங்கத் தனகின்ற சுத்த சைதன்யமான அருணாசலன் சொரூபத்தை. அத்தகைய ஜோதி சொரூபத்தைத் தன்மயமாகவே தாங் காண்டலாவது அவ் வத்துவித ஜோதிசொரூப வுண்மையில் தம் முண்மையினை வேறன்ருக ஓர்ந்து ஒடுங்கி ஒன்றுதலாம்.

> எப்பெயரிட் டெவ்வுருவி லேத்தினுமார் பேருருவி
> லப்பொருளைக் காண்வழிய தாயினுமம்—மெய்ப்பொருளி
> னுண்மையிற்ற னுண்மையினை யோர்ந்தொடுங்கி யொன்றுதலே
> யுண்மையிற் கான லுணர்.
>
> —உள்ளது நாற்பது

சூதுசெய்து சோதித்தல்—ஈண்டு மாயவேடங் காட்டி மயக்குதல்; அணிமாதி யட்டமா சித்திகளால் வஞ்சித்தலு மாம். இனிச்சோதியாதெனவும் இனிக்காட்டெனவும் இரண்

டிடத்தும் ஒக்கச்சென் றியைதலால் இனி யென்பது மத்திம தீபமாம். இனிச்சோதியாதென்புழி இனியுஞ்சோதியாதென இறந்தது தழுவிய எச்சவும்மையும், இனிக்காட்டென்புழி இனியே [இனி - இப்பொழுது] காட்டெனத் தேற்றேகாரமும் விகாரத்தாற் றொக்கன. அவ் விருபொருளும் பொழிப்பில் ஒருங்குரைக்கப்பட்டன. இனி, இனிக்காட்டு - இனியேனுங் காட்டு என இழிவுசிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது என்பாரு முளர். இப்பாட்டு அகப்பொருளாகத் தலைவி கூற்றுமாம்.

33. செப்படி வித்தைகற் றிப்படி மயக்குவிட்
டுருப்படு வித்தைகாட் டருணசலா.

பொ - ரை: மாயவித்தையை அஃதுண்மையென்றே கருதிக் கற்று மயங்கும் இவ் வுலகமயக்க மொழிந்து, நின் ஜோதிசோரூபந் தலைப்படும் ஸத்வித்தையை எனக்கு நீ யுணர்த்தியருள்.

வி - ரை: ஈண்டுச் சேப்படிவித்தை என்றது அகடித கடநா விசித்திர ஸாமர்த்தியமுள்ள அநிர்வசனீயமான அவித்தையாற் கற்பிக்கப்பட்டு உண்மைபோல வழங்கும் உல கியல் விஞ்ஞான வித்தையை; செப்படிவித்தை போன்றதனை உவமவாகுபெயராற் சேப்படிவித்தை என்றே கூறினர், அஃது உண்மையன்றாகலின். சேப்படிவித்தை - மாயாஜாலவித்தை.

> சத்தமுஞ் சோதிடமு மென்றுங் கவைபிதற்றும்
> பித்தரிற் பேதையா ரில்

எனவும்,

> கலகல, கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
> போஒந் துணையறிவா ரில்

எனவும், பலதிறப்பட்ட பிராபஞ்சிக விஞ்ஞான வித்தைகளைப் பேதைமையென்றே பிறசான்றோரும் கூறல் காண்க. கற்று

என்னும் வினையெச்சம் அவாய்நிலையான் வந்த மயங்கும் என்னும் பெயரெச்சங்கொண்டு முடிந்ததாகவேனும், மயக்கு என்னும் தொழிற்பெயரின் பகுதியான மயங்கல் என்னும் வினைகொண்டு முடிந்ததாகவேனும் கொள்க. படி - உலகம். மற்றும், கற்று இப்படி மயக்கு - கற்று இவ்வுலகை மயக்கும் மயக்கம், கற்று இவ்வுலகோரை அவ்வித்தையா லேமாற்றித் திரியும் மயக்கம். இப்பொருளிற் படி அதன்கண் வாழும் மக்களுக்கு ஆகுபெயர். ஈண்டுக் கற்று என்னும் வினையெச்சம், அவாய்நிலையான் வந்த மயக்கும் என்னும் பெயரெச்சத்தோடு முடிந்தது; அன்றி, மயக்கு என்னும் தொழிற்பெயரின் முதல்நிலையான மயக்கல் என்னும் வினைகொண்டு முடிந்ததெனினும் அமையும்.

கல்லாத பேர்களே நல்லவர்க ணல்லவர்கள்
கற்றுமறி வில்லாதவென்
கர்மத்தை யென்சொல்வேன் மதியையென் சொல்லுவேன்.
கைவல்ய ஞானநீதி
நல்லோ ருரைக்கிலோ கர்மமுக் கியமென்று
நாட்டுவேன் கர்மமொருவன்
நாட்டினு லோபழைய ஞானமுக் கியமென்று
நவிலுவேன் வடமொழியிலே
வல்லா னொருத்தன்வர வுந்த்ரா விடத்திலே
வந்ததா விவகரிப்பேன்
வல்லதமி ழறிஞர்வரி னங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிதுபுகல்வேன்
வெல்லாம லெவரையும் வெருட்டிவிட வகைவந்த
வித்தையென் முத்திதருமோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே

என இக்கருத்தேபடத் தாயுமானவர் கூறும் வித்தையே ஈண்டுச் சேப்படிவித்தை யென்று பகவானாற் குறிக்கப்பட்டது.

தன் பரமார்த்தவுண்மையாய் நிருபாதிகமாக நின்றொளிர்கின்ற அகண்டாத்துவித பூரண சொரூபத்தைப் பிரமாதத்தான் மறந்து, தேகவடிவான ஜீவனாக 'நான்' என்றகங்கரித்தெழுந்தாலன்றித் தனக்கன்னியரே தோன்றாராகலின், பிறரை ஏமாற்றப்புகுவோன் தான்மேற்கொண்ட அச்செயலில் வெற்றி பெறினும் பெறாவிடினும் ஆக அவ்விரண்டிடத்தும், அவ்வெண்ண மெழுந்தபொழுதே நிச்சயமாகத் தன்னைத் தானே முதலில் ஏமாற்றிக்கொள்கின்றான் என்னுமுண்மை உண்மையுள்ள உத்தம ஸாதகரால் உய்த்துணர்ந்து தம் வாழ்க்கையில் என்றும் மறவாமற் குறிக்கொண்டு கடைப்பிடித்தொழுக வேண்டுவதொன்றாம்.

கற்று மடங்காரிற் கல்லாதா ரேயுய்ந்தார்
பற்று மதப்பேயின் பாலுய்ந்தார்—சுற்றுபல
சிந்தைவாய் நோயுய்ந்தார் சீர்தேடி யோடலுய்ந்தா
ருய்ந்ததொன் றன்றென் றுணர்.

—உள்ளதுநாற்பது, அனுபந்தம்

உருப்படுவித்தை—முற்பாட்டிற் கூறிய அருணாசல சுத்தசைதன்ய ஜோதிசொரூபந் தலைப்படும் வித்தை; என்றது சொரூப ஸாக்ஷாத்காரத்தை. **ஊன மறுக்கு முடலே போற்றி** என்னும் அப்பர் தேவாரத்தில் உடல்போலவே இப்பாட்டில் உருவும் இப்பொருளதாதல் காண்க. 'என்கீழ்மையைப் பாழ்செய்' யென்று தம் மவிச்சையைக் கெடுக்க முன் வேண்டியவர், 'உருப்படுவித்தைகாட்' டென்று சொரூபஞானமான ஸத்வித்தையைத் தமக்குப் பிரசாதித்தருளும்படி வேண்டுகின்றார்.

34\. சேரா யெனின்மெய் நீரா யுருகிக்கண்
ணீராற் றழிவே னருணாசலா.

பொ-ரை: என்னை நீ கலவாவிடின், உடம்பு நீராளமாயுருகக் கண்ணீ ராறுகப்பெருக (அதே ஏக்கமாகக் கவலைக்கடலில்) அமிழ்ந்துபட்டழிவேன்.

வி - ரை: தனக்கேற்ற, அருணாசலன்போன்ற தக்கதொரு வரனைத் தேர்ந்தெடுத்து மணந்து அவனோடு கூடிவாழ்தலே, தன்போலப் பெண்ணாகப் பிறந்தார்க்குப் பிறவிபெற்ற பயன் என்பது தோன்ற 'சேரா யெனின்' என்றும், அவ்வாறு சேரா விடின் தன் பிறவிப்பயனை யிழப்பதாலே தான் பிறந்தும் பிற வாதவளாய், அருணாசலன்மாட்டுத் தனக்குள்ள அபரிமித வாசைப்பெருக்கத்தால் அவனை லணையப்பெறாத வுடம்பு நீரா யுருகவும் அவன் *ஜோதியுருவைக் காணப்பெறாத கண்கள் ஆறாகக் கண்ணீர்பெருகவும் அனவரதம் துக்காக்கிராந்தையாய் அடியோடு தானவலமாவதாகக் கூறுவாள், மெய் நீராயுருகிக் கண்ணீராற் றழிவேன் என்றுங் கூறினாள்.

பூராய மாமேலோன் றறியா வண்ணம்
புண்ணாளர் போனெஞ்சம் புலம்பி யுள்ளே
நீராள மாயுருகிக் கண்ணீர் சோர
நெட்டுயிர்த்து மெய்ம்மறந்தோர் நிலையாய் நிற்
பேன்.

—தாயுமானவர்

இஃது அகப்பொருளின்பாற்பட்ட பாட்டாகலின் வெளிப் படையான பெண்பாற்கூற்றில் விசேடவுரை எழுதப்பட்டது. முன்னும் பின்னும் இவ்வாறு வருவனவற்றுக்கும் இது பொருந் தும்.

35. சையெனத் தள்ளிற் செய்வினை சுடுமலா
லுய்வகை யேதுரை யருணாசலா.

பொ - ரை: நீ என்னைச்சேராமற் சையென் றிகழ்ந்து தள்ளின், அற்றம்பார்த்து நின்ற தீவினை ஆங்கே என்னை யணுகிச் சுடுவதன்றி, எனக்குய்யுங்கதி வேறியாதோ? நீயே அருள்செய்.

* 32-ஆம் பாட்டு

வி - ரை: **விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்கன், முயக்கற்றம் பார்க்கும் பசப்பு** என்னுங் குறள் ஈண்டொருவா றெண்ணத்தக்கதாம். சையேனல் - இகழ்ச்சிக் குறிப்பு. செய்வினை - முன்செய்தவினை, பிராரப்தகர்மம்; சுடும் என்றதனால் அது தீவினையெனப்பட்டது. சுடுதல் - தீப்போலத் தெறுதல், வருத்தல். முற்றுமே குற்றமற்ற குணமுடையோர் காணக்கிடையாத வுலகில், 'குற்றம் பார்க்கிற் சுற்ற மில்லை' என்பதை எண்ணிநோக்கி, ***குன்றே யனைய குற்றங்கள் குணமா மென்றே நீகொண்டால், என்றான் கெட்ட திரங்கிடாய் எண்டோண் முக்க ணெம்மானே** என்னுங் குறிப்புப்பட இறைவனைக் குறையிரந்தவாறு இப்பாட்டு. ஆண்டவனருளாலன்றி அடியவ ருய்யுமாறில்லை என்பது கருத்து. 'அருள் கூர்ந்தெனைச்சேர்ந்தருள்' என அருணசலவரனை முன்பு பிரார்த்தித்த தலைவி, அவன் அவ்வாறு தனக்குத் தலையளிசெய்யத் தவறியக்கால், அவலமுற் றழியவேண்டுவதன்றி வேறுவகையில்லாத தன் பரிதாபநிலையை, அவ் வாண்டவனுக்குத் தனபாவிரக்கமுண்டாக எடுத்துக் கூறி முறையிட்டவாறு—சோரயேனின், சையேனத் தள்ளின் என்னும் இவ் விரண்டுபாட்டுக்களும்.

36. *சொல்லாது சொலிநீ சொல்லற நில்லென்று*
சும்மா விருந்தா யருணசலா.

பொ - ரை: 'பேச்சறச் சும்மா விரு'வென, வாய் வார்த்தையாற் கூறாது மோனமுத்திரையாற் கூறி, (அதற்கேற்பவே நீயும்) பேச்சுமுச்சற்றுச் சும்மாவிருந்தாய்.

வி - ரை: 'உய்வகை ஏதுரை' என்று முன்பாட்டிற் பிரார்த்தித்த தமக்கு அருணசலனருளிய மௌனேபதேசம் ஈண்டுக் கூறினர். உயிருக்குயிராக வுறையும் உடையோனான அருணசலன் அதிதீவிர பக்குவிகளுக்கு உண்மையிற் பயன்

* திருவாசகம், குழைத்த—3

படுவதாக, அறிவுக்கறிவாக நின்று உள்ளிருந்தே யுணர்த்தும் உபதேசம் இதுவே. சனகாதிகளுக்குத் தக்ஷிணாமூர்த்தி யுணர்த்திய உபதேசமுறையும் இதுவாம். அசிந்தியமும் அநிர்வசனீயமுமான அதிஸூக்ஷ்ம பரமார்த்தத்தை உள்ளபடி அறியவும் அறிவிக்கவும் மௌனமன்றி மற்றோருபாய மின்மையே, 'சொல்லற நில்'லென்று சொல்லாதுசொல்லித் தக்ஷிணாமூர்த்திசொரூபமான அருணாசலன் தானுமே சும்மாவிருந்ததன் காரணமென்க. தன்போலவே, தன் சுயநிலையிற் சீடனையும் சும்மாவிருக்கச் சொல்லுதலே - செய்வித்தலே - குரு சும்மாவிருப்பதன் நோக்கமென மௌனத்தின் கருத்தும் விளக்கப்பட்டது. சும்மாவிருவென்று சொல்லாலே சொல்லல் சொல்வான் சொல்லுக்குஞ் செயலுக்கும் முரணுமாகலான், அதுவும் வாய் வார்த்தையால் வழங்காமலே, தன் செயல்கண்டு விவேகியான சீடன் தானே உய்த்துணர்ந்துகொள்ளுமாறு குரு மௌனமாயிருத்தலாம். உண்மையான குரு தன்னிலையி லியல்பாகத் தான் சும்மாவிருத்தலே, அவனை அன்போ டணைந்த அடியார்களுக்கெல்லாம், உண்மையுணர்ச்சிக்குத் தடையான அவர்கள் ஜீவபோதச்சேட்டையை யடக்கிச் சிவஞானபோத முண்டாக்கும் என்பது கருத்து.

37. சோம்பியாய்ச் சும்மா சுகமுண் டுறங்கிடிற்
சொல்வே றென்கதி யருணாசலா.

பொ - ரை: அகந்தைமுனைப்பா லுண்டாகின்ற திரிகரணச்சேட்டை சிறிது மின்றி, அயல்விஷயங்களில் அறவே உதாசீனனாகச் சும்மா விருக்கத் தன்னியல்பா லகத்தே துலங்கும் ஆன்மசுகத்தை அமைதியாக வனுபவித்து ஆங்கே அறிதுயில்கொண்டு கிடப்பின் (அதுவே பரகதியாவதன்றி) அதனினும் வேறு கதியுளதேற் கூறியருள்.

வி - ரை :

சோம்ப ரிருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பது சுத்த வெளியிலே
சோம்ப ருணர்வு சுருதி முடிந்திடம்
சோம்பர்கண் டாரச் சுருதிக்கட் டுக்கமே.

தூங்கிக்கண் டார்சிவ லோகமுந் தம்முளே
தூங்கிக்கண் டார்சிவ யோகமுந் தம்முளே
தூங்கிக்கண் டார்சிவ போகமுந் தம்முளே
தூங்கிக்கண் டார்நிலை சொல்வதெவ் வாறே.

—திருமந்திரம்

சொன்மா னததனுவின் கன்மா திசிறிதின்றிச்
சும்மா வமர்ந்திருக்க வம்மா வகத்திலான்ம
சோதியே ; நிதானு பூதியே ; இராது பீதியே ;
இன்பவம் போதியே.

—ஆன்மவித்தைக்கீர்த்தனம்

சும்மா விருக்கத் துலங்குகின்ற சுகம் என்க. இருக்கத் துலங்குகின்ற என்னுஞ் சொற்கள் அவாய்நிலையான் வந்தன. உண்டு - நுகர்ந்து, அனுபவித்து. வினையெச்சமாகவன்றி, சும்மா உறங்கிடிற் சுகமுண்டு என, உண்டு என்பது வினைமுற்ருகவுமாம். ஸகலமென்னும் ஜாக்ரஸ்வப்நங்களிலேயே ஸம்ஸார துவிதபயந் தோற்றுவதன்றிக் கேவலமென்னுஞ் சுஷுப்தியிலின்மையால் அறிவுகெடாது தூங்காமற்றூங்குகின்ற ஜாக்ரசுஷுப்தியாகிய சுத்தமெனுந் துரீயமேஉண்மையில் அத்துவிதாபயஸ்தானமான கைவல்யபரகதியென, உறங்கிடில் என்பதனுற் குறிப்பித்தவாருயிற்று. சோம்பியாய்ச் சும்மா என்றதனுல், ஈண்டுக் கூறப்பட்ட சுகம், ஏற்கெனவேயுள்ள எல்லாப் பிரயத்தனங்களேயும்—முக்கியமாக, அவற்றுக்கடிப்படையான கர்த்தத்துவபுத்தி யுட்பட—அறவே விட்டொழிவதையன்றித் தன்னே யடைவதற் கென்று வேறு விசேடப்பிரயத்தனமொன்றையும் வேண்டாதது

என்றும், எனவே, நிர்விஷயமாகவும் மாறு வியல்பிற்றாகவும் தன் சொரூபமாகவே என்றுமுள்ளது என்றும் அறிக.

38. சௌரியங் காட்டினை சழக்கற்ற தென்றே
சலியா திருந்தா யருணாசலா.

பொ - ரை: ஞானசூரனை அருணாசலா! நின்னருட் சௌரியங் காட்டினை; காட்டலும், என்னவிச்சையிருள் அற்றொழிந்தது; அற்றொழியவே, நீயும் நின்னிலையில் அமைதியாய் அசைவற்றிருந்தாய்.

வி - ரை: சௌரியம் - சூரத்தனம்; என்று - சூரியன் (சூரனென்றும் சூரியனுக்கு ஒரு பெயர்). என்று - என்று கூறி என்றுமாம். அடியர் சழக்கற்றொழியச் சௌரியங் காட்டுங்கால் சலன்போலக் காணப்பட்டவன் அச்சழக்கற்றொழிந்த பின்பே அசலனாக அவரா லறியப்படுதலால், அருட்டொழிலைத் திறம்படச் செய்தும் உண்மையில் தானொன்றுமேசெய்யாதான் போலச் சும்மா விருந்தா னென்பார் சலியாதிருந்தாய் என்றார். தான் ஒரு *காந்தபருவதமாய்த் தன்னிலையிற் சற்றும்பெயராது முற்றும் அசைவற்றிருந்தே, தன்பால் யாதொரு சங்கற்ப மின்றியே, தன் சந்நிதிமாத்திரத்தாலே சூரியன்போலத் தன்னருட்டொழிலைப் பூரணமாகப் புரிந்து தன்னடியர்தம் அவிச்சையை அறவேயழிக்கும் அதிவிசித்திரசக்திமான் அருணாசலன் என்பது கருத்து.

39. ஞமலியிற் கேடா நானென் னுறுதியா
னுடிநின் னுறுவே னருணாசலா.

பொ - ரை: அறிவில் நாயினுங் கடையான நான் உன்னருள்வலியல்லாத வேறெந்த வலிகொண்டு உன்னைத் தேடியடைய வல்லேன்.

* அருணாசல பதிகம்—10.

வி - ரை : நாயினுங் கடைப்பட்டவனா நான்? அல்லவே! ஆகலான், (எவ்வாற்றாலும் உன்னை யடைந்தேதீருவ தென்ற) என்னுரனுடைமைகொண்டே நானுன்னைத் தேடியடைவேன் என்றுமாம். ஏற்கெனவே அருணாசலனருளால் ஆட்கொள்ளப் பெற்ற ஆசிரியர்பகவான் அவனை நோக்கி இப்பொழுது இவ்வாறு வீறுப்புக்கூறுவதில் வியப்பொன்றுமில்லை என்க. திடவைராக்கியமும் தீவிரசிரத்தையுங்கொண்டே ஒருவன் சொரூபத்தை யடையவேண்டும் என்னும் பான்மையில், இந்தப் பொருளே முக்கியப்பிரயத்தனமென்று வாசிஷ்டத்தில் அடுத்தடுத்து வற்புறுத்தப்படுவது. அவனருட்டுணைகொண்டே அவனையடைய வேண்டுமெனச் சான்றோரான மற்றொரு சாரார் வற்புறுத்தும் திருவருள் முறையினின்று வேறுபட்டாற்போல மேலெழுந்த வெளிப்பார்வைக்குத் தோன்றும் இக்கருத்து, இராசதகுணப் பிரதானத்தால்அகந்தைவடிவாகக் கிளர்கின்றஜீவபலங்கொண்டன்றி சுத்தஸத்வத்தால் அருணாசலசிவஸ்வரூபமா யகத்திற் கிளர்கின்ற ஆன்மபலங்கொண்டே, விஷயவைராக்கியத்தாலமைதிபெற்ற மனத்தூடு துணியப்படுதலால், இதுதான் அதனோடு மாறுகொள்ளாதது மட்டுமன்றி உண்மையில் இதுவும் அதுவேயாதல் உய்த்துணர வல்லார்க்கு நன்கு விளங்கும். இனி விசேடமாக, என் னுறுதியால் - யானென்பதன் வலியால்: என்றது, என் சொரூபத்தைக் குறித்து அகத்தில் 'நானார்' எனச் செய்யப்படும் ஆராய்ச்சிவலியால் எனக்கொண்டு, *யான் என்னும் ஆதியெண்ணம் ஆன்மசொரூபனும் ஞானசூரியனுமான அருணாசலனது கிரணமாதலால்,—தன் யஜமானனிடத்தினின்று பிரிந்து முன்பு நெடுந்தூரத்தில் விடப்பட்ட நாயானது, தான் வந்தவழியை நீள மோப்பம் பற்றிக்கொண்டே சென்று, முடிவில், முதலில் தானகன்றுவந்த தன்யஜமானன் காலடியை மீண்டடைவதுபோல,—"நானார், என் சொரூபம் என்ன; நான் வந்த வழி யாது, என் பிறப்பிடம் எங்கு" என்றகமுகமாக நாடும் எதார்த்த விசாரணையால், நானும் அந்தக் கிரணம்

* உபதேச வுந்தியார்—18.

வந்த வழியை உள்ளூர ஒற்றிக்கொண்டே சென்று, முடிவில், என் யதார்த்தசொரூபமான உன் பதத்தை எப்படியும் மீண்டடைவேன் என்றுமாம். இஃது அருணாசல னருளாற் பகவானுக்குப் பிறப்புரிமையாகக் கிடைத்த சிறப்புரிமையான விசாரமார்க்கம்பற்றிய வுரை.

40. ஞானமில் லாதுன் னாசையாற் றளர்வற
ஞானந் தெரித்தரு ளருணாசலா.

பொ-ரை: உன்னை யடைதற்குரிய ஞானம் இல்லாமலே, ஆனால் உன்னை யடையவேண்டுமென்ற ஆசை மட்டுங் கொண்டதனு லுண்டான தளர்ச்சி நீங்க, அந்த விசாரஞானத்தை எனக்குணர்த்தியருள்.

வி-ரை: இல்லாதென்பது தளர்வென்பதன் முதல்நிலையான தளர்தலோடு முடிந்தது; ஆசையாலென்பதும், அவ்வாறே. ஞானமில்லாமற் றளர்கின்ற தளர்ச்சியெனவும், ஆசையாற் றளர்கின்ற தளர்ச்சியெனவும் தனித்தனி கூட்டிப் பொருள்கொள்க. ஞானசொரூபனுன இறைவனை அறிந்தடைதற்கு ஞானமே நேர்சாதனமாதலால் ஞானமில்லாது என்றும், அது வாய்க்கப்பெறுமளவும் இறைவனை அனுபவத்தா லறிந்தடைதல் இயலாமையால், அத்தகைய ஞானமில்லா திருக்கவும் அவனையடையவேண்டுமென்ற ஆசைமட்டுமிருப்பின் அவ்வாசையாற் றளர்ச்சியே விளைதலின் உன்னாசையாற் றளர்வு என்றும், அத் தளர்ச்சி நீங்கவேண்டுமாயின் அருணாசலனை அனுபவத்தா லறிந்தடையுங் கருவியான அந்த ஞானத்தை அவனே தமக்குணர்த்தவேண்டுமாதலின் தளர்வற ஞானந் தெரித்தருள் என்றுங் கூறினார். நேசமி லெனக்குன் னாசையைக் காட்டிநீ, மோசஞ் செயாதருள் எனவும், நானே நானே தத்துவ மிதனைத், தானே காட்டுவாய் எனவும் இந் நூலின்கண்ணே பின்னர் வருவன காண்க. ஞானமே நேர்சாதனம் என்றதென்னை? பக்தியாற்

பரமனைக் கண்டடையலாகாதோ வென்னின், அவ் வருணாசல பரமன் தன் பக்தர்க்களிக்குங் காட்சி தன்னை அவர் நினைந்த வடிவோடாகலின்;

எப்பெயரிட் டெவ்வுருவி லேத்தினுமார் பேருருவி
லப்பொருளைக் காண்வழிய தாயினுமம்—மெய்ப்பொருளி
னுண்மையிற்ற னுண்மையினை யோர்ந்தொடுங்கி யொன்றுதலே
யுண்மையிற் காண லுணர்

—உள்ளது நாற்பது

என்றபடி, உண்மைக்காட்சிக் கொரு வழியாவதன்றி அதுவே அவ் வுண்மைக்காட்சியன்றாய்க் கேவலம் காண்பாரது மனோ மயக்காட்சியாம்; எனவே, அது நிலைபெறுதலு மின்றாய்த் தளர்ச்சியும் நீங்காதாம். ஆனால் ஞானத்தா லடையும் அவ னுண்மைக்காட்சியோ வென்னின், அவ்வாறன்றிக் காண்பானது போலிவடிவான அகந்தையழிவால் அவ் வாரோபத்துக் கதிஷ் டானமான அவனுன்மசொரூபமேயாயும், அதனால் அவனைவிட் டென்றும் நீங்காமல் நிரந்தரமா யிருந்தொளிர்வதாயும் அந்தத்தளர்ச்சிக் கவகாசமேயில்லாமல் நித்யாபரோக்ஷமான சுத்தஜ்ஞான சொரூபானுபூதித்திறத்தால் அதனை அறவே யழிப்பதாமென்க.

ஞானத் தாற்றொழு வார்சில ஞானிகள்
ஞானத் தாற்றொழு வேனுனை நானலேன்
ஞானத் தாற்றொழு வார்க டொழக்கண்டு
ஞானத் தாயுன்னை நானுந் தொழுவனே

எனவும்,

முன்னை ஞான முதற்றனி வித்தினைப்
பின்னை ஞானப் பிறங்கு சடையனை
என்னை ஞானத் திருள றுத் தாண்டவன்
றன்னை ஞானத் தளையிட்டு வைப்பனே

எனவும் வரும் அப்பர்சுவாமிகள் தேவாரப் பாசுரங்களால்

இவ்வுண்மை நன்குணரப்படும். அவ்வாறாயின், ஒருவற்குப் பக்தியா லடையும் பயன்றா னென்னேவெனின், பரமனருளா லுண்டாகும் ஞானமே அதன் பயனும். பக்தியின் பயன் இறைபணிநிற்ற லென்னும் பரபக்தியன்றோ வெனின், ஆம்; ஆனால், நானென்னுந் தனித்தன்மையான அகந்தையும், அதனால் ஆண்டவனைத் தன்னின் வேறுபோலத் துவிதமாக வடையவேண்டும் என்னு மாசையும், அதனா லுண்டாகும் தளர்ச்சியும் தன்னிழப்பால் அறவே யின்றாய்ப் பூரண சாந்த சொரூபமாய்த் தன்னியல்பாகவே ஆண்டவனிடத்து நிகழும் அப் பரபக்தி ஞானத்தின் வேறன்றாம். உண்மையனுபவத்தில் ஞானத்தோடொன்றாக முடிந்தவதற்கு அப் பெயர்வேறுபாடு, பக்திவடிவான சாதனமார்க்கபேதத்தாலும் பரதிருஷ்டியான உபாதிசம்பந்தத்தா லேய்ந்த துவிதபேதத்தோற்றத்தாலுமே சார்ந்ததாக அறியத்தக்கதாம். எனவே, சச்சிதானந்த சொரூபத்தி லுண்டான தன்மயானுபவத்தால் அதன்கண் இயல்பாகவே தனக்கியல்கின்ற விசுத்தப்பிரேம விகாசமான அவ்விரண்டற்கும் சொல்வேறுபாடன்றி எவ்வாற்றாலும் சற்றும் பொருள்வேறுபா டின்றென்க.

41. ஞிமிறுபோ னீயு மலர்ந்திலை யென்றநே
நேர்நின் றனையென் னருணாசலா.

பொ : ரை: ஞான சூரியனான அருணாசலா! நீயும் கேவலம் ஒரு வண்டுபோல, '(உட்புக்கு நானுன்னைக் குடைந்து தோய்தற்கு) நீ இன்னும் மலரவில்லையே' (என் றொரு வியாஜம் மேலிட்டுக்கொண்டு) என்னெதிர் நிற்கின் றாய். இஃதென்ன மாயம்!

வி - ரை: நின்றனை என்பதனோடு கூட்டாமல், இருந்த வாறே, மலர்ந்திலை என்பதனோடு கூட்டின் நீயும் என்பதி

ுள்ள உம்மை இசைநிறைமாத்திரமாம். அரும்புநிலையை அப் பொழுதே கடந்து மலர்ந்துகொண்டே யிருக்கும் போது போலத் தன் பேதைப்பருவத்தைத் தாண்டிப் பெதும்பைப் பருவத்தில் அடியிட்டுக்கொண்டேயிருப்பவளும் அறிவாற் பண் புட்டுத் தேர்ந்த நனிநாகரிகையுமான தலைவி தலைவனைத் தன் னெதிரிற் கண்டு அவன்மாட்டுத் தன்னுள்ளத்தில் வேட்கை நினைவரும்ப, அதனை நேர்முகமாக வெளியிடாமல் அன்யாப தேசமாகக் கதிரவனை நோக்கித் தாமரை கூறுமாறுபோலத் தன்னைக் கமலப்போதாகவும், தலைவனைக் கமலநாதனான சூரிய னாகவுங்கொண்டு, அவன்றானே தன் மனநிலையை உய்த்துணர்ந்து கொள்ளும்படி நாணத்தாற் குறிப்பாகக் கூறினாள். மலர்தல் - தாமரைத்திறத்திற் பூத்தலும் தலைவிதிறத்திற் பூப்படைதலு மாகக் கமலப்போதுக்கும் கன்னிப்பெண்ணுக்கும் பொதுப் படச் சிலேடையாக நின்றது. [பூப்படைதல் - பிரௌடை யாதல்.] மலர்ந்திலை என என்றெச்சமாக ஒருசொல் வருவித்து அதனை நேர்நின்றனை என்பதனோடு முடிக்க. என்று - சூரியன் ; அவ்வாறன்றி எனவென்னும் இடைச்சொல்லாகமட்டும் அத னைக் கொள்வாரு முளர். அஃது ஆசிரியர் கருத்தன்றாம். தாமரையைத் தன் சந்நிதி மாத்திரத்தாலேயே மலர்த்தித் தோயும் சக்தியுள்ளவன் சூரியன். தாமரை தானாக மலர்ந்தா லன்றிச் சார்ந்து படிய மாட்டாதது வண்டு. எனவே, ' நீ இன் னும் மலர்ந்திலையே ' என்று தாமரையை நோக்கி வண்டு கூறு வது நியாயமாம். நேர்மையான முறையில், சூரியன் அவ் வாறு கூறல் பொருத்தமன்றாகலின் அஃதுண்மையன்றாய் வஞ் சத்தின்பாற் படுவதாமென்று, மலர்ந்திலை என்றே நேர்நின்றனை என் என்றாள். சிவசந்நிதியில் ஜீவபரிபாகம்—சிவசொரூபமான குருசந்நிதியிற் சிஷ்யபரிபாகம்—பிரயத்தனமின்றியும் தானே யுண்டாகும்: இதயக்கிரந்தி தானே பேதிக்கும் என்பது கருத்து.

42. தத்துவந் தெரியா தத்தனை யுற்றாய்
தத்துவ மிதுவென் னருணாசலா.

பொ - ரை: "அதுநீ - என்னு முண்மையை அறியாமலே அந்தப் பிரம்மசோரூபத்தோடபேதமான அவ்வான்ம சோரூபத்தை நீ அடையப்பெற்ருய். ஏற்கெனவே நின்ணலடையப்பேற் றுள்ள இதுதானே முடிவான உண்மை" என்று திடம்பட வென்னைத் தேற்ருய்.

வி - ரை: உலகிற் பிறந்த மக்களுட் பல்லாயிரத் தொருவர் பூர்வஜன்ம புண்ணியத்தால் ஸம்ஸாரத்தில் விரக்தராய் முமுக்ஷுத்வ மடைந்து, ஸர்வஸங்க பரித்யாகம் செய்து, ஸாதன சதுஷ்டயங்கள் முதலிற் குறைவின்றிக் கைகூடும் பொருட்டுக் குருசிசுருஷை யாற்றிக்கொண்டே சிலகாலம் குருகுலவாசஞ் செய்து, பின்னர்க் குருவருளாற் பெற்ற மகாவாக்கிய மந்திரோபதேசங் கொண்டு சிரவண மனன நிதித்யாசம் நெடுங்காலஞ் செய்து, சிரமப்பட்டு நிஷ்டை சாதித்து இவ்வாருக நிலையிற் சேர்வர். தாம் அங்ஙன மன்றி, ஏதோ காரணார்த்தமாக,—பாக்கியசாலிகளான பக்தர் பல்லாயிரவரைப் பரகதிக் குஜ்ஜீவிப்பிக்கும் பரங்கருணையால்,—இவ்வுலகில் அவதரித்தமையின், யார் வாயாலும் 'அது நீ, யென்னும் அருமறைப் பொருளை அதுவரையிற் கேட்டுங்கூட வறியாமையால் குரு சாஸ்திரம் முதலிய யாதொரு புறத்துணையு மில்லாமலும், தம்பாலும் அருணாசல னருளன்றி யாதொரு விசேட முயற்சியு மில்லாமலும், இயல்பாகவே கிருதகிருத்தியராய்த் தத்வஜ்ஞான ஸம்பன்னராக, இளமையில் எடுத்தவெடுப்பிலேயே, திடீரெனப் பரகாஷ்டையான முடிவான நிலையில் நிலைக்கப்பெற்றவர்—'பிரம்ம மென்னும் பெயர் அறியாமலே பிரம்ம ஞானம் பெற்ற புலவர்'—ஆதலின், ஆசிரியர் பகவான், சிஷ்டாசார சம்பிரதாயமான உலகியன்மரபு பற்றி, தம் மனுபவத்துக் குறுதிப்பாடான வுடன்பாடு, தம் மான்மசொரூபத்தினின்றும் வேறல்லாத அவ் வருணாசலகுரு திருவாய்ப்பட, வசிஷ்டர் வாயாற் பிரம்மரிஷி என்ருற்போல் இப்பாட்டால் வேண்டினா ராயிற்று. இதற்கு உதாரணமாக, வாசிஷ்டத்திற்

கூறிய சுகோபாக்கியானம் ஈண் டாராயத் தக்கது. தத்துவந் தெரியாது என்னுந் தொடரில் தந்துவம்-அது நீ என்னுமுண்மை என இரட்டுற மொழிதல். தமக்கு அபரோக்ஷமாகலின் இது வென்றார். இனி இப்பாட்டுக்கு, தத்துவங்களான பிறவற்றாற் சற்று மறியப்படாமல் நீதான் அவ்வளவு உயர்வுற்றாய்; (அவ்வா றிருக்கவும், அவ்வளவினனான வுன்றன்) இவ்வளவினதான உண்மைதானென்னே என்றுமாம். தத்துவம் - சாதியொருமை. ஈண்டுத் தத்துவங்களென்றது - மற்றெல்லாவற்றுள்ளும் முக்கிய மாகப் புறத்தே தூலத்தில் சோமசூரியாக்கினிக ளான சுடர் மூன்றனோடு ஜீவனது ஞானேந்திரியங்க ளைந்தும், அகத்தே சூக்குமத்தில் அந்தக்கரணங்கள் நான்குமாம், தெரிதற் கமைந்த சாதனங்கள் அவையே யாதலால். ஒளிகளேபோலும் அவைதாம் அருணாசலனை யறியலாகாமை, அவை யாவும் பிராகிருதங்களும் அவன்றான் அப்பிராகிருத புருஷனு மாகலான்—அதாவது, பரமான்மாவான் அவனொருவன் பார மார்த்திக திருக்கும், பிறவனைத்தும், துவிதமாக அவனைக்காண வேண்டும் பான்மையில் அத்துவித ஸச்சித்தான அவனினின்றும் வேறாகலான் கேவலம் அஸஜ்ஜடங்களான திருசியங்களுமாகத் தீர்தலால் என்க. அருணாசலன் தான் அசங்கனாகவே நின்று பிறவனைத்தையும் காணும் உண்மையான ஏக திருக்காக இருந் தொளிர்தலும், அவையனைத்தும் அவனாற் காணப்படும் திரு சியங்களாகக் கழிந்தொழிதலும், எனவே அவன்றான் அவற் றாற் காண்டலாகாமையும், கண்ணுக்குக் கண்ணாய்க் கண்ணின்றிக் காணுனைக் காணுவதெவர்பார் என்னும் திருப்பாட்டால் ஆசிரியர் பகவானே முன்னர்க் கூறியது இங்கு ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டுவதாம். இவ்வுண்மை இன்னும் தெளிவாக, ஒளியுனக் கேது எனவும், தேவறு ரார்மனம் எனவும், மனச்சக்ஷு வாதி என வும் வரும் அனுவாத வருளிச்செயல்களான பகவான்பாட்டுக் களால் நன்கறியப்படும். தத்துவந் தெரியா தத்தனை யுற்றாய் என்னும் முற்பகுதியால், அருணாசலன் இந்திரியங்களுக்கே யன்றி மனம் புத்தி முதலிய கரணங்களுக்கும் பரோக்ஷமே

50827 Q23:417x

யாதல் கூறிய ஆசிரியர் பகவான், அதற்கேற்பத் 'தத்துவ மது வென்' என்றே கூறவேண்டியிருக்க, அவ்வாறன்றித் 'தத்துவ மிதுவென்' என்று கூறியது, அத்துவித ஸச்சித்தான அருணா சலன்றான், பிரம்மசொரூபமாந் தன்னினின்றும் பின்னமன் றான ஆன்மசொரூபமாகவே, தன்மயமாய் அகமக மென்று, தம்மகத்தில் அனவரதம் தன்னருளால் இடைவிடா திருந் தொளிர்தலா லென்க. தத்துவந் தெரியா தென்பதற்கு உன் னுண்மை இன்னதென் றொருவராலு முணரப்படாமல் எனக் கூறலும் ஒக்கப் பொருந்துவதா மெனினும், இங்குக் கூறிய வுரையில் அதுதான் ஏகதேசமாக அடங்கிவிடுதல் காண்க.

43. தானே தானே தத்துவ மிதனைத்
தானே காட்டுவா யருணாசலா.

பொ - ரை: தானேதானே தத்துவப் பொருளாமவன். தத்துவப்பொருளாகிய அந்தத் தானான நீயே (சுயம்பிரகாச ஸச்சித்தான நின்சொரூபவிளக்கத்தால்) இவ்வுண்மையை எனக்குக் கண்கூடாகக் காட்டியருள்.

வி - ரை: தான் என்றது, சுத்தசைதன்யப் பிரஜ்ஞா னன்மசொரூபமாக—மனக்கற்பிதமான அவஸ்தாத்திரயங் களில் மாறிமாறிச் சஞ்சரித்தலான் மனோமயக் கற்பனா விஜ் ஞான மயனாக ஆங்காங் கடிக்கடி தோன்றி மறைகின்ற சீவ னுக்குஞ் சீவனாக (அவஸ்தாத்திரய ஜீவஸாக்ஷியாக என்றபடி) —என்றும் எல்லாரிதயத்திலும் இடைவிடா திருந்தொளிரும் சுயஞ்சோதியான அருணாசலனே. தானேதானே எனத் திரும்பத் திரும்பக் கூறியது தேற்றப்பொருட்டாம். தத்துவம்-உண்மைப் பொருள்; அது எவராலுஞ் சங்கிக்க வொண்ணாத ஸத்தாமாத் திரமான நித்யாபரோக்ஷ ஆன்மசொரூப மாகலின், அது இதனை என்னும் அண்மைப்பெயராற் சுட்டப்பட்டது. தானே காட்டலாவது அகந்தை வடிவான ஜீவன் அத்தன்மையிற்

பொருளன்றாய்ப் பட்டப்பகலிற் பனிமதிபோல மங்க அவனைத் தன்மயமாகத் தன்னுட் கரந்து அகண்டாத்துவித ஸச்சித்தான ஆன்மசொரூப வருணாசலனே முழுமுதற் செம்பொருளாக விளங்கல். [கண்கூடு - ப்ரத்யக்ஷம், அபரோக்ஷானுபவம்.]

44. திரும்பி யகந்தனைத் தினமகக் கண்காண்
டெரியுமென் றனையென் னருணாசலா.

பொ - ரை: வைராக்கியத்தால் வெளி விஷயங்களி னின்று விமுகமாக வகத்தே திரும்பி, நானாரென வினாவும் விசாரவடிவான அகமுகப்பார்வையால் ஏகாக்கிரமாகத் தன்னைத் தானே இடைவிடா தாராய்ந்துகாண். (தானே தானே தத்துவமா முண்மை தன்மயமாகத் தனக்குத் தானே) நன்கு விளங்கும்—என்றுபதேசித்தாய். இது வென்னே?

வி - ரை: அகந்திரும்பல் - புறவிடயச் சுட்டறுத்தல்; அகத்தே விக்ஷேபங்களை விலக்கலும் உபலக்ஷணத்தா லுடன் கொள்க. தன்னை அகக்கண்ணாற் காண்டலால் ஆவரணமழிந்து தத்வஜ்ஞான தர்சன முண்டாம். விசாரத்துக்கு விஷயமாகத் தன்னைக் கூறியதில் தன்னை என்றது அகந்தைவடிவான ஜீவனையேயன்றி அகம்சொரூபமான ஆன்மாவையன்றாம்; என்னை? அவிச்சைவிளைவான பிறவித்துன்பமும் அதன் நீக்கத்துக் குபாயமான விசாரத்துக் காவசியகமும் மோகத்தாற் கட்டுண்டு கலங்கும் ஜீவனுக்கன்றி அநாதியே நித்ய சுத்த புத்த முக்தமான ஆன்மாவுக்கின்மையாலும், அவ்வான்மாதான், ஆன்மஸாக்ஷாத்காரத்துக்குப் பிரதிபந்தமான அகந்தை அவ் விசாரத்தின் பயனாக அழியவே, ஜீவனுக்கு அவன் சொரூபமேயாக நின்று சாந்தவிருத்தியாற் றன்மயமாக அவனா லறிந்தனுபவிக்கப்படலன்றி, என்றும் எவ்விதத்திலும் அவன் சாதனவிசாரத்துக்குச் சற்றும் அஃது விஷயம் அன்மையாலும் (ஆகாமையாலும்)

என்க. பரமார்த்தத்தில் இன்றாகவும், உண்மையில் மரணமே யான பிரமாதத்தால் விளைந்ததே ஜனனமரணரூப சம்சார மாதலால் அதற்கு மூலமான அகங்காரக்கிரந்தி அத்யந்தம் நாசமாகும் பரியந்தம் இடைவிடாவிசாரம் ஒருவற்கின்றியமை யாமையின் தின மகத்தேன் காண் என்று அருணாசலனு லருளப் பெற்றது. மனத்தை வெளிவிஷயங்களில் விடாமல் அதன்மூல மான இதயத்தி லிருப்பித்தலே அகமுக மென்பதாம்.

45. தீரமி லகத்திற் றேடியுந் தனையான்
றிரும்பவுற் றேனரு ளருணாசலா.

பொ-ரை: இழந்துவிட்ட ஆன்மசொரூபமான உன்னை எல்லையற்ற (பரவெளியான) இதயத்தின்கண்ணே தேடி உன் னருளாலே நான் திரும்ப வடைந்தேன்.

வி - ரை: தீரம் - கரை, எல்லை. ஈண்டுக் குறிக்கப்பட்ட அகம் (இதயம்) அகண்டமாய் வாலறிவு வடிவான அருட்பர வெளியேயன்றி மாம்சபிண்ட மானதொரு சரீரக்கூறன்மையின் தீரமி லகத்தில் என்றும், இதயப் பரவெளி வடிவான இறைவன் அவ் வருட்பர வெளியான தன் னறிவொளி மகிமையிலே தானே தான் பிரதிஷ்டிதனா யிருத்தலின் அகத்திற் றேடியே அகம் சொரூபமான அவனை அறிந்தடைய வேண்டுமென்பார் அகத்திற்றேடியென்றும், தான் தானாகவே என்று மிருந்தொளி ரும் ஆன்மசொரூப வருணாசலனைப் பாரமார்த்திகத்தில் யாரும் என்றும் இழந்ததே யின்மையின் அவனை மீண்ட்டைதலு மின் றாகவும், என்றும் எல்லோரும் உண்மையாகவே அவனை இழந்து விட்டாற்போலத் தம் அனாதியான பிரமாதத்தாற் கருதுவது கொண்டு திரும்ப வுற்றே னென்றும், புறமுகமாகவே இந்திரிய வாயிலாக வியங்க இறைவனா லியற்கையிற் படைக்கப்பட்ட மனம் அவனருளாற் பின்ன ரகமுக மாக்கப்பட்ட பின்பே, அகத்தே அகமாக வொளிரும் அவன் சொரூபத்தை உள்ளபடி

அறிந்தடைய வல்லதாகின்றமையின் அருள் என்றுங் கூறினர். தேடியும் என்பதனீற்றும்மை இசைநிறைமாத்திரமாக நின்றது.

அந்தரியாமியான உன்னை என் னகத்திற் றேடியும் அதற்குப் போதுமான தீரமின்மையாலே நான் (உன்னைத் தேர்ந்தடைய முடியாமல் முன்போலவே புறத்து வாளா) திரும்பிவந்தேன். எனக்கருள்செய் என்றுமாம். தேர்ந்தடைய முடியாமைக் கேதுவான தம் மதைரியத்தை—தீரமின்மையை—உபசாரமாக, அகத்துக்கு விசேஷணமாக்கித் தீரமிலகத்தில் எனக் கூறியது ஸாபிப்பிராய ஹேதுவாம். தீரம்-தைரியம் என்றது அருள்வலி யென்னும் ஆன்மபலத்தை. தீரமில்லாத அகத்தே நானுன்னைத் தேடினேனாயினும் (அதனாலென் முயற்சி வீணாகாமல்) உன்னருளிருந்தவாற்றால் நானுன்னை மீண்டு மடையப் பெற்றேன் என்றும் மற்றொரு பொருள் காண்க. இப்பொருளில், தீரம் என்றது கர்த்தத்துவத்தோடு கூடிய ஜீவபோதமான தீக்ஷண புத்திபலத்தை.

46. துப்பறி வில்லா விப்பிறப் பென்பய
னெப்பிட வாயே னருணாசலா.

பொ-ரை: ஆராய்ச்சி யறிவு—விசார ஞானம்—அற்ற இப்பிறப்பால் எனக்கு யாது பயன்? பயனின்மையின், ஒரு பொருளாக, அதனை மற்றேதனோடாவது—நாய் முதலாகக் கீழ்க்கடையான மற்றெவ்வுயிர்ப் பிறப்போடாவது—உவமித்துரைக்க நான் வாயெடுப்பதேன்?

வி-ரை: துப்பு - இரகசியத் தியற்று சூக்கும சோதனை; அனுபவமும் வல்லபமுமாம். எனவே, துப்பறிவு - தான் வந்த வழியை உள்ளூர வொற்றி, அனுபவமாகத் தன்னுண்மையை யறிகின்ற திட்பவறிவு. மனத்தின் மற்ற நினைவுகளையெல்லாம், மணிகளிற் சரடுபோல் அவற்றுக் காசிரயமான நானென்னும் நினைவில் முதலிலொடுக்கி, அகமுகப்பட்ட வான்மவிசாரத்தால்

நானென்னும் அவ் வாபாசவகந்தை வந்த வழியை நானாரெனத் துப்புத் துருவி, வைராக்கியத்தால் அதன் முடிவு வரையில் முடுகித் தொடர்ந்து, அதன் பிறப்பிடமான இதயத்தில் அதன் மூலவுண்மையான தன் யதார்த்தசொரூபத்தை நேரடியாகக் காண்கின்ற நேர்முகவறிவு—பிரத்யக்ஷஞானம், அனுபவஞானம், திடஞானம். மனம், அதன் மூலமான இதயத்தில் அத்யந்த சாந்தமாகக் கிளர்கின்ற மோனமே அதன் முத்திரை. கண்ணைக் கட்டிப் புதியதோ ரிடத்திற் கொண்டு விடப்பட்ட நாய் தான் வந்தவழியைத் தன் மோப்பவுணர்ச்சியா லாய்ந்து கொண்டே சென்று, தான் பிரிந்தொழிந்த தன் பூர்வஸ்தானத்தை மீண்டடைதல் போலவே, சுத்த ஸச்சித்தான சொரூபத்தினின்று பிரமாதத்தாற் பிரிந்து நானென்னு மகந்தை வடிவாய்க் கற்பனைத்தோற்றத்திற் கட்டுண்டுழல்கின்ற ஜீவனும் அகமுகமாகத் தான் வந்த வழியே திரும்பி, நித்யமுக்தமான யதார்த்தசொரூபம் விளங்குகின்ற உற்பத்திஸ்தானமான இதயத்தை, 'நானா' ரென்னும் ஞானவிசார வாயிலாக நாடியடையவேண்டு மென்று விசாரமார்க்கத்தை விளக்குவர் ஆசிரியர் பகவான். ஏமலியிற் கேடா நான் என்னும் பாட்டை ஈண்டு மீண்டு மொருமுறை நன்காராய்ந்து காண்க. இங்குக் கூறியாங்கு, நாயுங்கூடத் துப்பறிவான மோப்பவறிவு உடையதாயிருக்க அம் மோப்பவறிவே போன்ற துப்பறிவு எனக்கின்மையால் அந் நாயினுங் கடையான இப்பிறப்பென்பார் துப்பறிவில்லா விப்பிறப்பென்றும், அவ்வறி வின்றாகவே, அதனாலன்றி யடைதற்கரிய அபரோக்ஷஞானானுபவ மாகிய பரமபுருஷார்த்தம் கைகூடாதொழிதலின் இப்பிறப் பேன்பயனென்றும், முடிந்த புருஷார்த்தமான அவ் வனுபவஞான மில்லாப் பிறப்பு, பிறந்துவைத்தும் பிறவிப்பயனை இழந்ததாகின்றமையின் அறவே கடையினுங் கடையா மென்பார் ஒப்பிடவாயேனென்றுங் கூறினார். ஒப்பிடல்—உவமித்தல். யானென்னும் அகந்தைவடிவான மனம் அழியப்பெற்றாலன்றி அவ் வனுபவ ஞானம் ஒருவற் குண்டாகாமையின், சினமடங்கக் கற்றாலுஞ்

சித்தியெலாம் பெற்ருலும், மனமடங்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே எனத் தாயுமானவர் கூறியது இப் பொருளே கொண்டதாம். ஒப்பிடவாயேன் என்பதற்கு மேற் கூறியபடி யன்றி, என்னை—என்னுள்ளத்தை—உன்னருட்பதத் தில் ஒப்புவிக்கப்பெற்றிலேன் : என்றது, ஆன்மசமர்ப்பண ரூப மான சரணுகதி செய்திலேன் ; அந்தத் தன்னிழப்பா லுண்டா கின்ற நிரந்தரத்தியானத்தால் நினையாமறவா நினைப்பாக என் னுள்ளத்தா லுன்னை இயல்பாக நினைக்கப்பெற்றிலேன் என்றுமாம். உள்ளத்தை ஆண்டா னருட்பதத்தில் அவ்வா ருெப் புவித்தலால், இதயத்தில் எப்பொழுதும் இறைவனைத் தன் மயமாகக் காண்டலோடன்றி, வியாவகாரிக ஸகலாவஸ்தை யான புறத்தோற்றத்திலும்—இது பரதிருஷ்டி பற்றியே—திரிபுடித் தோற்றத்தி லொன்ருன காண்பானுகப் பரிச்சின் னப்பட்ட அந்த நானென்னுந்தான் உள்ளிட்டு ஸர்வமும் ஆன்மசொரூபமான அருணுசலசிவ சொரூபமாகவே காண்ட லான துப்பறிவுண்டா மாதலின், அதற்குபாயமாக அன்புரு வான நின்பால் என்னை யோப்பிடவாயே னென்ருர். ஒப்பிடல்—ஒப்புவித்தல்; வாய்தல்—வாய்த்தல்.

உன்னிடத்தி லொப்புவித்த வுள்ளத்தா லெப்பொழுதும்
உன்னைக்கண் டெல்லாமு முன்னுருவாய்—அன்னியமி
லன்புசெயு மன்றே னருணச லாவெல்கும்
இன்புருவா முன்னிலார்ந் தே.

—அருணுசல பஞ்சரத்நம்

யானென்ற ஜீவபோதச்சேட்டை யாகிய கர்த்தத்துவபுத்தியற எல்லா விதத்தாலும் உடையவனுக்குத் தன்னை யொப்புக் கொடுத்துக் காற்றிற் சருகுபோலத் திருவருள்வழித் திரிதலே ஜீவனெருவன் சாதிக்கத் தக்க சிறந்த சாதனையாக அதனு லறியக்கடவதாம். அந்தத் தொடருக்கு, இனி அவ்வாறன்றி, ஒப்பிட ஆயேன் எனப்பிரித்து, என்னுள்ளத்தே துப்பறிவற்ற

அக்குறையை நின்னருளாலே தூர்த்து நிரப்பி என் னத்யாத்ம வாழ்க்கையைச் சமன்செய்ய, திறம்பட்ட வுபாய மெதுவும் தீவிரமாகவெண்ணி மேற்கொள்ளேன் எனலுமாம். ஒப்பிடல்— பள்ளத்தைத் தூர்த்து நிரப்பித் தரையைச் சமன்செய்தல்; ஆய்தல்—செய்யக்கடவதான கருமத்தை எண்ணித் துணிந்து காலந்தாழ்க்கா தியற்றல்.

47. தூய்மன மொழியர் தோயுமுன் மெய்யகந்
தோயவே யருளென் னருணாசலா.

பொ - ரை: என் ஆண்டவனான அருணாசலா! மனம் பரிசுத்தமாகி யொழிந்த பக்குவிகளே கலக்கும் உன் சொரூபத்தை யானுங் கலக்கும்படி எனக்கருள்செய்.

வி - ரை: மனம் தூய்தா யொழிதலாவது அதுதான் சுத்த சத்துவமாய் ஏனை யிராசததாமத குணங்கள் அழியப்பெறுதல். மனத்துக்கு உருவநாசமென் றுரைக்கப்படுவதுமது. படிகம் போல நிர்மலமாகத் தெளிந்து சொரூபஞானுபவங் கூட்டுவ தான சுத்தசத்துவமே தன் சுபாவமாகக் கொண்ட மனத்தில் அதற்குத் தடையான ஆவரணவிக்ஷேபங்களை விளைக்கும் ஏனை யிரண்டு குணங்களும் அவாந்தரமாக இடையில் வந்து கலந் தனவேயாதலால், திருவருளைமுன்னிட்டுச் செய்யும் முயற்சியால் அவை அறவே மாறுவனவாம். மனோநாச வடிவான அத்தகைய சுத்தசத்துவத்தா லன்றி எவருமே சொரூபத்தைத் தோய முடியாமையின் தூய்மனம் ஒழியர் தோயு முன்மெய் என்றும், நான் முன்னமே அவ்வாறு பக்குவப்படாதே னாயினும் உன் னருள்வல்லபத்தாற் பக்குவமாக்கி [நோக்கியே கருதி மெய் தாக்கியே பக்குவ மாக்கி நீ யாண்டருள் - 63], யானுன்னைத் தோயுமாறு செய்துகொள் என்பார் அகந் தோயவே யருள் என்றுங் கூறினார். ஒழியரே என்ற தேற்றேகாரமும் அகமும் (யானும்) என்ற இழிவுசிறப்பும்மையும் விகாரத்தாற் றொக்கன.

இனி, மனமொழியர் எனவே கொண்டு மனமொழிகளை உடலுக்கும் உபலக்ஷணமாக்கித் தூய்மனமொழியர் என்பதற்குத் திரிகரணசுத்தர் என்றுரைப்பினும் பொருந்தும். தைலதாரை போன்ற தியானத்தாற் சித்தந் தெளிந்த சீரியோர்க்கு அன்னோர்சாதனை சம்பூர்ந்தப்பட்ட மட்டில் மனமொழித்தூய்மை போல உடற்றூய்மை அத்துணைச் சிறந்த ஆவசியகமாக வெளிப் படையிற் கூறி விதிக்கவேண்டுவதொன் றன்மையின் அதனை அவற்றோடு அவ்வா றொருங்கெடுத்துக் கூறுதொழிந்தார்.

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகட லோதநீ ராடிலென்
எங்கு மீச னெனாதவர்க் கில்லையே.

—அப்பர் தேவாரம்

மற்று, அவர்களுடையும் உன்சொரூபம் என்னிதயத்திற் பற்ற எனக்கருள்செய் என்றுமாம். அகம்—இதயம்.

48. தெய்வமென் றுன்னைச் சாரவே யென்னைச்
சேர வொழித்தா யருணாசலா.

பொ - ரை: நான் உன்னைக் காவற்கடவுளாகக் கருதிச் சரணாகதியடைதலும், அவ்வாறடைந்த என்னைத் தானே (என் கருத்துக்கு நேர்மாறாக) ஒருங்கோழித்தாய்.

வி - ரை: சேர வொழித்தாய் என்பது கொண்டு தெய்வ மென்பதற்குக் காவற்கடவு ளென்று கூறப்பட்டது. சார்தல்- இடைவிடா தனினைத்தல், மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந் தார் (குறள்) என்புழிப்போல. சேர வொழித்தல் - மொட்டை யடித்தல் (85), மயக்கத்தால் உடலையே நானென்னுந் தனித் தன்மை வடிவான அகந்தையறிவை அதன் சகல களாபங்களோ டும் அறவேகெடுத்தல்—என்வாயில் மண்ணினையட்டி யென்பிழைப்

பொழிந்தது எனப் பின்னர்க் கூறுவதுமது. அருணாசலமென அகமே நினைப்பவர் அகத்தை வேரறுக்கும் அருணாசலன் சுபாவம் பரோக்ஷமாக முன்பேயறிந்துவைத்தது இப்பொழுது தம் அபரோக்ஷானுபவத்தாலும் ஊர்ஜிதமா யுண்மையாயிற்றென்று இப்பாட்டாற் பகவான் பின்னும் விசதமாக்கினர். அருணாசலனைத் துவிதபாவத்தா லுபாசிப்போரும் அவனருளாலே தம்மகந்தை யழிதல்வாயிலாக முடிவில் அத்துவிதஞானானுபவம் அடையப்பெறுவ ரென்பது கருத்து.

ஓதரிய துவிதமே யத்துவித ஞானத்தை
யுண்டுபணு ஞான மாகும்.

—தாயுமானவர்

49. தேடா துற்றநற் றிருவரு ணிதியகத்
தியக்கந் தீர்த்தரு ளருணாசலா.

பொ - ரை: தேடாமலே எனக்கு வலிதிற் கிடைத்த நல்ல திருவருட்செல்வமே! என் மனமயக்கமாகிய வறுமைத்தனத்தை மாற்றியருள்.

வி - ரை: அருணாசலனருட்குப் பாத்திரமாகத் தாஞ் செய்யவேண்டிய சாதனத்தவ மனைத்தும் ஜன்மாந்தரங்களில் ஏற்கெனவே செய்து முடித்துவைத்த ஆசிரியர்பகவான் இப்பிறப்பில் அதற்காகத் தாமொன்றும் புதிதாகச் செய்தறியாமையால் தேடாதுற்ற திருவருள் [நிர்ஹேதுககிருபை யென்று ஆன்றோர் நிகழ்த்துவதும் இவ் வுண்மைபற்றியே யாம்] என்றும், பிறவித்துன்பத்துக் கேதுவான மனமயக்கத்தை மாற்றும் மருந்தாதலால் நற் றிருவருள் என்றும், அருணாசலனருள்போலச் சிறப்பதொரு செல்வம் அடியார்க்கு வேறொன் றின்மையின் திருவருள் நிதி யென்றுங் கூறினர். நிதிபதியென்னமல் அருணாசலனை நிதியென்றே கூறியது, நிதியாக உருவகிக்கப்பட்ட அத்திருவருள்தான் அவன் சொரூபமேயாதலன்றி

அவனுக் கயலானதோர் ருடைமை (பிறிதின் கிழமைப் பொருள்) அன்மையால் என்க. திருவருளை நிதி என்றதற் கேற்ப அதனு லகற்றப்படுகின்ற அகத்தியக்கத்தை வறுமை என்னுமையால் இஃ தேகதேசவுருவகம். **நுண்ணுணர் வின்மை வறுமை, யஃதுடைமை பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்**—நாலடி யார். அருணசலன் சொரூபமான சுத்தசைதன்யமே வியாவ காரிகமான துவிதபக்ஷத்தில் அருளெனப்படுவ தாகலான், அடிய ரகத்தியக்கத்தை அதுவே அகற்றவல்லதாத லறிக. **கீழ்மே லெங்கும்** என்னும் 18-ஆம் பாட்டு இதனேடொப்பு நோக்கத்தக்கது.

50. தைரிய மோடுமுன் மெய்யக நாடயான்
றட்டழிந் தேனரு ளருணசலா.

பொ - ரை: புருஷப் பிரயத்தனங் கொண்டு நின் னுண்மையான சொரூபத்தை என்னகத்தே ஆராய்ந்தறியத் தலைப்பட்டு, (அம்முயற்சி அவலமாக வொழிய) என் னறி வாற்றல் கெட்டு நான் அலமந்தழிந்தேன். (என் னுணவப் பிழையைப் பொறுத்து, நின்சொரூபங் காண) எனக்கருள் செய்வாய்.

வி - ரை: தைரியமென்றது ஜீவபோதமுனைப்பை. அது தனக்கயலான பிறவிஷயங்களைச் சுட்டியறியப் பயன்படுவதல் லது, தன்னகத்தே தானடங்கித் தனக்கு மூலமான வுண்மை யைத் தன்மயமாகக் காணச் சற்றும் பயன்படுவதன்றும். ஆணவமுனைப் படங்கி, அருள்வலியை முன்னிட்டுக்கொண்டே ஆண்டவன் பதத்தை அறிந்தடையவேண்டுமென ஆன்றோரும் வற்புறுத்தலறிக. கடலகத்துப்பட்ட மரக்கலமொன்று கரை சேரமாட்டாமற் கலங்கிக் கடும்புயற்காற்றாற் றட்டழிந்தாற் போல, பிறவியான பாசபந்தத்தி லகப்பட்ட நானும் முத்திப் பதமான வுன்மெய்யை அறிந்தடையமாட்டாமல், தாரிமாறாக

மோதியலைக்கின்ற அநாதிகால வாசனையாற் றாக்குண்டு நெஞ்சுடைந்துபோனே னென்ற கருத்தைத் தட்டழிந்தேன் என்ற இலேசானே பெறவைத்தார் ஆசிரியர். இனி, நின் னருளுக்கங் கொண்டு ஆன்மசொரூபமான நின்மெய்யை என்னகத்து நாட, (அம்மாண்பாலே) அம்மெய்யை மறைத்துநின்ற 'நா'னென்னும் அகங்காரமதியான ஜீவத்வம் நிலைகெட்டழிந்து நின் சிவசொரூபமடைந்தேன்; (நான் அவ்வா றடைந்தது) நின்னருள் வல்லபமாம் எனினுமமையும். இப்பொருளில் யான்-நானென்னு மகந்தைமதி, ஜீவபோதம். தட்டழிதல் - அத்துவிதவுண்மையான அதிஷ்டான சிவசொரூபம் ஆன்மசொரூபமாக அகத்திற் பளிச்சிட அதனை மறைத்துநின்ற கற்பிதமான அவ்வாரோபம் அழிந்தொழிதல்.

51. தொட்டருட் கைமெய் கட்டிடா யெனிலியா
னட்டமா வேனரு ளருணாசலா.

பொ - ரை: நின் னருட்கரத்தாற் றொட்டு, (நான் யானென்னுஞ் சீவபோதமுனைப்புப் போன்றக்கெட்டு நின் னத்துவிதசொரூபத்தோ டோன்ற) என் சொரூபத்தை நீ இறுகக் கட்டிவிடாதொழியின்—இதுவதுவாக இரண்டறக் கலவாவிடின்—யான் பிறவிப்பயன் இழந்தொழிவேன். அவ்வா றொழியா தருள்செய்.

வி - ரை: தொட்டருட்கை என்றதனாற் பரிசதீக்ஷை கூறினார்போலும். மாறுகொண்ட வாசனுபலத்தால் வலியற்றொழிந்த ஜீவர் தம் முயற்சிகொண்டே சிவசொரூபஞ்சேரத் திடம்பெற நிட்டைசாதித்துநிற்றல் அறவே யியல்வதன் றாகலின் ஆண்டவனான அருணாசலனே அவ்வாறு தம்மைச் செய்வித்துக்கொள்ளவேண்டு மென்பார் மெய்கட்டிடாயெனில் என்றார். இரண்டறச் செறிதலின் திண்மையைக் காட்டிநின்றது, கட்டிடல் என்னுஞ் சொல். அக்கட்டுக்கு ளகப்படுவதன் ஆவசிய

கத்தையும் அருமையையுங் குறித்துத் தாயுமானவரும் பேரார் வத்தோடு, "இகபரத்தும் விட்டுப் பிரியாத மேலான வத்து விதக் கட்டுக்கு ளாவதென்றோ காண்" என்றார். நின்னருட் கரத்தால், என்மெய்யைத் தீண்டித் திளைப்பத் தழுவிக்கொள்ளா விடின் என இப்பாட்டின் முற்பகுதிக்கு அகப்பொருள் கண்டு கொள்க. மெய்கட்டிடல் - ஆலிங்கனஞ் செய்தல்; இஃது இடக்கரடக்கல். யுவதி யொருத்தி, உருவுந்திருவும் குலமுங் குணமும் முதலியபலவும் முற்றுமொத்த கணவனொருவனைக் காதற்கடிமணம் பூண்டு கலந்து களித்தலே—ஜீவனொருவன் சிவசொரூபஞ் சேர்ந்து சிவானந்தந் திளைத்தலே—அன்னோரடைதற்குரிய பிறவிப்பயன் என்பதாம். "பிறந்தும் பிறவாதாரில்" (பிறந்துவைத்தும், அறிஞருட் பிறவிப்பயன் பெறுதொழிந்தாரிலர்) என்பவாகலின், தாம் அவ்வாறுகாதபடி அருள் என்றார். யானட்டமாவேன், என ஈண்டுக் கூறினாற்போலவே, துப்பறி வில்லா விப்பிறப் பென்பயன் (46-ஆம் பாட்டு) என இந் நூலின் முன்னுங் கூறினார்.

52. தோடமி னீயகத் தோடொன் றி யென்றுஞ்சந்
தோடமொன் றிடவரு ளருணசலா.

பொ - ரை: குற்றமற்ற நீ என்னோ டிரண்டறக் கலந்து, எனக்கிதுகாறும் நின்பிரிவா லுண்டான துன்ப நீங்கி, இனி நின் கலவிப்பேரின்பம் யானேன்று மனுபவிக்க எனக்கருள்செய்.

வி - ரை: அருணசலனைத் தோடமில் நீ என்றது, மூல தோஷமான நானென்னு மகந்தை யின்மையின் அதன் விளைவான மற்றெந்தக் குற்றமும் அறவேயின்றி அவன்றன் அந்தமில்லதோர் குணக்கடலாதலாலென்க. அவ்வாறழைத்தலாலே, பகவான் தமது தோஷத்தைப் பரிகரிக்க அருணசலனைக் குறிப்பாக வேண்டினாராயிற்று. தோடம் - ஜாதியொருமை. ஒன்றுதல் - இரண்டறல், பேதமறல். பிரிவு - விபக்தி, வியோ

கம். அறியாமையினின்று முளைத்த அகந்தை மனக்கற்பனை மாத்திரமாதலால், ஆண்டானருள்விளைவான அறிவுத்திட்பத்தால் அக்கற்பனை யழியவே, உண்மையில் ஒருகாற்கலந்தது மற்றெக்காலுங் கலந்ததேயாக இன்பமும் மாறாது என்றுமிருத்தலின் அகத்தோ டொன்றி யென்றுஞ் சந்தோட மொன்றிட வருள் என்றார். **ஒருக்காலே கலந்தவருக் கெக்காலுந்தானுலவாத பேரின்ப முலவாநிற்கும்**—தாயுமானவர். நீ என்னுள்ளத்தோடு பொருந்தி ஆங்கென்றும் இன்பமுண்டாகவருள் என்றுமாம். நீ ஒன்றியருள், ஒன்றிடவருள் எனத் தனித்தனியே கூட்டுக.

53. நகைக்கிட மிலைநின் னாடிய வெனையரு
ணகையிட்டுப் பார்நீ யருணாசலா.

பொ-ரை: எளிமையால் நெஞ்சணைந்து நின்னைத் தஞ்சமாக வடைந்த வென்னை எள்ளி நகையாடற்கு இது சமயமன்று. என்னைத் திருவருட் புன்னகை புரிந்து நீ நோக்காய்.

வி-ரை: **என்னை நீ யிகழ வேண்டாம்**—அப்பர்தேவாரம். இதனோடு, "மூக்கிலன் முன்காட்டு முகுரமாகா தெனைத் தூக்கி யணைந்தருள்" எனப் பின்னர் வருவதனை ஒருவாறொப்பு நோக்குக. நகைக்கிடமிலை என்பதற்கு (நான் அணிகலனொன்றும் அணியப்பெறாமையின், என்னை அழகிலியென்று) நகையாடற்கிது சமயமன்று எனவும், அருள்நகையிட்டுப் பார் என்பதற்கு நின்னருளாபரணத்தை எனக்கணிவித்துப் பின்னென்னை நோக்காய் எனவும் தொனிப்பொருள். அருள்நகையிட்டுப் பார் என்றதனால் அன்பு வைக்கப்பெற்றாரிடத்திற் குற்றங்குறைகளிருப்பினும் அவை தோன்றாமற் குணநலங்களே தோன்றுமென்பதாம். தைனியதசையிற் பிறரைக் கண்ட பெரியோர் ஆங்கே அவரைத் தலையளிசெய்து தாங்குதலன்றி அந்நிலையில்

அவரை எள்ளி நகையாடார் என்பதும், இறைவனருளா லெய் தும் இதயவிகாசத்தா லுண்டான அகத்தழகே யழகன்றி அறி ஞர்க்கு வெறும் புறப்பொலிவான முகத்தழகே யழகன்று என் பதும் கருத்து.

குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு.

—நாலடியார்

54. நாணிலே நாடிட நாணு யொன்றிநீ
தாணுவா நின்றனை யருணைசலா.

பொ - ரை: நின்னோடு சேர (மிகத் தீவிரமாக நினைந்து என் நாணத்தையுந் துறந்து பெண்பாலொருத்தி இப்பொழுது) நானாகவே வந்து உன்னை நாடவும், முன்பு தானாகவே என்னை வலியவந் தாட்கொண்ட புருஷோத்தம னான நீ சற்றும் நாணிலாயாகித் தூண்போ லசைவற்று நின்றாய். (இதுதானோ நின் னருளுக்கும் பௌருஷத்துக் கும் அழகுடைமை?)

வி - ரை: நகவளைவுக் குட்பட்டவற்றை அகப்பொருள் விளக்கத்துக்குமட்டிற் கொள்க. ஒன்றவென்பது ஒன்றியெனச் செயவெனெச்சம் செய்தெனெச்சமாகத் திரிந்துநின்றது. ஒன் றல் - சேர்தல், கலத்தல். இனி அவ்வாறன்றி, நானுயொன்றி நீ தாணுவா நின்றனை என உள்ளவாறே கொண்டு, (என்னின் வேறு காமல்) என் ஆன்ம சொரூபமாகவே பொருந்தி நீ தாணுவா நின்றனை எனலுமாம். எனவே, நானுய்நாடிட, நானுயொன்றி என இரண்டிடத்தும் சென்றியைதலால் நானுய் என்பது இடை நிலை விளக்காம். நானுய் நாடிட . . நீ தாணுவா நின்றனை என்றத

ஞற் சீவன் சலனும் சிவன் அசலனுமான வுண்மை தேறப்படும். அருணாசலன், ஆன்மவிசாரமுடிவில் அதன்பயனாக அவ் வான்ம சொரூபத்தோ டத்துவிதமான சாந்தசிவமாகத் தன்னுண்மை யான அசலசுபாவம் புலப்பட அமைந்தொளிர்வன் என்று கருத்து. அவ்வா றொளிர்தலே, அருணாசலன் தன்னடியார்க்கு முடிவாகச் செய்யும் உண்மையான அருள் என்றறிக. மானங் கோண் டுறுபவர் மானத்தை யழித்தபி மானமில் லாதொளி ரருண சலா என் றாசிரியர்பகவான் இந்நூலிலேயே பின்னக் கூறுவதும் இதனாலென்று தேறப்படும். அருணாசலன் நாணிலனாக நிற்கை, கேவலாத்துவித பூமாவான தன் னியல்பால், யானென்னும் அகந்தைமதியும் அதன்விளைவான பேதபாவமும் நாணத்துக்குக் காரணமாகத் தன்பா லறவே யின்றித் தானாகத் தழைத் தலாமென்க. நாடுதல் - ஆராய்தல், விசாரித்தல். தாணு - ஈண் டுப் பரவெளிவடிவான முழுமுதற் செம்பொருள், பிரஜ்ஞான கனமான பரப்பிரம்மம்.

> நானான தன்மையென்றும் நாடாம லுடைவின்ப
> வானாகி நின்றனை நீ வாழி பராபரமே.
>
> —தாயுமானவர்

55. நின்னெரி யெரித்தெனை நீறாக் கிடுமுன்
 னின்னருண் மழைபொழி யருணாசலா.

பொ - ரை: என்னை நின் சொரூப ஞானாக்கினியா லெரித்துத் தன்மயமாக நீறாக்குவதன் முன்பே, (என் னிதயங் குளிர்ந்து நான் அதைத் தாங்க வல்லேனாக) நின் னருள்மழை என்பாற் பெய்தருள்.

வி-ரை: நீறு—திருநீறு, விபூதி—என்று சொரூபத்துக்கே பெயர். எனவே, நின்னெரி யென்பதனை இராகுவின் தலை போலக் கொள்க. இறைவ னருளால் ஏற்கெனவே இதயங் குளிர்ந்திருந்தாலல்லது—சித்தம் போதியவளவில் ஏற்கெனவே

பக்குவப்பட்டிருந்தாலல்லது—சொரூப ஞானக்கினிச் சுவாலை சுலபமாகத் தாங்கவொண்ணுதாக, அதிதீக்ஷ்ணமாக வுயிரைச் சுட்டெரித்துவிடும் என்பதுகொண்டு இவ்வாறு வேண்டினர். விரகதாபாக்னி என்னை எரித்துச் சாம்பலாக்குவதன்முன் (என்னுயிர் தழைப்ப) நின் னருள்மழை என்பாற் பெய்தருள் என அகப்பொருட் குறிப்புக் காண்க.

56. நீநா னறப்புலி நிதங்களி மயமா
நின்றிடு நிலையரு ளருணசலா.

பொ - ரை: 'நீ நான் (என்னும் பேதபுத்தி என்னிதயத்தினின்று) கேட்டொழிய என்னை யிறுகத் தழுவி, அதனுல், என்றும் நான் பேரின்பவடிவாக நிற்கும் நிலையை நீ எனக் கருள்செய்.

வி - ரை:

நீவே றெனுதிருக்க நான்வே றெனுதிருக்க
நேராக வாழ்வதற்கு னருள்கூர...

இருவினைமு மலமூமற விறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயு நானுமாய்
இறுகும்வகை பரமசுக மதனையரு ளிடைமருதில்
ஏக நாயகா லோக நாயகா விமையவர் பெருமாளே.

நீநா னறப்புலி என்ற அத்துவித பாவமும், களிமயமா நின்றிடு நிலையருள் என்ற முத்திப் பேரின்ப முயக்கப் பிரார்த்தனையும் மேற்கண்ட திருப்புகழ்ப் பகுதிகளால் முறையே வெளியிடப் படுவன காண்க.

இனி, நீ நானறப்புலி - (என்னகத்து நின்சொரூபானுபூதிக்குத் தடையாக வுள்ள) நானென்னும் அகந்தைமதி யழிய நீ என்னைத் தழுவி என்றுமாம். ஏகமேவாத்விதீயப் பிரஜ்ஞானப்

பிரம்மசொருபமான அருணாசல னருட்கலப்பா லன்றி விபக்தி வியோகங்களாற் றுன்பமே பயப்பதான பரிச்சின்ன மோக வகத்தையழிவும், அவ் வகத்தையழிவான பேதபுத்திநாசத்தா லன்றி நிரதிசயானந்த சொருபானுபவமும் கிடையாது என் பதாம். இந்நிலைக் குதாரணமாகக் கள்ளுண்ட வண்டைத் தாமெண்ணியதைக் களிமயமா நின்றிடு நிலை என்றதனுல் ஆசிரி யர் குறிப்பிட்டவாறும். களி - கள்வெறி, மதுபானமயக்கம்.

அதுவென்று லெதுவெனவொன் றடுக்குஞ் சங்கை
யாதலினு லதுவெனலு மறவே விட்டு
மதுவுண்ட வண்டெனவுஞ் சனக ஞதி
மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தார்.

—தாயுமானவர்

உன் மெய்ரசங்கொண் டுவகைவெறி கொளவருள்—என இந்நூலின் 23-ஆம் பாட்டிற் கூறியது ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. உண் மையில் அருணாசலனேடு ஒருநாளொருபொழுது கலந்தது எந் நாளுமெப்பொழுதும் கலந்ததேயாக, அவ்வின்பமும் மாறு மலுங் குறையாமலும் நித்தமும் நிரந்தரமாக நிகழ்ந்து கொண்டிருப்பதாகலின், நிதங் களிமயமா நின்றிடு நிலை என்ருர். தோடமி னியகத் தோடொன்றி யென்றுஞ்சந் தோடமொன் றிடவருள் (52-ஆம் பாட்டு)—என முன்புங் கூறப்பட்டது காண்க.

57. நுண்ணுரு வுனையான் விண்ணுரு நண்ணிட
வெண்ணலை யிறுமென் றருணசலா.

பொ - ரை: நுண்ணுருவான விண்ணுருவுடைய வுன்னை என்னிதயத்தில் நான் சேர (என்பா லதற்குத் தடையாக வுள்ள) எண்ண வலைகள்—விக்ஷேப தரங்கங்கள் —உன்னருளால் என்றைக் கழிவனவாமோ?

வி - ரை: நுண்ணுருவான விண்ணுரு என்றியைக்க. நுண் ணுரு வுனை என்றதனுற் பருவுருவான பௌதிகமா முடற்பற்

றுடைய நான் எனக் குறிப்பித்தவாறும். விண்ணூரு வென்றுலே யமைவதாயிருக்க நுண்ணூரு வென வேண்டாதுங் கூறிற்று, இங்குக் கூறிய விண் வெறும் பூதவிண்ணன்றி அவ்விண்ணுக்கும் விண்ணான மனவிண்ணுக்கும் விண்ணாய்த் தகராகாச மெனப் படும் இதயவிண் என்றறிவித்தற் கென்க. [தகராகாசம் - சிற்றம்பலம்; தகரம் - சிறுமை, நுண்மை.] விண்ணினு நுண்ணருள் வெளியே - அருணாசலபதிகம். நண்ணுதல் - களிமயமாக, நீநான் என்னு மிரண்டறக் கலத்தல். எண்ணலை-கடலி னலைபோலடுத்தடுத்து வாசனாவசத்தாற் கருத்தின்மே லெழு மெண்ணங்கள். அவைகளே ஜீவன் சிவத்தை யடையத் தடையாவன வென்றும், எனவே, வாசனாக்ஷய வாயிலாக அவைகள் அறவே யடங்கவேண்டுமென்றும் அருணாசலனுக்குத் தம்பா லருளுண்டாக இரங்கிப் பிரார்த்தித்தவாறும்.

58. நூலறி வறியாப் பேதைய னென்றன்
மாலறி வறுத்தரு ளருணாசலா.

பொ - ரை: கல்வியறிவற்ற மூடனான என்மயக்கவறிவைக் கெடுத்து நின்மெய்யுணர்வை என்னுள்ளத்து விளக்கியருள்.

வி - ரை: நூலறி வறியாப் பேதையன் என்றதனாலே, கல்வியறிவு — சாத்திரஞானம் — இன்றியமையாது, ஸாதகனொருவனுக்கு அவன் மெய்யுணர்வுக் கேதுவாக, விசேடமாக வேண்டப்படுவதொன்று என்று கூறினா ரன்றும். [அவ்வாறு வேண்டப்படுவது அருணாசல னருட்பிரசாதத்துக்காக அகங்குழைந்து அலந்துநிற்கும் ஆதரமான ஆசைப்பெருக்கம் ஒன்றேயாக வுணர்க.] என்னை? அகந்தையழிந்த அதன்மூலஸ்தானத்தில் அதிசூக்குமமாக அகமகமென்று தானாக விளங்கும் பரமார்த்தமான அருணாசலன் சொரூபம், அவனருளால் அவ்வகந்தை யழியுங்காறும் எவ்வளவு நுண்ணிதாகத் தெளிந்த

நூலுணர்வாலும் அபரோக்ஷமா யறியப்படாதாயினும் அதனாற் பரோக்ஷமாகவேனும் ஒருவா றறியப்படுதலின் அதுதானுமற்ற அதிமூடனென, அருணாசலனுக்குத் தம்பா லருள்பிறத்தற்காக மட்டுமே அவ்வா றெளிமைபடத் தம்மை யிழித்துக்கூறினா ராதலின் என்க. நூலறிவும் என இழிவுசிறப்பும்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது. எனவே, அருணாசலனருள் உண்மையில் நிர்ஹேதுகமாயினும் ஒருவாற்கு லதற்கேதுவாய்ப் பரம பாவனமான, ஈசுவரார்ப்பிதமான நிஷ்காம்ய பக்தியோடு கூடாதவழி ஒருவற் குண்டான கேவலம் நூலுணர்வாற் பாரமார்த்திகப்பான்மையில் அவற்குச் சற்றும் பயனின்று என்றுணர்க. காண்பான் காட்சி காணப்படுபொருள் என ஒன்றைவிட் டொன்று பிரியாமல் என்றும் முப்புரிகொண்டு பரிச்சின்னப்பட்ட ஞத்துவத்தோ டியல்வதான ஜீவபோதம் மனமயக் கற்பனை யாதலின் அதனை மாலறிவென்றும், ஸர்வானர்த்தங்களுக்கும் அதுவே காரண மாதலின் அதனை அறுத்தருளென் றுங் கூறினார். அகந்தையுணர்வு, சுட்டுணர்வு, மனவுணர்வு முதலிய பெயர்களாற் கூறப்படுவது ஜீவபோதமென்னும் அந்த மாலறிவேயாக வறிக. பல்வேறு வகைப்பட்ட கலைத்திறன்களும், உலகோராற் பிரமிக்கப்படும் தூரதேசகாலஞானவகைகளும் உண்மைநோக்கில் இதன்பாற்பட்டனவேயாம். மாலறிவறுத் தென்பது அதன் காரியத்தின்மேலும் வியாபித்துநின்றது. மாலறி வென்பதனை உம்மைத்தொகையாகக் கொண்டு, ஆவரணமும் அதன் விளைவான விக்ஷேபமுமெனப் பொருள் கூறினும் பொருந்தும். மால் - மயக்கம், மூடம்.

59. நெக்குநெக் குருகியான் புக்கிட வுனைப்புக
னக்கனு நின்றனை யருணாசலா.

பொ - ரை: உன்னருளுக்குக் குழைந்துகுழைந்து உடலுமுள்ளமும் அன்பா லுருகியுருகி நீயேபுகலாக நான்

உன்னைச் சரண்புகுதலும், நிருவாணியாக—சுத்த சிதம்பரனாக, பரவெளியோ டொன்றாக—நீதான் நிமிர்ந்துநின்றாய்! என்ன ஆச்சரியம்!

வி - ரை: நக்கனா நின்றனை - திகம்பரனாக, அகண்டான்ம சுத்தஜ்ஞான சொரூபனாக, அருவமாக அவிர்ந்துநின்றாய். "நாணிலை நாடிட நானுயொன்றிநீ, தானுவா நின்றனை" என்னும் 54-ஆம் பாட்டு இதனோ டியைத்து நோக்கற்பாலதாம். ஜடசம்பந்த முடைமையாற் சிதாபாசமான ஜீவபோதவகந்தை சுத்த சிற்பரமான சிவசொருபத்தில், ஜடத்தன்மையான அவ்வாபாசங்கெட அம்புவி லாலிபோல் அன்பாலே தன்மயமாகக் கரைந்தழிந்த அந்நிலையே, ஒருவன் இறைவனைத் தன்னிழப்பா லுள்ளபடியே சரண் புக்கவனாக அருளுக்குப் பாத்திரமாய் அருணாசலனாற் காட்சியளிக்கப் பெறுகின்றான்—பரமார்த்த சொரூபஞானம் அபரோக்ஷமாகப் பிரகாசிக்கப்பெறுகின்றான்—எனத் தாற்பரியங் காண்க.

உருவந்நா னுயி னுலகுபர மற்று
முருவந்தா னன்றே லுவற்றி—னுருவந்நைக்
கண்ணுறுதல் யாவனெவன் கண்ணலாற் காட்சியுண்டோ
கண்ணதுதா னந்தமிலாக் கண்

என்னும் உள்ளதுநாற்பதன் பொருள் இப்பாட்டில் ஒருவாறு உள்ளுர வமைந்துகிடக்கின்ற தென்னலாம்.

60\. நேசமி லெனக்குன் னாசையைக் காட்டிநீ
மோசஞ் செயாதரு ளருணாசலா.

பொ-ரை: இயல்பாக நின்பா லாசையற்ற வெனக்குப் பேரின்ப வடிவான நின் னாசையை முதலிற் காட்டி,

நின்னருளால் அவ்வாசையை என்பா லுண்டாக்கின நீயே (நின்னருளாமையாற் பின்னர் அதனை அவலமாக்கி இடையே) மோசஞ்செய்துவிடாமல் அதனை முற்றமுடியப் பூர்த்தி செய்வித்தருள்.

வி - ரை : தமக்கு அருணாசலன்பா லெவ்வளவோ மெய்யன் பிருப்பினும் அவ்வன்பிற் றமக்குள்ள ஆராமை மிகுதியால் ஏனைப்பெரியோ ரெல்லோரும் போலவே தாமும், *வியந்தாங் கலறித் தேடிற்றிலேன், சிவனெவ்விடத்தா னெவர்கண்டன ரென்றோடிற்றிலேன், கிடந்துள்ளுருகேன் என்றுங் கெண்ண மிடுவார் நேசமிலெனக் கென்றும், அருணாசலனோடு முடிந்த அத்துவிதக்கலப்பான நிரதிசயானந்தநிகழ்ச்சியேயன்றி அதற் குபாயமாக அவன்பா லடியார்க் குண்டாகு மன்பும், 'அவ னருளாலே யவன்றாள் வணங்கி' என்றபடி அருளால் அவனே யுண்டாக்கலான் உள்ளுசையைக் காட்டி என்றும், அவனருளால் அவ்வா றதிட்டவசமாகத் தமக்குண்டான அவ்வாசை முறைப் படி முதிர்ந்து பழுத்துப் பயன்படும் முன்பே இடைமுரிந்து இரண்டுங்கெட்டாகை முடிந்தொழிந்தால் என்செய்வது என் னும் ஐயுறவா லுண்டான அச்சத்தாலே,

துறக்கப் படாத வுடலைத் துறந்துவெந் தூதுவரோ
டிறப்ப னிறந்தா லிருவிசும் பேறுவ னேறிவந்து
பிறப்பன் பிறந்தாற் பிறையணி வார்சடைப்பிஞ்ஞகன் பேர்
மறப்பன் கொலோவென்றெ னுள்ளங் கிடந்து மறுகிடுமே

(அப்பர் தேவாரம்)

என்றுங் கெண்ணி மனமிக மயங்கி வருந்துவாராய், மோசஞ் செயாதென்றும், அவ்வாசையை யுண்டாக்கின அவனையன்றித்

* திருவாசகம், நீத்தல்விண்ணப்பம் – சடு

தமக்குப் பிறிதொரு தாரக மில்லையென்பார், அருளென்றுங் கூறினர். " தண்ணா ரளிசெறி கண்ணா டொருகிறி பண்ணாது " என நவமணிமாலையிலும், ஆசிரியர் இவ்வாறே அருணாசலனை நயந்து வேண்டல் காண்க.

மால்காட்டிச் சிந்தை மயங்காமல் நின்றுசுகக்
கால்காட்டி வாங்காதே சொன்னேன் பாராபரமே.

—தாயுமானவர்

வேண்டுமென்று மரம் வைத்தவனே, அது வறட்சியால் வாடி வருந்தாமலும் ஆடுமாடுமேய்ந் தழியாமலும் அவ்வப்பொழுதும் அன்பாகக் கண்ணோடித் தண்ணீர்வார்த்து முற்றமுடியப் பாது காத்து வளர்க்கவேண்டுமென்று பிரார்த்தித்தவாறும்.

61. நைந்தழி கனியா லனிலை பதத்தி
னுடியுட் கொள்நல மருணாசலா.

பொ - ரை: பதங்கெட்டழிந்த கனியை உண்டலாற் பயனில்லை. (எனவே, கனிபோல்வாளாய் நின்னைக் காதலித்த கன்னியான எனது) இன்பநலத்தையும் ஏற்ற பதமான இப்பொழுதே நாடி இனிது நுகர்ந்தருள்.

வி - ரை: இன்றேல், பதந்தெரிந் துண்ணப்படாத பழம் பயனின்றிப் பாழாதல்போல, உன்னாற் பருவம்பார்த் துட்கொள் ளப்படாத கட்டிளமையோடு கூடிய என்னெழினலம் தோன்றி யுந் தோன்றாதாகக் குமரிமூத்து நானும் பயனின்றிக் கெடுவே னென்று கருத்து. கற்றுத் துறைவல்ல நனிநாகரிகையான தலைவி தனக்கணிகலமான நாணத்தைச் சற்றும் நழுவவிடாமலே, தலைவன்பாற் றன் னுள்ளக்குறிப்பைத் தெள்ளிதாக வெளியிட்ட அகப்பொருட்சுவை மலிந்த இச்சிறுபாட்டு படிப்பார்க் கின்பம் பயப்பதாம். நைந்தழி கனியா லனிலை என்பது குமரிமூத்த

கன்னியாற் குணமிலை எனப் பொருள்பயந்து பிறிதுமொழித லணியாம். இடைக்குறையாகக் கனியாலென்பது கன்னியா லெனவும் தொனித்து நின்றது. உட்கொள்ளல் - நுகர்தல், அனுபவித்தல். நெஞ்சழிந்தொழியாத நன்னிலைக்கண்ணே தமது பக்திச்சுவையைப் பதந்தெரிந் துட்கொள்ள அருணாசல னருளை அகங்குழைந்து ஆசிரியர் வேண்டினார்.

62. நொந்திடா துன்றனைத் தந்தெனைக் கொண்டிலை
யந்தக னீயெனக் கருணாசலா.

பொ - ரை: நான் வருந்தாமலே, உன்னை எனக் களித்து அதற்கீடாக என்னைக் கொண்டாயன்றே? ஆத லால் எனக்கு நீ யமனாய்.

வி - ரை: கொண்டிலை என்னு மெதிர்மறை அதனீற்றில் விகாரத்தாற் புணர்ந்துகெட்ட வினாவேகாரங் குறித்த மற்றொ ரெதிர்மறையோடு சேர்ந்து, கொண்டாய் என உடன்பாட்டுப் பொருள் பயந்துநின்றது. கொள்ளுதல் - கொல்லுதல் (உயி ரைக்கொள்ளுதல் என்றவாறு), "கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்மு னுள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே" என்புழிப்போல. உயிர்க்கொலி யருணமா கிரியே எனப் பதிகத்திலுங் கூறுவர். நோவாமலே கொன்றாய் எனச் சமற் காரந் தொனிப்பது காண்க. நொந்திடாது கொண்டிலை எனக் கூட்டுக. அந்தகன் - அந்தத்தையுண்டாக்குவோ னென யமனுக் கொருபெயர். அந்தம் - முடிவு. தன்னிழப்பாலன்றிச் சீவன் சிவசொரூபமடைய முடியாதென்பதாம். தானல்லாத தொன் றைத் தானாக மயங்கும் மயக்கமே ஒருவனைப் பிறவித்துன்பத் துக் குள்ளாக்கலின், தன்னிழப்பென்னும் அவ் வகந்தையழிவே அப் பிறவித்துன்பநீக்கமான நிரதிசயானந்தசொரூப ஆன்ம லாபமாக அறியத்தக்கதாம்.

இனி, நொந்திடாது தந்து என்றுள்ளவாறே கொண்டு, யான் பிறவித்துன்பமான மனக்கவலையான் மாழ்காமலும், உன்னை யடையும்பொருட்டாகக் கடுந்தவஞ் செய்து நான் கஷ்டப்படாமலும், அருள்நிறைவான பேரின்பவமுதக்கடலாம் உன் அகண்டான்ம சொரூபத்தை எளிதில் எனக்குரித்தாக வளித்து அதற்கீடாக, இகபர மிரண்டுங் கெட்ட வென்னை—மருட்காரிய வகந்தைவடிவாய்த் துன்பத்துக் கேதுவான என் பரிச்சின்ன ஜீவபாவத்தை—பரிவர்த்தனை செய்துகொண்டா யாதலின் எனது நோக்கத்தில் நீயொரு குருடனுவாய் என்றும் மற்றொரு பொருள் காண்க. அந்தகன் - குருடன், என்றது அறிவிலாப் பேதை என்றபடி. என்னை? "பேதைமை யென்ப தொான் றியாதெனி னேதங்கொண் டூதியம் போக விடல்" (குறள்) என்பவாகலின்.

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா யார்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்

எனத் திருவாசகமுடையாரும் சிவபெருமானை அதுபற்றி அவ்வாறே கூறினர். இவ்வாறு கூறுதல் வினோதப் பொருட் டாம்.

63. நோக்கியே கருதிமெய் தாக்கியே பக்குவ
மாக்கிநீ யாண்டரு ளருணசலா.

பொ - ரை: (சத்திநிபாத முண்டாக, நின்னருளா லென்னைக் குறிக்கொண்டு) நோக்கியும் கருதியும் மெய்தாக்கியும் இவ்வாறாகப் பக்குவப்படுத்தி, (நின்றிருவடிக்காளாக) என்னை நீ இனிதி னுண்டருள்.

வி - ரை : ஏகாரத்தைக் கருதியென்பதனோடுங் கூட்டுக. நோக்கியும் கருதியும் தாக்கியும் என ஏகாரம் எண்ணும்மைப் பொருட்டாம். நோக்கல் - அருட்கண்ணாற் காண்டல். கருதல் - அருட்கருத்தா லெண்ணல். மெய்தாக்கல் - அருள்வடிவாற் றாக்கல் (அருட்கரத்தாற் சீடனது சென்னியைத் தடவல்). [அருள் வடிவு - இறைவன் அடியார்க் கருளத் திருவருளாற் கொண்ட குருவடிவம்.] பிரசித்தமான மூவித தீக்ஷைகளும் இவற்றால் ஒருங்கு கூறப்பட்டனவாம். அவையாவன : சக்ஷு தீக்ஷை, பாவதீக்ஷை, ஹஸ்ததீக்ஷை (ஹஸ்த மஸ்தக சையோகம்). மீனும் ஆமையும் பறவையும், தமது முட்டைகளை முறையே காண்டலும் கருதலும் தடவலும் அவற்றுக்கு முறையே உதாரணங்களாம். "ஆமைமீன் பறவை போலத் தன்னகங் கருதி நோக்கித் தடவி" எனக் கைவல்யத்தில் வருதல் காண்க. நான், அவற்றுள் யாதானுமொரு தீக்ஷையான்மட்டுமே உன்னோடணையத் தகுதிபெற வொண்ணாத அதிமந்ததரமான பக்குவத்தேனாதலால் அத்தகைய தீக்ஷை மூன்றாலுமே என்னைப் பக்குவப் படுத்தி யாகவேண்டு மென்பார், நோக்கியே கருதி மெய் தாக்கியே பக்குவமாக்கி என்றார். குருபரனது கண்ணுங்கருத்தும் கரசரணாதியவயவங்கள் யாவுமே சுத்தசைதன்ய மாத்திரமான அருள்மயமென் றறிக. "உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக் கமிழ்தி னியன்றன தோள்" என்ற நாயனார்வாக்கின் அத்யாத்மப்பொருள் இதுதான் போலும். ஆண்டருளல் - யானென்னும் தனித்தன்மையான கிருத்திரிமாகம்பாவம் அறவேயழிய, அதனை, இயல்பாயும் என்றுமுள்ள வியற்கையாயும் ஆன்மவடிவாக இருந்தொளிர்கின்ற சுத்த சைதன்யமான சிவசொருபத்தில்—[அந்தச் சிவசொருபமே துவித பாஷையில் மரியாதைபற்றித் திருவடியென்று மரபாகக் கூறப்படுவதாகவுணர்க]—தன்மயமாக ஐக்கியப்படுத்திக் கொள்ளல்.

64. பற்றிமால் விடந்தலை யுற்றிறு முனமருள்
பற்றிட வருள்புரி யருணசலா.

பொ - ரை: மாயா(சர்ப்ப)விஷந் தீண்டித் தலைக்கேறிச் சாவதன்முன் யான் உன் னருளமுதுண்டு வாழ எனக்கருள்செய்.

வி - ரை: மால்விட மென்றும் இறுமுன மென்றும் கூறியதற்கேற்ப, அருள் பற்றிட என்பதற்கு அருளமுத முண்டு வாழ என்றுரைக்கப்பட்டது. அருள் பற்றலாவது இறுதிக்காலத்தில் அருணசலனைப் பிரமாதத்தா லயர்த்தொழியாமல் ஆன்ம சொரூபமாகவுள்ளத்துணர்வா லுறுதியாகப் பற்றிக்கொண்டே உயிர் உடலினின் றொழிவதாக, அதன்முன்பே திடஞானமான சகஜ நிஷ்டானுபூதி சார்தல். மால்விடம் என்றவர் அதற்கேற்ப அருளமுதம் என்னுமையால் ஏகதேசவுருவகம். விஷந் தலைக்கேறிப் பிரஜ்ஞை தப்பிச் சாம்பொழுது யாருஞ் செய்யக்கூடியதொன் றின்மையின், வெள்ளம் வருவதற்குமுன் அறிவுடையோர் அணைகோலி வைத்துக்கொள்ளவேண்டுதல்போல, கருவிகரணங்கள் வசங்கெட் டழிவதன்முன்—அவை சிறிதேனும் அறிவாற்றல் பெற்றிருக்கும்பொழுதே—அருணசலனைத் தாரகமாகப்பற்றி உய்யவேண்டும் என்பது கருத்து.

65. பார்த்தருண் மாலறப் பார்த்திலை யெனிலருள்
பாருனக் கார்சொல்வ ரருணசலா.

பொ - ரை: என் மனமயக்க வடிவான மாயைகெட என்னைக் கடைக்கணித்தருள். அவ்வாறு நீயே அருளாலென்னைக் கடைக்கணியாவிடில், இவ்வுலகில் (என் பொருட்டுப் பரிந்து) உனக்கெடுத்துக்கூறுவார் யாவருளர்?

வி - ரை: அவிச்சை, மயக்கம், மாயை, மால் என்றற் போல்வன பரியாயங்கள். சுத்தஜ்ஞான சூரியனான அருணசலனருட்பார்வையின்முன் மாயாந்தகாரம்—அவிச்சையிருள்—அறவே யழிதலாலே பார்த்தருள் மாலற என்றும், மற்றெல்லா

ரினும் முற்படத் தன்னியல்பாகத் தன்குழந்தைக் குதவுந் தாய்க்கு, அவள் அங்ஙனஞ் செய்யத் தவறியக்கால் அதனை யெடுத்துக்கூறுவோரே (தாம் அவ்வாறு கூறல் மிகையெனக் கருதலால்) உலகில் மிக்கரியராகவும், பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்பரிந்து உயிர்களுக் கருளும் உண்மைத்தாயான நீ எனக் கருளாதொழியின் உன்பால் என்பொருட்டுப் பரிந்து வேண்டுவோர் அரியரினும் அரியராய், உலகில் அறவே யிலரென்பார், பார்த்திலை யெனினருள் பாரெனக் கார்சொல்வர் என்றுங் கூறினர். அருள் - அருளால். பார் - பாரில். அருணசலன் தன்னியல்பாகவே தமக் கருட்கண்ணேக்கம் பாவிப்பான் என்று பகவானுக்குள்ள நம்பிக்கை, பார்த்திலை யெனினருள் என்றதனுற் குறிப்பிடப்பட்டதாம். அருணசலன் அடியார்க் கருளுதல் தாய் குழந்தைக் குதவுதல்போலத் தன்னியல்பாகவன்றி அவர் பொருட்டு மற்ருேர் பரிந்து வற்புறுத்தலுக்காக வன்றென்பது கருத்து.

66\. பித்துவிட் டுனைநேர் பித்தனுக் கினையருள்
பித்தந் தெளிமருந் தருணசலா.

பொ - ரை: பிரபஞ்சவிஷயங்கள் தாம் பிறவித்துன்பமயமாகவும், அவற்றையே மிகவும் பெறவேண்டுமென்னும் பித்து விட்டொழிய, (நிஷ்பிரபஞ்ச நிர்விஷயமாய் நிரதிசயானந்தமயமான) நின் சுத்தான்ம சொரூபத்தை முற்றப் பெறவேண்டுமென்னும் பித்துக்கொள்ளி யாக்கினை. அப் பித்தம் (தணிந்து உண்மை) தெளியும் மருந்தையும் அப் பித்தம் பிடிப்பித்த நீதானே எனக்குப் பிரசாதித்தருள்.

வி - ரை: பித்து - உலகமயக்கம், விஷயாசக்திவெறி; அதற்குக்காரணம் தோற்றத்தை உண்மையாகக் கருதும் விபரீத புத்தி. விடவென்னும் செயவெனெச்சத் திரிபான விட்டென்பது காரியப்பொருட்டாய், ஆக்கினை யென்பதனேடு முடிந்தது.

நேர்தல் - அடைதல். பித்தன் - பித்துக்கொள்ளி, வெறிபிடித் தவன். மனோநாசத்தான் மௌனநிலை பெற்ற ஞானசித்த னொருவனைத்தவிர ஏனை யாவரும் உண்மையில் யாதானுமொரு விதத்திற் பித்தரேயாவர். மனமயக்கங் கொண்டுழலும் மக்கள் அது தெளியவேண்டுவோர் முதலில், முள்ளானே முட்பகை கீண்டல்போல் அறிவுருவான அருணாசலக் கடவுட்பித்துக் கொண்டே மோகவடிவான உலகைப்பித்தை ஒழிக்கவேண்ட லின், தம்மிடத்தில் அவனுக்குண்டான கருணையால் அருணா சலன் தனைநேர் பித்தனாகத் தம்மை மாற்றின னென்பார் பித்துவிட் டுனைநேர் பித்தனாக்கினை என்றார். தனக்குப் பகை யான உலகப்பித்தை யொழித்தவுடன் அவ்வருணாசலக் கடவுட் பித்து பிணஞ்சுடுதடிபோலத் தானுஞ் சமனமாய்த் தெளிவ தாம். பக்திஞானங்களின் ஸாக்ஷாத்காரத்தின் முன்பு தீவிர மாக வுண்டாகும் உன்மாதாவஸ்தை இதனாற் கூறப்பட்டதாம். **பிணிக்கு மருந்து பிறம னணியிழை, தன்னோய்க்குத் தானே மருந்து** (குறள்) என்பவாகலின், "நின்மாட்டுப் பித்தம் பிடிப் பித்த நீதானே அப்பித்தந் தெளியும் மருந்தையும் நின் ஸ்வரூப ஸாக்ஷாத்காரவாயிலாக எனக்குப் பிரசாதித்தருள்" என்பார் அருள் பித்தந்தெளிமருந் தென்றார். "பைத்தியம் பற்றிப் பயனறு மெனக்குன் பதமுறு மருமருந் தருள்வாய்" எனப் பதிகத்தி லும் வருவது காண்க. அகண்டாத்துவித ஸச்சித்தான அருணா சலன் சொரூபத்தை என்றும் பிரியாமல் அதன்மயமாகவே அநாதிகாலமாக இருந்தொளிர்கின்ற தம் இயல்பான வுண் மையை, இடையில் வந்த மயக்கத்தை மாற்றி அனுபவத்தா லழுத்தமாகத் தெளிவித்தலால், ஆசிரியர் பித்தந் தெளிமருந் தென்றது அவ னருட்பிரசாதமான உண்மையுணர்வை என் றுணர்க. அவ்வுணர்வு உதித்தவுடன், அவனை இனியே புதிதாகத் தாமடையவேண்டு மென முன்னர்க் கிளர்ந்த அவ்வாசை இப்போது அறுவதுமட்டுமன்றி, அவனை இப்போது அடைந்து விட்டாற்போன்றதொரு நினைப்பும் மனத்திற்றோன்றாதொழிவ தாம்; தோன்றின், அவனைப் பிரிந்தது உண்மையாகவே முடித

லானும் ஆனால் முற்கூறியாங்கு தாம் அவனைப் பிரிந்ததே என்று மின்மையானு மென்க.

பத்தனு னென்னுமட்டே பந்தமுத்தி சிந்தனைகள்
பத்தனு ரென்றுதன்னைப் பார்க்குங்காற்—சித்தமாய்
நித்தமுத்தன் ருனிற்க நிற்காதேற் பந்தசிந்தை
முத்திசிந்தை முன்னிற்கு மோ.

—உள்ளதுநாற்பது

இறைவனை ஒருவன் பிரிதலுங் கூடலும் போல்வன கேவலம் மோகவடிவான அகந்தைமனத்தின் கற்பனைகளாம். "மோகந் தவிர்த்துன் மோகமா வைத்துமென் மோகந்தீராய்" எனப் பின்வரும் பாட்டாலும் அவ்வுண்மை நன்கறியலாகும். அந்நிலை பெற்றோரையே, "வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" எனச் சேக்கிழார் பெரியபுராணத்திற் கூறினார். "பொடியான் மயக்கியென் போதத்தைப் பறித்துன் போதத்தைக் காட்டினை" (73) என்றும், "மைமயனீத் தருண்மையினு லுன துண்மைவச மாக்கினை" (84) யென்றும் இந்நூலிற் பின்னர்க் கூறுவன, இப்பிரார்த்தனையின் பயனாய் இப்பாட்டோ டியை புடையனவாம்.

67. பீதியி லுனைச்சார் பீதியி லெனைச்சேர்
பீதியுன் றனக்கே ளருணாசலா.

பொ - ரை: நிர்ப்பயனான் வுன்னை நிர்ப்பயமாகச் சேரத்துணிந்த வென்னைச் சேர்வதன்கண் உனக்கேனோ பயமுண்டாம்?

வி - ரை: பீதியின்றியே என்னைச் சேர்ந்தருள் என்று பிரார்த்தனை. தாமெண்ணியதும் வந்தணையாது தம்மைச் சேர அருணாசலன் சற்றுத் தாமதிக்கவே, தம்மாட்டுப் பீதியுற்றனுகத் தங்கருத்தால் அவன்பாலாரோபித்து அதற்கவகாச

மின்றென்று—"நீயும் பீதியற்றவன், உன்னைச் சேர்வதன்கண் யானும் பீதியற்றவன், அவ்வாறாக என்னைச் சேர்வதன்கண் உனக்குப் பீதியுண்டாதல் எவ்வாற்றானும் அசங்கத"மென்று—காரணங்காட்டித் தேற்றியவாறு. இது நகைச்சுவைபற்றிக் கூறப்பட்டதுபோலும். பீதிக்குக் காரணம் மாயாகாரியமான துவிதத்தோற்றமாகலின் அருணாசலனுக்குப் பீதியின்மை சுத்த ஜ்ஞானசொரூபமான அவனது அத்துவிதவுண்மையா லென்றும், அவனைச் சேர்வதன்கண்ணே தமக்குப் பீதியின்மை ஸகல ஜீவர்க்கும் அபயஸ்தானமாக அருள்வடிவான அவன்மாட்டுத் தமக்குள்ள பூரணவிசுவாசத்தாலென்றும் அறிக. பீதியிலுனை - **தீரன் தீத்திரளன்...வீரன் வீழி மிழலை விசித்திரனே** (அப்பர்தேவாரம்). சார்பீதியில் - சாரும் (சார்வதன்கண்) பீதியில்லாத, பீதியில்லாமற் சார்கின்ற. சேர்பீதி - சேரும் (சேர்வதன்கண்) பீதி. பீதி - பயம். இனி, பீதியில் உனைச்சார் எனை எனவும், பீதியில் எனை எனவும் தனித்தனியே கூட்டி, துவிதப் பிரபஞ்சங்கண்டு துணுக்குற்ற பீதியில் உன்னை யடைகின்ற என்னை எனவும், அவ்வாறு பிரபஞ்சவிஷயத்திற் பீதியுற்றே னாயினும் நின்மாட்டுப் பீதியில்லாத என்னை எனவும் பொருள் கொள்ளலுமாம். முதல் பீதியில் - வேற்றுமைமயக்கம்; பீதியால், பீதிநிவாரணம்பற்றி என்று பொருள்.

68\. புல்லறி வேதுரை நல்லறி வேதுரை
புல்லிட வேயரு ளருணாசலா.

பொ - ரை: புன்மையான பொய்யுணர்வேது? நன்மையான மெய்யுணர்வேது? கூறுதி. (பொய்யுணர்வொழிந்த அம்மெய்யுணர்வை) நான் அடைதற் கருள்செய்.

வி - ரை: புல்லறிவு-சிற்றறிவு (கிஞ்சிஜ்ஞத்வம்), அகந்தையறிவு (ஜீவபோதம்), சுட்டறிவு (விஷயஞானம், பேதஞானம், திருபுடிஞானம்). இஃது உண்மையல்லாத கற்பனை

யறிவு, மயக்கவறிவு. இம் மோகவறிவே, சொப்பனவிவகாரம் போலச் சூதாகச் சூழ்ந்து சுழல்கின்ற சம்சார மென்னும் மாயாசக்தி விலாசத்தில் உண்மையுணராத வுயிர்களைப் பிறவித் துன்பத்துக் கிடமாகப் பேரா தழல்விப்பதால் ஆருயிர்களுக்கு அனர்த்தகரமானது. இனி, நல்லறிவு - மெய்யுணர்வு (தத்துவ ஞானம், சொரூபஞானம்), கடவுளறிவு (சிவஞானம், பிரம்ம ஞானம்); இது, மனக்கற்பனையான துவிதமின்மையின் அதி சாந்தமாய், இருந்தொளிர்தல் மாத்திரமாகத் தன்னியல்பிற் கிளர்கின்ற கேவலஞானம், கைவல்யஞானம்—இதுவே, வேதாந்த பாஷையில் ஆன்மஞான மென்றும், முடிந்த பார மார்த்திக நோக்கத்தில் முற்றுணர்வு (ஸர்வஜ்ஞத்வம்) என்றும் கூறப்படுவது. தன்னை யறிதலின்றிப் பின்னை யெதறிகிலென், தன்னை யறிந்திடிற்பின் னென்னை யுளதறிய—ஆன்மவித்தைக் கீர்த்தனம். விஷயங்கள், உண்மையல்லாத வுபாதியாற் பரிச்சின்னப் பட்ட வகந்தையால் தன்னிற் பேதமாகவும் பின்னமாகவும் சுட்டி யறியப்படுவ்துகொண்டு, பந்தஹேதுவாய்க் கற்பனை யான மனவுணர்வு புல்லறிவென்றும், துன்பமயமான பிறவிப் பெருங்கடலினின்று பேரின்பவடிவான முத்திக்கரை சேர்ப்ப தாய் உயிர்க்குறுதியான நன்மை பயப்பதுகொண்டு, சுட்டற்ற பூரணமான சுத்த சொரூபசைதன்யம் நல்லறிவென்றும் கூறப் பட்டன. ஞானமாந் தானேமெய் நானுவா ஞான மஞ்ஞானமாம்—உள்ளதுநாற்பது. நல்லறிவைப் புல்லுதலாவது அமலான்ம சொரூபமாய் அகண்ட சைதன்ய ஆனந்த வாரிதியான அருணாசலன் பதத்தில் அம்புவி லாலிபோல் அத்துவிதத் தன்மய மாக அகந்தை கரைந்தொழிதல். "மெய்ப்பொருளி னுண்மை யிற் றன் னுண்மையினை யோர்ந்தொடுங்கி யொன்றுதலே யுண்மையிற் காண லுணர்" (8) எனவும், "தலைவற் காணலெவ னுறுதல் காண்" (21) எனவும், "மதியினை யுள்ளே மடக்கிப் பதியிற் பதித்திடுத லன்றிப் பதியை மதியான் மதித்திடுத லெங்ஙன் மதி" (22) எனவும் உள்ளதுநாற்பதன்கண் வருவன காண்க. அந்தக்கரணம், அருணாசலப் பிரம்மசொரூபத்தைக்

*காண்டலாவது தான் அதனையறிதலும், அதனையறிதலாவது தான் அதுவாதலும், அதுவாதலாவது தான் அதுவாக நிற்றலும் (உளபொருளை...உணர்ந்து நிலைநின்றிடாது - உ. நா. 34)—இருத்தலும் (உள்பொருளைத் தேர்ந்திருத்தல் சித்தி - உ. நா. 35)—ஆமென்பது பகவா னருளும் உபதேசம். சுருங்கக்கூறின், கடவுள்நிலையே உண்மையான கடவுட்காட்சி அல்லது கடவுளறிவு—பிரம்மநிஷ்டையே உண்மையான பிரம்மஜ்ஞானம்—என்று தாற்பரியம்.

69. பூமண மாமனம் பூரண மணங்கொளப்
பூரண மணமரு ளருணைசலா.

பொ - ரை: பிரபஞ்சவாசனையுற்ற என்னுள்ளம் (அது நீங்கி) நிஷ்பிரபஞ்சமான பிரம்மவாசனையுறப் பிரம்மாத்மைக்கிய ஞானம் எனக்கருள்செய்.

வி - ரை: பூமணம் - பிரபஞ்சவாசனை (தேக சாஸ்திர வாசனைகளான மற்றிரண்டிற்கும் உபலக்ஷணம்). பூரணமணம் (1) - பிரம்மவாசனை, என்றது ஈண்டுக் கேவலம் பிரம்மானுபவத்தையே. பூரணமணம் (2) - (பூரணத்தோடு மணம் என மூன்றும்வேற்றுமைத் தொகை. பூரணம் - பிரம்மம்; மணம் - இரண்டறக்கலத்தல், ஐக்கியம். எனவே பிரம்மாத்மைக்கியம் என்றபடி; மீண் டாகுபெயராற்) பிரம்மாத்மைக்கியஞானம்: இருக்கு மியற்கையா லீச ஜீவர்கள் ஒருபொருளே யென, அகந்தையழிவான ஆன்மாநுபவத்தால் உறுதிப்பட்ட உண்மையுணர்வு—ஸ்திதப்ரஜ்ஞை. பிரம்மாத்மைக்கிய ஞானத்தாலன்றிப் பிரம்மாநுபவம் விளையாமையின் பூரண மணங்கொளப் பூரண மணமருள் என்றார்.

**To see is to know, to know is to become and to become is to be*—என்பன, ஒருகால் ஆங்கிலத்திற் பகவானருளிய அதே வார்த்தைகள்.

அக்ஷர மணமாலை என்னும் நூற்பெயரிலுள்ள அக்ஷர மணம் என்னும் பகுதியே, அக்ஷரப்பொருளாகிய அருணாசலப் பிரம் மத்தோடு பூணும் மணமென, இரண்டாவது பூரண மணத் திக்கு அஃது ஆகுபெயராகுமுன் னுள்ள அதே பொருளும் படுதலை, முன்பே அப்பெயர்க்குக் கூறிய விளக்கத்திற் காண்க. அருணாசலவரந்த (காப்பு), பூமண மாமனம், மாலையளித்து என நூலின் முத லிடை கடைகளில் முறையேயமைந்த இம் மூன்று பாசுரங்களும்—இவற்றோரன்ன மற்றெல்லாவற்றினும் முக்கிய மாக—இந்நூல் அக்ஷர மணமாலை எனப் பெயர்பெற்றதற் கேதுவான அகச்சான்றுகளாக வமைந்த குறிப்புக்க ளென்னலாம்.

70. பெயர்நினைத் திடவே பிடித்திழுத் தனையுன்
பெருமையா ரறிவா ரருணாசலா.

பொ - ரை: அருணாசலமென்று மனத்தால் உன் பெயரை நினைத்தமாத்திரத்தில் என்னை அருட்கயிற்றாற் பற்றி உன்பா லிழுத்துக்கொண்டாய். அத்தகைய உன் னருட்பெருமையை யாவரே அறியவல்லார்?

வி - ரை: அருணாசலன் பெயரை நினைத்தது அவன் சொரூ பத்தையே நினைத்ததாம் என்றறிவிப்பார் பெயர் நினைத்திடவே என்றார், உண்மையில் அவற்றிடை யாதொரு பேதமு மின்றாகலின். இரும்பைக் காந்தம்போலத் தம்மைத் தன்பாற் கவர்ந்துகொள்ள முன்னர்த் தாஞ்செய்த பிரார்த்தனைக்குத் திருவுளம்பற்றி யிரங்கி அருணாசலன் அருள்சுரந்தா னென்பார் பிடித்திழுத்தனை யென்றார். பல ஜன்மாந்தரங்களாகப் பக்குவப் பட்ட மனத்தால் ஒருநெறியே மனம்பொருந்தி நினைத்த நினைப்பாகலின், நினைத்திடவே பிடித்திழுத்தனை யென்று, மிகச் சிலரே ஒருவா றறியத்தக்க அருணாசல னருட்பெருமையை ஆசிரியர் தம் மனுபவத்தா லறிந்து அதிசயித்துக் கூறலாம்படி அவர்மனம் அவ்வள வெளிதில் அவனருளுக்கு வசப்படுவதாயிற்

றென்றறிக. "இறையுனை நினையு மெண்ணமே நண்ணு வெனையுன தருட்கயிற்ருலீர்த்து" எனப்பதிகத்திற் கூறுவதனுல், அருணுசலன், தம்மைத் தன்பாற் பிடித் திழுத்துக்கொண்டதற்கு அவனருளே முக்கியமான வுண்மைக்காரண மென்றும், அதுவரையில் அதற்கொரு வியாஜத்துக்காகமட்டுமே அவன் காத்திருந்தா னென்றுங் கூறுவார் நினைத்திடவே பிடித்திழுத்தனை என்று ரெனவுமாம். அருணுசலனருளால் அவ்வாறு பிடித்திழுத்துக்கொள்ளப்பட்ட தம் மனுபவத்தாற் றமக்குத் தெளிவாக விளங்கிய அவனருட்பெருமை அவனருளாலன்றி யாருமே யறிவரி தென்பார் உன் பெருமை யாரறிவா ரென்ருர். என்றதனுல், அன்புபட்ட வடியராலே தத்தம் மோனுனுபவத்தாலறிந்து தம்முள்ளே ஏகதேசம் அளவளாவிக்கொள்ளப்படுவதன்றி அருணுசலனருட்பெருமை அன்னியரால் அறவே யறியப்படுவதன்று என்பது கருத்து. "அருணு சலமென வகமே நினைப்பவ ரகத்தைவே ரறுப்பாய்" எனப் பொதுவாக அருணுசலனருளாற்றலின்மேல் வைத்தும், "அருணையென் றெண்ணயா னருட்கண்ணி பட்டேனுன் னருள்வலை தப்புமோ" எனச் சிறப்பாகத் தமது சொந்த வனுபவத்தின்மேல் வைத்தும் இந்நூலில், முறையே இதற்கு முன்னும் பின்னும் ஆசிரியர் கூறுவனவற்ருல், அருணுசல ஸ்மரணத்தால் அடிய ரடையும் பெரும்பேறு விசதமாக விளங்குவதாம்.

71\. பேய்த்தனம் விடவிடாப் பேயாப் பிடித்தெனைப்
பேயனுக் கினையென் னருணுசலா.

பொ - ரை: ஆணவத்தன்மையால் அறவே தான் அற்பமாயினும் எளிதில் விடாத அகந்தைப்பேய்த்தனம் என்னைப் பற்றியது விட்டொழிய, (தன்னுற் பற்றினு ருயிரைத் தன்மயமாக அறவே பக்ஷித்தொழியினன்றி அரிதிலும்) விடாத பெரும் பிரம்மப்பேயாகப் பிடித்து என்னைப் பேயனுக்கிவிட்டாயே. இதுவென்னே!

வி - ரை : சிஜ்ஜடமாய்ப் பரிச்சின்னமான ஜீவோஹம் (தேஹோஹம்) பாவம் பேய்த்தன மென்றும், அகண்டாத்துவித சுத்தசைதன்யமான பிரம்மாஹம்பாவம் விடாப்பே யென்றும் உவம வாகுபெயராற் கூறப்பட்டன. முன்னது 'உருவற்ற பேயகற்றை' யென்று, சொந்தமாகத் தனக்கென உண்மையில் யாதோருருவும் அற்றதாக உள்ளதுநாற்பதிலும் ஓதப்படுவது காண்க. வலிய பெரும்பேயொன்று பிடிப்பின் முன்னர்ப் பற்றி யிருந்த பல சிறுபேய்களும் அதன்முன்னர் நிற்கமாட்டாமல், தம்மாற் பற்றப்பட்டாரை ஆங்கே விட்டகல்வனவாம். பக்தி ஞானங்களிற் பழுத்தோர் பிறர்போலப் பிரமாதமின்றி உலக விஷயங்களில் உதாசீனராய்ப் பித்தர்போலவும் பேயர் போலவும் வாழ்தலாற் பேயனுக்கினை என்றார். ஒப்புயர் வின்முகத் தம்மைத் தன்மயமாக்கி அருணாசலன் செய்த அருட் சிறப்பைத் தம்முட் பாராட்டி, என் னென்று விநோதமாக மறைமுகத்தால் இவ்வாறு வியந்து கூறினாராம் ஆசிரியர் பகவான்.

72. பைங்கொடி யாநான் பற்றின்றி வாடாமற்
பற்றுக்கோ டாய்க்கா வருணாசலா.

பொ - ரை : (திட்பமா மறிவறியாத இளம்பேதை யான) நான் கொழுகொம்பின்றித் துவண்டு வாடும் பச்சிளங் கொடிபோல் அணையுந் துணையின்றி யலமராமல் என்னை ஆதரவாய்க் காத்தருள்.

வி - ரை : துணையின்றித் தடிக்கும் ஓரிளம்பெண்ணாகத் தம்மைப் பகவான் கருதியதை, பைங்கொடியா நான் பற்றின்றி வாடாமல் என்றதனாற் குறிப்பா லுணர்த்தினாராயிற்று. கொழு கொம்பு, காற்றாலும் வெயிலாலுந் துவண்டு வாடும் பைங் கொடியை வருந்தாமற் பாதுகாத்துநிற்றல்போல, மடவார்க் கறிவுச்சுடர்கொளுத்தி யாட்கொள்ளும் ஞானகுருவான

அருணாசலனை, மாயா சக்தியாலும் சம்சார தாபத்தாலும் மயங்கித் தவிக்கும் பேதையான தம்மைத் தயங்காமல், உரிமையாற் பேணிக்கொள்ளுந் துணையாகப் பாதுகாத்துநிற்கும்படி பகவான் வேண்டினாராம். "மீகமா னில்லாமன் மாகாற் றலைகல மாகாமற் காத்தரு ளருணாசலா" என்னும் 79-ஆம் பாட்டு இங்குச் சிந்திக்கத் தக்கது. பற்று, பற்றுக்கோடு—கொழு கொம்பு, ஆதரவு.

73. பொடியான் மயக்கியென் போதத்தைப் பறித்துன்
போதத்தைக் காட்டினை யருணாசலா.

பொ-ரை: பொடிபோட்டு மயக்கினாற்போலென்னை மயக்கி, எனது ஜீவபோதத்தை யபகரித்து, உனது சிவ போதத்தை எனக்கு விளக்கினை.

வி-ரை: சிவ ஜீவ போதங்க ளிரண்டும் ஒருதன்மைய வான உண்மை(ஸமஸத்தை) யிலவாய், முந்தியது உண்மையும் பிந்தியது அதனிற் கற்பிதமு மாகலான் இரண்டு மொருங்கு விளங்காவாய், நாய்காணிற் கற்காணு வாறுபோல் அவற்றுள் ஒன்று விளங்குங்கால் மற்றொன்று அதனிற் கரந்தொழிவதாம்.* எனவே, கற்பிதமான ஜீவபோதங் கரந்தொழியப்பெற்றாலன்றி அதன் அடிப்படையுண்மையான சிவபோதம் விளங்காமையின்

---

*பொன்னை மறைத்தது பொன்னணி பூஷணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூஷணம்
தன்னை மறைத்தது தன்கர ணங்களாந்
தன்னின் மறைந்தது தன்கர ணங்களே.
மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே.
—திருமந்திரம்

ஜீவபோதத்தோற்றத்தைச் சிவபோதவிளக்கத்துக்காகக் கரப்பித்தானென்பார் என்போதந்தைப் பறித்தென்றும், வேறெந்த விதத்தாலும் ஒழிவுகூடாத ஜீவபோதத்தை—"யாரா ரெனக்கென்ன போதித்து மென்ன வென்மதியினை மயக்க வசமோ" என்று அவ்வளவு திட்பமுற்றிருந்த என் னகந்தைவடிவான மனவுணர்வை—பொடிபோட்டு மயக்கினாற்போலே சுத்தவித்தையான திருவருள் விசித்திரத்தான் மயக்கினனென்பார் பொடியான் மயக்கி யென்றுங் கூறினார். பொடியான் மயக்கி யென் போதத்தைப் பறித்து - என்னும் இப்பொருளையே குறிப்பதாம், "யாரு மறியாது என்மதியினை மருட்டி யெவர் கொளை கொண்டது"(89)—எனப் பின்னர்க் கூறுவது. பொடி-சொக்குப் பொடி, அபிமந்திரித்த திருநீறுமாம். பலவகைப்பட்ட கலைகள், அஷ்டமாசித்தி, திவ்யதரிசனம், விசுவரூபக்காட்சி முதலாகத் தன்னகத்திலோ புறத்திலோ, காண்பான் காட்சி காணப்படு பொருளென முத்திறப்பட்டும், பின்னும் அவ்வாறே காணப்படு பொருளுள்ளும் அது இது உதுவெனப் பலதிறப்பட்டும், அகண்டாத்துவித ஸச்சித்தான ஆன்மசொரூபத்திற் பிரமாதத்தா லுண்டான பரிச்சின்னாகம்பாவம் பற்றிக் கற்பனையாகப் பார்த்தறியப்படும் பேதஞானமே ஜீவபோதமாம். சாஸ்திரங்களிற் பெரியோரால் அஞ்ஞானமென வியவகரிக்கப்படுவது இதுவே. என்னை ? ஸத்யமே ஞானமும் ஞானமே ஸத்யமுமாக இரண்டு மொன்றாகலின், அஜ்ஞானமென்பது, இங்குக் கூறியதல்லாத வேறெவ்வகைப் பொருளிலும் அஸத்யமாய்—சூனியமாய்—உண்மையில் இன்மையா லென்க. சிவபோதம் [பிரம்மஞானம், தத்துவஞானம் என்பன இதன் பரியாயங்களாம்] என்பது, கிருத்திரிமத் தோற்றமான அகந்தைமதி யழிதலான் ஒத்துவமே யின்றி நிருபாதிகப் பரவெளி (சிதாகாசம்) வடிவிற்றான நிஷ்கள சிவசொரூபமாய்த் தன்னிற் றானாகவொளிரும் இயல்பான சுத்தஜ்ஞானம்—ப்ரஜ்ஞானம். வாலறிவென்று வள்ளுவரால் வழங்கப்படுவது மிதுவே. எவ்விதமான பேதத்தோற்றமும் பூமாவான இதனில் அறவே யில்லை யென்க.

ஞானமாந் தானே மெய், நானுவா ஞான மஞ்ஞானமாம் என வரும் உள்ளது நாற்பது கொண்டு இவ்வுண்மை தெளிக. மைமய விந்து —என வரும் 84-ஆம் பாட்டு இப்பாட்டோ டொற்றுமைப் பட்ட கருத்துடையதாதல் காண்க. என்போத மென்னும் ஜீவபோதமே மைமய லென்றும், உன்போத மென்னும் சிவபோதமே (சுத்தஜ்ஞான சொரூபமான) உனதுண்மை யென்றும் பரஸ்பரம் இரண்டு பூாட்டுக்களும் ஒன்றையொன்று விளக்கிநிற்பனவாம்.

74. போக்கும் வரவுமில் பொதுவெளி யினிலருட்
போராட் டங்காட் டருணசலா.

பொ - ரை: (ஒருகாற் றன்னை யறிந்தடைந்தார்க்குத் தன்னினின்று சம்சாரத்தே மீண்டும்) போக்குவரவில்லாத இதயப் பரவேளியின்கண்ணே, (தன்னை நினைந்த ஸாதுக்க ளுடைய அகங்காராதி வாசனைகளான அசுரப்படைகளை யழித்துத்) திருவருட்சக்தி செய்யும் போராட்டத்தை எனக்குக் காண்பித்தருள்.

வி - ரை: போக்குவர வின்மை, பூமாவாதலிற் பொது வெளிப்பண்பே யாக்கவுமாம். பூத சித்த ஆகாசங்கள், போக்கு வரவு—தோற்ற வொடுக்கம்—உடைமையின், போக்கும் வரவு மில் பொதுவெளி யென்றது அவற்றுக்கும் அதி சூக்ஷ்மமாகப் பரந்த, தகராகாசமெனப்படும் பிரம்மசொரூப சிதாகாசத்தை யாம். அதுபற்றியன்றே, வெளியென்றுலே யமைவதாயிருக்கப் பொதுவெளியென வேண்டாதுங் கூறிற்றென்க. அருட்போராட் டம்—திருவருள்வடிவான சிவபோதமே முடிவில் வெல்வதாக அதற்கும் மருளகர்தை வடிவான ஜீவபோதத்துக்கு மிடையே அநாதிகாலமாக நிகழ்ந்துவருகின்ற போராட்டம். [இதுவே உண்மையான தேவாசுர யுத்தமாகத் தேற வேண்டுவதாம்.] முடிவில் வெற்றிபெற்றுக் களங்கொள்வது திருவருளே யாத லால் அப்போராட்டந்தான் அதன்பெயரால் அருட்போராட்டம்

எனப்பட்டது. [ஈண்டுக் களம் என்றது அவ் வருட்போர்க் களமான இதயத்தலத்தை. உண்மையில் தருமக்ஷேத்திரமாவது அதுவே யன்றோ!] "போக்கும் வரவும்......இல்லா தொன்று வந்துவந்து தாக்கும்" என வருங் கந்தரலங்காரம் இங்குக் குறிப்பிடற்பாலது. காண்டற் கினியதொரு காட்சியாகலின் அப்போராட்டங் காண வேட்ட பகவான், காண்பார் தமக்கு யாதோ ரிடையூறின்றாகக் குன்றேறி யானைப் போர் காண்பார்போல, முன்பே சுத்தாத்துவித ஜ்ஞானான்ம சொரூபமான அருணகிரி முகட்டில் ஏறி நின்றுகொண்டு—அருணாசலனருளான் ஞானவரம்பான மோனபதத்தை நண்ணி நின்று—அக்காட்சியைக் காட்ட அருணாசலனை வேண்டுகின்றார். சாக்ஷிவிருத்தியெனச் சான்றோர் கூறுவது இதுவேபோலும்.

75. பௌதிக மாமுடற் பற்றற்று நாளுமுன்
  பவிசுகண் டுறவரு ளருணாசலா.

பொ - ரை: பௌதிகமான வுடற்பற் றொழிந்து இணையின்றாக வுயர்ந்த நின் சொரூபக்காட்சியை யான் என்றுங் கண்டிருக்க எனக்கருள்செய்.

வி - ரை: பௌதிகம் - பஞ்சபூதசம்பந்தம்; உடற்பற்று - அவ்வுடலே நானென்றோ அன்றி அஃது எனதென்றோ அகந்தை மமதைவடிவாக அதன்கண்ணே நிகழும் அகப்புறப்பற்றுக்கள்; இனம்பற்றி இரண்டையு மொருங்கியைத்துப் பற்றெ்ன ஒருமையாற் கூறினார். அறல் - தியானத்தாலோ அன்றி விசாரத்தாலோ அது பொன்றக் கெடுதல். பௌதிகமெனத் தூலசரீரமே கூறினாரேனும் ஏனை இரு சரீரங்களும் உபலக்ஷணத்தாலுடன்கொள்க. பவிசு - ஸச்சிதானந்தசொரூபமான அகண்ட விபவம். உன்பவிசு - இராகுவின் தலைபோலக் கொள்க, சொரூபமே உண்மையான பவிசாகலான். கண்டுறல் - கண்டுகலத்தல், அறிந்தடைதல். உடற்பற்றற்று நாளுமுன் பவிசுகண்டுற என்றது, அவ்வுடற்பற்றான அகந்தையற்று அகண்டஸச்சிதானந்த அருணா

சலசொரூபத்தோடு தன்மயமாகக் கலந்த அத்துவிதக்கலப்பா லன்றி அவன்பவிசை இடையீடின்றி இனிதுகாண்டல்—ஒருமை யுணர்ச்சியால் உபசாந்தமாக வுள்ளத் தனுபவித்தல்—இயையா தாகலின் என்க. அன்றியும், அருணாசல சொரூபத்தை ஒருவன் எண்ணவேண்டுமாறுபோல் எண்ணமற வெண்ணின், அவன்றன் தசமன்போலப் பாசமயக்கத்தால் அவ்வுண்மையை அறியாவிடி னும் அருணாசலனோ டவனுக்கு இயல்பாகவே யென்றுமுள்ள ஏகிபாவவுண்மையால், உன்னுரு வனலற வுன்னிட முந்நீ ருறுசருக் கரையுரு வெனவுரு வோயும் (அஷ்டகம்) என்றபடி, பாற்கடலிற் பட்ட சர்க்கரையுருப்போல் உடல்வடிவான அவனகந்தைமதி அறிவின்ப வடிவான அருணாசலசொரூபத்தில்—அவன்றன் அவ் வாறு வேண்டாவிடினும், அவனே யறியாமலே—படிப்படியாக வுருக்கரைந்தொழிய, அவனகத்தில், அருணாசலனருளால் அவன் பவிசு திடீரெனத் தன்மயமாகவே கடைசியிற் பளிச்சிடுவதாம். நாளும் உன் பவிசு கண்டுற என்றதனோடு, "விடா துனைக்கண் டடங்கிட வுன்னழகைக் காட்"டென முன்னர்க் கூறியதை ஒருங்கியைத்து நோக்குக. மாயாகாரியமான ஜடவுடற் பற்றும் நிருபாதிக சிற்பரமான சிவசொரூபக் காட்சியும் இருளும் ஒளியும்போல் ஓரிடத் தொருகாலத்து ஒருங்கு நிகழா. எனவே, அவன் பவிசு காண்ட லுறுவார்க்கு உடற்பற் றொழிய வேண்டிற்று. உடற்பற் றொழியாதே சொரூபக் காட்சியால் அபரோக்ஷானுபவம் பெறல் வெறும் பகற்கனவாகவே முடிவ தாம்.

இழிவுடல்யா னென்ன லிகந்திடுக வென்று
மொழிவிலின் பாந்தன்னை யோர்க—அழியு
முடலோம்ப லோடுதனை யோரவுனல் யாறு
கடக்கக் கராப்புணைகொண் டற்று.

—உள்ளதுநாற்பது, அனுபந்தம்

கூவ லாமை குரைகட லாமையைக்
கூவ லோடொக்கு மோகட லென்றல்போற்

பாவ காரிகள் பார்ப்பரி தென்பரால்
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே

என்னும் அருமைத் தேவாரப்பாசுரம், உடற்பற்றுன ஆனவகந்தையைப் பாவமென்றும், அவ் வுடலகந்தையால் உலகத்தோற்றத்தை உண்மையாக நம்பி அதன்கட் பாச மயக்கத்தாற் கலங்கிப் பரிதபிக்கின்ற மக்களைப் பாவகாரிக ளென்றுங் கூறி, அவ் வகந்தைமமதைகளற்ற அடியாரகத்தில் அகமகமென் றுன்மவடிவாகவே அதிருட்பமாக வவிர்கின்ற நிருபாதிக ஸச்சித்தான அருணசலசிவசொரூபம் அவர்களாற் காண்ட லரிதென்று, மேற்கூறிய அதேபொருளை அழகாக வறிவுறுத்தல் உய்த்துணர வல்லார்க்கு நன்கு விளங்கும்.

76. மலைமருந் திடநீ மலைத்திட வோவருண்
மலைமருந் தாயொளி ரருணசலா.

பொ - ரை: பிறவிப்பிணி மருத்துவனுன நீ அதற்குக் காரணமான மலைப்பை மாற்றும் மருந்தை எனக்குப் பரிந்தளித்தபின்னும் இனி நான் மலைக்கக் கடவேனே? மலை வடிவான அருள்ஞான சஞ்சீவியாகத் தான்ருேன்றியா யிருந்தொளிரும் அருணசலா!

வி - ரை: மலைமருந்திட என்னுந் தொடரில், மலை (முதனிலைத் தொழிற்பெயர்) - மலைப்பு, மயக்கம். மலைமருந்து - பிணிக்கு மருந்து என்றுற்போல மலைப்புக்கு மருந்தென நான்காம்வேற்றுமைத் தொகை; மலைப்பை மாற்றும் மருந்தென்று தாற்பரியம். மருந்திடல் சோறிடல்போலக் கொள்க; இடல் - உண்ணக் கொடுத்தல், உண்பித்தல். இடவும் என இழிவு சிறப்பும்மை செய்யுள் விகாரத்தாற் றெக்கது. நீ இட, நான் மலைத்திடவோ என்க. நானென்னுஞ் சொல் அவாய்நிலையான் வந்தது. மலைத்திடவோ - தன்மையொருமைக்கண் வந்த வியங்கோள் வினைமுற்று. மற்றும், மலைமருந் திட நீ மலைத்திடவோ - மலைமருந்தென உலகமாதாவாய்த் திருவருட்சக்தியான உமா

தேவிக் கொரு பெயராக்கி, அவளை இடப்பாகங் கொண்ட நீ (எனக்குத் துணையாக என்னிதயத்தி லிருந்தொளிரவும்), இனி நான் மலைக்கக் கடவேனோ எனினு மாம்போலும். எனக்கெனத் தொடங்கும் நகவளைத் தொடர் அவாய்நிலையான் வந்தது. மலைப்பை மாற்றும் மருந்தெனவே, அருள்...மருந்து - அருள் ஞான சஞ்சீவி எனப்பட்டது. இனி இப்பாட்டுக்கு, (பிரமா தத்தா லுண்டான பிறவிப்பிணியை நினைத்த மாத்திரத்தே நீக்க) மலைவடிவான மெய்ஞ்ஞான சஞ்சீவியாக அடியர்முன் னொளிரும் அருணாசலா! மலைப்பகற்றும் மருந்தை எனக்களிக்க நீதான் மலைக்கக் கடவையோ? சற்றும் மலைக்காமல் விரைவில் எனக்கு அதனை யருள் என்றுமாம். மலைத்தல் - செயலுக்கு முற்பட விரைவிற் றுணிவுகொள்ளாமல் நீள மனமயங்கித் தாமதித்தல். *மலைமருந்தா யொளி ரருணாசலா—என ஈண்டுக் கூறினாற்போலவே, "பைத்திய மருந்தாப் பாரொளி ரருண பருப்பத வுருப்பெறு பரனே"—எனப் பதிகத்திலுங் கூறுவர். **மரணபவ மறுக்கநல்ல மருந்தாகு மதற்குமலை மருந்தென் றோர்பேர்**—அருணாசல புராணம்.

77. மானங்கொண் டுறுபவர் மானத்தை யழித்தபி
மானமில் லாதொளி ரருணாசலா.

பொ - ரை: யானென்னும் அகந்தைமதி கொண்டு தன்பால் அன்பா லடைந்த வடியாருடைய அம்மதியைத் தன் னருட்சௌரியத்தா லழித்து, கற்பனா துவிதபாவமான வெளிப்பார்வையில் அவரிடம் முன்போ லபிமானமின்றி யுதாசீனம்போலத் தோன்ற, அவருள்ளத்திற் றன்மயமாகப் பின்பு சும்மா விருந்தோளிர்கின்ற அருணாசலா!

வி - ரை: அருணா சலமென வகமே நினைப்பவ ரகத்தைவே ரறுப்பாய்—என்றாங்கே, அருணாசலன் கண்ணோட்டங் காட்டா மல் அடியவர் மானத்தை யழித்தல்,

*மலைமருந்தென்று திருக்கழுக்குன்ற வீசர்க்கும் பெயர்.

நல்லருணை நாதர் நமையொறுத்த னெஞ்சமே
சொல்லுகைக்கோ பொல்லாக் குணம்போக்கக்—கல்லின்
மழுக்குவான் கூறைக்கு மாறுபட்டோ வண்ணா
னழுக்குவாங் கைக்கே யவன்

என்றபடி, உண்மையில் ஆன்மசொரூபமான தன்னினும் தம்மை மனமயக்கத்தால் வேறுபடக் கொண்ட பேதபுத்தியான அவ் வகர்தைமதியே பக்தியோகங்களை அபேக்ஷிக்கும் விபக்தி வியோகங்களாய் அன்னாரவலத்துக்குக் காரணமாதலா லென்றும், தான் அவர்பா லபிமான மில்லாதவன்போலப் பின்னர்த் தோன்றல், உடலகந்தை மதியால் உலகியன் மனப்பான்மை கொண்டு தன் னபிமானத்துக்குரிய சின்னங்களை வெளிப்படையாக வேண்டிநின்ற மயக்க வடிவான அன்னார்தம் பேதமதி ஆண்டா னருள்விளக்கத்தால் மனத்தினின் றிப்பொழுதகன்று, சுக சொரூபமான தன்னைத் தன்மயமாகத் தழைக்கத் தம் மகத்தே தாங் காண்டலின் அவர் அவற்றை முன்போல் வறிதே அவாவலின்மையா லென்றும் அறிக. மெய்யாகத் தன்மயமான உள்ளன் பிருக்கும்பொழுது அதற் கறிகுறியான வெளிச்சின்னம், **அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர் புன்கணீர் பூச றரும்**—(குறள்) என்றாங்கு அதற்கவசிய மேற்பட்டுத் தானாக வெளிப்பட்டாலொழிய விவேகிகளால் விசேடமாக, வீணில் வேண்டப்படுவதில்லையன்றே! ஈண்டு அபிமானமென்றது வியாவகாரிகமான துவிதாபிமானத்தை; உண்மை யபிமான மேல் அதுதான் ஆன்மசொரூபமாய், அத்துவிதமாக அகத்தே இயல்பாகத் தழைத்தலன்றிச் சின்னங்களால் வெளிப்படலின்மையிற் புறத்தோற்றத்துக் கில்லாதாற்போன் றென்க. இனி, **செறூஅச் சிறுசொல்லுஞ் செற்றார்போ னோக்கு முறூஅர்போன் றுற்றார் குறிப்பு** என்னும் குறட்கருத்தின் சாயையும் ஏகதேசம் இங்குத் தோன்றல் காண்க.

78\. மிஞ்சிடிற் கெஞ்சிடுங் கொஞ்ச வறிவனியான்
வஞ்சியா தருளெனை யருணாசலா.

பொ - ரை: நான் பிறர் மிஞ்சிடிற் கெஞ்சிடும் கொஞ்ச வறிவின னாதலால் நீ அதன்பொருட் டென்னை வஞ்சியா தருள்செய்.

வி - ரை: பணியுமா மென்றும் பெருமை...(குறள்) என்றாங்கே என்று மொருபடித்தாய், எல்லோர்பாலும் இயல் பாகப் பணிந்தொழுக லின்றிக் கெஞ்சிடின் மிஞ்சிடுங் கீழ்மை யறிவாற் றிட்பமில்லாத கோழைமனத்தே னென்பார் மிஞ்சி டிற் கெஞ்சிடுங் கொஞ்ச வறிவனியா னென்றும், எனவே, அக் குற்றம்பற்றி, மாயாசக்திமகத்துவம் மிக்க நீயே என்னறிவைப் பின்னும் மயக்கி நின்னுண்மையை யுணரவொட்டாமல் என்னை வஞ்சிக்கப்புகின் எளியேனாகிய யான் அதனை யாற்றவோ அன்றி மாற்றவோ சிறிதும் வல்லமையில்லே னென்பார் வஞ்சியாதரு ளென்றுங் கூறினர். வஞ்சித்தல் - சூதுசெய்து சோதித்தல் (அக்ஷர—32). மிஞ்சிடிற் கெஞ்சிடும் - கெஞ்சிடின் மிஞ்சிடும் என அர்த்தாபத்தி. கொஞ்சவறிவு - அற்பவறிவு, புல்லறிவு. மிஞ்சிடிற் கெஞ்சிடுங் கொஞ்ச வறிவனியான் என்பதற்கு (மறப் பற்றுத் தம் மியல்பாக வாழ்வுதாழ்வு என்ற இரண்டு காலத்து மொப்ப என்றுமே நின்னைத் தாழ்ந்து வழுத்தும் பேரறிஞர் போ லன்றித்) துன்பம் மிக்கபொழுதே மனங்குறைந்து நின்னைத் தொழுது வேண்டும் அற்பவறிவன் யான் என்றுமாம். மிஞ்சிடிற் கெஞ்சிடும்—*உற்றுழி யுதவியும் என்புழிப்போலத் துன்பமென்னுஞ்சொல் ஈண்டும் எஞ்சிநின்றது.

79\. மிகாம லில்லாமன் மாகாற் றலைகல
மாகாமற் காத்தரு ளருணைசலா.

பொ-ரை: நடத்தும் மாலுமியின்றிச் சண்டமாருதத்தி லகப்பட்டுக் கலங்கித் தவிக்கும் மரக்கலம்போல மகா மாயையி லகப்பட்டுப் பேதையான நான் கலங்கி

---

*உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே. (புறம். 183)

வருந்தாதபடி எனக்கு நியாமகனாக நின்று நீ என்னைக் காத்தருள்.

வி - ரை : சம்சாரக்கடலி லகப்பட்டு அகந்தையா லறிவிழந்து செய்வதறியாது திகைத்துத் தன்னைத் தஞ்சமாக வடைந்த வடியாரை, அன்னார் மாயை வேகத்தாலே மோதுண்டு சின்னபின்னப்பட் டழியாதபடி ஆங்காங்கே அருள்வலி யென்னும் நங்கூரம்பாய்ச்சி நிறுத்தியும், உபதேச விசார மென்னுங் கருவியால் ஒழுங்குபெறத் திசையறிந்து நடப்பித்தும், மரக்கலத்தை மாலுமிபோல முத்திக்கரையிற் பத்திரமாகச் சேர்த்தருள்வோன் அருணாசலன் என்பது கருத்து. மீகாமன் - மாலுமி, கப்பலோட்டி. மாகாற்று - பெரும்புயற்காற்று. அலைகலம் - அலையும் மரக்கலம். காற்றுற் கலங்குங் கொடிக்குப் பற்றுக்கோடான கொழுகொம்புபோல ஊற்றமின்றி யூசலாடு முள்ளத்துக்கு உறுதியயக்கு முயிர்த் துணையாகத் தம்மைத் தாங்கிநிற்க முன் பைங்கொடியா வென்னும் பாட்டால் வேண்டினாற் போலவே, மாகாற் றலைகலம் போல மதிமயங்கிச் சமுசாரக் கடலி லமிழ்ந்தொழியாதபடி அதற்கு மீகாமன்போலத் தமக்கு நியாமகனான குருவாக நின்று முத்திநெறியில் நலிவறத் தம்மை நன்கு நடத்த இப்பாட்டா லருணாசலனைப் பகவான் வேண்டினார்.

80. முடியடி காணா முடிவிடுத் தனைநேர்
முடிவிடக் கடனிலை யருணாசலா.

பொ - ரை : அடிமுடி காணமுடியாமல் அவ்வளவு சிக்கலான அகந்தை முடிச்சை (நின் னன்பனான என் பொருட்டு) நீயே விடுவிப்பாயாகி, எனக்கு அன்னைபோ லருள் சுரந்தருள். (அற்பனான என் னறிவாற்றல் கொண்டே) அந்த முடிச்சு விடுவிக்கக் கடவதன்று.

வி - ரை : உண்மையில் ஒளியுமிருளும்போல் ஒன்றுக்கொன்று மாறான சிஜ்ஜடங்களைத் தம்மி லொன்றாகப் பிணைத்த

லாற் சிஜ்ஜடக்கிரந்தி யென்று கூறப்படுகின்ற அகந்தைமயக்கம்—பராகாசவடிவாய்த் தன்னியல்பா யிருந்தொளிர்கின்ற சுத்த ஸச்சித்தான ஆன்மசொரூபமாந் தன்னை, உண்மையில் அசஜ்ஜடமான தேகத்தோ டபேதமாக 'அதுவே நான்' என்றபிமானிக்கின்ற அத்யாசமான அகங்காரமயக்கம் முடியடிகாணு முடி யெனப்படுவது. இதயக்கிரந்தி யெனவும் பிரசித்தமாக வழங்குகின்ற அவ் வகந்தைமுடிச்சே, ஸர்வதுக்க ஹேதுவாய் அவிச்சைவடிவான சகல சம்சாரத்துக்கும் அடிப்படையான காரண மென்பர் அறிந்தோர். மனோமயமாகத் திரிபுடி பேதக் கற்பனைகளைத் தன்பாலே தோற்றுவித்து, அவற்றை உண்மைபோலக் காட்டி மருட்டி, உயிர்களை அவற்றா டோயாதுழல்விக்கும் அந்த முடிச்சு அவிழ்ந்தறலே—இதயக்கிரந்தி பேதித்தலே—ஜனனமரணசம்சார மற்ற சுத்தப் பிரம்மகைவல்யமாம். அந்தநிலை யடையுமளவும் ஜீவனுக்கு உண்மையில் விடுதலை யின்றாகலான், தம்மா லவிழ்க்க அடிமுடி காணமுடியாமல் அவ்வளவு சிக்கலாய், அதற்குத் தடையாக வமைந்த அந்தப் படுமுடிச்சைத் தமக்காக வவிழ்த்துதவும்படி, அருணசலனருளைத் தாய்பாற்சேய்போலத் தம தாற்றாமைகூறி முறையிட்டு வேண்டினார் ஆசிரியர் பகவான். ஜீவன் அந்த * முடிச்சே வடிவாக வமைந்தவனாதலின், அடிமுடியறிந்து அந்த முடிச்சை யவிழ்க்க—தன் னுற்பத்திலய மறிந்து இக்கட்டினின்று தன்னைத் தானே விடுவித்துக்கொள்ள—தன் னியல்பால் அவன் அறவே அசக்தனாம். ஆகவே, விவேகிகளான மெய்யடியார்க்கு அருணசலனருள் முடிவாக உண்மையில் வேண்டப்படுவது அவ் விதயக்கிரந்தி பேதத்தின்கண்ணே என்றறிக.

---

* இம்முடிச்சி னிலக்கணம் அதன் முக்கியமான பரியாயங்களோடு, வேண்டியவளவிற் சுருக்கமாகவும் தெளிவாகவும், உள்ளதுநாற்பது லுள்ள 'சடவுடல் நான்' என்னும் பாட்டிற் கூறப்படுவது காண்க.

81. மூக்கிலன் முன்காட்டு முகுரமா காதெனைத்
தூக்கி யணைந்தரு ளருணாசலா.

பொ - ரை: (நீ என் விஷயத்தில்) மூக்கறையன் முன் காட்டப்படும் முகக்கண்ணாடியாக முடியாமல் என்னைத் தூக்கி உன்னோ டணைந்துகொள்.

வி - ரை: முகுரம் - முகக்கண்ணாடி. அக்கண்ணாடி அவன் மூக்கறையனென்று அவன் அவலக்ஷணத்தை யெடுத்துக்காட்டி அவனைப் பரிகசிப்பதுபோன்று அடியேனகத்தி லுள்ள அகந்தை முதலிய குற்றங்களை என்னையாளத் தடையாக நீ எடுத்துக் காட்டி என்மனம் நோவ அசதியாடாமல், உன் திருவடியிற் சரணாகதியாக விழுந்த வென்னை உன் னருட்கரத்தாலே தூக்கி உன்னோ டன்பாக வணைந்துகொண்டருள் என்று பிரார்த்தனை. "நகைக்கிட மிலைநின் னாடிய வெனையரு, ணகையிட்டுப் பார்நீ யருணாசலா" (53) என முன்னுங் கூறப்பட்டது காண்க. தீன தயாளுவான நின் னருள்வண்மையா லன்றி என் குணத்தகுதி கொண்டே நான் ஆளத்தக்கவனல்லே னெனத் தைனியம்படப் பிரார்த்தித்தார் பகவான். "குன்றே யனைய குற்றங்கள் குணமா மெனவே நீகொண்டால், என்றான் கெட்ட திரங்கிடா யெண்டோண் முக்க ணெம்மானே" என மணிவாசகப் பெருந் தகையும் அவ்வாறே, இறைவனை தம்மெளிமை தோன்றக் குறை யிரந்து வேண்டல் காண்க. எனைத்தூக்கி - என் தாழ்மையினின் றென்னை யுயர்த்தி என்றுமாம். என் குற்றங்களைக் குணங்களாக நீயே சீர்திருத்தி யாண்டுகொள் என்பார் முகுரமாகா தெனைத் தூக்கி யணைந்தருள் என்றார். "குற்றமுற் றறுத்தெனைக் குண மாய்ப் பணித்தாள்" (19) என முற்கூறியதையும் ஈண்டைக் கெண்ணிக்கொள்க. தங்குற்றம் குணமாகக் கொண்டு, அருணா சலன் அவ்வாறு தம்மைத் தூக்கி யணைதலின் பயனான பிரம் மாத்மைக்கிய பாவத்தை அடுத்த திருப்பாட்டாற் கூறுகின்றார் ஆசிரியர்.

82. மெய்யகத் தின்மன மென்மல ரணையிற்
மெய்கலந் திடவரு ளருணாசலா.

பொ-ரை: உடலென்னும் உவளகத்தில் மிருதுவான உளமென்னும் மலரணைக்கண் யாம் உண்மையிற் கலக்க எனக்கருள்செய்.

வி-ரை: *இஃது அகப்பொருளிற் புணர்ச்சிவிதும்பல் என்னுந்துறை. சதிபதிகள் மலரணையிற் றம்மிற் கலக்கப் பிரத்தியேகமான மறைவிடம் வேண்டப்படுதலால் அகம் - உவளகம் எனப்பட்டது. [உவளகம் - கோயி லந்தப்புரம்.] அருணாசல னருளான் மலர்ந்த மனம் அகண்டமான சுத்தப் பரவெளியாதலால் அம்மனமல ரொன்றேயும் பிரம்ம சொரூபமான அருணாசல னருட்கலவிக்குப் போதியதாகப் பரந்ததொரு மலரணையாயிற்று. கற்பனாபேதந் தோற்றுவிக்கும் உபாதிபுத்தியான மயக்கவகந்தை யொழிந்து, நிருபாதிகமாகத் தன்னிற் றானே இருந்தொளிரும் உண்மையான அத்துவித சொரூபக்காட்சியால் யான் உன்னோ டொன்றுகலக்க என்பது கருத்து.*

இருக்கு மியற்கையா லீசசீ வர்க
ளொருபொரு ளேயாவ ருந்தீபற
உபாதி யுணர்வேவே றுந்தீபற.

—உபதேசவுந்தியார்

கலத்தல் - ஸித்தமாக வுள்ள அத்துவித வுண்மையால் என்றுமெவர்க்கும் அருணாசலனோ டியல்பாகவே யுள்ள ஐக்கியத்துக்குப் பிரதிபந்தகமான பேதபுத்தியும் அதற்குக் காரணமான பரிச்சின்ன வுடலகந்தையும் அதற்குங் காரணமான மூலாவித்தையும் அருள்விளக்கத்தா லறவே கெட்டொழியப் பாரமார்த்திகமான அவ் வத்துவிதவுண்மையை அனுபவமா யறிதல். மனமயக்கத்தாற் சடவுடலோ டொன்றி யானெனத் தனிப்பட்டாற் போன்றியங்கும் சிதாபாசமான ஜீவன், திருவருள் ஞானத்

தால் அவ் வாபாசவகந்தை யகறலாலே, கதிரொளியோடு கண்ணொளி கலந்தாற்போலவும் பாற்கடலிற் சர்க்கரையுருக் கரைந்து கலந்தாற்போலவும், சிற்பரமான சுத்தாத்துவித சிவ சொரூபத்திற் றன்மயமாகக் கரைந்தழிந்து சொரூபமோனனுபவத்தா லமைதல். அந்நிலைக்கண் அனுபவமாவதே,

உள்ளம் பெருங்கோயி லூனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே

என்னும் திருமந்திர வுண்மை. அவ்விதக் கலவியின் பயன் அருட் பரவெளியான வகத்தே நித்திய நிரந்தரமாக நிகழ்கின்ற நிரதிசயானந்த சாயுஜ்ய போகம். அதன்பொருட்டுப் பசுபதியும் தமக்கான்மாநாதனுமான அருணாசலனருளைப் பகவான் வேண்டினார். யாமிருவரும் உடலா லொன்றுகலக்க என வெளிப்பார்வைக்கு வேறுமொரு சாமானியப்பொருளாம்.

83. மேன்மேற் றாழ்ந்திடு மெல்லியர்ச் சேர்ந்துநீ
மேன்மையுற் றனையென் னருணாசலா.

பொ-ரை: மேன்மேலுந் தாழாநடக்கும் எளியவரைக் கூடி, (அக்கூட்டுறவால் அவர்போல நீயும் தாழ்வடைவதற்கு மாறாக) உயர்வடைந்தாயே. இஃதென்ன ஆச்சரியம்!

வி-ரை: தாழ்ந்திடு மெல்லியர் - இயல்பானே யடங்கிப் பணியும் மிருதுசுபாவ முள்ள எளியரா மடியவர். தாழ்தல்—பணிதல்—உண்மையிற் பெருமையாவ தன்றிச் சிறுமையாகா தென்பதும், வன்மையாவ தன்றி மென்மையாகா தென்பதும் கருத்து. என்னை? “பணியுமா மென்றும் பெருமை சிறுமை, யணியுமாந் தன்னை வியந்து” எனவும், “ஆற்றுவா ராற்றல்

பணித லதுசான்ருேர், மாற்ருரை மாற்றும் படை" எனவும் ஆன்ருேர் கூறுவராகலின். இன்ஞருக் கென்ருது, தாழ்ந்திடு மேல்லிய ரெனப் பொதுவாகக் கூறியது, அறிஞான வடியர் எல்லா வுயிரிலும் இறைவனைக் காண்டலால் அவ் வெல் லாவற்றுக்குமே கடவுட்கருத்தோ டடங்கி நடத்தலா லென்க. "**தமர்போ லனைவர்க்குந் தாழ்மை சொல்லிச் சேய்போ லிருப்பர் கண்டீ ருண்மை ஞானந் தெளிந்தவரே**" என வரும் பட்டினத்தடிகள் பாட்டுங் காண்க. அருணசலனைப் பணிந்துபணிந்து அவனருளால் அகந்தை யழியவழிய, அகில ஜீவராசிகளிடத்திலும் அடக்கமும் பணிவுமே அடியார்க் கணி கலஞக, மேன்மே லியல்பாக வளர்தலால் மேன்மேற் ருழ்ந்திடு மெல்லியர் என்றதாம். அவ்வா றடங்கிப் பணிதலுக் கெல்லையாக அவ்வளவு தாழ்ந்தொழுகும் அடியரோடு அவர் தாழ்ச்சியிற் போட்டிபோட்டாற் போல, தன் னடியர்க்குத் தான் எளிய ஞதலே யன்றித் தன் னடியர்க்குந் தான் அடியனுகவே, தான் அவரினும் மேம்படத் தாழ்ந்தொழுகலாலேகாண் இறை வனுக்கு அவ்விறைமையான மேன்மை யுண்டாயிற்று என்று பகவான் கூறுவர். நிரகங்கார நிலேயே உண்மைப் பெருமை யான பரிபூரணத்துவமென்றும், உயர்வுதாழ்வு முதலிய் தொந்த மொன்றும் மனக்கற்பனையற்ற சுத்தபோதமான அந்த மௌன நிலையிற் பாரமார்த்திகமாகத் துன்றுவதில்லை யென்றும் தாற் பரியம். பஞ்சபூதங்களில் மற்றெல்லாவற்றைக் காட்டிலும் ஆகாசத்துக்குப் பெருமை அதன் அதிநுட்பத் தன்மையா லன்றே வுண்டாயிற்று! அவ்வாறே, அணுவுக்கணுவாக—சேத னங்களில் மிக்க நொய்தான பூச்சிபுழுவினுள்ளும் அதனிலும் மிக்கநொய்தாய் அவ்வதனுக் கவ்வதுவான அந்தரியாமியாக— அமர்ந்துறைதலாலேகாண், மகத்துக்கும்மகத்தாக—கடவுளர்க் குங் கடவுளாக, பிரம்மவிஷ்ணு முதலிய பெருந்தேவுகளகத் தும் அவற்றினுஞ் சாலப்பெருந் தெய்வத்தன்மையோடு பர மார்த்தத்தில் அவற்றின் ஏகஸத்வமான அந்தரியாமியாக—மன் னும் பரிபூரண மகத்துவம் அருணசலனுக் குண்டாகின்றதென்

றறிக. தமிழ்த்திருமறையான திருவாசகம், "சென்றுசென் றணு வாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந் திருப்பெருந் துறையுறை சிவனே" யென இறைவனைத் துதிக்குங்கால், அவனிறைமைக்குக் காரணமாக இக்கருத்தையே அறிவுறுத்தல் காண்க. இது நிற்க. இனி, அடங்கிடும் அல்லது வணங்கிடும் அடியரென்றது, மேன்மையுற்றனையேன் என வியப்பதற்கேற்ப, இழிந்தவொய்ய வியல்பினரெனச் சமற்காரமாகத் தொனிக்குமாறு தாழ்ந்திடு மெல்லியரெனக் கூறிய பதஸ்வாரஸ்யம் அறிந்து மகிழத்தக் கது. அன்றியும், தாழ்தல் - (அகந்தை வடிவான ஆணவமலம்) குன்றுதல் எனவும், விரும்புதல் எனவுமாம். மெல்லியர் - மெல்லியலார் என்றது, ஆண்டானோ டடியார்க் குள்ள *நாயக நாயகி பாவப் பிரேம ரூபமான பக்தியில் முதிர்ந்து பழுத்த மெய்யன்பரை. மேல்லிய ரென்றதில், மெல்லியரான வடி யார்க்கு இயல்பான வணிகலமாயுள்ள அம் மென்மையாவது, தன்னுயிர்க்குப் போல மன்னுயிரனைத்துக்கும் மனங்கனிந்து பரிந்திரங்கி உற்றுழி யுதவுவதான மெய்யன்போடுங் கூடிய முகமலர்ச்சி, மிருதுபாஷணம் முதலியன. தாங்கள் சேரு மினத்துக் கேற்பவே மக்களுக் குயர்வுதாழ்வு உண்டாதலால், நல்லோராவார் நல்லின மறிந்தே நட்கவேண்டு மென்பதும் இந்தப் பாட்டின் குறிப்பா லறிந்துகொள்ள வேண்டுவதொரு புத்திமதியாம். இனி இந்தப் பாட்டின்கண், மகளிர் பலரைக் கூடி, அவ்வொழுக்கத்தா லிழிவடையாமல் நீ உயர்வுற்றாயே! இஃதென்ன விந்தை என்றொரு தொனிக் குறிப்புங் காண்க.

84. மைமய னீத்தருண் மையினா லுனதுண்
மைவச மாக்கினை யருணாசலா.

பொ - ரை: மையிருள் போன்ற மனமயக்கத்தை மாற்றித் திருவரு ளென்னும் வசியாஞ்சனத்தால், அம்

*சன்மார்க்க மென்றும் மதுரபாவ மென்றும் இதுவே வழங்குவதாம்.

மனத்தை, உன் பரமார்த்த சொரூபத்துக்கு வசமாக்கிக் கொண்டனை.

வி - ரை : ஆன்மசொரூபத்தை—அருணாசலப்பிரம்ம சொரூபத்தை—அறவே மறைப்பித்தலாலும், இருள்போல இன்ன தன்மைத்தென்று யாராலு மறியப்படாமையாலும், சுழுத்தியினின் றுற்பவித்த சொப்பனத்திற்போல அவிச்சையி னின்று கற்பிதமான ஜடவுடல் வடிவாக வுருக்கொண்டு 'நா' னென் றெழுந்த அகந்தைமயக்கத்தை—அதன் விரிவாய் உலக வடிவாக வுருக்கொண்டு அதுவே யுண்மையென மனவுணர்வை மருட்டி அவ் வுலக விஷயங்களையே தனக்கு உண்மையான சுக சாதனங்கள்போலத் தீவிரமாகப் பின்பற்றுவிப்பதான மகா மாயையை—மைமயல் என்றும், அது நீங்கவே, தன் பரமார்த்த வுண்மையான ஆன்மசொரூபம்—அருணாசல சிவசொரூபம்— பளிச்சிட்டு விளங்கி அகந்தைவடிவக் கற்பனாசக்தியான அம் மனத்தைத் தன்மயமாகக் கவர்ந்துகோடலால் உனது உண்மை வச மாக்கினை என்றும், கற்பனாவிலாச நாமரூப மாத்திரமான உடலுலகச் சித்திரங்களுக்கு வசப்பட்டு அவற்றுக்கே யடிமை யாக அறிவழிந்து மயங்கிக் கிடந்த அகந்தைமனத்தை, அம் மயக்கத்தினின் றறவே மாற்றி அருணாசலன், சுத்தசைதன்ய மான தன்னுடைய யதார்த்த சுகசொரூபத்துக்கு மீளாவாளாக வசப்படுத்திக்கொண்ட கருவியான திருவருளை, ஒருவர்க்கு வசப் பட்ட மனத்தை மாற்றி மற்றொருவர்க்கு வசப்படுத்திக் கொடுக்கவல்ல மை என்றே அதன் (திருவருள்) விசித்திரசக்தி நோக்கிக் கூறுவார் அருண்மையினு லென்றுங் கூறினார். முன் 73-ஆம் பாட்டில் அருளைப் பொடி யென்று கூறினவர் இங்கு அதனை மை யென்று கூறினார். மை - அஞ்சனம், பல கருப் பொருள்கள் கூட்டிச் செய்யப்படுவதொரு வசிய மருந்து.

85. மொட்டை யடித்தெனை வெட்ட வெளியினி
நட்டமா டினையென் னருணாசலா.

பொ - ரை: (யானென தென்னும் இருவகைப் பற்றுக்களும் இதயத்தினின்று நிர்மூலமாக) வாசனாக்ஷயஞ் செய்து, அவற்றினின்று தூய்தா யோழிந்த அவ்விதயப் பரவெளியின்கண் (ஏகபோகமாகத் தனித்து) நீ இன்பநடஞ் செய்தாய். என்ன ஆச்சரியம்!

வி - ரை: மோட்டையடித்து-"சீரையழித்து நிர்வாணமாச் செய்து" (30); "என்வாயில் மண்ணினை யட்டி யென்பிழைப் பொழித்து" (88). மண்டையை முண்டனஞ்செய்து, குடும்பத் தொடர்பறுத்து என வேறு பொருள்களும் அந்தத் தொடர் கொள்ளக் கிடத்தல் காண்க.

கயன்மாண்ட கண்ணிதன் பங்க னெனைக்கலந்
தாண்டலுமே
அயன்மாண் டருவினைச் சுற்றமுமாண் டவனியின்
மேல்
மயன்மாண்டு மற்றுள வாசகமாண் டென்னுடைய
செயன்மாண்ட வாபாடித் தெள்ளேணங்கொட்டாமோ.

—திருவாசகம்

மனத்தினும் நுண்ணிதாகப் பரந்த விதயம் வெட்டவெளியெனப் பட்டது. வெட்டவெளி-சுத்தவெளி. நட்டம் (**நிருத்த** என்னும்) வடமொழித்திரிபு, (**வ்ருத்த** என்பதன் திரிபான) வட்டம்போல. நட்டமாடல் - உள்ளக்கிளர்ச்சிக்கான அறிகுறி. தனது பூரணத்துக்கு இடையூறாக 'நா'னெனக் குறுக்கே யெழுந்த தம தகந்தையை மொட்டையடிக்கத் தானெண்ணிய செயலை எண்ணியவாறே வெற்றிபெறச் செய்துமுடித்த ஏகபோகப் பேரின்பக் களியால் அருணாசலன் வெட்டவெளியில் நட்டமாடின னென்று கவி தற்குறிப்பேற்றம்படக் கூறினர். (தன்னிழப் பென்னும் அகந்தையழிவால்) எனக்குச் சொரூபநாச மின்றாக்கி என மோட்டையழித் தென்னும் பாடபேதத்துக்குப் பொருள்காண்க.

சொரூபநாச மின்மை, அகந்தையழிவாலே அகண்டாத்துவித ஸச்சித்தான ஆன்மசொரூப வருணசலனே டைக்கியமாய்த் தன்மயமாகத் தழைத்தலால் என்க. அல்லதூஉம், அப் பாட பேதத்துக்கே, மனத்தாமரை யரும்பை மலர்த்தி: இதயக் கிரந்திபேதஞ் செய்து எனவுமாம். ஆசிரியர், "மனசலச மலர்த்தி டருணசலா" (27) என முன்னர்ச் செய்துகொண்ட பிரார்த்தனையின் பயனுகப் பெற்ற அநுக்கிரகம் இதுவென் றறிக.

86. மோகந் தவிர்த்துன் மோகமா வைத்துமென்
மோகந்தீ ராயென் னருணசலா.

பொ-ரை: முதலில் உலகின்பாலுள்ள மோகத்தை யொழித்து என்னை உன்னிடத்து மோகமுள்ளோனுக வைத்தும், அந்தப் பின்மோகத்தையும் (முன்மோகத்தை யொழித்தாற்போலவே உன் சோரூபானுவப் பிரசாதத்தால் இன்னும்) ஒழியாதிருக்கின்றுய்.

வி-ரை: அதையும் விரைவி லொழித்தருள் என்று குறிப் பாற் பிரார்த்தித்தவாறும். மோகந்தவிர்த் தென்பதில் மோகம் உண்மையைத் தோன்ருது மறைக்கும் உலகசம்பந்தமான மன மயக்கம். உன்மோக மென்றது, எவ்விதத்திலும் அருணசலனை யடைந்தேதீர்வதெனத் தம் மிதயத்திற் கிளர்கின்ற அதிதீவிர வாசையை. "பற்றுக பற்றற்ருன் பற்றினை யப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" (குறள்) என்றபடி, அருணசலன் மோகம் பிற வித்துன்பத்துக் கேதுவான உலகமோகம் ஒழிவதற்கு ஒருபாய மாகவே யுதவலானும், அறிஞரான மெய்யன்பர்க்கு அதுவே முடிந்தநிலை யாவதன்றி அதுவு மடங்கிய வியல்பான அவன் சொரூபானுபவ மோனமே முடிந்த புருஷார்த்த மாகலானும் மோகந் தீராய் என்ருர். "பித்துவிட் டுனைநேர் பித்தனுக் கினை யருள் பித்தந் தெளிமருந்து" (66) என முன்பும் வேண்டினுர்.

சாந்தமான சிவானுபவமே உண்மையான பரபக்தி என்பது கருத்து.

87. மௌனியாய்க் கற்போன் மலரா திருந்தான்
மௌனமி தாமோ வருணாசலா.

பொ - ரை: வாய்மட்டும் பேசாதவனாய்ச் சித்த விகாசமற்றுக் கற்போலச் சும்மாகிடந்தால் அவ்வாறு கிடக்கும் அத்தகைய காஷ்டமௌனமே ஒருவற்கு உண்மையான மௌனநிலை யாமோ ?

வி - ரை: ஆகாதென்றபடி. ஆசிரியர் இத்திருப்பாட் டருளுங்கால், வாய்(மட்டும்)பேசா மௌனி யொருவர் ஞானநிட்டர்போலக் கண்மூடிச் சடவடிவாகக் குந்தியிருந்த நிலையை அப்பொழுதே தம் மெதிரிற் கண்டு இதுவெனக் கூறினார் போலும். மலர்தல் - இதயக்கிரந்தி யென்னும் அகந்தைமுடிச் சழிதலாற் பரிச்சின்ன ஜீவபாவமற்றுச் சிவஸ்வரூபமான பராகாச வடிவாகப் பரத்தல். அறிவுத் தெளிவோடு சாந்தமான அவ் வகண்ட நிலையே உண்மையான மௌனமன்றி மற்றன்று என்பது கருத்து. மனோவியாபாரமான சங்கற்பவிகற்பங்கள் தெய்வநியதியான யாதாமொரு காரணத்தாலன்றி அந்நிலையில் இயல்பாக வெழா. பூர்வசங்கற்ப மின்றியே திடீரெனக் காரணம்பற்றி யெழினும் காரியநிகழ்ச்சியின்பின் அக்காரியங்களின் வாசனைகள் அகத்திற் சற்றும் பதியா. அவிச்சை வடிவான கர்த்தத்துவ மற்றுத் தெளிந்தமைந்த அத்தகைய சுத்த மௌனத்தில், கருவிகரணங்கள் ஒருகாற் பலபடியாகச் சேட்டிக்கினும், அவற்றோடு தன்னிடைப்பட்ட அகங்காரக் கிரந்தி வடிவான கற்பிதத் தொடர்பு—அகத்திற் பொதிந்த அவிச்சை யிருளிற் படிந்து கிடந்த சகல வாசனா சமூகத்தோடும்—நசித்தொழிந்த தன்னியல்பான உண்மையுணர்ச்சியால் ஒருவன் (ஸஹஜநிஷ்டன், ஸ்திதப்பிரஜ்ஞன், ஜீவன்முக்தன்) உண்மை

யிற் சற்றும் சேட்டியாதோனே யாவன். "சேய்மையுளஞ் சென்றுகதை கேட்பார்போல் வாதனைகள், தேய்மனஞ்செய் துஞ்செய்யா தேயவைகள்" என உள்ளதுநாற்பது அநுபந்தத் தில் வருவது காண்க.

சித்த மவுனஞ் செயல்வாக் கெலாமவுனம்
சுத்த மவுனமென்பாற் ரோன்றிற் பராபரமே.
—தாயுமானவர்

சுத்தமௌன மென்னும் உண்மையான அந்தப் பரமௌன நிலையைத் தமக்களித்தருள்க என்பது குறிப்பெச்சம்.

நானென் றொருமுத லுண்டென்ற நான்றலை நாண வென்னுள்
தானென் றொருமுதல் பூரண மாகத் தலைப்பட்டொப்பில்
ஆனந்தந் தந்தென் னறிவையெல் லாமுண் டவசநல்கி
மோனந் தனைவிளைத் தாலினி யாது மொழிகுவதே.

இப்பாட்டால் அம்மோனத்தி னியல்பைத் தாயுமானவர் அழ காகக் கூறுகின்றார்.

88. யவனென் வாயின் மண்ணினை யட்டி
யென்பிழைப் பொழித்த தருணாசலா.

பொ - ரை: (விஷயங்களைப் புஜித்து மற்றோர் மத்தி யில் அன்னார்போல நானுமொரு ஜீவனாகக் களித்து வாழ்ந்துவந்த) என்வாயில் மண்ணை யள்ளிப்போட்டு என் சுகஜீவியத்தை—ஜீவத்வத்தை—ஒழித்தது உன்னையன்றி வேறு யாவன்?

வி - ரை: வாயில் மண்ணினை யட்டி என்றது விஷயபோகத் தில் விருப்ப மின்றாக்கி, யென்றவாறு. கர்த்திருத்துவ புத்தி

யின்றித் தான்மட்டுந் தனித்துநில்லாத போக்திருத்துவ புத்தியைப் போக்கி என்பார் என்வாயில் மண்ணினை யட்டி என்றார். பிழைப்பு - உயிர் உடலோடு கூடி வாழும் வாழ்க்கை—அநாதி வாசனையால் யாதாமொரு சரீரத்தைப்பற்றி, அஞ்ஞானத்தால் அதுவே 'நா'னென்று அபேதமாக வபிமானித்தலால் பரமார்த்த ஞானமற்று வாழும் வாழ்க்கை. [அதுவே சிஜ்ஜடக்கிரந்தியென்னும் சம்சாரம்.] அதனை யொழித்தலாவது, நானாரென்னும் ஞானவிசாரக் கூர்வாளாற் சிஜ்ஜடக் கிரந்தியைச் சேதிப்பித்தல்: அகந்தையுணர்வான போலி 'நான்' அவ்வான்ம விசாரத்தால் அகத்தி லடங்கலும், உண்மையான வுணர்வுமாத்திரமாக உள்ளத்திற் கிளர்கின்ற சொரூபானுபவத்தாலே ஜடவுடல் உண்மைநான் அன்றாக வொழிய, உடலோ டுயிர்த்திருக்கும்பொழுதே அவ்வுடலுயிர்களை (சரீரசரீரிகளை) வேறுபிரித்தல்—ஜீவித்திருக்கும்பொழுதே ஜீவபாவத்தைப் போக்குதல். [அதுவே கிரந்திபேத மென்னும் சம்சாரமோக்ஷம்.] இப்பொருளையே, "உடலுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலையுத்தமனே" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளுங் கூறினார்.

உழைத்துந் துள்ளியு முள்ளத்து ளேயுரு
இழைத்து மெந்தை பிரானென் றிராப்பகல்
அழைக்கு மன்பின ராய வடியவர்
பிழைப்பு நீக்குவர் பேரெயி லாளரே.

அப்பர்சுவாமிகள் அனுபவத்தா லருளிய இவ்வருமைப்பாசுரம் இங்கு எவ்வள வழகாகப் பொருந்துகின்றதென்று நோக்க மனத்துக் கடங்கா மகிழ்ச்சி யளிப்பதாம். மெய்யான ஆன்ம ஞானத்தால் அஞ்ஞான காரியமான கற்பனை ஜீவத்வத்தை யழித்து, நிரதிசயானந்த சொரூபானுபவ வாயிலாக நிரசமான விஷயத்தில் விரச முண்டுபண்ணிய அருணாசல னருட்செயலை, அவன் உண்மையிலேயே தமக்கு மிகத் தீங்கிழைத்துவிட்டாற்போல வெளிப்பார்வைக்குத் தோன்ற, இவ்வாறு வேடிக்கையாகக் கூறினார் பகவான்.

89. யாருமறி யாதென் மதியினை மருட்டி
யெவர்கொளை கொண்ட தருணாசலா.

பொ - ரை: அக்கம்பக்கத்தார் யாரு மறியாமலே என்னறிவை மருளவத்தை யடைவித்துத் தன்மயமாகக் கொள்ளைகொண் டொழிந்தது உன்னைத் தவிர்த்து வேறு யாவர்?

வி - ரை: துவிதபக்ஷமான ஜீவநோக்கத்தால் அந்தரான்மாவாந் தன்மையில் அடியரகத்தே அறிவுக்கறிவான சுத்த சாக்ஷிசைதன்யமாக நின்று அருணாசலன் விளைக்கின்ற வருட்செயல் புறத்தே யாராலு மறியப்படாமையின் யாரு மறியாதென்றும், பேதங்களோடு கூடின சுட்டுணர்வான அகந்தையறிவை உண்மைபோல மயங்கிநின்ற சாமானிய மனப்பான்மைக்கு யானென்று மிதுவென்றும் சற்றும் பிரித்தறிய வொண்ணாதபடி அவ்வறிவே அடியோடு செத்தொழிந்தாற்போலத் துன்ற, வாலறிவான ஒரே பரவெளியாய்த் தன்மயமாகத் திடீரெனப் புதுமைபோலக் காணப்படு முண்மைநிலை முதற்கண் மருள்பிடித்தாற்போலத் தோற்றலின் என்மதியினை மருட்டியென்றும், அருணாசலனை நோக்கி, உள்ளிணு ருள்ளத்தைக் கொள்ளைகொள்ளுங் கள்வர் உலகில் உன்னைத் தவிர்த்து ஒருவருமிலரென்பார் எவர் கொளைகொண்ட தென்றுங் கூறினர். 'என்னுள்ளங் கவர் கள்வ' னென, முன் பிரமாபுரமேவிய பெம்மானால் ஆளுடைய பிள்ளையாரான அருண் ஞானசம்பந்தர் கூறினாற் போன்றே, பின் அருணாசலத்திலுறு கருணாகரப் பரமனால் ஆளுடைய பிள்ளையாரான நம்பகவான் ஆசாரியரமணரும், 'என்மதி கொளைகொண்ட கள்வ' னென இதனைக் கூறினராம். இனி, என்மதியினை யாருமறியாது மருட்டி எனக்கூட்டாமல், அடியர் மதியைக் கொள்ளை கொள்வதில் அருணாசலனுக் குள்ள அபார சாமர்த்தியம் புலப்பட, அதனை யாருமறியாது கொளை கொண்டது எனக் கூட்டினு மமையும். "அறிவினை மருளுறுத்"

தென்று அருணாசல அஷ்டகத்திலும் பின்னர்க் கூறுவர். ஜீவ போதம் சிவபோதத்துக்குத் தன்மயமாக ஆனன தன்னிழப்பு நிலை இப்பாட்டாற் குறிக்கப்பட்டது. "பொடியான் மயக்கி யென் போதத்தைப் பறித்துன் போதத்தைக் காட்டினை" எனவும், "மைமயனீத்தருண் மையினா லுனதுண் மைவச மாக்கினை" எனவும் முன்னர்க் கூறியவை இப்பாட்டின் கருத்தே பற்றியன வாம்.

> **வெள்ளக் கருணைமத வேழமா நின்னருட்கென்**
> **கள்ளக் கருத்தே கவளம் பராபரமே.**
>
> —தாயுமானவர்

யவனென்வாயில், யாருமறியாது—என்னும் இவ்விரண்டு பாட்டின் பொருளையும் ஒருங்கு கூட்டி, "வைத்தனை வாளா வையகத் துய்யும் வழியறி மதியழித்து" என வரும் பதிகக் கருத்தோ டொப்பு நோக்குக.

90. ரமணனென் றுரைத்தேன் ரோசங்கொளாதெனை
ரமித்திடச் செயவா வருணாசலா.

பெ - ரை: நீ ஆத்மாராமனாக இதயத்தி லென்னை ரமிப்பிக்கும் நேயப்பதியேன் றுரிமைபாராட்டி யானுன்னை இவ்வா றெல்லாங் கூறினேன். அதனாற் கோபங்கொள்ளா மல் நீ என்னை ரமிப்பிக்க வாராய்.

வி - ரை: ரமணன் - மகிழ்நன், காதலன். ரமிப்பித்தல் - மகிழ்வித்தல். உரைத்தது - "யவனென் வாயில் மண்ணினை யட்டி யென்பிழைப் பொழித்தது" (88), "யாரு மறியாதென் மதியினை மருட்டி யெவர்கொளை கொண்டது" (89) என்பன வும், அவற்றுக்கு முன்னர்க் கூறிய அவைபோல்வன பிறவுமாம். வாராய் - எழுந்தருளாய்: சித்த மறியாதபடி சித்தத்தில் நின் றிலகு திவ்ய தேஜோமயச் சித்துருவ ஸித்த பரமேஷ்டியான

நீ, நின் னருட்பிரசாதமான தன்மயானந்தத்தால் நான் சித்தோபசாந்த முறும்படி சித்தமூலமான இதயத்தே தெளிவாக விளங்காய். இரண்டுடலும் ஒருயிருமாக உணர்வா லொருமைப் பட்ட பரபக்தியான உண்மைக் காதலில், காதலர் தம்முட் பரஸ்பரம் யாதே கூறினும் யாதே செய்யினும் அதனுல் உண்மையிற் குற்றங் காண்டலும் கோபங் கொள்ளலு மில்லை யென்பது கருத்து.

91. ராப்பக லில்லா வெறுவெளி வீட்டில்
ரமித்திடு வோம்வா வருணைசலா.

பொ-ரை: இராப்பகலற்று விளங்கும் அருட்பரவெளியான இதயவீட்டில் (யாமிருவரும் இரண்டறக் கலந்து) இன்புற்றிருப்போம், வாராய்.

வி-ரை: வெறு வெளி—தன்னிடத்தில் தன்னைத் தவிர வேறொன்று மில்லாத சுத்தாகாசம்; என்றது இதயத்தை. அங்கு வேறொன்றுமில்லை யென்றது என்னையெனின், பரவெளி (சிதாகாசம்), மனவெளி (சித்தாகாசம்), பூதவெளி (பூதாகாசம்) என்ற வெளி மூன்றனுள், சித்தின்கட் சித்தம் பாரமார்த்திக நோக்கத்தில் இல்லவே யில்லாமையால் அருணசல சொரூபப் பரவெளியான அவ்விதயத்தின்கண் முதலில் மனமே யில்லாமைகொண்டு, அந்த மனவெளியி லுள்ள பூதவெளியும் அந்தப் பூதவெளியி லுள்ள பிறபூதங்களும் ஆகிய அகிலமும் அறவே யின்மையா லென்க. வீடு - அகந்தை மமதை முதலாக வுள்ள அகப்புறப்பற்றுக்க ளனைத்தையும் மனம் அறவே விட்ட நிலை—துவிதபாவமற்ற அத்துவிதானுபவத்தால் அறிவு அத்யந்தப் பிரசாந்தமடைந்த நிலை. இதயத்தை இராப்பக லில்லா வெறுவெளி வீடு என்றதால், அதுதான் சரீரத்துட் கேவலம் மாம்சபிண்ட மானதொரு பகுதியன்றி, மாயாசம்பந்தரகிதமாக எல்லையற்று விளங்கும் சுத்த சிதாகாசமென

இதயத் தன்மையை வெளியாக்கியது மட்டுமன்றி, சதோதித ஞானசூரியனாய் ஆன்மசொரூபமான அருணாசலன் அமர்ந்தருளும் அவ் விதயவெளி, இராப் பகல் (மறப்பு நினைப்பு, உறக்க விழிப்பு, கேவல ஸகலம்) என்றாற்போலக் கூறுபடுகின்ற காலபேதம் (அவஸ்தாபேதம்) அறவே தன்னிற் காணக் கிடையாத அதீதமென்றும் அறிவித்தவாறு காண்க. ஆண்டவ னருளால் ஆணவமல மென்ற சித்தமல மழிதலும் அகந்தை முனைப்பான ஜீவபோதச் சேட்டையும் அதனோ டழிந்து சித்தம் சித்தளவாகத் தீர்ந்த விதயத்தில், அங்கியல் பாகக் கிளர்கின்ற அகண்டாகார விருத்தி யென்னும் ஆன்மா கார விருத்திக்கு, அதன் தன்மயத் தன்மையாற் கோசரமாக, ஆன்ம சொரூபமான அருணாசல சிவன் ஸச்சித்தான தன் னியல்பால் இடையீடின்றி யினிது விளங்குகின்ற ஏகபோகமான சிவானுபவமே பகவானால் இங்கு வேண்டப்பட்டது. "மெய் யகத் தின்மன மென்மல ரணையினும் மெய்கலந் திடவருள்" என முன்னர்க் கூறியதனோடு இப்பாட்டை யொப்பிடுக.

92. லட்சியம் வைத்தரு ளஸ்திரம் விட்டெனைப்
பட்சித்தாய் பிராணனோ டருணாசலா.

பொ - ரை: உன்பா லுள்ள அதிதீக்ஷ்ணமான அருளஸ்திரத்தை என்பா லிலக்காக வேய்து என்னை உயிரோடுண்டொழித்தாய் (உயிருண்ணியான நீ).

வி - ரை: லட்சியம்—இலக்கு, குறி. "குறியா யெனைக் கொளக் குறையென் செய்தேன்" என முன்புங் கூறப்பட்டது காண்க. அருணாசலப் பிரம்மசொரூபமான சுத்தசைதன்யமே அருளென்பதன் பொருளாதலால், அதுவே உண்மையில், தன்னா லிலக்கப்பட்டா ருயிரை—அவர்தம் மயக்கவடிவான ஜீவத்வத்தை—தன்னுலடிபட்டழிதலினின்று தப்பாமல்வாங்கி யுண்ணும் பிரம்மாஸ்திரமாதலால், லட்சியம்வைத் தருளஸ்திரம்

விட் டெனைப் பட்சித்தாய் பிராணனோ டென்றார். "அருணையென் றெண்ணயா னருட்கண்ணி பட்டேனுன் னருள்வலை தப்புமோ" எனப் பின்னர்க் கூறுவதும், ஆங்கே, அருணாசலனருள் யாராலுந் தப்பவொண்ணாத பிரம்மாஸ்திரமா மென இங்குக் கூறிய கருத்தை மேலும் வலியுறுத்துவதாதல் காண்க. அஸ்திரம் விட்டென்றது அதுதான் விடுபடையாதலா லென்க. பட்சித்தல் - உண்டல். பிராணன் - உயிர், ஜீவன். அருணாசலன், தோலிருக்கச் சுளை விழுங்கினாற் போலத் தம் முடலிருக்க வுயிருண்டமை கூறலால், தமது ஜீவத்வம் போக்கி அவன் ஜீவன்முக்திபத மளித்தா னென்று கூறினாராம். எனைப் பட்சித்தாய் பிராணனோ டென்பதனை, "இன்னுயிர் பலிகொளு மிஃதென்...உயிர்க் கொலி யருணமா கிரியே" என்னும் அருணாசலபதிகப்பகுதியோ டொப்பிடுக.

93. லாபநீ யிகபர லாபமி லெனையுற்று
லாபமென் னுற்றனை யருணாசலா.

பொ-ரை: தன்னை யடைந்தார்க்குப் பரிபூரண பரம லாபமான நீ இகபரலாப மிரண்டுங் கெட்ட வென்னைப் பொருளாக வேற்றதால் என்ன லாபம் பெற்றாய்?

வி-ரை: இகபர மிரண்டினிலு முயிரினுக்குயிராகி எங்கு நிறைகின்ற பேரின்பப் பரமான்ம சொரூபமான வருணாசலனே ஆதியொடு மந்த மாகிய நலன்க ளனைத்துமாக எல்லோராலும் முடிவாக வடையத்தக்க பரம புருஷார்த்தமாகலான் லாப நீ யென்றும், இகபரமெதையுங் கருதாமல் ஊழாற் கிடைத்ததை யுண்டு வறிதே சோம்பிக் கிடந்த வென்னை யென்பார் [நானென்னு நினைப்பின் முனைப்பின்மையின், அந்தரியாமியது திருவருட்பிரேரணையாற் காரணார்த்தமாகத் தாமியக்கப்பட்டா லல்லது, சொரூபானுசந்தானத்துக் கயலான ஜீவபோதச் சேட்டை தம் மியல்பாற் சற்று மற்றுச் சும்மா கிடத்தலே—

தூஷ்ணீம்பாவமே—பக்குவ ஜீவர் மோக்ஷோபாயமாகச் செய்யத்தக்க சிறந்த சாதனை என ஈண்டுத் தேறவேண்டுவதாம்.] இகபர லாபமி லேனை யென்றும், பூரணத்தோடு பூரணமே பொருந்தினும் பூரணம் பூரணமே யாவதன்றி அதனிற் கூடுதலின்மையின், என்னாலே முழுமுதற் செம்பொருளான வுனக்கு எவ்வித லாபமு மின்றென்பார் எனையுற்று லாபமேன் னுற்றனை யென்றுங் கூறினார். அத்துவித சுத்தசைதன்ய சொரூபமான ஆன்மாவாந் தன்னையன்றிப் பரமார்த்தத்தில்யாதுமின்மையின் உண்மையில் ஒன்றுமே தானன்றாகவும், சுத்தமோ அசுத்தமோவான 'நா' னென்னும் மனோமாயா சம்பந்தக் கற்பனாவிலாசத்தால் விசித்திரமான ஜகஜீவபரங்கள் உண்மைபோலவும் உண்மையாகவே வெவ்வேறு போலவும், திரிபுடி பேதத்தோடு கூடித் தோற்றும் விவகாரத்திலும், அவை யனைத்தும், சுத்தாத்துவித நிருவிகற்ப ஸச்சித்தாய் அவற்றுக் கதிஷ்டானமான ஏகான்மாவாந் தன்னினும் எவ்விதத்திலும் வேறாகாது தன்மயமாகவே யிருத்தலின் அவ் வெல்லாமே தானாகவும் (உள்ளது. 1)—அவ்வாற்றா லிருவிதத்தும் ஸர்வ பரிபூரணமாய் இருந்தொளிரு மியல்பாகி என்றுமுள்ள வியற்கையான பரவெளி வடிவனாகலான் அருணாசலன் முழுமுதற் செம்பொருளாம்.

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தே
னீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே

எனத் திருவாசகத் தமிழ்மறை சாற்றல் காண்க. லாபநீ-நிரதிசயானந்த சொரூபப் பரமான்ம லாபமாக எனக்கு வாய்த்த நீ எனவுமாம்.

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா யார்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்

என்று பாடிய மணிவாசகர்போல் ஆசிரியர் பகவானும் அருணசலன்மாட்டுத் தமக்குள்ள விசேட வுரிமைபற்றி அவனோ டிவ்வாறு கூறி விநோதார்த்தமாக அசதியாடினாராம். அசைபடக் காட்சியில் ஆதாரமான திரைச்சீலைக்கண் அசைகின்ற நிழல் வடிவங்கள்போல், பரந்தாம மெனப்படும் அகண்டாத்துவித ஸச்சித்தான ஆன்மசொரூப வருணசலப் பரவெளியில் ஸகலமான ஜக ஜீவ பர பேத விவகாரங்களும் வெறுங் கற்பிதமாதலால் அவற்றின் கூடுதலாலோ குறைவாலோ—தோற்றத்தாலோ மறைவாலோ—ஆதாரபட (திரைச்சீலை) ஸ்தானீயமான அவ்வருணசலத்துக்கு உண்டாவதொரு லாபநஷ்டஞ் சற்றுமில்லை என்றறிக.

94. வரும்படி சொலிலை வந்தென் படியள
வருந்திடுன் றலைவிதி யருணசலா.

பொ - ரை: நின்பா லென்னை வரவழைத்தா யன்றோ? அதனால் (நின் றலைமேற் சுமந்துகொண் டாயினும்) வந்து நீயே என் யோகக்ஷேம பாரம் முழுதும் வகித்தருள். (அது மிகக் கஷ்டமான காரியமாயிற்றே யெனின் ஆகுக!) நீ கஷ்டப்படு. அது நினக்குத் தலைவிதியாம்.

வி - ரை:

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே

என்று அப்பர்சுவாமிகள் பாடியபடி, கடவுளை நம்பினோர் கைவிடப்படார்; இறைபணியென்னும் ஆண்டானருள்வழி நிற்கும் அடியார்க்கு என்றும் யாதொரு குறைவு மின்றாக அவர்க்காவன வெல்லாம் அவனே யகமகிழ்ந் தளித்தருள்வான் எனத் தேற்றமாகப் போதிக்கு முகத்தால்,

अनन्याश्चिन्तयन्तो मां ये जनाः पर्युपासते ।
तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम् ॥

என்னும் கீதா (IX-22) ஸ்லோகத்தை இப்பாட்டு நினைப்பூட்டுகின்றது.

இருக்கு மிடந்தேடி யென்பசிக்கே யன்ன
முருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன்—பெருக்க
வழைத்தாலும் போகே னனவரதந் தேக
மிளைத்தாலும் போகே னினி

என்ற பட்டினத்தடிகள் திடவைராக்கிய சித்தம், வந்தேன் படியளா என்றதனுல் இயல்பாகவே ஆசிரியர்பாற் புலனுகின்றது. அன்றன்றுங் காலந் தப்பாது வந்து படியளப்பது கஷ்டமேயாயினும், என்னை நீயே வரும்படி சொன்னதனுல், அவ்வாறு படியளக்கும் அந்தக் கடமையைக் கட்டாயஞ் செய்து அதனுல் வருங் கஷ்டத்தையும் அனுபவித்தே யாகவேண்டு மென்பார் வருந்திடுன் றலைவிதி யென்றார். இனி, அடியா ரொருவர் ஆண்டானை நோக்கி யவ்வாறு கூற மனத்தாலுங் கருதாராக, பரபக்தியிற் பழுத்த பாகவதோத்தமரான ஆசிரியர்பகவான்,

என்னி னியாரு மெனக்கினி யாரிலை
என்னி னும்மினி யானொரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே

என்று அப்பர்சுவாமிகள் கூறியாங்கு, தம் மாருயிர்க்குயிராய்த் தம்மினுந் தமக்கினிய அருணுசலனை நோக்கித் தம் மனமு

மொப்பி வாய்விட்டும் அவ்வாறு கூறினரேல், அதன் கருத்து வேறும். என்னை? சொப்பனத்திற்போல மனமயக்கத்தாற் சிந்தனுமாத்திரமாக,—ஆனுலும் மாயாசக்திபலத்தா லுண்மை போல—வீணே கர்த்தத்துவங்கொண் டுழலும் ஜீவகோடிகளுக் கல்லது, சொரூபசைதன்யத்தா லகண்டமான தன் சந்நிதிமாத் திரத்தால், கதிரவன் சந்நிதியிற்போலக் காரியங்க ளெல்லாமே தத்தம் மியல்பா லொழுங்காக நடக்கப்பெற்ற (ஸர்வசக்திமா! ஞன) அருணுசலனுக்கு, விபரீதபுத்தி படைத்த பரதிருஷ்டியா லன்றிச் சற்றென்கிலும் எதுவும் கஷ்டமன் றென்பது கருத்து. எவ்வெவ்வளவு காரியங்கள் எவ்வெவ்வள வொழுங்காக எங் கெங்கு நடைபெறினும் அருணுசலன் உண்மையில் அகர்த்தா வென்றும், எனவே, மகத்தான பஞ்சகிருத்தியங்க ளுட்பட 'ஸர்வம் சிந்மாத்ர' மென்றும் தாற்பரியம். தன்னிழப்பு வாயி லாக அனுபவத்தால் இவ்வுண்மை யுணர்ந்தோரே முடிவான அமைதிநிலை யடைந்தோராவர். சோலிலை என்பத னீற்றில் எதிர்மறை யோகாரம் செய்யுள் விகாரத்தாற் புணர்ந்துகெட் டது.

95. வாவென் றகம்புக்குன் வாழ்வரு ளன்றேயென்
வாழ்விழந் தேனரு ளருணுசலா.

பொ-ரை: நின்னே டென்னையும் வாவென் *றுட னழைத்துக்கொண்டு இதயவீட்டிற் புக்கு நின் நிரதிசயா னந்த சொரூப ஸாக்ஷாத்கார வாழ்வை நீ எனக்கங் கருளிய ஞான்றே, சோகமோகங்களுக் கிடமான என் பரிச்சின்ன

*வைகுண்ட நாதனை திருமால் வைகுண்ட வேகாதசி யன்று தன் னடியரையெல்லாம் பரமபதத்துக்குத் தன்னே டுடனழைத்துச் செல்வதாக விஷ்ணுவாலயங்களிற் புராதன காலந்தொட்டு நிகழ்த்தப்பெற்று வருகின்ற ஐதிஹ்யத்தாற் குறிக்கப்படுவதன் அத்யாத்ம வுண்மை இவ் வருட்செயலே போலும்.

வியக்தித்வ ஜீவபோத வாழ்வை யான் இழந்தொழிந்தேன். அது நின் னருண்மாட்சியாம்.

வி - ரை : வாவென்று-தன்னருளால் இறைவனே ஒருவனை இதயத்திற் கொண்டுசேர்த்தா லொழிய, ஸர்வசக்தியுள்ள ஈசுவரநிர்மிதம் அவ்வாறுன துபற்றிக் கடன்மடை திறந்த வெள்ளம் போற் கனவேகமாகத் தன்னியல்பானே இந்திரிய வாயிலாக வெளிவிஷயங்களிற் பாயு முணர்வை, அற்பசக்தரான தம் மாற்றல் கொண்டே எதிர்த்து நீந்தி ஆங்குச் சேர்தல் எத்திறத்தோர்க்கும் இயலா தென்பதை இது விளக்குகின்றது. நும்பினெம்மை நுழையப் பணியே யென்பாரும்—அப்பர் தேவாரம். உடனழைத்துக்கொண் டென்பது அவாய்நிலையான் வந்தது. இறைவன் அகம்புகுவத னுண்மை வீடுவிட் டென்னும் 97-ஆம் பாட்டில் விளக்கப்படும்; ஆங்கு நோக்கிக்கொள்க. சிவவாழ்க்கை ஆதார வுண்மையும் ஜீவவாழ்க்கை அதன்கண் ஆரோபத் தோற்றமு மாகலான் அவ்விரண்டும் எவருள்ளத்தும் ஏககாலத் தொருங்கு நிகழாமை, உன்வாழ்வரு என்றே என்வாழ் விழந்தேன் என்பதனு லுணர்த்தப்பட்டது. [ஆசிரியவடிகள் உலகியலுக்குப் புறம்பாக வொதுங்கி நிற்குங் காரணமும் இதனு லறியப்பட்டது.] “என்போதத்தைப் பறித்து உன் போதத்தைக் காட்டினை” (73) எனவும், “என்வாயின் மண்ணினை யட்டி யென்பிழைப் பொழித்தது” (88) எனவும் முன்னர்க் கூறியவை, உன்வாழ்வரு என்றே யென்வாழ் விழந்தேன் என்றதனே டொப்பு நோக்கற் குரியனவாம். ஸார்வபௌமானந்தம் முதலாகத் தாரதம்மியமுள்ள ஸகல விஷயானந்தங்களும், சிஜ்ஜடவகந்தைவடிவான ஆணவமலமற்றதால் வெறுஞ் சிற்பரவெளியாக விளங்குகின்ற விதயத்தில், அதிப்பிரசாந்தமாகக் கிளர்கின்ற யதார்த்த சொரூபமாகவே, நிர்விஷயமாக நிகழ்கின்ற நித்யநிரந்தரமான அந்த நிரதிசயப் பிரம்மானந்த சாகரத்தின் ஏகதேசத் திவலைகளே யாகலான், அதனை யடைந்த தமக்கு இதனை யிழந்ததில் எவ்வித நஷ்டமு மில்லை யென்பார் அருள் என்றார்.

96. விட்டிடிற் கட்டமாம் விட்டிடா துனையுயிர்
விட்டிட வருள்புரி யருணசலா.

பொ - ரை : (உயிர்விடுங்கால், யானுன்னைப் பிரஜ்ஞானன்ம சோரூபமாக என் னுள்ளத்தாற்) பற்றுதொழியின் மீட்டும் பிறவித்துன்பத்துக் கேதுவா மாகலான், (இறுதிக் காலத்திற் பிரமாதத்தால்) யானுன்னை மறந்தொழியாது சோரூபத் தியானபர ணகவே உயிர்விடுவேனுக நீ எனக் கருள்செய்.

வி - ரை : விட்டிடின் - நீ எனக் கருள்புரியாது கைவிட்டிடின் என்றுமாம். * ' கருணையா லென்னை யாண்டநீ எனக்கு உன் காட்சிதந் தருளிலை யென்றால் இருணலி யுலகி லேங்கியே பதைத்து இவ் வுடல்விடி லென்கதி யென்னும் ' என்பார் விட்டிடிற் கட்டமா மென்றார். இறுதிக்காலத்தில் யாவர் எதனை எண்ணுவர் அதுவே யவர்க்கு மறுபிறப்பாக வந்தடைதலான், சம்சாரதுக்கத்துக் கேதுவாக மாயாமோகத்தால் வரும் பிறவியை மாற்றிப் பிறவாநிலையான பிரம்மபதம் பெற வேண்டும் பெரியார்க்குப் பிறப்பிறப்பற்ற பிரஜ்ஞானன்மசொரூப வருணசலத்தியானம் [சுக்கிலத்தியானமென வழங்கப்படுவது மிது] அந்திய காலத்தில் அத்தியாவசியம் என்றறிக. அந்திய காலத்தில் அந்தத் தியானம், கடுமையான மரணவாதனையிலுஞ் சிந்தை கலங்காதபடி ஒருவ ருளத்திற் கிளரவேண்டு மாயின், அவர் முயற்சியை வியாஜமாகக் கொண்ட அருணசலனருளால், அவரிதயத்தில் அது, தைலதாரை போலத் தொடர்ச்சியாகவும் முயற்சியின்றியே யியல்பாகவும் முன்பே யியல்வதாகவேண்டு மாதலின், இறுமுனம் அருள்பற்றிட வருள்புரி என முன்னர்ப் பிரார்த்தித்ததாம். ஏற்கெனவே வாசனக்ஷயம் தங்களுக் கேற்பட்டிருந்தாலொழியப் பிறவித்துன்பத்துக் கேதுவான எண்

* அரு. பதி. 1.

ணிறந்த வெண்ணங்கள் பூர்வ வாசனுவசத்தால் இறுதிக் காலத்தே இதயத்து மேலாடித் தோன்றுமாகலான் அவற்றை மாற்றத் தீவிரமாகப் பன்னெடுங் காலஞ் செய்யும் தியானுப் பியாசபலம் முமுக்ஷுக்களான ஸாதுக்களுக்கு முன்பே இன்றி யமையாத தாகின்றது.

अन्तकाले च मामेव स्मरन्मुक्त्वा कलेवरम् ।
यः प्रयाति स मद्भावं याति नास्त्यत्र संशयः ॥

—பகவத்கீதை, VIII-5

97. வீடுவிட் டீர்த்துள வீடுபுக்குப் பையவுன்
வீடுகாட் டினையரு ளருணாசலா.

பொ - ரை : (உன தருட்கயிற்றல்) வீட்டினின் றென்னை வெளியே யிழுத்து இதயவீட்டிற் புகுந்து, சற்றே மெதுப்பட அதுவே நிரந்தரமான நின் னுண்மைவீடாக நீ எனக்குக் காண்பித்தாய். (அவ்வாறு காட்டியது) என்பா லுனக்குண்டான திருவருளாம்.

வி - ரை : அருணாசலன் அடிகளை வீட்டினின்று வெளியே யிழுத்தது, பந்தபாசங்கட் கிடமான அவ்வீட்டி லமர்ந்தே வைராக்கியத்தோடு கூடித் தீவிர பக்திசாதனையான தவம் புரிதல் எவ்வளவு பண்பட்ட வுள்ளத்தோர்க்கும் பல்வகை யிடையூறுகளால் எளிதி னியைவதன்று என வெண்ணிப் போலும். தமது நிவிருத்திப்பிராரப்தம் வீட்டினின்று தம்மை வெளியே யிழுத்ததாக, அதன் செயலை, அந்த நியதியோடு அதன் நியந்தாவான அருணாசலனுக்குள்ள இயைபுபற்றி உபசார மாக அவன்மே லேற்றிக் கூறினார் ஆசிரியர் பகவான் எனினும் அமையும். அடிகள் இதயவீட்டில் அருணாசலன் புக்கது, வாசனு க்ஷயத்தா லறவே தூய்தாக்கி அவ் விதயவீட்டைத் தனக்கே முற்றூட்டான கோயிலாகக் கொள்ளுங் கருத்தா லென்க;

அன்றி, அவ்வாறு தான் கோயிலாகக் கொள்ளுமுன் அதற்குத் தகுதியாக அடிக ளிதயத்தி லுள்ள பக்திவைராக்கியங்களை ஆராய்ந்து சோதிக்கக் கருதி எனினுமாம். இனி, அருணசலன் உண்மையிற் புதிதாக ஓரிடத்திற் புகுதலில்லை—புகுத வொண்ணுது; என்னை? அதுதான் நித்ய ஸித்தமான அவன் ஸர்வ வியாபக பரிபூரணத்தோடு முரண்பட் டிழுக்குவ தாகலின் என்க. ஆயின், அடியரகத்தில் ஆண்டவன் புகுவதாக ஆன்றோர் நூல்களில் ஆங்காங் கடிக்கடி கேட்கப்படுவ தென்னையெனின், அத னுண்மை, 'நானு' னென்று, வாலறிவு வடிவான ஆன்ம சொரூப ஸதோதய சூரியனுக அனைத்துயிர்களகத்தும்—அவை தாம் அங்கவ்வாறு தன்னைக் காணினுங் காணுவிடினும்—என்றும் இடைவிடா திருந்தொளிருந் தன்னைக் காணத் தடையாயிருந்த அவர்கள் வெளிமுகமான விஷய நோக்கத்தை அகமுகமான ஆன்மநோக்கமாக மாற்றுமதனுலே, தன்னருளுக்குப் பாத்திர மாகத் தானே வரிக்கு மவர்களுக்கு ஆங்குத் தன்னைப் புதிது போல் அவன் காட்டிக் கொடுத்தலேயாம். அங்ஙனமாயின், உண்மை யுணர்ந்த அடிகளும் அவ் வுண்மையை உள்ளபடியே வெளிப்படையாகக் கூருமல் அதற்கு நேர்மாறுபோல் வேறு விதமாகக் கூறியதென்னையெனின், ஆண்டவனருளாலுண்டான தங்கள் சகஜாநுபவத்தால் அதிசூக்ஷமமான பரமார்த்த தத்வ ரகசியங்கள் பலவற்றை ஆங்காங் கிடையிடையே அநாயாச மாகத் தோத்திர ரூபத்தில் வெளியிடுகின்ற நம்மாழ்வார் மணி வாசகர் முதலிய ஏனைப் பெரியோர் நூல்கள் யாவும் போலவே இந்நூலும்—அதன் முழுத் தன்மையிலும்—விசாரநோக்க முள்ள வெகு சிலர்க்குத் தவிர மற்றவர்க்கெல்லாம் பக்திபர மான தோத்திர கிரந்தமாகவே பயன்படுதலான், சிஷ்டாசார மான அவ்வுயர்ந்தோர்மரபோடு மாறுகொள்ளாமல் அடிகளும் அதை யனுசரித்தே கூறலாயின ரென்க. உள்ளம் என்றது சாமானியமான மனத்தையேயன்று; உள்ளலான மனத்துக்கு உற்பத்திஸ்தானமாக வமைந்த உண்மை (ஸத்பாவம்) யளவான வுணர்வுநிலையை. அது சரீரசம்பந்த மற்றதென முன்பே

கூறப்பட்டது. மனம் உள்ளம்புகின் புக்காங்கே அதன் நினைப்புரு அழிவதுமட்டு மன்றி, அங்குநின்று மனம் எக்கருத்தையேனும் எள்ளள வெண்ணப்புகினும் எண்ணுமுன்பே அது அங்கு நின்று வெளிப்பட்டுவிடும். எனவே நினைப்புவடிவான மனம் அங்கின்றும். [நினைப்பற்று நிகழும் மனமே—நினைப்பு மறப்பிரண்டும் உண்மையில் ஒன்றைவிட் டொன்று பிரியாமல் என்றும் இணைந்தே யியல்கின்ற தொந்தங்க ளாதலால், மறப்பு நினைப் பிரண்டு மற்ற மனமே—உள்ளமெனக் கொள்ளல் பொருந்தும்.] மனம் அங்கின்றாகவே, மனோமயமான ஸகல துவிதப் பிரபஞ்சமும் அங்கு முடிவதாம். உள்ளலோ உள்ளலள வான வுலகோ ஒன்றுமற்ற சுத்த வுணர்வுநிலையான வுபசாந்த வுள்ளமே வீடு—முக்தியெனக் கூறப்படும் அருணாசலக் கடவுளுலகு—ஆதலால், உளவீ டென்றும் உன்வீ டென்றும் அது கூறப்பட்டதென் றறிக. வீடுவிட்டென்றதில் வீடென்றது பௌதிகத்திற் பொதுவாக, ஆசிரியர் பகவான் ஆதியில் அருணைக்கு வரும் வரையில் மதுரையில் வாழ்ந் தகன்றுவந்த மனையை யாயினும், இங்குக் கூறியவாற்றால், அத்யாத்மத்திற் சிறப்பாக, ஜீவனுக் குறைவிடமான மனத்தையே அது குறிப்பதாம். உள வீடு என்றதில் வீடு-தகராகாசம், சிற்றம்பலம். உளவீடு புக்கு - இதயவீட்டில் என்னைப் புகுவித்து எனவுமாம். இப்பொருளில், புக்கென்பதனை, பிறவினை யுணர்த்தும் விகுதி புணர்ந்துகெட்டதாகவோ, அன்றித் தன்வினை பிறவினைப் பொருளில் வந்ததாகவோ கொள்க. உன்வீடு காட்டினை - நின் கைவல்யபதம் எனக்குக் காட்டினை எனவுமாம். [பையவுன் வீடு காட்டினை என்றதனாலே, அருணாசல ஞானையால் அண்ணமலை வந்தடைந்த சிறிதுகாலம் பொறுத்தே ஸஹஜ நிஷ்டையான ஸ்திதப்ரஜ்ஞை அடிகளுக் குண்டாயிற்றென ஊகிக்கக் கிடக்கின்றது ; ஆயின் அது, பகவான் சரித்திர சம்பந்தமான வேறு விஷயம் ஈண்டைக்கு வேண்டாதது.] இனி, பையவுன் வீடு காட்டினை என்பதற்கு, அவ்வாறன்றி, நின் கைவல்யபதம், என் னண்டையிற் புறத்துளோர்க்குப் புலப்படத் தோற்றமல், என் னுள்

ஞுணர்வில் அதிரகசியமாகவும் சூக்ஷமமாகவும் எனக்குமட்டிற் குறிப்பாக விளக்கினை எனக் கூறினும் பொருந்துவதாம். "அசையியற் குண்டாண்டோ ரேஎர்யா னோக்கப் பசையினள் பைய நகும்" என்னுந் திருக்குறள் நோக்குக. அகந்தைமனக் கற்பனாமாத்திரமாய் இரட்டை முப்புடிகளான பேதத்தோற் றங்களோடு அவற்றின் விளைவான ஆசாபாசபந்தங்க ளனைத்தி னின்றும் அறவே விடுபட்டு (ஆழப் படிந்த விதயத்தே, அதி சூக்ஷமமான சத்தாமாத்திரமாக) விளங்குவதாகலின், கைவல் யம்—அத்துவிதலச்சித்தான அருணாசலன் பரமார்த்த சொரூப வியல்—வீடு எனப்பட்டது. அருளா லீர்த்துப் புக்குக் காட்டினை எனக் கூட்டினு மமையும்.

98\. வெளிவிட்டே னுன்செயல் வெறுத்திடா துன்
வெளிவிட் டெனைக்கா வருணாசலா. [னருள்

பொ - ரை: (இரகசியத்தில் என் னுள்ளத் தியற் றிய) நின் கள்ளச் செயல்களை இத்துதிமாலை வாயிலாகப் பலரறிய யான் வெளியிற் பரப்பினே னென்று வெறுத் தொழியாது, திருவருட் பரவெளியான நின் கைவல்லிய முத்தியிற் கூட்டி என்னைக் காத்தருள்.

வி - ரை: "தெய்வமென் றுன்னைச் சாரவே யென்னைச் சேர வொழித்தாய்" (48); "பித்துவிட் டுனைநேர் பித்தனாக் கினை" (66); "பெயர் நினைத்திடவே பிடித் திழுத்தனை" (70); "பேய்த்தனம்விட விடாப்பேயாப்பிடித் தெனைப் பேயனாக்கினை" (71); "பொடியான்மயக்கி யென்போதத் தைப்பறித் துன்போதத்தைக் காட்டினை" (73); "மைமய னீத் தருண்மையினா லுனதுண்மைவச மாக்கினை" (84); "யாருமறியா தென்மதியினை மருட்டி யெவர் கொளை கொண் டது" (89); "லட்சியம்வைத் தருளஸ்திரம்விட் டெனைப் பட்சித்தாய் பிராணனோடு" (92); "சிந்தித் தருட்படச்

சிலந்திபோற் கட்டிச் சிறையிட் டுண்டனை" (103)—என்றாற்போ லிசைத்தவற்றை எண்ணிப்போலும் வெளிவிட்டே னுன்செயல் என்றார். வெளிவிடல் - வெளியில்விடல் என இரண்டிடத்தும் ஏழாம் வேற்றுமைத் தொகை. அருள்வெளி - சிதம்பரம், சிதாகாசம். அத்துவிதமான சுத்தஜ்ஞானானந்த சொரூபமாய் அருணாசலன் அருவத்திருவுருவான அதுவே பரமார்த்தமுடிவாக என்றுமுள்ளது. அருள்வெளி விடல் - அந்தத் திருவருட் பர வெளி வடிவான தன்னிலே தன்மயமாக்கிக் கோடல்: அத் துவித சுத்த ஸச்சித்தான ஏகான்மாவாந் தன்னிடத்தினின்று ஜீவனை வேறுபோலப் பிரித்த தேகாத்மபுத்தி வடிவான அகந்தை மயக்கத்தை—கற்பித ஜீவபாவமான உபாதியுணர் வுகளை—தன் னருள் விளக்கத்தாற் போக்கி அத்துவித ஞானுனுபவ வாயிலாக அடிகளைத் தன்னோ டைக்கியப்படுத்திக் கொள்ளல்; சிறை யழித்து நிர்வாணமாச் செய்தல் (30). அதுவே அருட்சிறை யளித்தலான உண்மைக் காத்தலாக வறிக. அருள் வெளிவிட்டு - உனது திருவருளை எனக்கு வெளிப்படுத்தி: என் னுள்ளத்திற் பிரகடனம் பண்ணி என்றுமாம்.

99. வேதாந் தத்தே வேறற விளங்கும்
வேதப் பொருளரு ளருணாசலா.

பொ - ரை: வேதாந்தத்தாலே தன்னினு மன்னிய மற விளங்கும் சற்போதப் பொருளை இதயத்தில் எனக்கனு பவமாக விளக்கியருள்.

வி - ரை: ஆங்காங் கிடையிடையே குறிப்பா லுய்த் துணர வல்ல பண்பட்ட விவேகிகளான வெகு சிலர்க் கன்றி மற்றவர்க்கெல்லாம் அன்னா ரதிகாரத்துக் கேற்பக் கர்மவுபா சனைகளையே துவிதபக்ஷம்பற்றி வேதம் பெரிதுஞ் சிறப்பித்துக் கூறுவதாக, ஆன்மாவைப் பிரம்மத்தினின்று வேறுபடுக்குங் கற்பனைகளான ஜீவோபாதி ஜீவபோதங்களினின்று நீங்கிய

சுத்த சற்போதவடிவ ஆன்மாவே பிரம்மமென்னும் அத்துவித வுண்மையான பரமார்த்த ஞானத்தை ஞானகாண்டமான வேதாந்தமே வெளிப்படையாக விளக்கலான் வேதாந்தந்தே வேறற விளங்தும் வேதப் பொருள் என்றும், அதுதான் குரு சாஸ்திரங்களா லன்றி வேறெவ்விதத்தாலும் விளங்க லரிதாக லின் அருள் என்றுங் கூறினர். "குருவுரு வாயொளி ரருணசலா" (19) என, அருணசலனே குருவாக முன்புங் கூறப் பட்டமை காண்க. வேதாந்தந்தே - ஞானவரம்பான மோனத் தில் என்றும், வேறற விளங்தும் - இரண்டற விளங்கும் என்றும், வேதப்பொருள் - வேதத்திருவுள்ளக்கிடக்கையாக ஆன்றோரான் முடிவாகத் துணியப்பட்ட பொருள் என்றுமாம்.

100. வைதலை வாழ்த்தா வைத்தருட் குடியா
வைத்தெனை விடாதரு ளருணசலா.

பொ - ரை : என் இகழ்ந்துரையைப் புகழ்ந்துரை யாகத் திருவுளம்பற்றி, திருவருட் குடியாக (நின் சிவானந் தக் கோற்றக் குடைநிழலின் முன்னடியாரோடு கூட்டி) வைத்து, என்னை என்றுங் கைவிடாமல் இனிது காத்தருள்.

வி - ரை : வைதல் என்றது அருணசலவரனை யடைதலிற் றமக்குள்ள அதிதீவிர வாசைப்பெருக்கத்தான்மட்டுமன்றி அவ னருளாலுண்டான உவகையாலும் உரிமையாலுங்கூடக் கடுமை போலக் கையாண்ட வாசகத்தைக் குறித்தென்க. அத்தகைய வைதல் வகைகளுக் குதாரணம் இதற்குமுன் இந்நூலில் ஆங் காங்கு வந்தன காண்க. குற்றங் குணமாகப் பணித்தருள (19) முன்பே வேண்டினற் போல, வைதலை வாழ்த்தா வைத்தருள அருணசலனை ஈண்டுப் பிரார்த்தித்தார். புன்சொலை நன்சொ லாப் பொறுத்தருளப் (107) பின்னும் அவ்வாறே குறையிரந்து கூறுவர். வைதலை வாழ்த்தா வைந்து என்றதனல் மழலையாற்

கூறும் மகவின் வசைமொழியை இசைமொழியாக இனிதுவக்கும் அருமைத் தந்தையாகவும், அருட்குடியா வைத்து என்றதனுல் மன்னுயிரைத் தன்னுயிராகவே மதித்து ஒருகுடை நிழலின் உலகெலாமோம்பும் ஏக சக்ராதிபதியான இறையாகவும் ஆசிரியர் பகவான் அருணசலனைத் தமக்குக் கருதினராம். ஆண்டானேடடியார்க் குள்ள இவ் விருவகை யுறவுகளையும், முறையே சற்புத்திரமார்க்க மென்றும் தாசமார்க்க மென்றும் ஆன்றேர் வழங்குவர். வை தலை வாழ்த்தா வைத்து - என் சென்னியில் (உன் னருட்கரத்தை) எனக்கு வாழ்த்தாக வையாய்; அவ்வாறு வைத்து என்றுமாம். இப்பொருளால் 'அத்தமத்தக சையோக' மென்னுந் தீக்ஷை கூறப்பட்டதாம் அருட்குடி - அருட்பேற்றுக்குரிய பிரஜை. வைத்தல் - திருவடிநிழலில் வைத்தல் என்றுமாம்.

101. அம்புவி லாலிபோ லன்புரு வுனிலெனை
யன்பாக் கரைத்தரு ளருணசலா.

பொ - ரை: தண்ணீரில் ஆலங்கட்டி அத் தண்ணீர் மயமாகக் கரையப்பெறுவது போல நின் னன்புருவான சோரூபத்தில் நானும் அவ் வன்புருவான தன்மயமேயாய் உன்னே டொன்ருகக் கலக்க என்னைக் கரைவித்துக் கொண்டருள்.

வி - ரை: கரைத்தல் - துவிதத் தோற்றத்துக்குக் காரணமாய் மனக்கற்பனு மாத்திரமான உபாதியுணர்வுகளைப் பரபக்தி வடிவான ஆழ்ந்த மோனனுபவத்தாற் பற்றற விடுவித்தல். தண்ணீரும் ஆலங்கட்டியும் முறையே திரவபதார்த்தமும் திடபதார்த்தமுமாகப் புறத்தோற்றத்தால் வேறுபோல்வ தன்றி உண்மையில் ஒன்றேயாவது போன்று, சிவனுஞ் சீவனும் கற்பனையான உபாதியுணர்வுகளால் வேறுபோல்வதன்றி உண்மையான இருக்குமியற்கையால் இருவரும் ஒன்றேயாக வுணர்க.

இருக்கு மியற்கையா லீசசீ வர்க
ளொருபொரு ளேயாவ ருந்தீபற
உபாதி யுணர்வேவே றுந்தீபற.

—உபதேசவுந்தியார்

உண்மையில் ஆலங்கட்டி தண்ணீரினும் வேறாயின் அது எஞ்ஞான்றும் எவ்வாற்றானும் அத் தண்ணீரோ டொன்றாகக் கரையலாகாமைபோன்று, ஜீவனும் சிவத்தினின் றுண்மையில் வேறாயின் அவன் அச் சிவ சொரூபத்தோ டிரண்டறக் கலக்கும் முடிவான அத்துவிதமுக்தியும் எவ்வுபாயத்தானும் எஞ்ஞான்றும் அவனுக்கு அறவே யின்றாகவொழிய, அதுவே பரமுக்தியாக வேதாகமாந்தங்கள் அறுதியிட் டறிவிக்கும் மகாவாக்கிய மந்திரங்களும் அடியோ டவலமாவனவாம். ஆகலானன்றே,

அப்பொருளு மான்மாவு மாரணநூல் சொன்னபடி
தப்பிலாச் சித்தொன்றாஞ் சாதியினல்—எப்படியும்
தேர்ற் றுவிதஞ் சிவாகமமே சொல்லுநிட்டை
யாருமிடத் தத்துவித மாம்

என அஞ்ஞானியான ஜீவன் சம்சாரபந்த நிவிருத்தியின் பொருட்டு ஞானசாதனை செய்யவேண்டியிருப்பது கொண்டு சாதனகாலத்தின் மட்டுந் துவிதஞ் சாற்றும் துவிதாத்துவித சமரசமான தாயுமானவர் * மதத்தையும் உடன்படாராய் மறுத்து,

சாதகத்தி லேதுவிதஞ் சாத்தியத்தி லத்துவித
மோதுகின்ற வாதமது முண்மையல—வாத்ரவாய்த்
தான்றேடுங் காலுந் தனையடைந்த காலத்துந்
தான்றசம னன்றியார் தான்

எனத் தாங்கண்ட உள்ளதுநாற்ப தென்னு முபநிடதத்தில் அறுதியிட் டுரைத்தார், தகுதியுள்ளார்க்குத் தம் மனுபவவுண்

---

* இதுவே இருடி ஒளடுலோமியின் மதமென்பர்.

மையை உள்ளதுள்ளபடி நேர்முகமாகவே நிரங்குசமாக நிகழ்த்தும் ஆசிரியர் பகவான். மெய்ஞ்ஞானத்துக்குப் பிரதிபந்தகமான அஞ்ஞானாவரணத்தை யகற்றுதற்கண் இன்றியமையாது வேண்டப்படும் விசார நிஷ்டா சாதனையின் ஆவசியகம்—சாத்திய பூர்வமான சாதன காலத்திலும் அத்துவித மொப்பின் அவ்வாவசியகம் இல்லாதொழிந்துவிடுமே எனத் தாயுமானவர் வீணே யஞ்சியது—அவ்வா றெப்பலால் உண்மையிற் சற்றும் பாதிக்கப்படாமல், இப்பாட்டிற் பகவா னெடுத்துக்காட்டிய தசம னுதாரணத்தால் முன்போலவே நிற்றல் காண்க.

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே

என்னுந் திருமந்திரத்தோடு இப்பாட்டுக் குள்ள ஒற்றுமை நயம் ஊன்றி யாராய்ந்தறிதற்பாலதாம்.

சிதானந்த சொரூபத்தால் அன்புருவான சிவத்தில் அம்புவிலாலிபோலத் தானும் அவ் வன்புமயமாகவே கரைந்து கலத்தலான இப் *பரபக்தி மெய்ப்பொருளி னுண்மையிற் றன் னுண்மையினை யோர்ந்தொடுங்கி யொன்றலான †பரஞானத்தோடு சொரூபத்தாலும் அனுபவத்தாலும் உண்மையில் ஒன்றேயாத லுணர்க.

---

* பாவ பலத்தினாற் பாவனா தீதசற்
பாவத் திருத்தலே யுந்தீபற
பரபத்தி தத்துவ முந்தீபற.

—உபதேசவுந்தியார் - 9

† தன்னை யுபாதிவிட் டோர்வது தானீசன்
றன்னை யுணர்வதா முந்தீபற
தானா யொளிர்வதா லுந்தீபற.

—உபதேசவுந்தியார் - 25

102. அருணையென் றெண்ணயா னருட்கண்ணி பட்டே
னருள்வலை தப்புமோ வருணாசலா. [னுன்

பொ-ரை: அருணாசலமென்று நானுன்னை நினைத்த மாத்திரத்தில் உன் னருள்வலையி லகப்பட்டுக்கொண்டேன்; அன்பரை யகப்படுக்கக் கட்டிய உன் னருள்வலை அச்செய லிற் சிறிதுந் தவறுவதாமோ?

வி-ரை: கண்ணி-வலை. படுதல்-அகப்படுதல். "அருணாசலமென வகமே நினைப்பவ ரகத்தைவே ரறுப்பா யருணாசலா" (1) என, இந்நூலுள் எடுத்த வெடுப்பிலேயே கூறினார் ஆசிரியர். எண்ண-காரணப்பொருட் டன்றிக் காரியப்பொருட்டு மாம். "பத்தி வலையிற் படுவோன் காண்க" என்றபடி, அன்பராலே தம் பக்திவலையிற் படுக்கக் கருதும் அருணாசலன் அதன் முன்பே அவரைத் தன் னருள்வலையிற் சிக்கவைக்கச் சூழ்ந்துள்ளான் என்பது கருத்து. அதனாலன்றே அவர் அவனை நினைக்க வல்ல ராகின்றனர் என்றறிக.

என்னை யேது மறிந்தில னெம்பிரான்
தன்னை நானுமுன் னேது மறிந்திலேன்
என்னைத் தன்னடி யானென் றறிதலும்
தன்னை நானும் பிரானென் றறிந்தெனே.

—அப்பர் தேவாரம்

"அவனரு ளாலே யவன்றாள் வணங்கி" என மணிவாசக மறையும் வலுத்தல் காண்க. அடுத்த செய்யுளாலும் இப் பொருள் நன்கு விளங்கும். அருள்வலை தப்புமோ என்றது தப்பா தென்றபடி. இன்னு மழகாக மேற்கூறுகின்றார்.

103. சிந்தித் தருட்படச் சிலந்திபோற் கட்டிச்
சிறையிட் டுண்டனை யருணாசலா.

பொ - ரை: 'இவன் இதனு ளகப்படட்டும்' என அடியேனைக்குறித்து நினைந்து, உன் னருள்வலையைச் சிலந்தி போலப் பரக்கக்கட்டி, நீ எண்ணியவாறே நான் அதன்கட் படுதலும் மீண்டும் புறத்தே தப்பிப் போகாதபடி இறுகச் சிறைப்படுத்தி, என்னைத் தன்மயமாக வுண்டொழித்தாய்.

வி - ரை: சிந்தித் தென்றதனால், குருபரன் செய்யும் பல வகைத் தீக்ஷைகளுள்ளும் பாவனாதீக்ஷை குறிப்பால் விசேடித்துக் கூறப்பட்டது போலும். சிந்தித்துக் கட்டி எனக் கூட்டாது சிந்தித் தருட்பட என்று உள்ளவாறே கொண்டு, அருணையென்றெண்ணி உன் னருள்வலையில் நானே வலியவந் தகப்பட்டுக் கொள்ள எனினுமாம். சிலந்திபோ லென்றது - ஒரானொரு பூச்சியோ புழுவோ வந்து சிக்கிக்கொள்ளட்டு மென்று சிந்தித்து வாய்நூலால் வலையைப் பின்னி, அதன்கண்ணே மடுத்த பிராணியைத் தப்பிப்போகாதபடி இறுகப் பின்னுஞ் சூழக் கட்டிச் சிலந்தி யுண்ணுமாறுபோல் என்றபடி. இங்குச் சிறையிட்டென்றாற்போல, "உன் னககுகை சிறையா யமர்வித்த"தென முன்னுங் கூறினர். அககுகை யென்பதும் அருள்வலை யென்பதும் ஒரே பொருள் குறிப்பனவாம். உண்டனை என்றதனால், "திருவருள் செய்பவன் போலவென் னுட்புகுந், தருவமு மாருயி ரும்முட னேயுண்டான்" என்றாற் போலும் பாசுரங்களால் நம்மாழ்வாரும் உயிருண்ணிப்பத்தால் மணிவாசகரும் அடைந்ததாக விளங்கும் தன்னிழப்பான ஜீவன்முக்திநிலையை அருணசல னருளத் தாம் பெற்றமை, "லட்சியம் வைத்தருளஸ்திரம் விட்டெனைப் பட்சித்தாய் பிராணனோ" டென்னும் 92-ஆம் பாட்டாற்போல் இதனாலும் வெளியிட்டார் பகவான்.

104. அன்பொடுன் னாமங்கே ளன்பர்த மன்பருக்
கன்பனா யிடவரு ளருணாசலா.

பொ - ரை: அருணாசல மென்னும் உன் திருநாம வஞ்செழுத்தை அன்பாற் செவிகுளிரக் கேட்டு அகமகிழும்

அன்பர்த மன்பருக்கு நின்னடியே னன்பனாக நீ எனக்கருள்செய்.

வி - ரை: இறைவனுக்கும் இறைவன் திருநாமத்துக்கும் உண்மையில் யாதொரு பேதமுமின்றும். அருணாசலன் *நாமம் அவன் பொருள்சேர் புகழுக்கும் உபலக்ஷணம். கற்றலிற் கேட்டலே நன்றென்று, கேளன்பர் எனப்பட்டது. அன்பர் என்பதிலேயே அன்பு அந்தர்க்கதமா யிருக்கவும், சிரவணாதி பக்திசாதனம் சிரத்தையின்றிப் பயன்படாதெனக் காட்டும் பயன் குறித்து அன்போடு கேளன்பர் என வேண்டாதுங் கூறினார். ஆதியில் ஆண்டவன் திருநாமத்தை—அந்தத் திருநாம ஸங்கீர்த்தன பஜனத்தை—அடியாரிடையில் அன்பொடு கேட்டுப் பயின்ற அந்தக் கேள்வியே பரஞானத்தோ டொன்றான பரபக்திக்கு வித்தாய், மானாபிமான மயக்கத்தைச் சிறிதுசிறிதாக மாற்றி, குடும்பத்தொடர்போ டுலகாசாரமும் ஒழிவித்து, பித்துப்பிடித்தாற்போலக் கடவுள்வடிவாகக் கலந்த கருத்தால் அகந்தையழிவான தன்னிழப்புவரையிற் படிப்படியாக வளர்ந்து, முடிவான ஜீவன்முக்தி பதத்தையும் அன்புடை யடியார்க்கு முடிவில் நிச்சய மளிப்பதா மென்பது,

முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய வாரூர் கேட்டாள்
பேர்த்து மவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தாள்
அகன்றா ளகலிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் றாளே

என வரும் அப்பர்சுவாமிகள் பாசுரத்தா லறியப்படும்.

"இறைவனே தொண்ட ருள்ளத் தொடுக்கும், தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே"—என மூதாட்டி

* 'புகழ்நாமஞ் செவிகேட்ப'—சம்பந்தர் தேவாரம்.

யார் கூறியபடி அடியர் பெருமை அளவிடற்கரிதாம்; திருத்தொண்டர் சரிதம் கூறும் புராணம் பெரியபுராண மெனப் பெயர்பெற்றதும் அதனு லென்றறிக.

எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் றிறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே

என்று அப்பர்சுவாமிக ளருளியபடி, அருணாசலன் தாவரலிங்கமும் அடியார் ஜங்கமலிங்கமு மாதலால் அவனுக்கும் அவன் மெய்யன்பர்க்கும் பேதம் பாராட்டுதல் பேதைமையின்பாற் படுவதாமென்று நம்மனோர்க்குணர்த்த, ஆளுடையநம்பிகள் 'அடியார்க்கடியே'னென மகுடம்வைத்து அன்னார் பெயர்விதந் தோதிய திருத்தொண்டத்தொகைபோல் ஆசிரியர்பகவானும், அன்பர் பெயர்விதவாமற் பொதுவகையானே அன்பர்த மன்பருக் கன்பனயிட வருள் என இந்நூலில் இவ்வொரு செய்யுளுங் கூறினர். பகவான், பாகவதம், பாகவதர்—என்ற அம்மூவர்க்கும் அபேதங் கொண்டாடுதல் பிரசித்தமான பாகவத சம்பிரதாயம்.

அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டா
லின்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே

என, அன்பர்தம் அருமைபெருமைகளைத் தாயுமானவரும் அனுபவித்துப் பாராட்டினர். அடைந்தார்க்குக் கஷ்டசாதனை யொன்றுங் கடைப்பிடித்தாற்றுமலே அத்யாத்மத்திற் பெரும் பயன் பெறுவிக்கின்ற மெய்யன்பர்—தம்மை மருவினர்க்கு, வருத்தமுறு தவராத வேதாந்தவர்த்த விஞ்ஞானம் வருத்த

முருமலே எளிதில் வருவிக்கின்ற சிவஞானிகளான சிவபக்தர்— கூட்டுறவான சாதுசங்கச் சிறப்பைப்பற்றி ஒருவர் எவ்வளவு தான் கூறினும் அஃது அதிசயோக்தி யாவதில்லே.

105. என்போலுந் தீனரை யின்புறக் காத்துநீ
யெந்நாளும் வாழ்ந்தரு ளருணசலா.

பொ - ரை: சிவானந்தஞ் சேர, எங்கெங்கு முள்ள என்போன்ற வெளியர் யாவரையும் என்றென்றுங் காவா நின்று நீயும் என்றென்றும் வாழ்ந்தருள்.

வி - ரை: தமக்கெனவாழாப் பிறர்க்குரியாளரான ஆசிரியர் பகவான் தம்பொருட்டுமட்டு மன்றித் தம்போன்ற வடியரனைவர்பொருட்டும் வேண்டினர், என்போலுந் தீனரையென்று. இன்புறக் காத்தல்—பிறவித்துன்பஞ் சேராமற் பிரம்மானந்த முறக் காத்தல். தனக்குவமை யில்லாத் தற்பர னருளா லன்றி மனக்கவலே யற்ற மகிழ்ச்சிசே ரின்பம் அரிதாகலின் இன்புறக் காத்தெனை இறைவனருளே வேண்டினர். சுடர்வடிவனன சூரியனுக்கு இருள்வாய்ப்பட்ட வுலகை ஒளிபெற வோம்புஞ் செயல் போல் அருள்வடிவனன அருணசலனுக்கும் இன்னலுற்ற எளிய வடியவரை ஏற்றத்தோ டின்பமுறக் காக்குஞ் செயல் சங்கற்ப பூர்வமாக நிகழ்வதொன்றன்றி அஃதவன் சொரூபதன்மமாம். அருணசலனேயன்றி யருளும், அருளேயன்றி யருணசலனும் வெவ்வேறு தேசகாலங்களில் ஒன்றைவிட்டொன்று சற்றுந் தனித்தியங்கலாகாத் தன்மையால் அவனருட்செயல் அவன் சொரூபத்தோ டொன்ருகப் பூரண நித்தமாம். எனவே, காத்தென்பது எந்நாளுங் காவாநின்று என எந்நாளும் வாழ்ந்தருள் என்பதனேடு உடனிகழ்ச்சிப் பொருட்டாம், 'தெய்வந் தொழாஅள்'—என்னுந் திருக்குறளில் தொழுதெழுவாள் என் புழிப்போல. அருணசலன் என்ருே அன்றே அவனருட்செயலு மாகத் திருவருட்செயல் அநாதிமுறைமையான பழமைத்தென்.

பது கருத்து. எந்நாளுமெனக் காலங்குறித்ததனால் எவ்விடத்து மெனத் தேசமும் உபலக்ஷணத்தா லுடன்கொள்ளப்பட்டது. 'கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்'போல மிகச்சுருக்கமாகவும் தெளிவாகவும், பொதுவாக எல்லாப் பிரார்த்தனைகளையும் தன்னுள் இனிதகப்படுத்துநிற்கும் இவ் வழகிய திருப்பாட்டு அருட்கடலான அருணாசல னுள்ளத் திக்கு அளவிலா வார்வம் விளைப்பதாகலின், அஃது, அவனருள் வேட் டகங்குழையு மன்பராலே அஞ்செழுத்தாகிய தெய்வத் திருமந்திரம்போல் இடைவிடா தனுசந்தானஞ்செய்யத் தக்க தாம். அடியவர்க்கு வாழ்வும் அதுசெய்கின்ற ஆண்டவனான அருணாசலனுக்கு வாழ்த்தும் இப்பாட்டால் ஒருங்கு கூறப்பட் டனவாம். அன்புடையடியரை யின்புறக்காத்தலே அருள்வடிவ னான அருணாசலன்வாழ்வு என்பதாம்.

106. என்புருகன்பர்த மின்சொற்கொள் செவியுமென்
புன்மொழி கொளவரு ளருணாசலா.

பொ - ரை: அன்பா லென்புருகும் ஆன்றோர் பாட் டான மாண்புடைய மதுரவாசகம் மடுத்த திருச்செவி அத்தகை யன்பிலா வடியேன் பாட்டான சப்பென்ற அற்பவாசகமும் ஆங்கே மடுக்கத் திருவுள்ள மிசைந்தருள்.

வி - ரை: என்பென்பது ஆகுபெயரால் உடம்பாகவும், உள்ளமே யன்றி யுடம்பு முருகுகின்றவன்பரென இறந்தது தழு விய எச்சவும்மை விகாரத்தாற் றொக்கதாகவுமாம். என்புரு கன்பர் - வாதவூரடிகள் முதலானோர். அன்னார்த மின்சொல் - திருவாசகம், திருக்கோவையார் முதலாயின. திருவாசகத்தா லுருகாதார் ஒருவாசகத்தாலு முருகார் என்றான்றோர் கொண் டாடும்படி திருவாசகம் உருக்கத்தில் அவ்வளவு தலைசிறந்ததாத லுணர்க. அன்பர்த மின்சொல் - கபிலர்தம் பாட்டுப்போல் ஆறாம்வேற்றுமை செய்யுட்கிழமைக்கண் வந்தது. செவியும்

என்பத னும்மை புன்மொழியும் என விகுதிபிரித்துக் கூட்டப் பட்டது. அவ்வாறன்றி உள்ளவாறே உயர்வுசிறப்பும்மையு மாம். அன்பர்துதியேற்று அவர்க்கின்னருள் செய்யக் கருவி யாஞ் சிறப்புப்பற்றி இறைவன்செவி விசேடமாகப் போற்றப் படும். [" கற்றலிற் கேட்டலே நன்று " எனவும், " செல்வத் துட் செல்வஞ் செவிச்செல்வம் " எனவும் வருவனவற்றால் அச் செவி மக்களுக்கும் ஆங்கே விசேடமுடைத்தாம்.] ஆளுடைய பிள்ளையார் ஆரம்பத்திலேயே 'தோடுடைய செவியன்' எனத் துதித்தல் காண்க. என்புரு கன்பர் என்றதுகொண்டு என் என்பதற்கு அதனோ டுறழ அன்பிலா வடியே னென்றும், இன்சொல் என்றதுகொண்டு புன்மொழி என்பதற்கும் அவ் வாறே அதனோ டுறழச் சப்பென்ற வற்பவாசக மென்றும் உரைக்கப்பட்டது. தம்போன்ற சான்றோர்க் கியல்பான விநயம்பற்றி நன்மொழியைப் புன்மொழியென்றார்.

107. பொறுமையாம் பூதர புன்சொலை நன்சொலாப்
பொறுத்தரு ளிஷ்டம்பின் னருணசலா.

பொ - ரை: பொறுமை வடிவான மலையே! அடி யேன் புகன்ற புன்சொல்லைப் பொறுத்து அதுவே உனக் குகந்த நன்சொல்லாகத் திருவுள்ளம் பற்றியருள். மற்று, நின்னிச்சையே நிகழ்வதாக.

வி - ரை: தம் புன்சொல்லை நன்சொல்லாகப் பொறுத் தருள வேண்டுவார் அருணசலனைப் பொறுமையாம் பூதா வென இடத்துக் கேற்றதோர் பெயர்கூறி யழைத்தார். பொறுத்தல், தரித்தல், தாங்கல் என்பன ஒருபொருள் குறிப்பன. பூதா - இடுகுறி போல மலையின் பரியாயப்பெய ராகமட்டும் ஈண்டு வழங்கப்பட்டதன்று. ஆசிரியர்பகவா னருளிய, இவ்வக்ஷரமணமாலை முதலிய மற்றெல்லாத் துதிநூல் களுக்கும் பாட்டுடைத்தலைமை தாங்கிநின்ற அருணசலன், உண்மையில், பர்வதராஜனான இமவான் (இமாசலம்) முதலிய மற்றெல்லா வசலங்களும்போலத் திருசியமானதோர் பௌதிக

பர்வதமன்றி, திருக்குவடிவான சுத்தசைதன்யஜோதிசொரூபப் பரசிவபிரம்ம மாதலால், பூமியைத் தரிப்பவன்—உலகைத் தாங்குபவன்—எனக் காரணநோக்கம்பற்றி வழங்கப்பட்டதாம். காரணப்பெய ராங்காலும், பூமியாற் றரிக்கப்படலாற் பூதர மென்னுங் காரணம், மற்றெல்லா மலைகள் விஷயத்திலும்—மலையாகவே பிரசித்தமாக வியவகரிக்கப்படும் அருணாசலன் விஷயத்திலோவெனின், அப்பிராகிருதமாதலால் அதிசூக்ஷ்ம மான அத்யாத்மசொரூபத்துக்குப் பிராகிருதப் பிரதீகமாத் திரமாக வியாவகாரிகத்திற் பிரயோஜனப்படுகின்ற சிலாரூபத் தூலலிங்கமான அவன் பௌதிகத்தோற்றத்தின் மட்டும்—பொருந்துவதன்றி, மனவாசகங் கடந்த மௌனபதச் செம்பொருளாய் அறிவொளிப் பிழம்பான அருணாசலன் பரமார்த்தசொரூப விஷயத்தில் அசங்கதமாம், அதுவே ஸர்வா தாரமாதலால். அன்றியும் தம்மையும் தம் புன்சொல்லையும் பொறுத்தருள ஆசிரியர் அருணாசலனைப் பிரார்த்திக்கும் பொழுது, அவனே அத்தகைய பாரமார்த்திகசொரூபத் தன்மை யால் இவ்வகிலத்தையும் பொறுப்பதாக—உண்மையாகவே—சிறப்பித்தழைத்தல் பொருத்தமாமன்றி, அவனுரு பூமியாற் பொறுக்கப்படுவதாக வெறுந் தூலநோக்கமே கொண்டழைத் தல் அவனைத் தாழ்வுபடுத்தலாற் பொருத்தமன்றாகப் புரை படுதல் மட்டுமன்றி அவ்வா றழைத்துச் செய்யும் பிரார்த் தனையையும் பயன்படா தவலமாக்கலாலும், பூமியாற் றரிக்கப் படலாற் பூதரமெனல் ஈண்டுப் பொருளன்று என்றொழிக. வைதலை வாழ்த்தா வைத்தருள (100) முன்பே பிரார்த் தித்தவர் அந்தப் பிரார்த்தனையின் முக்கியத்துவம்பற்றி, இப் பொழுது நூலைத் தலைக்கட்டுந் தருணமாதலால், *புன்சொலை நன்சொலாப் பொறுத்தரு ளென்று மறுபடியும் வேண்டினார்.

---

*புன்சொல் நன்சொல் என்பன குற்றமுள்ள சொல் குண முள்ள சொல் எனப் பொருள்பயந்து தமமில் எதிர் மொழிக ளாம், 'நல்லிசை யாளன் புல்லிசை கேளா...ஞான சம்பந் தன்' (சம்பந்தர் தேவாரம்) என்னும் தொடரிற் போல.

'எனக்கிதுவன்றி வேறு பிரார்த்தனை இல்லை' யென்றும், மற்றவை பற்றி 'எண்ணே னிவற்றை யென்னுயிரே யெண்ண மெதுவோ வதுசெய்வா' யென்றுங் கூறுவார் இஷ்டம்பின்னென்றார். நின்னின் வேறாகாமல் அத்துவிதமெய்ப்பொருளான நின்னுண்மையே என்னுண்மையாக இயல்கின்ற வெனக்கு நின் னிஷ்டத்தையன்றி எனக்கெனத் தனிப்பட யாதோ ரிஷ்டமு மின்மையின், நீதான் யாதேசெய்யினும் அஃது என்னுண்டவ னை நின் னிஷ்டமாதலால் எனக்கும் அதுவே இஷ்டமென்று கருத்து.

> **வேண்டி நீயா தருள்செய்தாய் யானு மதுவே வேண்டி னல்லால்**
> **வேண்டும் பரிசொன் றுண்டென்னி னதுவு முன்றன் விருப்பன்றே.**
> —திருவாசகம்

யானென்னுங் கர்த்தத்துவமின்றி இம்மணமாலையை நின்னருள் வழி நின்றிசைத்த வெனக்கு, உலகோரான மற்றவர் மரபுபற்றிப் 'புன்சொலை நன்சொலாப் பொறுத்தரு'ளென்று பிரார்த்திக்கவும் என்னே வதிகாரம் என்பையேல் யானதுவுங் கூறுகின்றிலே னென்பார் இஷ்டம்பின்னென்றார் எனினுமாம். தேவ குமாரனை ஏசுநாதர் சிறப்புறச் செய்த *பிரார்த்தனையே பகவானும் ஈண்டுச் செய்தார், இஷ்டம்பின் னென்று. இதுவே இறைபணிநிற்ற லென்பர். "என்னதோ விங்கதிகாரம்" என்றும், "நானே விதற்கு நாயகமே" என்றும் மணிவாசகமறை ஓதல் காண்க.

108\. மாலை யளித்தரு ணசல ரமணவென்
மாலை யணிந்தரு ளருணசலா.

பொ - ரை: நின்பா லுண்மைக் காதற்பெருக்கை நீ எனக்குதவி, அருணசலரமண! என் கையுறையான இம் மாலையை ஏற்றணிந்தருள்.

---

* *Thy will be done*: நின் ஸத்யஸங்கல்பமே நிகழ்வதாக.

வி-ரை: மால்-தீவிரமான காதற்பெருக்கம். "கண்ணே யுன்றன் கழலிணையிற் காதற் பெருக்கே தருவாயே"—என, ஆசிரியர் நவமணிமாலையிலும் இவ்வாறே பிரார்த்திப்பது காண்க. ரமணன்-மகிணன் (மகிழ்நன் - மகிழ்செய்வோன்), இன்பன்; அன்பன், காதலன். முன்னும் இந்நூன்முகப்பில் 'அருணாசலவரன்' என்றார். அருணாசலன், அருட்பரமாக, அரியாதி இதர ஜீவரது அகவாரிஜ குகையில் அறிவாய் ரமிக்கின்ற ஆத்மாராமனாதலால் அருணாசலரமண என்றதாம். என்மாலை-என்னுள்ளக் கிளர்ச்சியால் அன்புநாராக இன்சொல்லலர்தொடுத்து யானுனக்காக இனிதிற் புனைந்தளித்த இந்நூன்மாலை. இச்செய்யுள் ஈசஜீவைக்கிய வடிவான கைவல்லியமென்னும் மணவினையின் முக்கியவுறுப்பாகிய மாலைமாற்றாக, நீயணிந்த அம்மாலையை எனக்களித்து, (ஆண்டாள் அன்பாகச் சூடிக்கொடுத்த மாலையை அரங்கநாதன் இன்பாக வேற்றணிந்தாற்போல) யானணிந்த இம்மாலையை நீ இனிதாக ஏற்றணிந்தருள் என்று தொனி. எனவே, இந்நூலை இதயபூர்வமாக வெண்ணும் அனுசந்தான வாயிலாக அருணாசலனை மெய்யன்போடு வழிபடு மடியார், அவனருளால், இகத்திற் பிறநலன்கள் யாவும் பெறுதலேயன்றிப் பரத்தில் நிரதிசயானந்த சிவசாயுச்சியமும் முடிவாகப்பெற்று விளங்குவர்; அவ்வாறே, தினந்தோறும், இம்மணமாலையைப் பண்ணாலே பக்தியோடு பாடிப் பாராயணஞ்செய்யுங் கன்னியரும் —முறையாகச் செய்யும் முழுநூற்பாராயணத்தோடு மட்டில் அமையாமல், அப் பாராயணகாலந் தவிரச் சும்மாவிருக்கும் மற்றக்காலங்களிலும், இந்நூலுள்ளும் முக்கியமாக *இவ்

---

*"நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே"

என்னும் திருப்புகழ்—இன்ப வாழ்வை இனிதிற் கூட்டுவதான மணவினை மாண்புற விரும்புங் கன்னியர் அவ்வேணவா முற்றுறப்

வொரேசெய்யுளைமட்டும், இடைவிடா தடுத்தடுத்து மந்திரம் போலச்சிலகாலம் இதயபூர்வமாக மனனஞ்செய்துகொண்டே யொழுகின், அவர்தாங் கோரிய காரியம் மிக்கெளிதிலும் விரைவிலும் அருணசலரமண னருளால் இனிதிற் கைகூடுவதாக—சற்குணசம்பன்னராய்த் தமது கருத்துக்கிசைந்த கட்டழகு பொருந்திய காளையர்கழுத்தில் மாலையிட்டுக் கடிமணம்பூண்டு, திருவருட்செல்வராக இல்லறநடத்தி, இம்மைநலன்களான அறம்பொருளின்பங்கள் யாவும் புகழோ டொருங்கே பொருந்தி, இவ்வுலகிற் பலகாலம் இனிது வாழ்வர்—என இந்நூற்பயன் காண்க.

அருணசலசிவ அருணசலசிவ அருணசலசிவ
அருணசலா!
அருணசலசிவ அருணசலசிவ அருணசலசிவ
அருணசலா!

வாழ்த்து

அருண சலம்வாழி யன்பர்களும் வாழி
அக்ஷர மணமாலை வாழி.

பொ - ரை: பாட்டுடைத்தலைவனை அருணசலன் சொரூபம் வாழி! அவனை அன்பால் வழிபடும் அடியார் வாழி! அவ் வழிபாட்டுக்குக் கருவியான இவ் வக்ஷரமண மாலைநூல் வாழி!

உரைநிறை வோதும் மங்கல வாழ்த்து

ஸச்சிதானந்த ஸர்வாத்மஸ்வரூபமான அருணசலவரன் பாற்கொண்ட தம் பிரேமானுபவம் அவனோ டைக்கியமாகக்

பாராயணஞ் செய்யக் கடவதாகத் திருப்புகழ் - வள்ளிமலை சுவாமிக ளுபதேசிப்பது—இதற்குதாரணமாக இங்கறியத்தக்கதாம்.

கலந்த பின்னும் அகத்தே யடங்காது தம்மையும் மீறி,— "அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ் செறிதோறுஞ் சேயிழை மாட்"டெனக் காமத்துப்பாலில் வள்ளுவர் கூறியது முக்காலும் பொய்யாமொழியாக அத்யாத்மத்திற் பூரணமாகப் பொருந்தும்படி,—*'புணர்ந்தாற் புணருந்தொறும் பெரும் போக' வேட்கை தம்முள்ளத்திற் பின்னும்பின்னும் புதிது புதிதுபோல மேன்மேற் கிளர்ந்து பொங்கித் ததும்பி வளரா நிற்க, ஈசுவராவதாரமான பிரபுலிங்கதேவராற் புகழப்பெற்ற மகாத்மாவான மருளசங்கரர்போல—பாமரர் நோக்கத்தில், இந்நூலருளிய அம்முற்காலங்களில்—ஏகதேசம் மருளராய்ப் † 'பேய்த்தனம்விட விடாப்பேய்க்'கோட்பட்டு நின்ற அப்பர வசத்தாற் பித்தர்போலவும் பேயர்போலவும் வசமிழந்து, நம்மாழ்வாரும் மணிவாசகரும்போல வாய்விட்டரற்றும் வாயிலாக, அன்புகொண்ட வடியரை அவனருளடிக் காற்றுப் படுத்துவதான இவ் வக்ஷரமணமாலையை உலகோர்க் குதவியருளிய ஆசிரியர்பகவான்—அத்யாத்மதாகங்கொண்ட சாதுக்களான அடியர் குழாத்தினல் எப்பொழுதுஞ் சூழப்பெற்று விளங்கும் ஆசார்ய ரத்நமான ஸ்ரீரமணமூர்த்தி—அநவரதம் வாழி! அறிவொளிப்பிழம்பாய் ஆனந்தவெள்ளமான அருணாசல வரனோடு, அவன்பா லனுராகங்கொண்ட வடியரை அருண் மங்கலநாண் பூட்டிப் பேரின்பத் தெய்வத் திருமணம் புணர்த்துங் கடகனை அம் மணமாலைக்கு, அனுசந்தானரூபமாக அதனை யாராதித்தற்குரிய பூரண பக்திசிரத்தையோடு, அன்னாருட்பாத தூளியான முகவைக்கண்ணமுருகன், தன் னுயிர்க்குயிராகவும் உணர்வுக் குணர்வாகவும் உள்ளத்தொளிரும் அவ் வாண்டா னருள்விளக்கத்தால் ஒருவா றியற்றி நிறைவெய்திய இவ் வுரைநூல் விருத்தியும், அதனை ஆவலாகக் கற்கும் அன்பர் திரளோடு இந்த நிலவுலகத்தே நீடு வாழி!

---

* திருக்கோவையார்—9 † அக்ஷர. 71.

அநுபந்தம்

[சிற்சில பாட்டுக்களின் விசேடவுரையிற் சேர்த்துக் கொள்ள வேண்டிய விஷயங்களை அவ்வப் பாட்டெண்க ளோடு அறிவிக்கின்றது இவ் வநுபந்தம். இஃது, இவ்வுரை அச்சாகி வருங்கால் அன்போ டதனைப் பார்வையிட்ட சிவநேசச் செல்வர் - செங்கல்வராய பிள்ளை யவர்கள் பாட்டுக்கள் சிலவற்றுக்குத் தாங்கள் கொண்டதாகக் கூறிய கருத்தைத் தழுவி எழுதப் பெற்றது. இங்கு முன்னுள்ள 20-ஆம் பாட்டு விசேஷவுரை (1) மட்டும் ஸ்ரீ ரமண பக்தர், டாக்டர் - ஸ்ரீநிவாசராவ் அவர்கள் உரைத்த கருத்தை விரித்துத் தெரித்தது.]

20. (1) பிராகிருதத் தன்மையாற் பெண்ணேயான நான் அப்பிராகிருதத் தன்மையால் உண்மையில் ஒரே புருஷனான வுன்னோ டணைந்து பேரின்பம் பெறாமல், பிரமாதத்தால் அப் பெண்மையை மறந்து நானோ ராண்மகனாக (உடலுருத் தோற்றமே பற்றி) விபரீதமாகக் கருதியதால், என்போ லனை வரும் பெண்களேயான ஜீவவர்க்கத்தில் என்போ லொரு பாலோர் ஆண்களாகத் தோன்ற மற்றவர் மட்டுமே பெண் களாகப் பிரமித்து,—பெண்ஜனங்கள் ஆணும்பெண்ணுமாகத் தாங்கள் பொய்க்கோலம் பூண்டு நாடகவரங்கில் விளையாட்டாக நடித்ததை, அவ்விளையாட்டிற் கொண்ட வியாமோகத்தால், அரங்கின் வெளியுலகிலும் (வேடங் களையாமையால்) உண்மை யென்றே நம்பி, நாட்டார் நகைசெய்யத் தம்மி லொருவரை யொருவர் காமித்தொழுகிய கதைபோலாக—அவருட் சிலர் தங் காமக்கொடுமைக்கு, உண்மை யுணர்ந்த நல்லோர் நகைக்க நானுட்படாமல் எனக் கூர்வாட் கன்னியர் கொடுமையிற் படா தென்னுந் தொடருக்குத் தாற்பரியங் காணின், முன்னர்த் தூல நோக்கத்தா லொருவாறு பொருந்தாமைபோலத் தோன்றிய அவ்வுரையும் அத்யாத்ம நோக்கத்தா லமைவுடைத்தாம். பிரகிரு திக்குத் துணைசெய்வதான மாயாசக்தியின் கொடுமை உப

சாரமாகக் கண்ணியர்மேலேற்றிக் கூறப்பட்டதாம். உண்மை யான வுத்தமபுருஷன் (ஸத்புருஷ லக்ஷணமனைத்தும் குறைவற நிரம்பிய வுத்தமன்)—தேகாத்மபுத்தி வடிவான ஆபாச வகந்தைத் தன்மை யழிந்த வகத்தில் முன்னிலைபடர்க்கை முடிவுற்று ஒன்ருயொளிரும் உண்மைத் தன்மையிடமான நானெனனும் புருஷன்: தன்னிழப்புற்ற ததீயரகத்தில் ஜீவன் சிவலிங்கமாக இயல்பாகவே பாசங்களினீங்கிச் சுடர்விட்டொளிர, அகமகமென்று தன்மயமாக நடமிடு முகத்தால், 'நாலந்த வேதத்தின் பொருளோனே நானென்று மார்தட்டும்' அப்பிராகிருதசுத்தான்ம சொரூபன்—அருணாசலன் ஒருவனேயாதல், 'தன்மைக்கட் டானேகாண்' என்னும் அப்பர் தேவாரத்தா லறிக.

(2) அவ்வாறன்றியும், அகப்பொருட்டுறையேபற்றி,—என் போன்ற மகளிர், யான்பட்ட தாம்படா வாற்ருல், என் செவி கைப்பக் கண்ணேட்டமின்றித் தூற்றுகின்ற அலர்க்கொடுமைக்கு நாணுளாகாமல் எனினும் ஏற்புடைத்தாம். உடலில் வேல்பாய்ந் துளைபுண் ணகத்திற் பழுக்கக் காய்ச்சிய நாராசம் பாய்ச்சினுற்போல, விரகதாபத்தா லேற்கெனவே வெந்து நொந்த தன்னிதயத்திற் செவியை வெதுப்புஞ் சுடுசொல்லலரம்பு பாயத் தூற்றலின், கூர்வாளாற் கண்டங்கண்டமாகத் தடிந்து தன்னுயிரைச் சித்திரவதை செய்தாற்போல வருத்துங் கொடிய வன்கண்ண ரென்பாள் அவ் வலர்தூற்றும் மகளிரைக் கூர்வாட் கன்னிய ரென்ருள். அவரை வாட்கன்னிய ரெனக் கண்ணின்மேல் வைத்துக் கூறியது, பிறர் வருத்தங் கண்டு மகிழும் பேய்க்குணத்தாலே கண்ணுக் கணிகலமான கண்ணேட்டம் கடுகளவுமற்றுக் காரணமின்றியே தன்னை வருத்துகின்ற அவர்தம் பொல்லா வியற்கை புலப்படுத்தற் கென்க. தன்னியார் குற்றமுந் தூற்றுந் துர்க்குணத்தோர் கொடுமையை யெண்ணிக் குலைந்து நடுங்குவாள், கன்னியர் கொடுமையிற் படா தென்ருள். அதனுல், வாட்கன்னிய ரென்னுந் தொடராற் கருதப்பட்டது, வாள்போல வருத்துங் கன்னியரெனத் தொழிலொப்புமையேயன்றி வடிவொப்புமையன்று

என்றறிக. [பெண்கள், தமக்குள், தம்போற் பிறர்தம் பெண்மையைத் தூற்றுது போற்றி அன்புரிமையால் அவர்பா லிரங்கி நல்லோராக நடக்கவேண்டும் என்ெருரு போதனை கூர்வாட் கண்ணியர் கொடுமையிற் படாது என்றதன் குறிப்பாற் கொள்ளக் கிடக்கின்றது. "பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந் திறன் றெரிந்து கூறப் படும்" எனத் தேறலே—என்றும் மறவாமல் இதயத்திற் குறிக்கொண்டு வாழ்க்கையில் அதனைக் கடைப் பிடித் தொழுகலே—பெண்கள் பிறர்பழி தூற்றும் அப் பெரும் பிழையினின்று உய்வதற் குபாயமாம்.]

25. குணத்தோய்! என்னை யாட்கொள்ள நின்னுள்ளத் திற் குறிக்கின்றிலை. (குறியாதொழிய) நான் உனக்கென்ன குறைசெய்தேன் எனினுமாம்.

29. கதிரத்தம் வைத்து - ஒளிபொருந்திய ஹஸ்ததீக்ஷை செய்து எனவும், அமுத வாயைத் திற - திருவாய் மலர்ந்து அமுத தாரையான வுபதேசம் புரியாய் எனவுமாம். 'தொட்டருட்கை' (51) என வருவதுங் காண்க.

33. செப்படிவித்தை கற்று, இப்படி மயக்கு விட்டு - நீ மாயவித்தை தேர்ந்து, (மாயிகன்போல்) இங்ஙன மென்னை மயக்குதலை விட்டு எனினுமாம். "இந்திரஜாலம் புரிவோன் யாவரையுந் தான்மயக்குந் தந்திரத்திற் சாராது சார்வது போல்" எனக் கந்தர் கலிவெண்பாவில் வருவது காண்க.

34. மெய் நீரா யுருகிக் கண்ணீராற் றழிவேன் - உள்ள முருகி, மெய்யெலாங் கண்ணீ ராருக வழிந்தொழுக, அவ்வெள் ளத்தில் அமிழ்ந்தழிவேன் எனினுமாம். "கண்ணி லானந்த வெள்ளம் மெய்யெலாம் பொழிய"—பெரியபுராணம்.

37. இப்பாட்டுக்கு, உடலின்பமே (நாடி) உண்டுறங்கி நான் சோம்பேறியாகச் சும்மா வீண்காலம் போக்கிவிடில், (உன் னருளன்றி) வேறென்னதான் எனக்குக் கதி? நீயே கூறியருள் என்றுமாம்.

39. இப்பாட்டுக்கு, நான் நாயினுங் கடையாமெனினும், எனது திடபக்தியா லுன்னை நாடி எப்படியும் சேர்வேன் எனினுமாம்.

49. திரு, நிதி என்பவற்றைத் தனித்தனியே விளியாக்கலுமாம். திரு - முத்தித்திரு; அதுதான் பேரின்ப வடிவிற்றாதலால் நற்றிரு என்றதாம். தேடாதுற்ற நற்றிருவாதலால் அருள் நிதி - அவ்யாஜ கருணாநிதி.

57. நுண்ணுருவே! விண்ணுருவே! நானுன்னை நண்ணநின் திருவுளத்தா *லெண்ணுகின்றிலை. நின்னா லெண்ணப் பெறுமையான அக்குறை எனக் கென்றொன்று கெடும்? [எப்பொழு தெண்ணுவாய் என்றபடி] எனவுமாம்.

65. மாலறப் பார்த்திலை எனின், உன்னருளின் தன்மை (இருந்தவா) பாராய்! உனக்கார் சொல்வர் எனவுமாம்.

80. இப்பாட்டுக்கு, முடியடி காணமுடியாத முடியை நேராக விடுவித்தனை. அங்ஙனம் முடிவிடுவிக்க உனக்குக் கடமையின்றோ? [என்பொருட் டாற்றிய வருட்செயலாக வன்றி, நின்றிறத்தில் இயல்பானமைந்த கடமையாகவே அது புரிந்தாய் என்று கருத்து] எனவுமாம். "தன்கடன் னடியேனையுந் தாங்குதல்"—அப்பர் தேவாரம்.

94. இனி, வரும்படி சொலிலை - என்பா லெழுந்தருளும்படி உன்னை யிரந்தழைக்க வேண்டுஞ் சொல் என் வாயினின் றெழுந்ததில்லையேனும் எனவுமாம்.

97. உளவீட்டிற் பையப்புக்கு எனக் கூட்டலுமாம். உன் வீடு - உன் பேரின்பமய முத்திப்பதம். "காயத்துள் ளமுதூற வூற நீ கண்டுகொள்ளென்று காட்டிய தூயமாமலர்ச் சேவடி" என்ற திருவாசகம் ஈண்டெண்ணத்தக்கது.

---

* "என்னை யேதும்" என்னும் அப்பர் தேவாரம்—"அருணையென் றெண்ண" (102) என்னும் பாட்டில் உதகரிக் கப்பட்டது—இங்கறியத்தக்கது.

CONNEMARA PUBLIC LIBRA[RY]
13 FEB 1955

அருணாசல அக்ஷர மணமாலை விருத்தியுரை

பாட்டு முதற்குறிப் பகராதி

[எண்—பக்க எண்]

அகம்புகுந் தீர்த்து 4
அம்புவி லாலிபோல் 126
அருணாசல சிவ 2, 139
அருணாசலம் வாழி 139
அருணாசல மென 2
அருணாசல வரற்கு 1
அருணையென் றெண்ண 129
அழகுசுந் தரம்போல் 3
அன்பொடுன் னாமம் 130
ஆருக்கா வெனை 5
இப்பழி தப்புனை 5
ஈன்றிடு மன்னையின் 6
உனையே மாற்றி 7
ஊர்சுற் றுளம் 8
என்புரு கன்பர்தம் 134
என்போலுந் தீனரை 123
எனையழித் திப்போது 9
ஏனிந்த வுறக்கம் 10
ஐம்புலக் கள்வர் 11
ஒருவனா முன்னை 12
ஓங்காரப் பொருள் 13
ஔவைபோ லெனக்கு 14
கண்ணுக்குக் கண்ணாய் 15
காந்த மிரும்புபோல் 17
கிரியுரு வாகிய 18
கீழ்மே லெங்கும் 19
குற்றமுற் றறுத்து 20
கூர்வாட் கண்ணியர் 22
கெஞ்சியும் வஞ்சியாய் 23
கேளா தளிக்குமுன் 23
கையினிற் கனியுன் 24
கொடியிட் டடியரை 26
கோபமில் குணத்தோய் 27
கௌதமர் போற்றும் 29
சகலமும் விழுங்கும் 29
சாப்பா டுன்னை 31
சித்தங் குளிர 33
சிந்தித் தருட்பட 129
சீரை யழித்து 34
சுகக்கடல் பொங்க 35
சூதுசெய் தென்னை 35
செப்படி வித்தை 37
சேரா யெனின்மெய் 39
சையெனத் தள்ளின் 40
சொல்லாது சொலிநீ 41
சோம்பியாய்ச் சும்மா 42
சௌரியங் காட்டினை 44
ஞமலியிற் கேடா 44
ஞானமில் லாதுன் 46
ஞிமிறுபோ னீயும் 48
தத்துவந் தெரியாது 49
தானே தானே 52
திரும்பி யகந்தனை 53
தீரமி லகத்தில் 54
துப்பறி வில்லா 55
தூய்மன மொழியர் 58
தெய்வமென் றுன்னை 59
தேடா துற்ற 60

தைரிய மோடும் 61
தொட்டருட் கைமெய் 62
தோடமி னீயகத்தோடு 63
நகைக்கிட மிலைநின் 64
நாணிலை நாடிட 65
நின்னெறி யெரித்தெனை 66
நீநா னறப்புலி 67
நுண்ணுரு வுனையான் 68
நூலறி வறியா 69
நெக்குநெக் குருகி 70
நேசமி லெனக்கு 71
நைந்தழி கனியால் 73
நொந்திடா துன்றனை 74
நோக்கியே கருதி 75
பற்றிமால் விடந்தலை 76
பார்த்தருண் மாலற 77
பித்துவிட் டுனைநேர் 78
பீதியி லுனைச்சார் 80
புல்லறி வேதுரை 81
பூமண மாமனம் 83
பெயர்நினைத் திடவே 84
பேய்த்தனம் விடவிடா 85
பைங்கொடி யாநான் 86
பொடியான் மயக்கி 87
பொறுமையாம் பூதர 135
போக்கும் வரவுமில் 89
பௌதிக மாமுடல் 90
மலைமருந் திடநீ 92
மாலை யளித்து 137
மானங்கொண் டுறுபவர் 93
மிஞ்சிடிற் கெஞ்சிடும் 94
மீகாம னில்லாமல் 95
முடியடி காணு 96
மூக்கிலன் முன்காட்டும் 98
மெய்யகத் தின்மன 99
மேன்மேற் றுழ்ந்திடு 100
மைமய னீத்தருள் 102
மொட்டை யடித்தெனை 103
மோகந் தவிர்த்து 105
மௌனியாய்க் கற்போல் 106
யவனென் வாயில் 107
யாரு மறியாது 109
ரமணனென் றுரைத்தேன் 110
ராப்பக லில்லா 111
லட்சியம் வைத்தருள் 112
லாபநீ யிகபர 113
வரும்படி சொலிலை 115
வாவென் றகம்புக்கு 117
விட்டிடிற் கட்டமாம் 119
வீடுவிட் டீர்த்து 120
வெளிவிட்டே னுன்செயல் 123
வேதாந் தத்தே 124
வைதலை வாழ்த்தா 125

CONNEMARA PUBLIC LIBRARY
13 FEB 1955
MADRAS